
**2007 அவ்யக்த முரளி**



<u>பொருளடக்கம் - 12</u>

**18.01.2007** தற்போது தன்னை விடுவித்துக் கொண்டு மாஸ்டர் முக்தி வழங்கும் வள்ளலாகி, அனைவருக்கும் முக்தியை வழங்குவதற்கு நிமித்தமாகுங்கள்!

**02.02.2007** பரமாத்ம பிராப்திகள் நிறைந்திருக்கும் ஆத்மாவின் அடையாளம் சம்பூரண புனிதமானவர்கள், (ஹோலியஸ்ட்,) மிக உயர்ந்த நிலையிலிருப்பவர்கள் (ஹையஸ்ட்) மற்றும் பொக்கிஷம் நிறைந்தவர்கள் (ரிச்சஸ்ட்)!

**15.02.2007** அலக்ஷியம், சோம்பல் மற்றும் சாக்குப்போக்கு போன்ற உறக்கத்திலிருந்து விழிப்பது தான் <u>சிவராத்திரி</u>யின் உண்மையான விழிப்பாகும்!

**03.03.2007** பரமாத்மாவின் சேர்க்கையில் (சம்மந்தம்), ஞானம் எனும் வர்ணம், குணம் மற்றும் சக்திகள் எனும் வர்ணம் பூசி அலங்கரிப்பது தான் (பூசிக்கொள்வது) உண்மையான ஹோலி கொண்டாடுவதாகும்!

**17.03.2007** சிரேஷ்ட விருத்தி மூலம் (உள் உணர்வு) சக்திசாலி வைப்ரேஷன் மற்றும் வாயுமண்டலம் உருவாக்குவதற்காக தீவிர முயற்சி செய்யுங்கள் -ஆசிகளை வழங்குங்கள் மேலும் ஆசிகளைப் பெறுங்கள்!

**31.03.2007** உதாரணமானவராகி தன்னுடைய முகத்தோற்றத்தின் மூலம் தந்தையை வெளிப்படுத்தக்கூடிய, சேவை செய்வதோடு, நிர்மலமான பேச்சு மற்றும் பணிவான ஸ்திதியில் சமநிலை வைக்க வேண்டும்!

**06.09.2007** விசேஷ 'போக்' சமயத்தில் பாப்தாதாவின் வருகை மதியம் 11.30 மணி. தாதிஜியின் கையில் பிரத்யக்ஷதாவின் திரையை விலக்குவதற்கான பட்டன் இருக்கிறது. இதில் நீங்கள் எல்லோரும் சகயோகி (உதவியாளர்) ஆகுங்கள்!

**15.10.2007** சங்கமயுகத்தின் ஜீவன் முக்தி ஸ்திதியை அனுபவம் செய்வதற்காக எல்லா சுமைகளையும், பந்தனங்களையும் தந்தையிடம் ஒப்படைத்து விட்டு, டபுள் லைட் ஆகுங்கள்!

**31.10.2007** தனது சிரேஷ்ட ஸ்வமானின் (சுய கௌரவ நிலை) பெருமிதத்திலிருந்து, நடைபெற முடியாததை, நடைபெறச் செய்து கவலையற்ற பாதுஷா (பேரரசன்) ஆகுங்கள்!

**30.11.2007** சத்யதா மற்றும் பவித்ரதா சக்தியை சொரூபத்தில் கொண்டு வந்து, பாலக் (குழந்தைப் பருவம்) மற்றும் மாலிக்பன் (எஜமான் என்ற அதிகாரி நிலை) இதை சமநிலையில் (பேலன்ஸ்) வைத்திருங்கள்!

**15.12.2007** காலத்தின் மகத்துவம் அறிந்து, கர்மத்தின் ஆழமான விளைவுகளை கவனத்தில் வைத்திருங்கள், நஷ்டமோஹா, எவர் ரெடி ஆகுங்கள்!

**31.12.2007** புத்தாண்டில், அகண்ட மகாதானி, அகண்ட நிர்விக்னம், அகண்ட யோகி மற்றும் சதா வெற்றி மூர்த்தி ஆக வேண்டும்!

ஓம் சாந்தி சாந்தி சாந்தி!

☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂

## 18.01.2007 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# தற்போது தன்னை விடுவித்துக் கொண்டு மாஸ்டர் முக்தி வழங்கும் வள்ளலாகி, அனைவருக்கும் முக்தியை வழங்குவதற்கு நிமித்தமாகுங்கள்!

இன்று சிநேகத்தின் கடலான பாப்தாதா நாலா பக்கங்களிலுமுள்ள சிநேகமான குழந்தைகளை பார்த்துக் கொண்டிருக்கின்றார். இரண்டு விதமான குழந்தைகளைக் கண்டு, புன்சிரித்துக் கொண்டிருக்கின்றார். ஒன்று, அன்பிலே மூழ்கியிருக்கும் (லவ்லின்) குழந்தைகள், இரண்டாவது அன்பான (லவ்லி) குழந்தைகள். இரண்டு விதமான குழந்தைகள் அன்பின் அலைகளிலே பாப்தாதாவின் அருகில் அமிர்தவேளைக்கும் முன்னரே வந்தடைந்து விட்டனர். ஒவ்வொரு குழந்தையின் இதயத்திலிருந்தும், தானாகவே, எனது பாபா என்னும் பாடல் ஒலித்துக் கொண்டிருக்கிறது. பாப்தாதாவின் உள்ளத்திலிருந்தும் கூட இதே பாடல் எனது குழந்தைகள், செல்லமான குழந்தைகள், பாப்தாதாவின் தலைக்கிரீடமான குழந்தைகள்...

இன்று நினைவு தினத்தின் காரணமாக அனைவரது மனதிலும் சிநேகத்தின் அலைகள் அதிகமாக இருக்கிறது. அநேக குழந்தைகள் சிநேகத்தின் முத்துக்களின் மாலையாக பாப்தாதாவின் கழுத்தில் இருக்கின்றனர். பாபாவும் தனது சிநேகமென்னும் கரங்களின் மாலையை குழந்தைகளுக்கு அணிவித்துக் கொண்டிருக்கிறார். எல்லையில்லாத பாப்தாதாவின் எல்லையற்ற கரங்களில் போய் சேர்ந்து விட்டனர். இன்று அனைவரும் விசேஷமாக சிநேகத்தின் விமானத்தின் மூலம் வந்து சேர்ந்துள்ளனர். வெகு தூரங்களிலிருந்தும் கூட அவ்யக்த ரூபத்தில் ஃபரிஸ்தாக்களின் ரூபத்திலும் வந்து சேர்ந்துள்ளனர். அனைத்து குழந்தைகளுக்கும் பாப்தாதா இன்று

நினைவு தினமாகிய சக்தி நிறைந்த தினத்தில் பல கோடி மடங்கு நினைவுகளை கொடுத்துக் கொண்டிருக்கிறார். இந்த நாள் எவ்வளவு நினைவுகளை கொடுக்கிறது மற்றும் ஒவ்வொரு நினைவும் ஒரே விநாடியில் சக்தி வாய்ந்தவர்களாக ஆக்கி விடுகிறது. நினைவின் பட்டியல் (லிஸ்ட்) ஒரு விநாடியில் நினைவில் வந்து விடுகிறதல்லவா? நினைவு எதிரில் வந்தவுடனேயே சக்தியின் போதை ஏறிவிடுகிறது. முதன்முதலான நினைவு நினைவிருக்கிறதா? பாபாவினுடையவர்களாக ஆனவுடன் பாபா எந்த நினைவை உங்களுக்கு ஞாபக மூட்டினார்? நீங்கள் கல்ப முன்னரான பாக்கியவான் ஆத்மாக்கள் -இந்த முதல் நினைவின் மூலம் என்ன மாற்றம் வந்தது? நினைத்துப் பாருங்கள். ஆத்ம அபிமானி ஆவதன் மூலம் பரமாத்ம தந்தையின் சிநேகத்தின் போதை ஏறிவிடுகிறது. ஏன் ஏறியது? உள்ளத்திலிருந்து முதல் சிநேகத்தின் வார்த்தை என்னவாக வெளி வந்தது? எனது இனிமையான பாபா மேலும் இந்த பொன்னான வார்த்தை வெளி வந்ததன் மூலம் எம்மாதிரி போதை ஏறியது? என்னுடைய பாபா என்று கூறியதன் மூலம், அறிந்து கொண்டதன் மூலம், ஒத்துக் கொண்டதன் மூலம் உங்களுக்கு பரமாத்மாவின் அனைத்து பிராப்திகளும் வந்து சேர்ந்தன. அனுபவம் இருக்கிறதல்லவா! எனது தந்தை என்று சொன்னவுடன் எவ்வளவு பிராப்திகள் உங்களுக்கு வந்தது? எங்கு பிராப்தி ஏற்படுகிறதோ அங்கு நினைவு செய்ய வேண்டியதில்லை ஆனால் நினைவு தானாகவே வந்து விடுகிறது மேலும் எளிதாகவும் வருகிறது. ஏனென்றால் எனது பொக்கிஷமாயிற்று. ஆக என்னுடையது என்பதை நினைவு செய்ய தேவையில்லை. நினைவு இருக்கவே செய்கிறது. எனது என்பதை மறப்பது கஷ்டம், நினைவு செய்வது கஷ்டமாக இருப்பதில்லை, உதாரணமாக எனது சரீரம் என்கிற அனுபவம் உள்ளது. இது மறக்கிறதா? மறக்கச் செய்ய வேண்டியுள்ளது ஏன்? என்னுடையதல்லவா! ஆக, எங்கு எனது வருகிறதோ அங்கு எளிதாக நினைவு வந்து விடுகிறது. ஆக நினைவு என்பது சக்தி வாய்ந்த ஆத்மாவாக ஆக்கி விட்டது. ஒரே ஒரு வார்த்தை எனது பாபா என்பது. பாக்கியத்தை வழங்கும் வள்ளல், அளவில்லா வள்ளலை என்னுடையவர் என ஆக்கி விட்டேன். இப்படி அற்புதத்தை செய்யும் குழந்தை தானே! பரமாத்மாவினுடைய பாலனைக்கு அதிகார உரிமையுள்ளவர் ஆகி விட்டீர்கள். இந்த பரமாத்ம பாலனை முழு

கல்பத்தில் ஒரு முறை தான் கிடைக்கிறது. ஆத்மாக்களின் மற்றும் தேவ ஆத்மாக்களின் பாலனையோ கிடைக்கத்தான் செய்கிறது ஆனால் பரமாத்மா பாலனை ஒரே ஒரு பிறவிக்கு மட்டும் தான் கிடைக்கிறது.

இன்றைய நினைவு நாள் மூலம் சக்தி நிறைந்த நாளில் பரமாத்மா பாலனையின் போதை மற்றும் குஷி மிகவும் எளிதாக நினைவிலிருந்தல்லவா? ஏனெனில் இன்றைய சூழ்நிலை மிகவும் எளிதான நினைவினுடையதாக இருந்தது. ஆக இன்றைய நாளில் சகஜயோகிகளாக இருந்தீர்களா? அல்லது இன்றைய நாளில் கூட நினைவு செய்வதற்கு யுத்தம் செய்ய வேண்டியிருந்ததா? ஏனெனில் இன்றைய நாள் சிநேகத்தின் நாள் என்று சொல்வோம், ஆக சிநேகமானது கடினப்பட்டு முயற்சி செய்வதிலிருந்து விலக்கி விடுகிறது. சிநேகம் அனைத்து விஷயங்களையும் எளிதாக்கி விடுகிறது. ஆக அனைவரும் இன்றைய தினத்தில் சகஜயோகிகளாக இருந்தீர்களா? அல்லது கடினமாக இருந்ததா? இன்றைய தினம் யாருக்கு கடினமாக இருந்ததோ அவர்கள் கை தூக்குங்கள். என்ன, யாருக்குமே கஷ்டமாகயில்லையா? அனைவரும் சகஜயோகிகளாக இருந்தீர்களா! நல்லது. யார் சகஜயோகிகளாக இருந்தீர்களோ அவர்கள் கையை தூக்குங்கள். நல்லது. சகஜயோகிகளாக இருந்தீர்களா? இன்று மாயாவிற்கு விடை கொடுத்து அனுப்பி விட்டீர்கள். இன்று மாயை வரவில்லையே? இன்று மாயாவுக்கு விடை கொடுத்து அனுப்பி விட்டீர்களா? நல்லது. இன்று விடை கொடுத்து அனுப்பி விட்டீர்கள். அதற்காக உங்களுக்கு வாழ்த்துக்கள்! இவ்வாறே சிநேகத்தில் மூழ்கியிருந்தால் நிரந்தரமாக மாயாவிற்கு விடை கொடுத்து அனுப்பிவிடுவீர்கள். ஏனெனில் இப்பொழுது 70-ஆண்டு (1936-2007) முழுமையாகிக் கொண்டிருக்கிறது. அப்படியானால் பாப்தாதா இந்த வருடத்தை பற்றற்று (நியாரா) விளங்கும் வருடம் மற்றும் அனைவரோடும் அன்புடன் இருக்கும் (ப்யாரா) வருடம், கஷ்டப்பட்டு முயற்சி செய்வதிலிருந்து விடுதலையாகும் வருடம், பிரச்சனைகளிலிருந்து விடுதலையாகும் வருடம் கொண்டாடுவதற்கு விரும்புகிறார், உங்கள் அனைவருக்கும் இது விருப்பமா? விடுதலை வருடமாக கொண்டாடுவீர்களா? ஏனெனில் முக்தி தாமத்திற்கு செல்ல வேண்டும், துக்கம் நிறைந்த அநேக அசாந்தியான ஆத்மாக்களுக்கு முக்தி வழங்கும் வள்ளல் பாபாவோடு இணைந்து முக்தியை வழங்க

வேண்டும். ஆக மாஸ்டர் முக்தி வள்ளலான நீங்கள் சுயம் விடுதலை ஆகும் பொழுது தான் முக்தி ஆண்டை கொண்டாடுவீர்கள் இல்லையா! ஏனெனில் பிராமண ஆத்மாக்களாகிய நீங்கள் முக்தி அடைந்து அநேகருக்கு முக்தியை வழங்குவதற்கு நிமித்தமானவர்கள். ஒரே ஒரு வார்த்தை முக்தியை வழங்குவதற்குப் பதிலாக பந்தனத்தில் சிக்க வைத்து விடுகிறது. பிரச்சனைகளுக்கு அடிமையாக்கி விடு கிறது. அது தான் இந்த வார்த்தை -இப்படியில்லை அப்படி! அப்படியில்லை, இப்படி! பிரச்சனை வரும்பொழுது பாபா, இப்படியில்லை அது, அப்படித்தானே இருந்தது என்று கூறுகின்றனர். இப்படி ஏற்படுவதில்லை, இப்படித்தானே ஏற்பட வேண்டும்! இது சாக்குபோக்கு கூறுவதின் விளையாட்டாகும்.

பாப்தாதா அனைவருடைய கோப்புகளைப் (பைல்) பார்த்தார். அந்த கோப்புகளில் என்ன பார்த்தார்? பெரும்பாலோரின் உறுதிமொழி செய்வதின் பேப்பர்கள் நிறைந்திருந்தன. அவ்வாறு உறுதிமொழி எடுக்கும்பொழுது உளப்பூர்வமாக எடுக்கின்றனர் ஆனால் இதுவரை கோப்பு பெரிதாகிக் கொண்டிருப்பதையே பார்த்தார் ஆனால் அதற்கு முடிவே ஏற்படவில்லை. திடமான உறுதிமொழி என்றால் என்ன சொல்லப்படுகிறது -உயிரே போனாலும் சரி ஆனால் உறுதி மொழி போய் விடக்கூடாது! ஆக இன்று பாப்தாதா அனைவரது கோப்புகளையும் பார்த்தார். மிக நன்றாக நல்ல நல்ல உறுதிமொழிகளை எடுத்துள்ளனர். மனதாலும் செய்துள்ளனர், எழுதியும் கொடுத்துள்ளனர், ஆக இந்த ஆண்டு என்ன செய்யப் போகிறீர்கள்? கோப்புகளை அதிகமாக்குவீர்களா அல்லது உறுதிமொழியை இறுதியாக்கி முடிக்கப்போகிறீர்களா? என்ன செய்யப் போகிறீர்கள்? முதல் வரிசையில் அமர்ந்திருப்போர் கூறுங்கள். பாண்டவர்களே கூறுங்கள். டீச்சர்கள் சொல்லுங்கள், பார்க்கலாம். இந்த வருடம் பாப்தாதாவிடம் இருக்கும் பைல் (File) பெரிதாகிக் கொண்டிருக்கிற அந்த கோப்பை (பையிலை) முடிவுக்கு கொண்டு வருவீர்களா? அல்லது மேலும் உறுதிமொழி காகிதங்களைச் சேர்க்கப் போகிறீர்களா? என்ன செய்யப் போகிறீர்கள்? சொல்லுங்கள் பாண்டவர்களே? முடிவுக்கு கொண்டு வருவீர்களா? பணிந்து போக வேண்டும், மாறித்தான் ஆக வேண்டும், பொறுத்துக் கொள்ளத்தான் வேண்டும், கேட்டுக் கொள்ளத்தான் வேண்டும் ஆனாலும் மாறியேத் தீரவேண்டும் என்று நினைப்பவர்கள்

கை தூக்குங்கள் பார்க்கலாம்! டி.வி.காரர் அனைவரையும் படம் எடுக்கட்டும். அனைவரது உருவத்தையும் போட்டோ எடுக்க வேண்டும். 3-4 டி.வி. உள்ளது. அனைத்து பக்கத்திலிருந்தும் போட்டோ எடுங்கள். இந்த ரிக்கார்ட்டை பத்திரப்படுத்த வேண்டும். பாபாவிற்கு இதை போட்டோ எடுத்துத் தரவேண்டும். எங்கே போனார் அந்த புகைப்படக்காரர்? பாப்தாதாவும் கோப்புகளின் பயனை அடையட்டும்; வாழ்த்துக்கள், வாழ்த்துக்கள்! உங்களுக்காக நீங்களே கை தட்டிக் கொள்ளுங்கள்!

ஒருபுறம் அறிவியல் மறுபுறம் தீயவைகள்(பிரஷ்டாச்சார்), மூன்றாவது பக்கம் பாவங்கள்(பாடாச்சார்). அனைவரும் தத்தம் காரியங்களில் மேலும் முன்னேறிக் கொண்டே சென்று கொண்டிருக்கிறார்கள். நிறைய புதுப்புது திட்டங்களை தீட்டிக் கொண்டிருக்கிறார்கள். நீங்களோ படைத்தவரின் குழந்தைகள், உலகைப் படைப்பவரின் குழந்தைகள் என்றால் இந்த வருடம் உங்களது உறுதிமொழி மிகத் திடமாக இருக்குமாறு புதுமையின் சாதனத்தைக் கண்டு பிடியுங்கள் ஏனெனில் எல்லோருமே வெளிப்படையாகக் காண விரும்புகின்றனர். எவ்வளவு செலவு செய்கிறீர்கள், ஆங்காங்கு பெரும்பெரும் நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்கின்றீர்கள். ஒவ்வொரு துறையினரும் (விங்) மிகவும் நன்றாக முயற்சி செய்து கொண்டிருக்கிறீர்கள் ஆனால் இந்த ஆண்டு ஒன்றை புதியதாக சேருங்கள், சொல் மூலம் சேவை செய்தாலும் சரி, வெறும் சொல் மூலம் சேவை மட்டுமல்ல, எண்ணம், சொல் மற்றும் சிநேக சகயோகம் ஆகிய மூன்று விதமான சேவையையும் இணைந்து செய்யுங்கள். தனித்தனியாக இருக்கக் கூடாது. ஒரு சேவையில் பார்க்கும்பொழுது பாப்தாதா என்ன முடிவைப் பார்க்க விரும்பினாரோ அது இல்லை. வெளிப்படுத்துதல் (பிரத்யக்ஷதா) நடைபெற வேண்டும் என்று நீங்களும் விரும்புகிறீர்கள். இதுவரை நடந்தது மிக நன்றாக நடந்துள்ளது. எல்லோரும் மிக நன்றாக உள்ளது என்று கூறிச் செல்கின்றனர் ஆனால் நன்றாக ஆகிக் காண்பிக்க வேண்டும். அதாவது வெளிப்பாடு (பிரத்யக்ஷதா) என்பது நிகழ வேண்டும். ஒரே சமயத்தில் மனம் சொல் செயலில் சிநேகமுள்ள ஒத்துழைப்பு அளிப்பவர்கள் ஆக வேண்டும் என்பதை கூடுதலாகச் செய்யுங்கள். ஒவ்வொருவருக்கும் அவர்கள் பிராமணர்களாக இருந்தாலும் சரி, வெளியில் உள்ள சேவைக்கு நிமித்தமானவர்களாக இருந்தாலும் சரி அவர்களுக்கு

சகயோகம் மற்றும் சிநேகம் வழங்குவது கர்மனா சேவையில் முதல் நம்பரில் வருவதாகும். இவர் இவ்வாறு செய்தார், எனவே தான் நான் அப்படி செய்ய வேண்டியதாயிற்று என்று பேசக் கூடாது. சிநேகத்திற்குப் பதிலாக கொஞ்சம் கொஞ்சம் பேச வேண்டியதாயிற்று. இது செய்தே ஆக வேண்டியுள்ளது, கூறி ஆக வேண்டியுள்ளது, பார்த்தே ஆக வேண்டியுள்ளது... இம்மாதிரி கூடாது. இத்தனை ஆண்டுகளில் பார்த்தாகி விட்டது. பாப்தாதா அனுமதி வழங்கி விட்டார். இப்படியில்லை, அப்படி என்று செய்து கொண்டேயிருந்தால், எது வரை? இன்னும் பாப்தாதாவோடு உரையாடும்போது பெரும்பாலோர் கூறுகின்றனர் பாபா கடைசி திரை எப்பொழுது விலகும்? எதுவரை இவ்வாறே போய்க் கொண்டிருக்கும்? பாப்தாதா உங்களுக்கு கூறுகிறார், இந்த பழைய பேச்சு, பழைய நடத்தை. சோம்பேறித்தனமான, கவனக்குறை என, கடும் சொல் நிறைந்த இவைகள் எதுவரை? பாப்தாதாவிற்குக் கூட உங்களிடம் ஒரு கேள்வி உள்ளது? அது தான் எதுவரை? நீங்கள் பதில் சொன்னால், எப்பொழுது விநாசம் ஆகும் என்று பாப்தாதாவும் பதில் கூறுவார். ஏனெனில் விநாசத்தின் திரையை இப்பொழுதுகூட திறக்க முடியும், இதே வினாடி ஆனால் அதற்கு முன்னால் ராஜாங்கம் செலுத்துவோர் தயாராகட்டும்! இப்பொழுதிலிருந்தே ஏற்பாடு செய்தால் தான் இறுதி முடிவு, வினாசத்தை அருகில் கொண்டு வர முடியும். ஏதேனும் பலகீனமான விசயத்தில் காரணம் கூறாதீர்கள். அதற்கு நிவாரணம் செய்யுங்கள், இது தான் காரணம் இல்லையா? பாப்தாதா நாள் முழுவதும் குழந்தைகளின் விளையாட்டை பார்த்துக் கொண்டிருக்கிறார் இல்லையா? குழந்தைகளிடம் அந்தளவு அன்பு உள்ளது. எனவே அடிக்கடி விளையாட்டை பார்த்துக் கொண்டிருக்கிறார். பாப்தாதாவினுடைய டி.வி. மிகப் பெரியது. ஒரே நேரத்தில் உலகம் முழுவதும் பார்க்க முடியும். நாலா புறமுள்ள குழந்தைகள் தென்படுவார்கள், அது அமெரிக்காவாக இருந்தாலும் சரி, குர்காம்வ் (ஓ.ஆர்.சி.) ஆக இருந்தாலும் சரி, அனைத்தும் தெரியும். ஆக பாப்தாதா மிக அதிக விளையாட்டைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். அதற்கான காரணம் மிகவும் நன்றாக இருக்கிறது. பாபா இது என்னுடைய தவறு அல்ல, அவர் தான் அப்படி செய்தார்! சரி, அவர் அப்படி செய்தார், நீங்கள் அதற்கு சரியான தீர்வு அளித்தீர்களா? காரணத்தை வெறும் காரணமாகவே விட்டுவிட்டீர்களா? அல்லது அதற்கான தீர்வாக அதை மாற்றினீர்களா?

## 2007 அவ்யக்த முரளி

பாபா உங்களுடைய விருப்பம் என்னவென்று அனைவரும் கேட்கிறீர்கள் இல்லையா? அதற்கு பாப்தாதா தனது ஆசையை கூறுகிறார். பாபாவினுடைய ஒரே ஆசை நிவாரணம் தென்படட்டும். காரணம் மறைந்து போகட்டும். பிரச்சனைகள் தீர்வாகட்டும், நல்ல முடிவு ஏற்படட்டும், இது நடக்க முடியுமா? ஆகக்கூடியது தானா? முன் வரிசையில் இருப்பவர்களே, இது நடைபெறுமா? தலையையாவது அசையுங்களேன், பின்னால் இருப்பவர்களே இது நடக்கக் கூடுமா? நல்லது. நாளை டி.வி.யை திறந்து பார்த்தால் டி.வி.யில் கட்டாயம் பார்ப்பீர்கள் இல்லையா? டி.வி. பார்த்தால் அது இந்தியாகவாக இருந்தாலும் சரி, வெளிநாடாக இருந்தாலும் சரி, சிறிய ஊராக இருந்தாலும் சரி, பெரிய நகரமாக இருந்தாலும் எங்கேயும் காரணம் தென்படாது இல்லையா? உறுதி தானே! இதில் ஆம் என்று சொல்ல மாட்டேன் என்கிறார்கள்! நடைபெறுமா? கை தூக்குங்கள். கை என்னமோ மிக அழகாக தூக்கி விடுகிறீர்கள், பாப்தாதாவும் குஷி அடைந்து விடுகிறார். உங்களது கை தூக்கும் கலை அற்புதம் தான். குஷிபடுத்துவது என்பது குழந்தைகளுக்கு நன்றாகவே வருகிறது; ஏனென்றால் பாப்தாதா பார்க்கிறார். கோடியில் ஒருவரான நீங்கள் அந்த ஒரு சிலரிலும் மிகச் சிலரே நிமித்தமாகிறீர்கள். இந்த குழந்தைகளைத் தவிர வேறு யார் செய்ய முடியும்? நீங்கள் தானே செய்ய வேண்டும் இல்லையா? உங்கள் மீது பாப்தாதாவிற்கு நம்பிக்கையுள்ளது. இன்னும் பின்னால் வருவார்கள், அவர்கள் உங்களுடைய நிலையைப் பார்த்தே சரியாகி விடுவார்கள். அவர்கள் மிகவும் கஷ்டப்பட்டு முயற்சி செய்ய வேண்டியிராது. நீங்கள் ஆகி விடுங்கள். அவ்வளவே! ஏனெனில் நீங்கள் அனைவரும் பிறவி எடுத்தவுடனேயே பாப்தாதாவிடம் உறுதி அளித்துள்ளீர்கள் -கூடவே இருப்போம் துணையாகவே வாழ்வோம் மற்றும் கூடவே திரும்பிச் செல்வோம். மேலும் பிரம்மாபாபாவுடன் கூடவே ராஜ்யத்திலும் வருவோம். இந்த உறுதிமொழியைச் செய்தீர்கள் இல்லையா? கூடவே இருந்து கூடவே செல்வோம் என்றால் கூடவே சேவையில் ஒத்துழைப்போரும் நீங்கள் தானே!

அப்படியென்றால் இப்பொழுது என்ன செய்யப் போகிறீர்கள்? மிக அழகாக கை உயர்த்தினீர்கள், பாப்தாதாவும் குஷியாகி விட்டார் ஆனால் எப்பொழுதாவது ஏதேனும் விசயம் வந்தால் இந்த நாள் இந்த தேதி இந்த நேரத்தை நினைவு செய்ய வேண்டும். அதாவது நான் எதற்கு கை

தூக்கினேன் என்று நினைக்க வேண்டும். அதற்கு உதவி கிடைத்து விடும். நீங்கள் ஆகியே தீர வேண்டும். சீக்கிரமாக ஆகி விடுங்கள். இப்பொழுது நாம் தான் கல்ப முன்னர் வந்தோம் என்று சிந்திக்கிறீர்கள், இப்பொழுதும் மற்றும் ஒவ்வொரு கல்பத்திலும் நாம் தான் ஆக வேண்டும். இரண்டு வருடம் ஆவோம், மூன்றாவது வருடம் சென்று விடுவோம் அப்படியில்லை -இது உறுதி தானே? எனவே நாம் தான் நிமித்தமானவர்கள் என்று சதா நினைவு செய்யுங்கள் -நான் தான் கோடியில் ஒருவர் அந்த சிலரிலும் ஒரு சிலர் கோடியில் ஒருவர் தான் வருவார் ஆனால் நீங்கள் அந்த ஒரு சிலரிலும் குறிப்பிடத்தக்கவர் ஆவீர்கள்.

இன்று சிநேகத்தின் தினமாகும். சிநேகத்தில் எதை செய்ய வேண்டுமானாலும் கடினமாக இருப்பதில்லை. எனவே பாப்தாதா இன்றே அனைவருக்கும் நினைவுபடுத்துகிறார், சிவபாபா மற்றும் பிரம்மாபாபாவுடன் குழந்தைகளுக்கு எவ்வளவு அன்பு உள்ளது. இதைப் பார்த்து பாப்தாதாவுக்கு மிகவும் குஷி ஏற்படுகிறது. நாலா புறங்களிலும் பார்த்தால், அது ஒரு வார இறை மாணவராக இருந்தாலும் சரி, அல்லது 70-ஆண்டுகள் ஆனோராக இருந்தாலும் சரி, இருவருமே இன்றைய தினம் அன்பில் மூழ்கியிருக்கிறார்கள். ஆக பிரம்மாபாபா மீது குழந்தைகளுக்கு எவ்வளவு அன்பு என்று சிவபாபாவும் பார்த்து புன்முறுவலிடுகின்றார்.

இன்றைய தினத்தில் மேலும் செய்திகளைக் கூறட்டுமா? இன்றைய நாளில் அட்வான்ஸ் பார்ட்டி கூட பாப்தாதா அருகில் வெளிவந்து தென்பட்டனர். ஆக அட்வான்ஸ் பார்ட்டியும் உங்களை நினைவு செய்கிறார்கள்? எப்படி? முக்தி தாமத்தின் கதவை பாப்தாதாவோடு சேர்ந்து எப்பொழுது திறக்கப்போகிறீர்கள்? இன்று அட்வான்ஸ் பார்ட்டிகள் அனைவரும் எங்களுக்கு அந்த தினத்தை கூறுங்கள் என்று கேட்கின்றனர். ஆக அவர்களுக்கு என்ன பதில் சொல்வது? பதில் கூறுவதில் யார் புத்திசாலி? மிக விரைவில் ஆகி விடும் என்பதே பாப்தாதாவின் பதில் ஆனால் இதில் குழந்தைகளாகிய உங்களின் உதவி பாபாவிற்குத் தேவை. அனைவருமே ஒன்றாக செல்வோம் இல்லையா? கூடவே செல்லக்கூடியவர்களா, அல்லது ஆங்காங்கே நின்று செல்பவர்களா? கூடவே செல்லக் கூடியவர்கள் தானே? கூடவே

செல்வதற்கு விருப்பம் தானே? அப்படியென்றால் அவருக்குச் சமமாக ஆக வேண்டுமில்லையா? கூடவே செல்ல வேண்டுமானால் அவருக்குச் சமமாக ஆகியே தீர வேண்டு மில்லையா? பழமொழி எப்படி கூறப்படுகிறது? "கை மீது கையிருக்க வேண்டும். துணையோடு துணையாக இருக்க வேண்டும்" கையோடு கையிருப்பது அதாவது சமான நிலை. தாதிமார்களே கூறுங்கள், தயாராகி விடுமா? தாதிமார்கள் கூறுங்கள், கை உயர்த்துங்கள். நீங்கள் மூத்த அண்ணா (தாதா) என்று (மூத்த சகோதரர்களைப் பார்த்து) கூறப்படுகிறீர்கள் இல்லையா? தாதிமார்கள் கூறுங்கள், ஏதேனும் தேதி உள்ளதா? (இப்பொழுது இல்லையேல் எப்போதும் இல்லை) இதன் அர்த்தம் என்ன ஆயிற்று? இப்பொழுது தயார் தானே? பதில் கூறினீர்கள். நல்லது. தாதிமார்களே! முடிந்தே ஆக வேண்டும். ஒவ்வொருவரும் தங்களை பொறுப்பானவர்களாக உணர வேண்டும். சிறியவர்கள் பெரியவர்கள் இதில் சிறியவர்கள் என்பதில்லை ஏழு நாட்கள் ஆன குழந்தைகளும் கூட பொறுப்பானவரே. கூடவே வர வேண்டும் இல்லையா? தனியாக திரும்பிச் செல்ல விரும்பினால் பாபா திரும்பிச் செல்லலாம், ஆனால் பாபா அவ்வாறு போக முடியாது, கூடவே செல்ல வேண்டும். பாபாவின் உறுதிமொழியும் இருக்கிறதல்லவா? குழந்தைகளாகிய உங்களின் உறுதிமொழியும் உள்ளது. அந்த உறுதிமொழியை கடைப்பிடிக்க வேண்டுமில்லையா?

மதுபனில் யார் யார் பொறுப்பின் தலைவர்களாக இருக்கின்றார்களோ அம்மாதிரி பல பொறுப்பு இருக்கிறதல்லவா? சாந்திவனம், ஞானசரோவர், பாண்டவ பவனம்... இப்படி பல இடங்கள் உள்ளன. இதில் யார் பொறுப்பாளர்களோ அவர்களின் பெயர் பட்டியலை பாப்தாதாவிற்குத் தரவேண்டும். அதிலிருந்து கணக்கை எடுப்போம் மேலும் பொறுப்பான டீச்சர்கள், சென்டர்களின் பொறுப்பாளர்கள் மற்றும் மண்டல பொறுப்பாளர்கள் இவர்கள் அனைவரையும் ஒரு நாள் ஒன்று கூட்டுவோம், கணக்கு வழக்கை கேட்கத்தானே செய்வோம் இல்லையா? ஏனென்றால் பாப்தாதாவிடம் மிகுந்த துக்கம் மற்றும் அசாந்தியினுடைய ஒலி வருகிறது. தொல்லையின் ஒலிகள் வந்து கொண்டிருக்கின்றன. உங்களிடம் அந்த ஒலிகள் கேட்பதில்லை. உங்களிடம் கூட பக்தர்கள் இருப்பார்கள் தானே? இந்த பக்தர்களின்

அழைப்பு இஷ்ட தேவதைகளான உங்களுக்கு கேட்பதில்லையா? டீச்சர்களுக்கு பக்தர்களின் இந்த கூப்பாடு கேட்கின்றதா? நல்லது.

மகாராஷ்டிரா, மும்பை மற்றும் ஆந்திரபிரதேச சேவாதாரிகளுடன் : நல்லது. அனைவரும் வாய்ப்பினை நன்கு எடுத்துக் கொள்கிறார்கள். பெயரே மகாராஷ்டிரம். நல்ல எண்ணிக்கை வந்துள்ளது. மகாராஷ்டிரம் என்றால் மகான் ஆத்மாக்களின் ராஜ்யம். ஆக பாப்தாதா பார்க்கின்றார், மகாராஷ்டிராவில் பாப்தாதாவின் நல்ல நல்ல மகான் குழந்தைகள் அதிக எண்ணிக்கையில் உள்ளனர். ஏனெனில் பாப்தாதாவின் பார்வை மும்பை மற்றும் டில்லியில் அதிகமாக உள்ளது. மும்பை நகரம் வேகமாக பரப்புவதற்கு நிமித்தமாக உள்ளது. மற்றும் நாடகப்பிரகாரம் மகாராஷ்டிரம், மும்பை மற்றும் அருகாமையில் உள்ள நகரங்கள், டில்லி இரண்டும் சாகார பிரம்மாபாபா மற்றும் ஜகதம்பாவின் பாலனை கிடைத்துள்ள நகரங்களாகும். விசேஷமான பாலனை கிடைத்துள்ளது. எந்த காரியம் நடைபெற்றாலும் பாப்தாதா மகாராஷ்டிரம் மற்றும் டில்லியை நினைவு செய்கின்றார் மற்றபடி பிற அனைவரும் துணையாக ஆகிக் கொள்கின்றனர். பிறவும் பெரிய பெரிய மண்டலங்கள் தான் ஆனால் சாகார பாலனைக்காக பாப்தாதா டில்லி மற்றும் மும்பையை நினைவு செய்கின்றார். சிறிய மண்டலங்கள் கூட அற்புதங்களை நிகழ்த்தலாம். சிறியவைகளுக்கு எப்பொழுதுமே பாப்தாதா கூறுவார். பெரியவைகள் என்றும் பெரியவை தான் ஆனால் சிறியவை தந்தைக்குச் சமமானவை. தற்பொழுது மகாராஷ்டிர மண்டலம் ஏதேனும் மகான் காரியத்தை செய்தே ஆக வேண்டும். ஏதேனும் புதிய கண்டுபிடிப்பு ஏற்பட்டு பல காலம் ஆகி விட்டது. பல்வேறு துறைகளுக்கான சேவைகளும் பல காலம் நடந்து முடிந்துள்ளது. மாநாடுகளும் நடந்தேறியுள்ளன. பாதயாத்திரையும் நடைபெற்றுள்ளது. இப்போது ஏதேனும் புதிய சேவைக்கான விதியை கண்டுபிடியுங்கள். சிந்தியுங்கள். அதன்மூலம் செய்தி எளிதில் பரவ வேண்டும். இது வரை என்னென்ன செய்தீர்களோ அத்திட்டங்கள் எல்லாம் பாப்தாதாவிற்கு பிடித்தவை தான் மேலும் முன்னேற்றமும் அடைந்துள்ளது ஆனால் பல காலம் இந்த முன்னேற்றம் நடந்தேறியுள்ளது. இப்பொழுது புதிய கண்டுபிடிப்பு எதையேனும் தயார் செய்யுங்கள். யார் செய்தாலும் சரி, சிறியவர்கள் செய்தாலும் சரி, முன்னதாகவே வாழ்த்துக்கள்! மிக நல்லது, மகராஷ்டிராவிலும்

முன்னேற்றம் என்பது நன்றாகவே நடந்து கொண்டிருக்கிறது. இப்பொழுது மகாராஷ்டிரா மண்டலத்தின் சேவை முறை. அப்படியானால் பாபாவினுடைய சிநேகத்திற்கு பதிலான காரியத்தை ஏன் அவர்கள் செய்யக்கூடாது? பாப்தாதா கூறியுள்ளார் -பாப்தாதாவின் சிநேகத்திற்கான கைமாறு (Return) -சுயம் மற்றும் உலகத்தை மாற்றியமைப்பதாகும். அந்த திருப்பி (Return) கைமாறு செய்தலில் ஒரே ஒரு எழுத்தை மட்டும் மாற்றிவிட்டால் உலகமே (Turn) மாறிவிடும். ஏனெனில் குழந்தைகள் மீது பாப்தாதாவிற்கு மிக மிக நல்ல நம்பிக்கை உள்ளது. நம்பிக்கை நட்சத்திரங்கள் நீங்கள்! அப்படியானால் என்ன செய்யப்போகிறது மகாராஷ்டிரா? திரும்ப கைமாறு செய்வீர்களா? நல்லது. மிக நல்ல மகாராதிகள் மகாராஷ்டிரத்தில் உள்ளனர். ஒன்றாக அமர்ந்து கலந்தாலோசியுங்கள். மகாராஷ்டிராவின் நாலாபக்கமும் பாப்தாதா பார்த்தார். நம்பிக்கை நட்சத்திரங்களாக உள்ளனர். என்ன விரும்புகின்றனரோ அதை செய்து விட கூடும். இம்மாதிரி ஒற்றுமையான ரூபத்தில் நிகழ்ச்சிகளை செய்யுங்கள், மற்றும் புதிதாக ஏதேனும் திட்டங்களை தீட்டுங்கள். செய்ய முடியும்! மகாராஷ்டிரம் செய்ய முடியும் செய்வீர்கள் தானே? பெயரே மகாராஷ்டிரம் எனும் போது மகான் காரியம் செய்யத் தானே வேண்டும்? பாண்டவர்கள் என்ன நினைக்கிறீர்கள்? செய்வீர்களா? பாண்டவ சேனை செய்வீர்களா? சக்தி சேனை செய்வீர்களா? டீச்சர்களும் நிறைய வந்துள்ளனர். மிக நல்லது.

இரட்டை வெளி நாட்டினருடன் : மிக நல்லது. பாப்தாதா ஏற்கனவே கூறியுள்ளார். இரட்டை வெளிநாட்டினர் வரும்போது மதுபனின் அலங்காரமே ஆகி விடுகிறது. இரட்டை வெளிநாட்டினருடன் அனைவருக்கும் அன்பு உண்டு. உங்களுடைய குழுவை பார்க்கும்போது எல்லோருமே குஷி அடைகின்றனர். ஏனெனில் நீங்களும் கோடியில் ஒருவர். அந்த சிலரிலும் வெகு சிலர் வெளி வருகின்றீர்கள். இந்நாட்களில் வெளிநாட்டின் சேவையின் செய்தி மிக நன்றாகவே வந்து கொண்டிருக்கிறது. முஸ்லீம் தர்மத்தினருக்கும் செய்தி அளித்துக் கொண்டிருக்கின்றனர். இரட்டை வெளி நாட்டினர் ஏதேனும் ஒரு காரியத்தில் ஈடுபடும்பொழுது ஆம் என்றால் ஆம் -இல்லை என்றால் இல்லை என்னும் நிலை மிக விசேஷமானது என்று மகிமை பாடப்பட்டுள்ளது. எந்த காரியத்தில் ஈடுபட்டாலும் அதில் வெற்றியே அடைவர். நீங்கள் எந்த குழுவில் இருந்தாலும் அது வெற்றிக் குழு

தானே? வெற்றியின் திலகம் இடப்பட்டுள்ளதல்லவா? சேவையில் முன்னேற்றம் நிகழ்ந்து கொண்டிருக்கிறது. பாப்தாதா பார்த்துக் கொண்டிருக்கிறார். செய்தியும் கொடுத்துக் கொண்டிருக்கிறீர்கள். இரக்கமுள்ள ஆத்மாவாகி ஆத்மாக்களுக்கு செய்தி கொடுப்பது என்பது பாபாவிற்குச் சமமான சேவாதாரி ஆகி விடுவது. இப்பொழுது கூட கூறினோம் இல்லையா? ஒரே சமயத்தில் மூன்று விதமான சேவையும் ஒன்றாகச் சேர்ந்து செய்தால் அதனுடைய பிரபாவம் சீக்கிரமாக ஏற்படும். தன்னுடைய முகத்தின் மூலமாகவும், நடத்தையின் மூலமாகவும் கூடவே சேவை செய்ய முடியும். நடமாடும் மியூசியம் நீங்கள். மியூசியம் மற்றும் கண்காட்சியில் விதவிதமான ஸித்திரங்கள் உள்ளன அல்லவா? அதேபோன்று உங்களுடைய கண்கள், உங்களுடைய நெற்றி, உங்களது புன் சிரிக்கும் உதடுகள் இந்த விதவிதமானவைகள் மூலம் சேவை செய்ய முடியும். பாப்தாதாவிற்கு தைரியமுள்ளவர்களாகத் தென்படுகிறீர்கள். இப்பொழுது சற்று சூட்சுமத்தில் உள் உணர்வு தேவை. (ரியலைசேஷன்) உணரத்தான் செய்கிறீர்கள் ஆனால் சற்று சூட்சும ரூபத்தில் உள் உணர்வு செய்து முதல் நம்பரில் வாருங்கள். வெற்றி பெறுங்கள், (வின்) முதலில் (ஒன்) வாருங்கள். இரண்டாவது நம்பரில் கிடையாது. முதல் நம்பரில் வர வேண்டும் சரிதானே! தலை அசையுங்கள் பார்க்கலாம். நல்லது. வெளிநாட்டினரின் குரூப் மதுபன்னுக்கு வந்து கொண்டேயிருக்க வேண்டும். அது மிகவும் நன்றாக இருக்கிறது. மதுபன் அலங்கரிக்கப்படுகிறது. நல்லது.

பாரதத்தின் இளைஞர் குழுவுடன் : இளைஞர் குரூப் வந்துள்ளது. பாரத இளைஞர் குழு எழுந்திருங்கள். பாரதத்தின் இளைஞர் குழு என்ன அற்புதத்தை செய்யப்போகிறது? நாலா புறமும் செய்தியைத் தருவதில் இளைஞர் குழு இரட்டை சக்தியுடன் விளங்குகிறது. பாப்தாதா கேள்விப்பட்டார் மிக அற்புதமான ஒரு தலைப்பு வைத்திருக்கிறீர்கள் -வெற்றி அப்படித் தானே. சதா வெற்றியுடன் இருங்கள். வெற்றியுடையோராய் பிறரை ஆக்குபவரும் கூட. இந்த வருஷத்தில் பாப்தாதா என்ன வேலை கொடுத்துள்ளாரோ அதில் முன்னுதாரணமாகத் திகழும் போதுதான் அதில் வெற்றியுடையவர்கள் என்று சொல்ல முடியும். இளைஞர்கள் குழு என்றாலே வெற்றி மற்றும் தடையற்றவர்கள் என்று எல்லோரும் வேண்டும். அம்மாதிரி

சங்கல்பத்தைக் கொண்டுள்ளீர்களா? ஏதேனும் காரணம் சொல்ல மாட்டீர்களே? இப்படி அப்படி கூறமாட்டீர்கள் தானே? நான் மாற வேண்டும். நான் ஒத்துப்போக வேண்டும், நான் ஒத்துழைப்பு தறவேண்டும். நான் சிநேகத்தை வழங்க வேண்டும். முதலில் நான். இந்த விஷயத்தில் முதலில் நான் என்று சொல்லுங்கள் பரவாயில்லை. இம்மாதிரி ஒற்றுமைக் குழுவை வெளிநாட்டினரும் செய்துள்ளனர். பாரதவாசிகளும் செய்துள்ளனர். நல்லது. வாழ்த்துக்கள். இன்னும் பறந்து கொண்டேயிருங்கள்.

பாப்தாதாவிடம் பூ அலங்காரம் செய்கின்ற குழுவினரின் அன்பு நினைவுகளும் வந்து சேர்ந்தன! கொல்கத்தா சகோதர சகோதரிகள் அந்த குழுவினர் எங்கே அமர்ந்துள்ளனர். எழுந்திருங்கள். இந்த பூ அலங்காரம் அனைவருக்கும் மிகவும் நன்றாகப் பிடித்திருந்தது. பூ அலங்காரம் என்பது பொதுவான விஷயம் தான். உலகினரும் செய்கின்றனர் ஆனால் உங்களது அலங்காரத்திற்கும், உலகினரின் அலங்காரத்திற்கும் வித்தியாசம் உள்ளது. நீங்கள் சிநேக சொரூபமாக அலங்கரித்துள்ளீர்கள், ஆனால் அவர்கள் ஒரு கடமை என்ற உணர்வோடு செய்கின்றனர். எங்கே சினேகம் இருக்கிறதோ அந்த பூக்களின் நறுமணம் மற்றும் அழகு மிகவும் அதிகமாகிறது. பாபாவிற்கு நன்றாக பிடித்திருந்தது. சிநேகத்தால் கொல்கத்தாவிலிருந்து பூக்களை இங்கே கொண்டு வந்துள்ளனர். ஆக சிநேகம் என்னும் விமானத்தில் கொண்டு வந்துள்ளனர்! ரயிலில் கொண்டு வரவில்லை, சிநேக விமானத்தில் கொண்டு வந்துள்ளனர். அதனால் வரக்கூடிய உங்களுடைய சகோதர சகோதரிகளும் கூட இதைப் பார்த்து குஷி அடைவார்கள். "ஆகா! அற்புதம், அற்புதம்". நீங்கள் எந்த ஸ்நேகத்தால் அலங்காரம் செய்தீர்களோ, பாப்தாதா அதற்கு பதிலாக பல கோடி மடங்கு அன்பை வழங்குகிறார். வாழ்த்துக்கள். நல்லது.

நாலா புறங்களிலுமுள்ள நினைவு கடிதம், இமெயில், தொலைபேசி, முதலியவை அதிகமாக வந்துள்ளன. இங்கே மதுபனில் வந்துள்ளன என்றால் வதனத்தையும் வந்தடைந்துள்ளன. பந்தனத்தில் இருக்கக்கூடிய தாய்மார்களின் சிநேகம் நிறைந்த உள்ளங்களின் நினைவும் பாப்தாதாவிடம் வந்துள்ளன. இப்படிப்பட்ட குழந்தைகளை பாப்தாதா மிகவும் நன்றாக நினைவு செய்வதோடு ஆசீர்வாதங்களையும்

அளிக்கின்றார். அனைவரும் மிக அதிக குஷி யோடு தூரத்தில் அமர்ந்திருந்தாலும் மிக அருகாமையில் அனுபவம் செய்து கொண்டிருக்கின்றனர் என்பதை பாப்தாதா பார்க்கின்றார் ஆனால் மதுபெனில் எதிரில் அமர்ந்திருப்பது, தங்களது பையை நிரப்பிக் கொள்வது, இவ்வளவு பெரிய குடும்பத்தைச் சந்திப்பது, இந்த குடும்பம் குறைந்ததல்ல! எதிரிலேயே பார்க்கும்பொழுது எவ்வளவு குஷி ஏற்படுகிறது. ஏனெனில் 5000-ஆண்டுகளுக்குப் பின்னர் கிடைத்துள்ளது. அந்த அனுபவமே தனி தான் ஆனால் மதுபன் நிவாசியாக ஆவது இது ஒரு பொன்னான வாய்ப்பு, மிகவும் உதவி அளிக்கிறது. இதனை அனைவரும் அனுபவம் செய்கின்றனர் ஆனால் பாப்தாதாவிற்கு குஷி! ஏனெனில் எல்லோருக்கும் முரளி மீது அன்பு உள்ளது, முரளி மீது அன்பு என்றால் முரளீதர் (பாபா) மீது அன்பு முரளீதரர் மீது அன்பு இருக்கிறது ஆனால் முரளி எப்போதாவது என்று எவரேனும் சொன்னால் பாப்தாதா கூறுகிறார் அந்த அன்பை அன்பாக எடுத்துக் கொள்வதில்லை. அன்புக்கு பிரதியாக செய்வது வேறு! அன்பு செய்வது என்பது வேறு! யாருக்கு முரளி மீது அன்புள்ளதோ அவர்கள் அன்புக்கு கைமாறு செய்பவர்கள். முரளி மீது அன்பு இல்லையென்றால் அன்பு செய்வோரின் பட்டியலில் இருக்கிறார்களேயொழிய அன்பு கைமாறு செய்பவர்கள் அல்ல. மதுபனில் முரளி ஒலிப்பது மதுபனின் மகிமையாகும். மதுபனின் பூமிக்குத்தான் விசேஷ மகத்துவம் உண்டு. நல்லது.

நாலா புறங்களிலுமுள்ள சிநேகமான குழந்தைகளுக்கு அன்பான மற்றும் அன்பிலே மூழ்கிப்போன குழந்தைகளுக்கு, சதா பாபாவின் ஸ்ரீமத்படி ஒவ்வொரு அடியில் பன்மடங்கு சேமிப்பு செய்யக்கூடிய ஞானம் நிறைந்த, சக்தி வாய்ந்த குழந்தைகளுக்கு, சதா சிநேகியாகவும், மற்றும் சுவமான்தாரியாகவும், மரியாதை அளிக்கக்கூடியவர்களாகவும் இவ்வாறு பாபாவின் ஸ்ரீமத்தை பின்பற்றக்கூடிய வெற்றிக் குழந்தைகளுக்கு, சதா பாபாவின் ஒவ்வொரு அடியையும் பின்பற்றி அடியெடுத்து வைக்கக்கூடிய சகஜயோகி குழந்தைகளுக்கு, இன்று வதனத்தில் உங்களது அட்வான்ஸ் பார்ட்டி குழந்தைகளும் உள்ளனர், அவர்கள் ஒவ்வொருவரும் கூட எங்கள் சார்பிலும் அனைவருக்கும் நாலா புறங்களிலுமுள்ள குழந்தைகளுக்கு அன்பு நினைவுகளைக் கூறுவதோடு, எமது செய்தியையும் தர வேண்டுகிறோம், அதாவது நாங்கள் உங்களை எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றோம் என்ற

செய்தியைத் தாருங்கள் என்ற செய்தியையும் கூறுகின்றனர். நீங்கள் சீக்கிரமாக அதற்கான ஏற்பாடுகளை செய்யுங்கள். விசேஷமாக உங்கள் அனைவரின் அன்பு நிறைந்த மம்மா, தீதி, தாதா விஷ்வகிஷோர் மேலும் அவர்களுடன் இருக்கின்ற குழுவினர் அனைவரும் உங்கள் அனைவருக்கும் அன்பு நினைவுகளைக் கூறியுள்ளனர். கூடவே உங்களின் இனிமையான அம்மா அவர் கூறியதாவது: இப்பொழுது வெற்றியடைந்து துக்கத்தின் வலியை தூரமாக்கி சீக்கிரம் சீக்கிரமாய் முக்தி தாமத்தின் வாயிலை திறப்பதற்காக பாபாவின் துணையாளர்களாக ஆகுங்கள். பிரம்மாபாபாவை யார் யாரெல்லாம் சாகார ரூபத்தில் பார்க்க வில்லையோ அவர்களுக்கெல்லாம் விசேஷமாக பிரம்மாபாபாவும் உள்ளத்தின் அடியாழத்திலிருந்து அன்பு நினைவுகளைத் தருகின்றார். அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்தே.

**தாதிகளுடன்: (தாதி ரத்தன் மோகினிஜி. தாதி மனோகர் இந்திராஜி)** நீங்களும் அனைத்து வித பாகங்களையும் (ஆல் ரவுண்ட் பார்ட்) செய்து கொண்டிருக்கின்றீர்கள் இல்லையா? எவ்வளவு செய்ய முடிந்தாலும் சேவையில் நம்பர்-1. நீங்கள் ஆரம்பத்திலிருந்தே நம்பர்-1னாகவே இருந்து வந்துள்ளீர்கள். பிரம்மாபாபாவின் உள்ளத்தில் உங்கள் பெயர் உள்ளது. என்ன இருந்தாலும் சரி, செய்து கொண்டே போக வேண்டும், இதனைப் பார்த்து மற்றவர்களுக்கும் தைரியம் ஏற்படுகிறது. செய்விப்பவர் கூடவே இருக்கிறார்.

**தாதிஜியுடன்** : மிகவும் நல்லது. நீங்கள் புன்சிரித்தால் அனைவருமே குஷி அடைகிறார்கள். இப்போது ஒரே ஒரு விசயம் செய்யுங்கள் செய்வீர்களா? உறுதியாக செய்வீர்களா? உணவை நன்றாக சாப்பிடுங்கள். கண்ணைத் திறந்து உணவு சாப்பிடுங்கள். மூடி விடாதீர்கள் ஏனெனில் உங்கள் கண் மூடியிருந்தால் ஏன் அவ்வாறு செய்கிறார்? என அனைவரது சங்கல்பங்களும் ஏற்படுகின்றன. எனவே இப்பொழுது மிக அன்போடு உணவை உட்கொள்ளுங்கள். கண்ணண மூட வேண்டாம். இவர்கள் அனைவரும் மிகுந்த குஷி அடைவார்கள். ஆம் என்று சொல்லுங்கள். செய்தே ஆக வேண்டும்.

**தாதி சாந்தாமணியுடன்:** ஆஹா! உங்களுக்கு நினைவிருக்கிறதல்லவா! உங்களுக்கு பாப்தாதா ஒரு விசேஷமான பட்டத்தை அளித்திருந்தார்.

(உண்மையான சோழி) பாப்தாதா குறிப்பாக இந்த பட்டத்தை அளித்திருந்தார். உண்மையான சோழி. அந்நாட்களில் சோழிக்கு கூட மிகுந்த மகத்துவம் இருந்தது. தாதிமார்களைப் பார்த்து அனைவருக்கும் குஷி ஏற்படுகின்றது? எந்த பாட்டை பாடுகின்றீர்கள்? ஆஹா! எங்கள் தாதிமார்கள்! ஆஹா இந்த குஷியான ஆஹா! ஆஹா! என்பது இல்லை என்றால் நீங்களும் இல்லை.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

## 02.02.2007 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

## பரமாத்ம பிராப்திகள் நிறைந்திருக்கும் ஆத்மாவின் அடையாளம் சம்பூரண புனிதமானவர்கள், (ஹோலியஸ்ட்,) மிக உயர்ந்த நிலையிலிருப்பவர்கள் (ஹையஸ்ட்) மற்றும் பொக்கிஷம் நிறைந்தவர்கள் (ரிச்சஸ்ட்)!

இன்று விஷ்வ பரிவர்த்தக் (உலகத்தை மாற்றம் செய்பவர்) பாப்தாதா தன்னுடைய துணைவர்களாக இருக்கின்ற குழந்தை களைச் சந்திக்க வந்துள்ளார். ஒவ்வொரு குழந்தையினுடைய நெற்றி யிலும் மூன்று பரமாத்ம விசேஷ பிராப்திகளைப் பார்க்கின்றார். ஒன்று ஹோலியஸ்ட், (2) ஹையஸ்ட் (3) ரிச்சஸ்ட். இந்த ஞானத்தின் அஸ்திவாரமே புனிதமானது. அதாவது பவித்திரமாக (தூய்மையாக) ஆக வேண்டும் என்பதாகும். அப்படியானால் ஒவ்வொரு குழந்தையும் ஹோலியஸ்ட்டாக இருக்கிறது. பவித்திரத்தா என்பதன் பொருள் பிரம்மச்சர்யம் கடைப்பிடித்தல் மட்டுமல்ல. மனம், சொல், செயல், சம்மந்தம், தொடர்பு ஆகிய அனைத்திலும் பவித்திரத்தா (தூய்மை). நீங்கள் பாருங்கள்: பரமாத்ம பிராமண ஆத்மாக்களாகிய நீங்கள் ஆதி-மத்ய-அந்திமம் ஆகிய மூன்று காலங்களிலும் ஹோலியஸ்ட்டாக இருக்கின்றீர்கள். முதன் முதலில் ஆத்மா எப்போது பரந்தாமத்தில் இருக்கின்றதோ, அங்கேயும் கூட ஹோலிஸ்ட்டாக இருக்கின்றீர்கள். பிறகு எப்போது ஆதியில் வருகின்றீர்களோ (சத்யுகம்) அந்த ஆதிகாலத்திலும் கூட தேவதா ரூபத்தில் ஹோலியஸ்ட் ஆத்மாக்களாகவே இருந்தீர்கள். ஹோலியஸ்ட் என்றால் பவித்திர ஆத்மாவின் விசேஷம் பிரவிருத்தி (குடும்ப வாழ்க்கை) யில் இருந்தாலும் சம்பூரண பவித்திரமாக இருக்க வேண்டும் மற்றவர்களும்

கூட பவித்திரமாக இருக்கின்றார்கள் ஆனால் உங்களுடைய பவித்திரத்தாவின் விசேஷம் -சொப்பனத்திலும் கூட அபவித்திரத்தா, மனம், புத்தியைத் தொட்டுவிடக்கூடாது. சத்யுகத்தில் ஆத்மாவும் பவித்திரமாக இருக்கிறது. சரீரமும் கூட உங்களுக்கு பவித்திரமாகவே கிடைக்கிறது. ஆத்மா மற்றும் சரீரம் ஆகிய இரண்டிலும் தூய்மை தேவ ஆத்மாவின் ரூபத்தில் கிடைக்கிறதல்லவா, அது சிரேஷ்டமான தூய்மையாகும் (பவித்ரத்தா). எவ்வளவு ஹோலியஸ்ட் -(புனிதமானவர்) ஆகின்றீர்களோ, அவ்வளவு ஹையஸ்ட் (உயர்ந்தவர்கள்) ஆகின்றீர்கள். எல்லோரைக் காட்டிலும் உயர்ந்தவர்களிலும் உயர்ந்த பிராமண ஆத்மாக்கள், உயர்ந்தவரிலெல்லாம் உயர்வான (அதிமேலான) தந்தையின் குழந்தைகள் ஆகி விட்டீர்கள். ஆதியில் பரந்தாமத்திலும் கூட ஹையஸ்ட் அதாவது தந்தையின் அருகாமை யிலேயே இருக்கின்றீர்கள். மத்ய காலத்திலும் கூட பூஜைக்குரிய (பூஜ்ய) ஆத்மாக்கள் ஆகின்றீர்கள். எவ்வளவு அழகான கோவில்களைக் கட்டு கிறார்கள். மேலும் எவ்வளவு விதிபூர்வமாக பூஜை செய்கிறார்கள். எவ்வளவு விதி பூர்வமாக தேவதா ஆத்மாக்களாகிய உங்களுக்கு கோவில்களில் பூஜை நடக்கிறதோ, அவ்வளவு மற்றவர்களுக்கும் கோவில் கட்டுகிறார்கள் ஆனால் விதிபூர்வமான பூஜை உங்கள் தேவதா ரூபத்திற்கு நடக்கிறது. ஆதலால் நீங்கள் ஹோலியஸ்ட்டாக வும் இருக்கிறீர்கள். ஹையஸ்ட்டாகவும் இருக்கிறீர்கள். கூடவே ரிச்சஸ்ட் (பொக்கிஷங்கள் நிறைந்தவர்) ஆகவும் இருக்கின்றீர்கள். உலகினர் உலகில் மிக உயர்ந்த செல்வந்தர் (Richest in the world) என்று கூறுகின்றார்கள் ஆனால் சிரேஷ்ட ஆத்மாக்களாகிய நீங்கள் கல்பத்தில் மிக உயர்ந்த செல்வந்தர்கள். கல்ப முழுவதுமே மிக உயர்ந்த செல்வந்தர்கள் நீங்கள் தான். உங்களுடைய பொக்கிஷம் நினைவுக்கு வருகிறதா? எவ்வளவு பொக்கிஷங்களுக்கு எஜமானர்களாக இருந்தீர்கள்! இந்தப் பிறவியில் எந்த ஒரு அழிவற்ற பொக்கிஷத்தை அடைகின்றீர்களோ, அது அநேகப் பிறவிகளுக்கு கூடவே இருக்கும். மற்ற யாருக்கும், பொக்கிஷம் அநேகப் பிறவிகளுக்கு கூடவே இருப்பதில்லை ஆனால் உங்களுடைய பொக்கிஷம் ஆன்மீகமானது. சக்திகளின் பொக்கிஷம், ஞானப் பொக்கிஷம், குணங்களின் பொக்கிஷம். சிரேஷ்ட சங்கல்பங்களின் பொக்கிஷம் மற்றும் தற்காலத்தில் சமயம் (நேரம்) எனும் பொக்கிஷம். இந்த எல்லா

பொக்கிஷங்களும், ஜன்ம ஜன்மாந்திரமாக (எல்லா பிறவிகளிலும்) கூடவே இருக்கும். ஒரு பிறவியில் அடைந்த பொக்கிஷங்கள் கூடவே இருக்கிறது. ஏனெனில், எல்லாப் பொக்கிஷங்களின் வள்ளலாக இருக்கும் பரமாத்ம தந்தையிடமிருந்து அடையப்பெற்றதாகும். ஆதலால் நம்முடைய பொக்கிவும் அழிவற்றது என்ற போதை (நஷா) இருக்கின்றதா?

இந்த ஆன்மீக பொக்கிஷங்களை அடைவதற்காகத்தான் சகஜயோகி ஆகியிருக்கின்றீர்கள். நினைவு சக்தி மூலமாக பொக்கிஷத்தை சேமிக்கின்றீர்கள். இந்த சமயத்திலும் கூட, இந்த எல்லா பொக்கிஷங்களும் நிறைந்திருக்கின்ற காரணத்தால் கவலையற்ற பாதுஷாவாக இருக்கின்றீர்கள். ஏதாவது கவலை இருக்கிறதா? இருக்கிறதா கவலை? ஏனென்றால், இந்த பொக்கிஷம் இருக்கிற தல்லவா, இதனை திருடன் கொள்ளையடிக்க முடியாது, இராஜாவும் பறிக்க முடியாது. தண்ணீராலும் மூழ்கடிக்க முடியாது ஆகவே தான் நீங்கள் கவலையற்ற பாதுஷாக்கள் (சக்கரவர்த்திகள்) ஆதலால் இந்த பொக்கிஷங்கள் நினைவில் இருக்கிறதல்லவா! மேலும் நினைவும் கூட எதனால் சகஜமாக இருக்கிறது? ஏனெனில் எல்லாவற்றிலும் அதிகமாக நினைவுக்கு ஆதாரமாக இருப்பது, ஒன்று சம்மந்தம், இன் னொன்று பிராப்தி (பலன்) எவ்வளவு அன்பான சம்மந்தம் இருக் கிறதோ, அவ்வளவு நினைவும் தானாகவே (இயல்பாகவே) வந்து விடு கிறது. ஏனெனில் சம்மந்தத்தில் அன்பு (சிநேகம்) உள்ளது. மேலும் எங்கே சிநேகம் இருக்கிறதோ, அந்த சிநேகிதரை (அன்பிற்குரியவர்) மறப்பதென்பது மிகவும் கஷ்டம். ஆகவே தான் தந்தை சர்வ சம்மந்தத்திற்கும் ஆதாரமாக்கி விட்டார். நீங்கள் எல்லோரும் உங்களை சகஜயோகியாக அனுபவம் செய்கின்றீர்களா? அல்லது கஷ்டப்படும் யோகியா? எளிதானது தானே? அல்லது சிலசமயம் சகஜமாகவும் (எளிதாகவும் ) சில சமயம் கஷ்டமானதாகவும் இருக்கின்றதா? எப்போது தந்தையை சம்மந்தம் மற்றும் சிநேகத்துடன் (அன்பு) நினைவு செய்கின்றீர்களோ, அப்போது நினைவு கஷ்டமானதாக இருக்காது. மேலும் பிராப்திகளை நினைவு செய்யுங்கள். சர்வ பிராப்திகளின் வள்ளல், சர்வ பிராப்திகளையும் செய்வித்து விட்டார். (அடையும் படி செய்து விட்டார்). அப்படியானால் உங்களை எல்லாப் பொக்கிஷங்களிலும் நிறைந்தவராக அனுபவம் செய்கிறீர்களா?

பொக்கிஷங்களை சேமிப்பதற்கு எளிமையான (சகஜ) விதியையும் பாப்தாதா கூறியிருக்கின்றார். எந்த ஒரு அழிவற்ற பொக்கிஷம் (கஜானா) இருக்கின்றதோ, அந்த பொக்கிஷங்களை அடைவதற்கான விதி பிந்தி (புள்ளி). எப்படி அழியக்கூடிய செல்வத்திலும் கூட எண்ணிக்கையில், ஒன்றுடன் புள்ளி (சைபர்) சேர்த்துக் கொண்டேயிருந்தால் மதிப்பு அதிகமாகிக் கொண்டேயிருக்கிற தல்லவா? அதே போலவே, அழிவற்ற பொக்கிஷங்களைச் சேமிக்கும் விதியும் புள்ளி வைப்பது தான் மூன்று புள்ளிகள் உள்ளன. ஒன்று ஆத்மா புள்ளி தந்தையும் கூட புள்ளி மற்றும் டிராமாவில் எந்த ஒரு சம்பவம் நடந்து முடிந்து கடந்து விடுகிறதோ, அதற்கும் முற்றுப்புள்ளி (full stop) அதாவது புள்ளி. அப்படியானால் புள்ளி வைக்கத் தெரியுமல்லவா? எல்லாவற்றிலும் மிகவும் சுலபமான குறியீடு எது? புள்ளி வைப்பது தானே! ஆத்மா நான் புள்ளி, தந்தையும் புள்ளி இந்த நினைவின் மூலமாக தானாகவே பொக்கிஷம் சேமிப்பாகி விடுகிறது. ஆகவே புள்ளியை ஒரு விநாடியில் நினைவு செய்யும் போது எவ்வளவு குஷியாக இருக்கிறது. இந்த எல்லா பொக்கிஷங்களும் உங்களுடைய பிராமண வாழ்க்கையின் அதிகாரம். ஏனென்றால், குழந்தையாகி விடுதல் என்பதன் பொருள் அதிகாரியாகி விடுதல் ஆகும். மேலும் விசேஷமாக, மூன்று சம்மந்தங்களின் அதிகாரம் கிடைத்து விடுகிறது. பரமாத்மாவை தந்தையாக ஆக்கிக் கொள்வது, டீச்சராக ஆக்கிக் கொள்வது மற்றும் சத்குருவாகவும் ஆக்கிக் கொள்வது இந்த மூன்று விதமான சம்மந்தங்களில் முறையே பாலனை, படிப்பின் மூலமாக வருமானம் மற்றும் சத்குருவிடமிருந்து வரதானம் கிடைக்கிறது. எவ்வளவு சுலபமாகவே வரதானம் கிடைத்து விடுகிறது! ஏனென்றால், தந்தையிடமிருந்து வரதானம் பெறுவது, குழந்தைகளின் பிறப்புரிமை

பாப்தாதா ஒவ்வொரு குழந்தையின் சேமிப்புக் கணக்கையும் சோதிக்கின்றார். நீங்கள் எல்லோரும் கூட ஒவ்வொரு சமயத்திலும் சேமிப்புக் கணக்கை சோதியுங்கள். சேமிப்பானதா இல்லையா? இதற்கான விதி, எந்த ஒரு கர்மம் செய்கின்றீர்களோ, அக்கர்மத்தில் தானும் திருப்தியடைய வேண்டும். மற்றும் துணையிலிருப்பவர்களும் திருப்திய அடைய வேண்டும். ஆதலால் இருவரிலும் திருப்தி இருக்கிற தென்றால், கர்மக் கணக்கில் சேமிப்பாகியிருக்கிறது என்று பொருள்.

ஒருவேளை உங்களுக்கும், உங்களுடனிருப்பவர்களுக்கும் திருப்தி இல்லையெனில், சேமிப்பாகவில்லை என்று பொருள்.

பாப்தாதா எல்லா குழந்தைகளுக்கும், சமயம் எப்படிப்பட்டதாக இருக்கிறது என்ற தகவலையும் கொடுத்துக் கொண்டேயிருக்கின்றார். தற்கால சங்கம சமயமானது முழு கல்பத்திலும் சிரேஷ்டத்திலும், சிரேஷ்டமான சமயமாக இருக்கிறது. ஏனெனில் இந்த சங்கமம் தான் சிரேஷ்ட கர்மத்திற்கான விதையை விதைக்கும் சமயமாகும். பிரத்யக்ஷ (கண் கூடான) பலனை அடைவதற்கான சமயமும் இப்போது தான். இந்த சங்கம சமயத்தில் ஒவ்வொரு விநாடியும், சிரேஷ்டத்திலும் சிரேஷ்டமானது. எல்லோரும் ஒரு விநாடியில் அசரீரி ஸ்திதியில் நிலைத்திருக்க முடியுமா? பாப்தாதா சகஜமான விதியைக் கூறியிருக்கின்றார். நிரந்தரமாக நினைவில் இருப்பதற்கான விதியைக் கண்டுபிடியுங்கள். முழு நாளில் இரண்டு வார்த்தைகளை எல்லோருமே உச்சரிக்கிறீர்கள். அந்த இரண்டு வார்த்தைகளில் ஒன்று "நான்", அடுத்தது "என்னுடையது", ஆகவே எப்போது நான் என்ற வார்த்தையை உச்சரிக்கின்றீர்களோ, அப்போது தந்தை கொடுத்திருக்கின்ற அறிமுகமாகிய நான் ஆத்மா என்பதாகும். எப்போது நான் என்று கூறினாலும், அப்போது நினைவில் கொண்டு வாருங்கள். நான் ஆத்மா. நான் என்பதை மட்டும் உச்சரிக்காதீர்கள். நான் ஆத்மா என்பதையும் சேர்த்துக் கொள்ளுங்கள் ஏனெனில் நீங்கள் சிரேஷ்ட ஆத்மா என்பதை அறிந்திருக்கிறீர்கள். பரமாத்மா பாலனையில் இருக்கும் ஆத்மா. பிறகு எனது என்ற வார்த்தையை உச்சரிக்கிறீர்கள் என்றால், எனக்கு யார்? என்னுடையவர் யார்? மேரா பாபா! அதாவது தந்தை பரமாத்மா. ஆதலால் எப்போதெல்லாம் நான், எனது என்ற சொல்லை உபயோகிக்கிறீர்களோ, அப்போதெல்லாம் இதை சேர்த்துக் கொள்ளுங்கள். நான் ஆத்மா, மேரா பாபா. எவ்வளவு தந்தையை என்னுடையவர் ஆக்கிக் கொள்கிறீர்களோ, அவ்வளவு நினைவு சுலபமானதாகிக் கொண்டேயிருக்கும். ஏனென்றால் எனது என்றால் ஒருபோதும் மறக்காது. முழு நாளில் பாருங்கள், எனது என்பது தான் நினைவுக்கு வருகிறது. ஆகவே இந்த விதி மூலமாக, சகஜமாக நிரந்தர யோகி ஆக முடியும். பாப்தாதா ஒவ்வொரு குழந்தையையும் ஸ்வமான் (சுயமரியாதை) என்ற ஆசனத்தில் அமர்த்தியிருக்கின்றார். எவ்வளவு ஸ்வமான் என்ற பட்டியல் போட்டால் மிக நீளமானதாக இருக்கும்.

ஏனென்றால் ஸ்வமானில் நிலைத்திருக்கும்போது தேக அபிமானம் வர முடியாது. அதாவது தேக அபிமானம் அல்லது ஸ்வமான் என்ற இரண்டில் ஒன்று தான் இருக்க முடியும். தேக அபிமானம் இருக்கிறதென்றால், ஸ்வமான் இல்லை. ஸ்வமான் இருக்கும்போது தேக அபிமானம் இல்லை. ஸ்வமான் என்பதன் பொருள். ஸ்வ என்றால் ஆத்மா சிரேஷ்ட நினைவிலிருக்கும் இடம். ஆகவே எல்லோரும் உங்களுடைய ஸ்வமானில் நிலைத்திருக்கின்றீர்களா? எவ்வளவு ஸ்வமானில் நிலைத்திருப்பீர்களோ, அவ்வளவு மற்றவருக்கு மரியாதை கொடுப்பது தானாகவே நடந்து விடும். ஆதலால் ஸ்வமானில் நிலைத்திருப்பது மிகவும் சுலபமானது தானே!

ஆதலால் எல்லோரும் மகிழ்ச்சியாக இருக்கின்றீர்கள்! ஏனென்றால் மகிழ்ச்சியாயிருப்பவர்கள், மற்றவர்களையும் மகிழ்ச்சி யுடையவராக்கி விடுகிறார்கள். பாப்தாதா சதா கூறிக் கொண்டேயிருப்பது என்ன? முழு நாளும் குஷியை இழந்து விடாதீர்கள். ஏன்? குஷி எப்படிப்பட்டதொரு பொருள் என்றால், குஷியில் ஹெல்த், வெல்த், ஹேப்பி (ஆரோக்கியம், செல்வம், மகிழ்ச்சி) அனைத்தும் அடங்கியிருக்கிறது. குஷி இல்லையென்றால், வாழ்க்கை சாரம் அற்றதாகவே அற்றதாக இருக்கும் குஷியைப் பற்றி என்ன சொல்கிறார்கள் என்றால் குஷியைப் போன்ற பொக்கிஷம் வேறு எதுவுமில்லை. எவ்வளவு பொக்கிஷங்கள் இருந்தாலும் சரி, குஷி இல்லையென்றால் பொக்கிஷங்களின் மூலமாகவும் கூட பலனை அடைய முடியாது. மேலும் குஷியைப் பற்றி இன்னொன்றும் கூறுகின்றார்கள் குஷியைப் போன்ற டானிக் (சத்துணவு) இல்லை என்பது பொக்கிஷமாகவும் குஷி இருக்கிறது. குஷி ஆரோக்கியம் என்றும், பெயரே குஷி என்றால் மகிழ்ச்சி இருக்கவே இருக்கும். ஆதலால் குஷியில் இந்த மூன்று பொருட்களும் உள்ளன. மேலும் தந்தை அழிவற்ற குஷி என்னும் பொக்கிஷத்தைக் கொடுத்திருக்கின்றார். தந்தை கொடுத்த பொக்கிஷத்தை இழந்து விடாதீர்கள். அப்படியானால் சதா குஷியாக இருக்கின்றீர்களா?

பாப்தாதா ஹோம் ஓர்க் (வீட்டுப்பாடம்) கொடுத்திருந்தார். குஷியாக இருக்க வேண்டும். ஏனெனில் குஷி எப்படிப்பட்ட ஒரு பொருள் என்றால், எவ்வளவு குஷியை எல்லோருக்குமே கொடுத்துக் கொண்டேயிருப்பீர்களோ, அவ்வளவுக்கவ்வளவு அதிகமாகிக்

கொண்டேயிருக்கும். அனுபவம் செய்திருக்கிறீர்கள்! செய்திருக்கிறீர்கள் அல்லவா, அனுபவம்? எப்போது குஷியை மற்றவருக்குக் கொடுக் கின்றீர்களோ, அப்போது கொடுப்பதற்கு முன்பாக தனக்குள் அதிகரிக் கிறது. மகிழ்ச்சி (குஷ்) கொடுப்பவர் முதலில் தான் மகிழ்ச்சியாகி விடுகின்றார். ஆகவே, எல்லோருமே ஹோம் ஒர்க் செய்தீர்களா? யார் செய்தார்களோ, அவர்கள் கை உயர்த்துங்கள். யார் செய்தார்களோ அவர்கள் குஷியில் இருக்க வேண்டும். காரணம் அல்ல, நிவாரணம் செய்வது, சமாதான சொரூபம் ஆவது. கை உயர்த்துங்கள். இனிமேல் இப்படிச் சொல்ல மாட்டீர்கள் அல்லவா! இப்படி நடந்து விட்டது? பாப்தாதாவிடம் அநேக குழந்தைகள் தங்களுடைய ரிசல்ட் (முடிவு) எழுதியனுப்பியிருக்கிறார்கள். அதாவது எத்தனை சதவிகிதம் ஓகே. ஆக இருந்தோம் என்று மேலும் லக்ஷியம் வைக்கும்போது லக்ஷணம் தானாகவே வந்து விடும். நல்லது. இப்போது என்ன செய்ய வேண்டும்?

சேவை கர்நாடகம்: கர்நாடக காரர்கள் எழுந்திருங்கள் நல்லது. கர்நாடகக்காரர்கள் சேவைக்கான கோல்டன் சான்ஸ் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஏனென்றால், இப்போது சங்கமயுகத்தில் பிரத்யக்ஷ பலன் கிடைக்கிறது சேமிப்பும் ஆகிறது. அனால் எந்த ஒரு பலன் அதேசமயம் பிரத்யக்மாக கிடைக்கிறதோ, அதில் குஷி உண்டாகிறது. யார், எவ்வளவு நாட்கள் சேவை செய்தீர்களோ, அவர்களுக்கு பிரத்யக்ஷ பலனாகிய குஷியை அனுபவம் செய்தீர்களா? குஷி கிடைத்ததா? கை உயர்த்துங்கள். மாயை வந்ததா? யாருக்கு மய கவிலை போ, அவர்கள் கை உயர்த்துங்கும் பரிணையவள்11:02 மாயை கக்கு மாயை வந்ததா? கொஞ்சம், கொஞ்சம் வந்ததா? வரவில்லையா? நல்லது. இங்கேயுள்ள வாயுமண்டலம் நல்ல உதவியாக இருக்கிறது. எப்படி விஞ்ஞானிகள் விஞ்ஞான சக்தி மூலம் வாயுமண்டலத்தை பரிவர்த்தனை செய்து விடுகிறார்கள் அல்லவா! உஷ்ணம் அதிகமாயிருந்தால் குளிர்விக்கிறார்கள். காற்றுள்ள வாயுமண்டலத்தை உருவாக்குகின்றார்கள். குளிர்காலத்தில் உஷ்ணமான வாயுமண்டலமாகச் செய்து விடுகிறார்கள். இதுபோலவே சைலன்ஸ் சக்தி ஆன்மீக நினைவின் வாயுமண்டலத்தை உருவாக்குகிறது. ஏனென்றால் இங்கு சேவை செய்து கொண்டேயிருந்தாலும், விருத்தி யில் என்ன இருக்கிறது? யக்ஞ சேவை. யக்ஞத்தின் புண்ணியம் மிகப் பெரியது. ஆகவே இந்த அழிவற்ற யக்ஞத்தில் சேவை செய்வதால்

விருத்தி சிரேஷ்டமாகி விடுகிறது. இனி கர்நாடகக்காரர்கள் என்ன விசேஷம் காண்பிப்பீர்கள்? ஏதாவது புதிய காரியம் செய்து காட்டுங்கள். பாருங்கள். கர்நாடகாவில் எண்ணிக்கை அதிகம். மேலும் சுற்றளவும் பெரியது. சேவை செய்ய வேண்டிய பகுதி மிக அதிகம் கர்நாடகக்காரர்கள் மிகப் பெரிய சேவை செய்ய முடியும். இதன் மூலம் கர்நாடகாவில் சேவை செய்யாத சிறியதும், பெரியதுமான பகுதிகள் விடுபட்டு போய் விட்டால், குறை சொல்வார்கள். நம்முடைய தந்தை வந்தார், ஆனால் நீங்கள் எங்களுக்கு அறிவிக்கவே இல்லை, செய்தியும் கொடுக்கவில்லை. இப்படி குற்றம் சுமத்துவதற்கான இடம் கொடுத்து விடாதீர்கள். ஆப்பிரிக்காகாரர்கள் தங்கள் பகுதி முழுவதிலும் செய்தி அளிக்கும் காரியத்தில் வெற்றியடைந்திருக்கிறார்கள். பாப்தாதாவுக்கு இந்தக் காரியம் பிடித்தமானதாக இருக்கிறது. யாரும் குற்றம் சுமத்தும்படி இடம் கொடுக்காதீர்கள். உங்களுடைய வேலை செய்தி கொடுப்பது. அவர்கள் இப்போது வரட்டும் அல்லது பிறகு வரட்டும் ஆனால் நீங்கள் செய்ய வேண்டிய உங்கள் காரியத்தை செய்து முடித்து விட்டீர்கள் என்றால் கர்நாடகக்காரர்கள் அடுத்த ஆண்டு வரும் போது என்ன செய்து விட்டு வருவீர்கள்? எந்த ஒரு பகுதியும் காலி யாக இருந்து விடக்கூடாது. ஏனென்றால், உங்களுக்குத் தெரியும் அல்லவா? தந்தையின் அறிமுகம் கிடைப்பதால், தந்தையின் சம்மந்தத்தில் வருவதால் ஆத்மாக்கள் எவ்வளவு சுகவாசி ஆகி விடு கிறார்கள்! இப்போதோ நாளுக்கு நாள் துக்கம், அசாந்தி அதிகமாகிக் கொண்டேயிருக்கிறது. ஏனெனில் நாளுக்குநாள் பிரஷ்டாச்சார், பாடாச்சார் (ஒழுங்கீனம், பாவ காரியம்) அதிகமாகிக் கொண்டிருக்கிறது. மிகவும் மோசமான எல்லையைத் தொட்டுக் கொண்டிருக்கிறது ஆனால் உங்களுக்குத் தெரியும், உச்சத்தை எட்டியதும், அடுத்து என்ன நடக்கும்? முடிவு வந்து விடும். மேலும் முடிவு எதைக் கொண்டு வருகிறது? ஆதியை. ஆகவே உங்களுடைய சகோதரர்கள் எப்படிப்பட்டவர்களாயிருந்தாலும் தந்தை ஒருவர் தானே! அறிந்தவர்களாயிருந்தாலும், ஏற்றுக் கொள்பவர்களாக இருந்தாலும், ஏற்றுக் கொள்ளாவிட்டாலும், தந்தை என்றால் தந்தை தானே! ஆதலால் உங்களுடைய சகோதரர்களுக்கு, உங்களுடைய சகோதரிகளுக்கு செய்தியை அவசியம் கொடுக்க வேண்டும். அப்படியானால் என்ன செய்வீர்கள்? இடம் பிடிப்பீர்கள். டீச்சர்ஸ்? ஒரு கிராமம் கூட மீதியிருக்கக் கூடாது. யார் செய்வீரகளோ, அவர்கள் கை உயர்த்துங்கள்.

அப்படியே கை உயர்த்தக் கூடாது. செய்வீர்களா? சென்று ரிசல்ட் அனுப்புங்கள். பிளான் (திட்டம்) போடுங்கள், அற்புதம் செய்து காட்ட வேண்டுமல்லவா? எவ்வளவு அற்புதமான காரியம் செய்கிறீர்களோ, அவ்வளவுக்கவ்வளவு சின்னச்சின்ன பிரச்சனைகள் தீர்ந்துபோய் விடும். ஆகவே உங்களுக்கு மிக நல்ல வாய்ப்புக் கிடைத்திருக்கின்றது. வாய்ப்பை எடுத்துக் கொண்டுமிருக்கிறீர்கள். வாய்ப்பை மேலும் பயன் படுத்திக் கொள்ள எந்த ஒரு வேலை கிடைத்திருக்கிறதோ, அதையும் செய்து விட்டுப்போக வேண்டும். பக்கா தானே? பாண்டவர்கள், பக்கவா? களைத்து விடக் கூடாது. எவ்வளவு புண்ணியம் சேமிப் பாகும்? நல்லது தானே! பாப்தாதாவுக்கும் குஷி இருக்கிறது. குழந்தைகள் தங்களுடைய புண்ணியக் கணக்கை விதவிதமான விதி மூலமாக அதிகரித்துக் கொண்டிருக்கிறார்கள். பாப்தாதா கூறினார் அல்லவா? 3 கணக்கை சேமிக்க வேண்டும். ஒன்று தன்னுடைய புருஷாரத்தம் மூலமாக, சேமிக்கும் கணக்கு, இரண்டாவது மற்ற ஆத்மாக்களை திருப்திப் படுத்துவதன் மூலம் புண்ணியக் கணக்கு. திருப்தியானது புண்ணியக் கணக்கை சேமிக்கிறது. மூன்றாவது மனசா, வாச்சா, சிநேகம், சம்மந்தம் மூலமாக சேவையின் கணக்கு. இப்படி மூன்று கணக்கையும் சேமிக்க வேண்டும். மூன்றிலும் குறை இருக்கக் கூடாது. அகவே நம்பர்-1 எடுப்பீர்களா? சேமிப்புக் கணக்கில் நம்பர்-1 எடுக்க வேண்டும் கர்நாடகம் குறைந்தவர்களா என்ன? பாப்தாதாவின் பார்வையில் கர்நாடகம் உள்ளது எல்லாமே செய்ய முடியும். இந்த பார்வையில் இருக்கிறார்கள். ஆம் முன் வரிசையில் நின்று கொண்டிருப்பவர்கள் என்ன செய்வீர்கள்? அற்புதம் செய்வீர்கள் அல்லவா? அற்புதம் (கமால்) செய்யுங்கள். நம்பர் எடுங்கள். சுய உன்னதி மற்றும் சேவையில் உன்னதி. இரண்டிலும் பேலன்ஸ் (சமநிலை) வைக்க வேண்டும். சரி தான். அமருங்கள். (பெங்களூர் சேவையை மம்மா ஆரம்பித்தார், மேலும் தாதி இருதய புஷ்பா மற்றும் சுந்திரி பெகன் மிக அன்போடு சேவை செய்தார்கள்). இருதய புஷ்பா குழந்தை மிகவும் அன்புடன் சேவை செய்தார். அந்த அன்புக்கு பலன் கொடுக்க வேண்டும். ஜகதம்பா அம்மாவினுடைய சேவைக்கு ரிட்டன் தர வேண்டும். ஆகவே எவ்வளவு நாட்களில் பதில் தருவீர்கள் ஒவ்வொரு மாதமும் உங்களுடைய சேவை சமாச்சாரம் கொடுத்துக் கொண்டேயிருக்க வேண்டும். இது செய்து கொண்டிருக்கிறோம், இதைச் செய்த முடித்து விட்டோம். இது இன்னும் நடக்க வேண்டியது பாக்கி இருக்கிறது. பாப்தாதா ஒவ்வொரு

ஜோனுக்கும் கூறுகின்றார் ஆனால் யாருக்கு விசேஷ சேவையின் வாய்ப்பு (சான்ஸ்) கிடைத்திருக்கிறதோ அவர்கள் விசேஷ கவனம் வைக்க வேண்டும்.

ஆதலால் எல்லோரும் சதா மனதை சுறுசுறுப்பாக வைத்திருங்கள். ஏனென்றால் மனம் தான் ஏமாற்றுகிறது. மனதில் தான் டென்ஷன் வருகிறது. மனம் தான் இங்குமங்கும் ஓடுகிறது. ஆதலால் மனதை சுறுசுறுப்பாக வைத்திருக்க வேண்டும் என்பதன் பொருள், சம்பன்ன ஸ்திதியில் சீக்கிரம் சீக்கிரமாகவே நிலைக்கச் செய்தலாகும். பாப்தாதா கூறுகின்றார்: எப்போது ஸ்தூல கர்மேந்திரியங்களை என்னுடையது என்று கூறுகின்றீர்களோ, அதாவது கையை கண்ட்ரோல் செய்ய முடிகிறதல்லவா? எங்கே வேண்டுமோ, எப்படி வேண்டுமோ அப்படிச் செய்கிறீர்கள் அல்லவா? அப்படியானால் மனமும் என்னுடையது தான் அல்லது நீங்கள் மனதினுடைய வர்களா?மனதின் எஜமானனும் நீங்கள் தானே! மனம் இராஜா இல்லை. ஆத்மா தான் இராஜா. ஆதலால் கன்ட்ரோலிங்பவர், ரூலிங் பவர் (கட்டுப்படுத்தும் சக்தி, ஆளுமை சக்தி) தாரணை செய்தீர் களானால், மனம் உங்களுடைய மிக நல்ல நம்பர்-1 உதவியாளர் மற்றும் துணைவன் ஆகி விடும். செய்து பாருங்கள். எஜமானனாகி விட்டால் போதும். இராஜா ஆகி விடுங்கள். இந்த உலகில் மூன்று சக்திகள் நடைமுறையில் உள்ளன. பாருங்கள் இராஜ நீதியைச் சார்ந்த இவர் வந்திருக்கிறார் அல்லவா? (இராஜஸ்தான் மாநிலத்தின் ஆளுநர் மாண்பிற்குரிய பிரதிமா பாட்டீல் அவர்கள் பாப்தாதாவை சந்திப்பதற் காக வந்திருக்கின்றார்) மூன்று சக்திகள் நடத்திக் கொண்டிருக்கின்றன. இராஜ்ய அதிகாரம், நடந்து கொண்டிருக்கிறது தர்மத்தின் சக்தியும் உள்ளது. மேலும் விஞ்ஞான சக்தியும் நடந்து கொண்டிருக்கிறது. என்றாலும் ரிசல்ட் (முடிவு)? உங்களிடம் எத்தனை சக்திகள் உள்ளன? உங்களிடம் நான்கு சக்திகள் உள்ளன. ஏனென்றால் உலகில் ஆன்மீக சக்தியில் குறை உள்ளது. உங்களிடம் ஆளுமை சக்தி இருக்கிறதா? உங்களுடைய கர்மேந்திரியங்களுக்கு ராஜா ஆகி விட்டீர்கள் அல்லவா! சுய ராஜ்ய அதிகாரி தானே! மேலும் ஆன்மீக சக்தியும் உள்ளது. (தர்மத்தின் சக்தி) தர்மம் என்பதன் பொருள் திவ்ய குண தாரணை. சிரேஷ்ட சுபாவத்தின் (நடத்தை) தாரணை. சிரேஷ்ட கர்மத்தின் தாரணை. எங்கே சிரேஷ்ட நடத்தை இருக்கிறதோ, அங்கே எல்லாமே இருக்கிறது. நடத்தை சரியில்லை என்றால் மற்றெல்லாம்

இருந்தாலும், ஒன்றுமில்லாதது போலத்தான். அடுத்து விஞ்ஞான சக்தி. இதன் சாதனம், உங்களுடைய அமைதியின் சாதனை (சைலன்ஸ்) ஆதலால் நான்கு சக்திகளும் எப்போது ஒன்றாக இணைந்து செயல்படுகிறதோ அப்போது உலகப் பரிவர்த்தனை உண்டாகும். ஆதலால் பாப்தாதா கூறுகின்றார். குழந்தைக்கும் (ஆளுநர்) கூறுகின்றேன், மிக நல்லது வந்து சேர்ந்து விட்டார். இராஜ்ய ஆளுமையில் இருக்கிறார் அல்லவா? இப்போது குறைந்த பட்சம் இராஜஸ்தானை ஆன்மீக சக்தியால் நிரப்புங்கள். இராஜஸ்தான் இந்த சவாலை ஏற்கட்டும். உலக பரிவர்த்தனை தானாகவே நடந்தேறிவிடும். முதலில் இராஜஸ்தானை பரிவர்த்தனை செய்யுங்கள். (பாபா, இராஜஸ்தான் ஆன்மீக சக்தியின் கோட்டை. இங்கிருந்து தான் உலகப் பரிவர்த்தனைக்கான காரியம் நடந்து கொண்டிருக்கிறது)

உலகத்திற்குக் கிடைத்துக் கொண்டு தான் இருக்கிறது ஆனால் இராஜஸ்தானத்தின் இராஜ்ய அதிகாரியும் கூட உதவியாளராகட்டும். பாருங்கள், நீங்கள் சக்தி ரூபம். பாப்தாதா சக்திகளை முன்னால் வைத்திருக்கின்றார். நீங்களும் கூட சிவசக்தி தான். சக்தி என்ன செய்ய விரும்புகிறார்களோ அதைச் செய்ய முடியும். நல்லது. பாப்தாதா பார்க்கின்றார், இவரிடம் ஊக்கம், அதிகமாக இருக்கிறது. இராஜஸ் தானை இன்னும் நன்றாகச் செய்யட்டும் ஆனால் உங்களுக்கு எல்லோரும் உதவி செய்வார்கள். எல்லோரும் சேர்ந்து செய்தால் என்ன செய்ய முடியாது? இராஜஸ்தான் தீபத்தை பிரகாசிக்கச் செய்யும் நடத்தை மூலமாக இன்னும் நாலா பக்கமும், தீப ஒளி பரவும். நன்றாகச் செய்தீர்கள். பாப்தாதாவுக்கு குழந்தைகளினுடைய இந்தக் காரியத்தில் உதவியாளராக இருப்பவர்களின் ஊக்கம், உற்சாகத்தைப் பார்தது குஷி அடைகின்றார். உங்களோடு இன்னும் சிலரும் வந்திருக் கிறார்கள் அல்லவா? யார், இவரோடு வந்திருக்கிறார்களோ, அவர்கள் கை உயர்த்துங்கள். பாப்தாதாவுக்கு மிகப்பிரியமானதாக இருக்கிறது. இப்போது நீங்கள் எல்லோரும் உங்களுக்குள் மீட்டிங் (கலந்துரை யாடல்) செய்ய வேண்டும் பிளான் போட வேண்டும். என்னென்ன செய்ய முடியும் என்று திட்டம் போடுங்கள். மேலும் இங்கே இருப்பவர்கள் உங்களுக்கு உதவி செய்வார்கள். ஊக்கம் இருக்கிறதல்லவா? நல்லது. ராஜஸ்தானை நிமித்தம் ஆக்க வேண்டும்.

**டபுள் விதேஷி (வெளி நாட்டவர்கள்):** விதேஷிகளுக்கு தங்க ளுடைய ஒரிஜினல் (உண்மையான) விசேஷம் மறந்து போயிருக்காது. ஒரிஜினலாக நீங்கள் எந்த தேசத்தைச் சேர்ந்தவர்கள்? இது உங்களுக்கு நினைவிருக்கிறதல்லவா? ஆகவே தான் உங்களை எல்லோரும் டபுள் விதேஷி என்று கூறுகிறார்கள். நீங்கள் விதேஷி மட்டுமல்ல, டபுள் விதேஷி! ஆதலால் உங்களுக்கு உங்களுடைய இனிமையான வீடு ஒரு போதும் மறக்காது. அப்படியானால் எங்கே இருக்கிறீர்கள்? பாப்தாதாவின் மன சிம்மாசனத்தின் அதிகாரியாக. பாப்தாதா கூறு கின்றார், எப்போது சிறிதும், பெரிதுமான பிரச்சனை வருகின்றதோ, அது பிரச்சனை அல்ல. பேப்பர் (சோதனைத்தாள்) முன்னேறிச் செல்வ தற்காக. ஆகவே பாப்தாதாவின் மன சிம்மாசனம் உங்களுடைய அதிகாரம். மன சிம்மாசனத்தின் அதிகாரியாகி விட்டால் பிரச்சனை பொம்மையாகி விடும். பிரச்சனையைப் பார்த்துப் பயப்பட மாட்டீர்கள், விளையாடுவீர்கள், பொம்மை. எல்லோரும் பறக்கும் கலையைச் சார்ந்தவர்கள் தானே? பறக்கும் கலை தானே? அல்லது நடந்து செல் பவர்களா? பறக்கக் கூடியவர்களா? நடந்து செல்பவர்களா?? யார் பறக்கக் கூடியவர்களோ, அவர்கள் கை உயர்த்துங்கள். பறக்கக் கூடிய வர்கள்! அரை குறையாக கை உயர்த்துகிறார்கள். பறக்கக் கூடிய வர்களா? நடப்பவர்கள் அல்ல. அநேகர் பாப்தாதாவிடம் கூறுகின்றார்கள்: பாபா நாங்கள் மிக நன்றாக நடக்கிறோம் என்று. அதாவது பாப்தாதா கேட்கின்றார், நீங்கள் நடக்கின்றீர்களா அல்லது பறக் கின்றீர்களா? இப்போது நடக்கும் நேரமல்ல, பறக்கும் நேரம். ஊக்கம், உற்சாகம் மற்றும் தைரியம் என்ற சிறகுகள் ஒவ்வொருவருக்கும் இருக்கிறது. ஆதலால் சிறகுகளால் பறக்க வேண்டும். ஆதலால் தினமும் சோதியுங்கள். பறக்கும் கலையில் பறக்கின்றேனா? நல்லது. ரிசல்ட்டில் பாப்தாதா பார்த்தார். வெளிநாட்டில் சென்டர்கள் அதிகரித்துக் கொண்டிருக்கின்றன. மேலும் அதிகரித்துக் கொண்டேதான் இருக்கும். எப்படி டபுள் விதேஷிகள் இருக்கின்றார்களோ, அப்படி டபுள் சேவை மனம் மூலம், பேச்சு மூலம் ஆத்மாக் களுக்கு, ஆத்மீக விருத்தி உண்டாக்குங்கள். வாயுமண்டலத்தை உருவாக்குங்கள். இப்போது துக்கம் அதிகரித்துக் கொண்டேயிருப் பதைப் பார்த்து இரக்கம் வரவில்லையா? உங்களுடைய ஜட ஸித்திரத்தின் எதிரில் கூக்குரலிட்டுக் கொண்டேயிருக்கிறார்கள். கருணை காட்டுங்கள், கருணை காட்டுங்கள்

இப்போது தயை புரியுங்கள், கிருபை செய்யுங்கள். இரக்க மனம் உடையவர்களாக வேண்டும். உங்கள் மீதும் இரக்கம், மற்ற ஆத்மாக்கள் மீதும் இரக்கம். நல்லது ஒவ்வொரு சீசனிலும், ஒவ்வொரு முறையிலும், வந்து விடுகிறார்கள். இது எல்லோருக்கும் குஷியைக் கொடுக்கின்றது. ஆதலால் பறந்து கொண்டேயிருங்கள். பறக்கும் படியும் செய்யுங்கள். நல்லது. ரிசல்ட் பார்க்கும்போது இப்போது தங்களை பரிவர்த்தனை செய்வதிலும் கூட வேகமாகச் செல்கிறார்கள். ஆதலால் சுயபரிவர்த் தனையின் வேகம், விஷ்வ பரிவர்த்தனையில் வேகத்தை அதிகரிக்கிறது. நன்று.

**யார் முதன் முறையாக வந்திருக்கிறீர்களோ, அவர்கள் எழுந்து நில்லுங்கள்:** உங்கள் எல்லோருக்கும், பிராமண பிறவிக்கான வாழ்த்துக்கள். நல்ல மிட்டாய் (இனிப்பு பண்டம்) கிடைக்கும் ஆனால் பாப்தாதா தில் குஷ் மிட்டாய் (மன மகிழ்ச்சியளிக்கும் மிட்டாய்) ஊட்டு கின்றார். முதன் முறையாக மதுபன் வந்ததால் கிடைத்த தில் குஷ்மிட்டாய் சதா நினைவில் இருக்கட்டும். இனிப்புப் பண்டமான மிட்டாயை வாயில் போட்டதும், கரைந்து போய்விடும் ஆனால் இந்த தில் குஷ் மிட்டாய் சதா கூடவே இருக்கும் சரிவரட்டும் பாப்தாதாவும், முழு பரிவாரமும் உள்நாடு மற்றும் வெளிநாட்டிலிருந்து வந்திருக்கும் தங்களுடைய எல்லா சகோதர சகோதரிகளையும் பார்த்து குஷியடைந்து கொண்டிருக்கிறார்கள். எல்லோருமே பார்க்கின்றார்கள். அமெரிக்காவும் பார்க்கிறது என்றால் ஆப்பிரிக்காவும் பார்த்துக் கொண்டிருக்கிறது. ரஷ்யாக்காரர்களும் பார்க்கிறார்கள், லண்டன் காரர்களும் பார்க்கிறார்கள், 5 கண்டங்களும் பார்க்கிறது. ஜன்மதினத் தில் உங்கள் எல்லோரையும் ஆங்காங்கே அமர்ந்திருந்தவாறே வாழ்த்துக்களை அளிக்கின்றார்கள். நன்று பாப்தாதாவின் ஆன்மீக டிரில் நினைவிருக்கிறதல்லவா? இப்போது பாப்தாதா ஒவ்வொரு குழந்தையிடமும், புதியவர்களாயிருந்தாலும் சரி, பழையவர்களாயினும் சரி, சிறியவர்களாயினும், பெரியவர்களாயினும், இன்னும் சிறியவர்கள் என்றால், பாபா சமானமாக சீக்கிரமாகவே ஆக முடியும். ஆதலால் எல்லோரும் ஒரு விநாடியில் மனதை எங்கே நிலை நிறுத்த வேண்டுமோ, அங்கே மனம் ஒருமுகப்பட வேண்டும். (ஏகாக்கிரஹம்) இந்த ஏகாக்கிரத்தா டிரில் சதா நடந்து கொண்டேயிருக்கட்டும். இப்போது வரையிலும் ஒரு நொடியில்

மனதிற்கு எஜமான் (மாலிக்) ஆகி, நான் மற்றும் என்னுடைய பாபா தான் எனக்கு உலகம், வேறு யாருமில்லை. இந்த ஏகாக்கிரஹ நினைவில் நிலைத்து விடுங்கள். நன்று.

நாலா பக்கமுள்ள எல்லா தீவிர புருஷாரத்தி குழந்தைகளுக்கு சதா, ஊக்கம், உற்சாகம் என்னும் இறக்கைகள் மூலம் பறக்கும் கலையின் அனுபவி மூர்த்தி குழந்தைகளுக்கு, சதா தன்னுடைய ஸ்வமான் சீட்டில் செட்டாகியிருக்கின்ற குழந்தைகளுக்கு, சதா இரக்கமுள்ள மனம் (ரஹம் தில்) உடையவராகி, உலகிலுள்ள ஆத்மாக்களுக்கு மனசா சக்தி மூலமாக கொஞ்சமாவது சுகம், சாந்தியின் ஆசிகள் (அஞ்சலி) வழங்கக் கூடிய, தயாளு, கிருபாலு (கருணை உள்ளவர், இரக்கம் உள்ளவர்) குழந்தைகளுக்கு சதா தந்தையின் அன்பில் மூழ்கியிருக்கக்கூடிய மன சிம்மாசனத்தின் அதிகாரி குழந்தைகளுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்தே.

தாதிகளுடன்: நன்று எல்லோருமே ஆதி ரத்தினங்கள். ஆதி ரத்தினங்களிடம் விசேஷம் இருக்கிறது. எல்லா ரத்தனங்களையும் பார்த்து மகிழ்ச்சியடைந்து விடுகிறார்கள். தாதியையும் கூட எல்லோ ரும் நினைவு செய்கிறார்கள். (தாதிஜிக்கு விசேஷ டிரீட்மெண்ட் மற்றும் பரிசோதனை நிமித்தமாக பம்பாய் மருத்துவமனையில் ஜனவரி 31 லிருந்து அங்கிருக்கிறார்கள். மோகினி பெகன், முன்னி பெகன், நிர்வயர் பாயி, யோகினி பெகன் ஆகிய அனைவரும் நினைவை அனுப்பியிருக்கிறார்கள்) பெரியவர்கள் முன்னிலையில் கொஞ்சம் அனுபவம் ஆகுமல்லவா? நியாரே (விடுபட்ட நிலை) மற்றும் தந்தைக்கு பியாரே, (அன்பு) நியாராகவாக இருந்து சிறுசிறு விஷயங்களில் கடந்து செல்வதற்கு ஒரு உதாரணம் ஆகின்றார்கள். முற்றிலும் 100 சதவிகிதம் சம்பன்னம் ஆக வேண்டும் ஏனெனில் முதல் நம்பர் காரர்கள், சிறிது அம்சம் கூட மீதமாக மிஞ்சி இருந்து விடக்கூடாது. எல்லாமே இங்கேயே முடிந்து விடவேண்டும். ஏனென்றால், இதன் ஆதாரத்தில் தான் புது உலக இராஜ்யம் ஸ்தாபனையாக வேண்டும். மேலும் இராஜ குடும்பமும் (ராயல் ஃபேமிலி) தயாராக வேண்டும். ஆகவே தான் என்ன நடந்தாலும் சரி, விலகியிருக்கின்றனர். சர்வ குண சம்பன்ன, சம்பூரண நிர்விகாரி, மரியாதா புருஷோத்தம் இவ்வாறு பிரத்யக்ஷ பிரமாணம் சம்பன்னம் ஆவதற்காக கொஞ்சம் இப்படிப்பட்ட விளையாட்டு நடத்த

வேண்டியதாகத் தானிருக்கிறது. (தாதி ஜானAT கூறினார் பாபாவுக்கு இது விளையாட்டு தான்). உங்களுக்கும் விளையாட்டுதான். இது கூட பார்ட் தான். எப்படி வேறு பார்ட் செய்கிறீர்களோ, அதேபோல இந்த பார்ட்டும் நிச்சயமாகி யிருக்கிறது. இதனால் மிஞ்சியிருப்பதும் பஸ்மம் ஆகிக் கொண்டிருக் கிறது. முற்றிலும் தூய்மை அம்சமாத்திரம் கூட இருக்கக்கூடாது. ஆகவே எல்லோரும் அன்பு இருக்கிறதல்லவா! ஆதலால் அன்பின் ஆசிகளும் கூட தாதிக்குக் கிடைத்துக் கொண்டிருக்கிறது. நல்லது. நீங்கள் எல்லோரும் சேர்ந்து, நிமித்தமாகி நடத்திக் கொண்டிருக் கிறார்கள். இதுவும் நன்றாகத்தான் இருக்கிறது. (பரதாதியும் கூட நினைவை கொடத்திருக்கின்றார்) இதுவும் கூட விளையாட்டில் ஒரு விளையாட்டு எல்லோரும் ஒன்றாக தூய்மையாகிக் கொண்டிருக் கிறார்கள் இவர். (சாந்தாமணி தாதி) தைரியசாலி செய்தும் காட்டி யிருக்கின்றார். டாக்டர்களுக்கும் கூட தன்னுடைய தைரியத்தை வெளிப்படுத்தியிருக்கின்றார். ஒவ்வொருவருக்கும் அவரவருடைய விசேஷம் இருக்கிறது. ஆகவே நன்றாக இருக்கிறது. சந்தித்து, துணையாக இருந்து, யக்ஞம் காரியம் நின்று விடாது. அமர் (அழிவற்றது) தொடர்ந்து நடக்க வேண்டும். மேலும் விஸ்தாரமாகவும் வேண்டும். எல்லோரும் சாட்சியாயிருந்து விளையாட்டைப் பார்த்துக் கொண்டிருக்கிறீர்களா? அல்லது கேள்விக்குறி வருகிறதா? ஏன்? என்ன? என்ற கேள்விகள் எழவில்லை தானே? என்னடி நடக்கிறதோ அதில் அநேக இரகசியங்கள் அடங்கியிருக்கிறது. இதை தந்தை அறிவார். டிராமா அறியும். நன்று, எல்லாம் சரிதானா? நன்று.

அவ்யக்த பாப்தாதாவுடன் ராஜஸ்தான் மாநிலத்தின் ஆளுநர் மாண்புமிகு சகோதரி பிரதிமா பாட்டீல் அவர்களுடன் சந்திப்பு: நீங்கள் நல்ல தைரியசாலியாயிருக்கிறீர்கள். பாப்தாதாவுக்கு ஒரு விஷயத்தில் குஷியாக இருக்கிறது. இராஜஸ்தானத்தில் இருவர் விசேஷமாக மாதாக்களாக இருக்கிறார்கள். திரிமூர்த்திகள். (முதன் மந்திரி,ஆளுநர், சபாநாயகர் மூவரும் சகோதரிகள்). இங்கேயும் கூட பாப்தாதா மாதாக்கள் மூலமாக ஸ்தாபனை செய்தார். ஆகவே இப்போது சகயோகியாகி சேவையை விஸ்தரியுங்கள். இராஜஸ்தான் நம்பர்-1 ஆக வேண்டும். (ஆகி விடும் தங்களுடைய ஆசீர்வாதம் இருக்கிறது) ஏன் ஆகாது? எங்கே திட சங்கல்பம் இருக்கிறதோ அங்கே வெற்றி நிச்சயம்.

வெற்றியின் சாவி திட சங்கல்பம். இந்த சாவியை சதா கூடவே வைத்திருக்க வேண்டும். இப்போது நீங்கள் துணைவராக ஆகி விட்டீர்கள். ஆசீர்வாதம் என்பது சுபகாரியம் மற்றும் தைரியமுள்ளவர்களுக்கு தானாகவே கிடைக்கும். சொன்னா லும், சொல்லாட்டாலும், யாரிடம் தைரியம் இருக்கிறதோ, ஊக்கம் இருக்கிறதோ, அவகளுக்கு கிடைக்கும். தநதை உறுதிமொழி கொடுத் திருக்கின்றார். ஒரு அடி தைரியமாக எடுத்து வைக்க வேண்டியது உங்களுடையது. ஆயிரம் அடிகள் தந்தையின் உதவி. உங்களுடன் வந்துள்ள மற்றவர்களும் உதவியாளர்களாக இருக்க வேண்டும். மிகவும் நல்லது நீங்கள் எல்லோரும் உதவி செய்ய வேண்டும். என்ன செய்ய முடியாது? எப்போது மனித ஆத்மாக்கள் உலகத்திற்கு தீமை செய்ய முடிகிறதென்றால், நன்மை ஏன் செய்ய முடியாது? தீங்கு விளைவிக்கும் பார்ட் செய்து கொண்டிருக்கிறார்கள் அல்லவா? (இது ஏன் நடக்கிறது) இவையெல்லாம் உச்சகட்டத்தை அடைய வேண்டும். பாருங்கள் 10 ஆண்டுகளுக்கு முன்பு பிரஷ்டாச்சார், பாபாச்சார் குப்தமாக இருந்தது. இந்தக்காலத்தில் திறந்த மார்க்கெட்டில் வந்து விட்டது உச்சகட்டத்தில் வர வேண்டும். கலியுகமல்லவா? கலியுகம் உச்சத்தை எட்டிக் கொண்டிருக்கிறது. (இதை முடிப்பதற்கான உபாயம் எது? இதற்கான உபாயம் ஆன்மீக சக்தியை அதிகரிக்க வேண்டும். இந்தச் செய்தியை சொல்லி அவர்களிடம் சிரேஷ்ட கர்மத்தின் பாவனையை உற்பத்தி செய்ய வேண்டும். நன்று.

(ஜெயகுமார் எம்.எல்.ஏ. மகாராஷ்டிரா): என்ன இருந்தாலும் சரி. தந்தையின் காரியத்தில் சகயோகி ஆக வேண்டும். (உதவி செய்தல்) (ஆளுநரிடம்) இவரோ வீட்டோடு சேர்ந்து விட்டார். பாருங்கள் தாதிகளுடன் கூடவே வந்து விட்டார். நல்லது.

பாட்னா, கமிஷனர் வந்திருக்கின்றார்: என்ன நடந்தாலும் சரி இப்போது ஈஸ்வரிய காரியத்தில் துணையாக இருக்க வேண்டும் போதும். இந்த திட சங்கல்பம் செய்து கொண்டு செல்ல வேண்டும். உதவியாளராக இருக்கத்தான் வேண்டும். அசையக்கூடாது. உறுதியோடிருங்கள்.

பிரமுகர் பிரபாகர் ரெட்டி (மாவட்ட தலைவர்) ஆந்திர பிரதேசம்: என்ன நடந்தாலும் சரி. இப்போது என்ன செய்ய வேண்டும்? இப்போது

ஈஸ்வரிய காரியத்தில் துணையாசக இருந்து நடந்து கொள்ள வேண்டும். நல்லது.

<u>தாதிகளின் சேவையில் உடனிருக்கும் சகோதரிகள்:</u> நீங்கள் சென்டரில் இருக்கவில்லை. மதுபனில் இருக்கவில்லை. எல்லா பிராமண பரிவாரத்தின் மத்தியில் இருக்கிறீர்கள். எல்லோருடைய பார்வையும் உங்கள் மீது உள்ளது. பெரிய பொறுப்பு களைப்படையக் கூடாது. சாதாரணமானவர்கள் அல்ல. பரிஷ்தாக்களைப்போல நடந்து கொள்ளுங்கள் தாதிகளை சமாளித்துக் கொண்டிருக்கிறீர்கள். புகார் எதுவுமில்லை. பாப்தாதாவுக்கு மகிழ்ச்சி தான்.

<u>பாப்தாதா பம்பாய் மருத்துவமனையில் தாதிஜியின் சேவைக்காக சென்றிருக்கும் சகோதர, சகோதரிகளுக்கு விசேஷமான நினைவுகளை அளித்தார்:</u> பாப்தாதா பம்பாயில் எல்லோருக்கும் அன்பான, எல்லோருடைய உள்ளத்திலும் அமர்ந்திருக்கின்ற தாதியின் சேவையில் யார் நிமித்தமாக இருக்கிறார்களோ, அவர்கள் எல்லோருக்கும் அன்பு நினைவுகளை அளிக்கின்றார். தாதிக்கு எதை டிராமாவில் பார்க்கின்றீர்களோ, பார்த்துக் கொண்டே சாட்சியாயிருந்து, ஆசிகளுக்கு உளமார்ந்த அன்பிற்கு மற்றும் அன்பு எனும் சக்தி அளிப்பதற்கு சேவை செய்து கொண்டிருக்கிறீர்கள். செய்து கொண்டேயிருங்கள். விளையாட்டில் விளையாட்டைப் பார்த்துக் கொண்டேயிருங்கள். சாட்சியாயிருந்து பாருங்கள். மேலும் பறந்து கொண்டேயிருங்கள். பாப்தாதா உளமார எல்லோருக்கும் ஆசிகளை வழங்குகின்றார். மேலும் எல்லோரும் அன்புடன் சேவை செய் கிறார்கள். சேவைக்கு வாழ்த்துக்கள். (தாதி ஜானகிஜி கூறினார்: டாக்டர்களும் கூட மிக நல்ல சேவை செய்கிறார்கள்) என்ன நடக்கிறதோ, அதில் சேவை மற்றும் நன்மை அடங்கியிருக்கிறது. நல்லது.

எல்லோரும் மிக அதிகமாக, அதிகத்திலும் அதிகமாக குஷியாயிருக்கிறார்கள். அதிக மகிழ்ச்சி. எத்தனை அதிகம்? ஆகவே சதா இப்படியே இருக்க வேண்டும். என்ன நடந்தாலும் சரி, நடக்கட்டும். இனி குஷியாகவே இருக்க வேண்டும். நாம் பறக்க வேண்டும். எதுவும் கீழே கொண்டு வரமுடியாது. பக்கா! பக்கா உறுதிமொழி தானா?

எவ்வளவு பக்கா? போதும். குஷியாக இருங்கள். எல்லோருக்கும் குஷியைத் தாருங்கள். எதாவது ஒரு விஷயம் நன்றாயில்லை என்றாலும் கூட, குஷியை இழந்து விடக்கூடாது. விஷயம் நடக்கட்டும். குஷியை இழந்து விடக் கூடாது. விஷயம் முடிந்து விடப்போகிறது ஆனால் குஷி கூடவே வர வேண்டு மல்லவா? ஆதலால் எது கூட வருமோ அதை விட்டுவிடுகிறீர்கள். கைவிட்டுப் போகப்போவதை விடாமல் கூடவே வைத்துக் கொண்டிருக்கிறீர்கள். இப்படி செய்யக் கூடாது அமிர்தவேளையில் முதலில் உங்களுக்கு நீங்களே குஷி எனும் டானிக் சாப்பிடுங்கள். நல்லது.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋
❋❋❋❋❋

# 15.02.2007 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# அலக்ஷியம், சோம்பல் மற்றும் சாக்குப்போக்கு போன்ற உறக்கத்திலிருந்து விழிப்பது தான் சிவராத்திரியின் உண்மையான விழிப்பாகும்!

இன்று பாப்தாதா விசேஷமாக நாலா பக்கங்களிலுமுள்ள தனது மிகவும் செல்லமான, வெகு நாட்களுக்குப் பிறகு கண்டெடுத்த, பரமாத்ம அன்பிற்குப் பாத்திரமான குழந்தைகளைச் சந்திப்பதற்காகவும், குழந்தைகளின் பிறந்த நாளைக் கொண்டாடுவதற்காகவும் விஸித்திரமான தந்தை வந்திருக்கின்றார். இன்றைக்கு நீங்கள் எல்லோரும் கூட விசேஷ. விஸித்திரமான பிறந்த நாளை கொண்டாடுவதற்காகவே வந்திருக்கிறீர்கள் அல்லவா! இந்த பிறந்த நாள் முழு கல்பத்திலும் யாருக்கும் நடப்பதில்லை. தந்தை மற்றும் குழந்தை ஆகிய இருவருக்கும் பிறந்த நாள் ஒன்றாக இருப்பதைப் பற்றி ஒருபோதும் கேள்விப்பட்டிருக்க மாட்டீர்கள்! ஆகவே, நீங்கள் எல்லோரும் தந்தையின் பிறந்த நாளைக் கொண்டாட வந்தீர்களா அல்லது குழந்தைகளுக்கும் கூட கொண்டாட வந்தீர்களா? ஏனென்றால் முழு கல்பத்திலும் பரமாத்ம தந்தை மற்றும் பரமாத்ம குழந்தைகளுக்கிடையே பிறந்த நாளும் கூட ஒன்றாக இணைந்து இருக்கும் அளவுக்கு அவ்வளவு அளவற்ற அன்பு இருக்கிறது. தந்தை, தனியாகவே உலகப் பரிவர்த்தனைக் காரியம் செய்வதில்லை, குழந்தைகளுடன் சேர்ந்தே செய்கின்றார். இவ்வாறு கூடவே இருப்பதற்கான அன்பு அவரைத் துணைவராக ஆக்கிக் கொள்வதற்கான அன்பு இந்த சங்கமயுகத்தில் தான் அனுபவம் செய்கிறீர்கள். அதாவது தந்தை மற்றும் குழந்தைகளுக்கிடையே இவ்வளவு ஆழமான அன்பு இருக்கிறது. பிறந்த நாளும் ஒன்று மேலும் இருப்பதும் கூட எங்கே இருக்கிறீர்கள்? தனியாகவா? சேர்ந்தா? ஒவ்வொரு குழந்தையும்

ஊக்கம், உற்சாகத்துடன் கூறுகின்றார்கள், நாங்கள் தந்தையுடன் இணைந்து இருக்கிறோம். இணைந்து இருக்கிறீர்கள் அல்லவா? தனியாக இருக்கவில்லை தானே! பிறப்பும் கூடவே தான். இருப்பதும் கூடவே தான். மேலும் இனி மேலும் கூட உறுதிமொழி எது? கூடவே கூடவே தான் இருப்போம். கூடவே செல்வோம் தங்கள் இனிய இல்லத்திற்கு இவ்வளவு அன்பு இருப்பதை, வேறு எந்த ஒரு குழந்தையாக இருந்தாலும் சரி, எங்கே இருந்தாலும் சரி, எப்படிப்பட்ட குழந்தையாக இருந்தாலும் சரி, கூடவே தான் இருக்கிறார்கள் மற்றும் கூடவே செல்லக்கூடியவர்களாகவும் இருக்கிறார்கள். ஆகவே இப்படிப்பட்ட ஒரு விஸித்திரமானதும், மிக அன்பானதுமான பிறந்த நாளைக் கொண்டாட வந்திருக்கிறீர்கள். நேர்முகமாகவே எதிரிலேயே இருந்து கொண்டாடிக் கொண்டிருப்பவர்களானாலும் சரி, உள் நாட்டிலும், வெளி நாட்டிலும் நாலா பக்கமும் ஒரே சமயத்தில் கூடவே இருந்து கொண்டாடிக் கொண்டிருக்கிறார்கள்.

பாப்தாதா நாலா பக்கங்களிலுமுள்ள குழந்தைகள், எவ்வளவு ஊக்கம் உற்சாகத்துடன் மனப்பூர்வமாக, வாஹ் பாபா! வாஹ் பாபா! வாஹ் பர்த்டே (ஆஹா ஆஹா பாபா! ஆஹா பிறந்த நாள்) என்ற பாட்டு பாடிக் கொண்டிருக்கிறார்கள். ஸ்விட்ச்சைப் போட்டதுமே, நாலா பக்கமும் சப்தம், உள்ளத்தின் குரல், ஊக்கம், உற்சாகம் நிறைந்த குரல், பாப்தாதாவின் செவிகளில் கேட்டுக் கொண்டிருக்கிறது. பாப்தாதா எல்லாக் குழந்தைகளின் உற்சாகத்தைப் பார்த்து குழந்தைகளின் திவ்ய பிறப்பிற்கு (தெய்வீகப் பிறவி) ஆயிரமாயிரம் மடங்குகள் வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றார். உண்மையில், உற்சவம் (திருவிழா) என்பதன் பொருள் ஊக்கம், உற்சாகத்தில் இருப்பது. ஆதலால் எல்லோரும் உற்சாகத்துடன் இந்த உற்சவத்தைக் கொண்டாடிக் கொண்டிருக்கிறீர்கள். பெயரும் கூட, பக்தர்கள் சிவராத்திரி என்று வைத்திருக்கின்றார்கள்.

இன்று பாப்தாதா, அந்த பக்த ஆத்மாக்கள், இந்த விஸித்திர ஜன்ம தினத்தைக் கொண்டாடுவதற்கு, நீங்கள் எப்படி ஞானம் மற்றும் அன்பு ரூபத்தில் கொண்டாடுகிறீர்களோ, இதனை அவர்கள் தங்கள் பாவனை மற்றும் சிரத்தை என்ற ரூபத்தில் மிக நன்றாக உங்களைக் காப்பி அடித்துக் கொண்டாடுகிறார்கள். ஆகவே, இன்று அந்தக்

குழந்தைகளுக்கும் (பக்த ஆத்மாக்கள்) வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றார். காப்பி அடிப்பதில், அவர்களுடைய பார்ட்டை (நடிக்கும் பாத்திரம்) மிகவும் நன்றாகவே செய்து விட்டார்கள். பாருங்கள், ஒவ்வொரு விஷயத்தையும் காப்பி அடித்திருக்கிறார்கள். காப்பி அடிப்பதற்கும் கூட புத்தி வேண்டுமல்லவா? முக்கியமாக இந்த நாளில் (சிவராத்திரி தினம்) பக்த ஜனங்களும் கூட விரதம் இருக்கிறார்கள். இந்த விரதம் உணவைப் பற்றியதாக இருக்கிறது. பாவனையில் விருத்தியை (உள்ளுணர்வை) சிரேஷ்டமாக வைத்துக் கொள்வதற்காக விரதம் இருக்கிறார்கள். அவர்களுக்கோ, ஒவ்வொரு ஆண்டும் அப்படி விரதம் இருக்க வேண்டியதாக இருக்கிறது ஆனால் நீங்கள் என்ன விரதம் எடுத்துக் கொண்டீர்கள். ஒவ்வொரு ஆண்டும் அதாவது ஆண்டு தோறும் விரதம் எடுப்பதில்லை. யாரெல்லாம் பக்காவாக விரதம் எடுத்துக் கொண்டிருக்கிறீர்களோ, அவர்கள் கை உயர்த்துங்கள். பக்கா தானே! கொஞ்சம் கூட கச்சாவாக இருக்கக் கூடாது. (நடைமுறை அனுபவம்) பக்கா? அச்சா. இன்னொரு கேள்வியும் இருக்கிறது. விரதம் நன்றாகவே எடுத்துக் கொண்டீர்கள், இதற்கு வாழ்த்துக்கள் ஆனால் அபவித்திரத்தாவிற்கு (தூய்மையற்றது) முக்கியமாக ஐந்து நண்பர்கள் இருக்கிறார்கள். சரி தானே! தலையசைத்துக் காண்பியுங்கள். நல்லது. இந்த ஐந்திற்கும் விரதம் எடுத்திருக்கிறீர்களா? அல்லது இரண்டு, மூன்றுக்கு மட்டுமே எடுத்திருக்கிறீர்களா? ஏனென்றால், எங்கே தூய்மை (பவித்திரத்தா) இருக்கிறதோ, அங்கே அம்ச மாத்தரம் தூய்மையற்ற (அபவித்திரத்தா) நிலை இருக்குமானால், சம்பூரண பவித்திர ஆத்மா என்று சொல்ல முடியுமா? மேலும் பிராமண ஆத்மாக்களாகிய உங்களுக்கு பவித்திரத்தா, பிராமண பிறவியின் சொத்து, பர்சனாலிட்டி, ராயல்ட்டி ஆகவே சோதித்துப் பாருங்கள் முக்கியமாக, தூய்மை என்பதில் சதா கவனம் வைத்திருங்கள். தூய்மை என்பதில் ஒன்றை மட்டுமே வைத்துக் கொண்டு இதனோடு கூடவே இருந்து கொண்டிருக்கின்ற மற்ற நண்பர்களைப் பற்றிய விஷயத்தில் (கோபம், லோபம், மோகம், கர்வம்) கவனக்குறைவாக இருக்கக் கூடாது. இதில், பரவாயில்லை என்று அக்கறையின்றி விட்டு விட்டீர்களா? இல்லை தானே! இருக்குமானால், சிறியவர்களிடம் அன்பு வைத்திருக்கிறீர்கள், பெரிய விஷயத்தை சரியாக வைத்துக் கொண்டீர்கள் என்பதாகும். அதாவது நண்பர்களாயிருக்கின்ற நான்கு விகார குணங்கள் இருந்தால்

பரவாயில்லை என்று தந்தை கூறியிருக்கின்றாரா? இருக்கலாம் என்று அனுமதி கொடுத்திருக்கின்றாரா? பவித்திரத்தா என்பது பிரம்மச்சர்யமாயிருப்பது மட்டுமல்ல. பிரம்மாச்சாரியாகவும் இருக்க வேண்டும் என்பது. பிரம்மாச்சாரியாக இருப்பது என்றால், பவித்திரத்தா விரதத்தை பாலனை செய்து கொண்டிருத்தல் (கடைப்பிடித்து நடத்தல்) சில குழந்தைகள் ஆன்மீக சம்பாஷணையின் போது கூறுகின்றார்கள். எல்லோருமே ஆன்மீக சம்பாஷணை (ரூஹ்-ரிஹான்) செய்கிறீர்கள் அல்லவா? மிகவும் இனிமையிலும் இனிமையான விஷயங்களைப் பேசுகிறார்கள். என்னவென்றால், பாபா! முக்கியமானதைக் கடைப்பிடித்துக் கொண்டிருப்பது நன்றாக இருக்கிறதல்லவா! மற்றபடி பாக்கியிருக்கும் சிறுசிறு விஷயங்கள் மனதில் சங்கல்பமாக (எண்ணம்) வந்து விடுகிறது என்கிறார்கள். மனதில் வருகிறது. பேச்சில் வருவதில்லை. மனதில் வருவதை யாரும் பார்ப்பதில்லை! இன்னும் என்ன கூறுகின்றார்கள் என்றால் சின்னஞ்சிறு குழந்தைகள் என்றால் அன்பு இருக்குமல்லவா! ஆகவே இந்த நான்குடனும் அன்பு உண்டாகி விடுகிறது. கோபம் வந்து விடுகிறது. மோகம் வந்து விடுகிறது விரும்புவதில்லை ஆனால் வந்து விடுகிறது. பாப்தாதா கூறுகின்றார், யாராவது வந்து விடுகிறார்கள் என்றால், நீங்கள் கதவை திறந்து விட்டதால் தானே வருகின்றார்கள்? ஆகவே, கதவைத் திறந்தது ஏன்? பலவீனம் என்ற கதவைத் திறந்து விட்டீர்கள். பலவீனம் என்ற கதவைத் திறப்பது என்பது வரவேற்பது என்பதாகும்.

ஆதலால் இன்றைய தினம், தந்தைக்கும் மற்றும் தனக்கும் பிறந்த நாளைக் கொண்டாடுகிறீர்கள் ஆனால் முதலில் பிறவி எடுத்த தினத்தன்று விரதம் (பிரதிக்ஞை) எடுத்துக் கொண்டீர்கள். முதன் முதலாக தந்தை என்ன கொடுத்தார்? பவித்திர பவ! யோகி பவ! எல்லோருக்கும் நினைவிருக்கிறதல்லவா, இந்த வரதானம்? நினைவிருக்கிறது. மறந்து போய் விடவில்லையல்லவா? பவித்திரபவ என்ற வரதானம் ஒன்றுக்கு மட்டும் கொடுக்கவில்லை. ஐந்துக்கும் கொடுத்திருந்தார். ஆகவே, இன்று பாப்தாதா என்ன விரும்புகின்றார்? பிறந்த நாள் கொண்டாட வந்திருக்கிறீர்கள். தந்தைக்கும் கூட கொண்டாட வந்திருக்கிறீர்கள் அல்லவா? சிவராத்திரி கொண்டாட வந்திருக்கிறீர்கள். அப்படியானால் பிறந்த நாளுக்கான அன்பளிப்பையும் கொண்டு வந்திருப்பீர்கள். அல்லது வெறுங்கையோடு

வந்திருக்கிறீர்களா? ஸ்தாபனையாகி 70-ஆண்டுகள் ஆகி விட்டதல்லவா? ஒருவேளை தான் வந்திருக்கலாம் என்றாலும் ஸ்தாபனைக்கான கடமையில் நீங்களும் கூடவே இருக்கிறீர்கள் அல்லவா? துணையாக இருக்கிறீர்கள், அப்படித்தானே! ஒருவேளை நீங்கள் முதன் முறையாக இங்கு வந்திருக்கலாம். முதல் முறையாக வந்திருப்பவர்கள் கை உயர்த்துங்கள். யார் மதுபனுக்கு முதன் முறையாக வந்திருக்கிறீர்களோ அவர்கள் கை உயர்த்துங்கள். கையை உயரமாகத் தூக்குங்கள் நல்லது. உங்கள் எல்லோருக்கும் ஒருவேளை ஒரு ஆண்டு காலம் ஆகியிருக்கலாம். அல்லது இரண்டு ஆண்டுகள் ஆகியிருக்கலாம். ஆனாலும், உங்களை எப்படி அழைக்கிறீர்கள்? பிரம்மா குமாரி, பிரம்மா குமார் என்றா? அல்லது புருஷார்த்தி குமார் என்றா? எப்படி அழைக்கிறீர்கள். யாராவது உங்களை புருஷார்த்தி குமார் என்று அழைக்கிறீர்களா என்ன? பிரம்மா குமார் என்று தானே எழுதுகின்றீர்கள்! எல்லோரும் B.K. என்று எழுதுகின்றீர்களா? P.K. என்று எழுதுகிறீர்களா (பிரம்மா குமார் என்றா அல்லது புருஷாரத்தி குமார் என்று எழுதுகிறீர்களா? அப்படியானால், உறுதிமொழி எது? கூடவே இருப்பீர்கள். கூடவே செல்வீர்கள். கம்பைண்டாக இருப்போம். கம்பைண்டு என்றால், சமானமாக இருக்க வேண்டுமல்லவா?

இப்போது 70ம் ஆண்டு என்று உற்சவம் கொண்டாடிக் கொண்டிருக்கிறீர்கள். பாப்தாதா பார்த்தார். எந்த ஒரு மண்டலம் விருப்பம் தெரிவிக்கிறார்களோ, அவர்கள் 70வது ஆண்டாகக் கொண்டாடுகிறார்கள். கௌரவ விழாவாகக் கொண்டாடுகிறீர்கள். கொண்டாடுகிறீர்கள் தானே! எல்லோரும் சிறுசிறு அன்பளிப்பை வழங்கி விடுகிறார்கள் ஆனால் இன்றைய தினமோ, ஒன்று பிறந்த நாள், கொண்டாட வந்திருக்கிறீர்கள். பக்கா தானே? இரண்டாவது 70-ஆண்டுகள் முடிந்து விட்டது ஆதலால் இந்த கௌரவத்தையும் கொண்டாடுகிறீர்கள். பிறந்த நாளும் கொண்டாடுகிறீர்கள். இதில் அன்பளிப்பாக என்ன கொடுக்கப் போகிறீர்கள்? தாம்பாளத்தட்டு (டிரே) கொடுப்பீர்களா? துப்பட்டா கொடுப்பீர்களா? என்ன அன்பளிப்பு கொண்டு வந்திருக்கிறீர்கள்? சரி வெள்ளி டம்ளரும் கொடுக்கலாம் ஆனால் இன்றைய தினத்தில் பாப்தாதாவுக்கு ஒரு சுபமான விருப்பம் இருக்கிறது. இது தன்னுடைய நம்பிக்கை தீபமாக இருக்கின்ற குழந்தைகளுக்காக சொல்லட்டுமா என்னவென்று? முதல் வரிசையில்

அமர்ந்திருப்பவர்கள் பதில் கூறுங்கள். சொல்வது அல்லது கேட்பது என்றால் என்ன? ஒரு காதில் கேட்க வேண்டும். அதை மனதில் அடக்கி வைத்துக் கொள்ள வேண்டும். அப்படியா? வெளியே கொண்டு வராமல் இருப்பதா? அப்படியல்ல. மனதிற்குள்ளேயே அடக்கி வைத்துக் கொள்கிறார்கள். ஆதலால், இன்றைய தினம், முதல் வரிசையில் அமர்ந்திருப்பவர்கள் கூறுங்கள். சொல்லட்டுமா? தலையசைத்துக் காட்டுங்கள். டீச்சர்ஸ் தலையசையுங்கள். நன்று எல்லோரும் சேர்ந்து தலையசைக்கிறார்கள். டபுள் ஃபாரினர்ஸ் கூறுங்கள், சொல்லட்டுமா? உங்களைக் கட்டுப்படுத்த வேண்டியதாக இருக்கும். இப்படியிருந்தால் மட்டும் ஆம் என்று கூறுங்கள். அப்படியே யோசிக்காமலே தலையசைப்பதல்ல, ஏனென்றால், பாருங்கள் 70-ஆண்டுகளாகி விட்டன. 70-ஆண்டு காலமாக பாப்தாதா பார்த்துக் கொண்டு தான் இருக்கின்றார். அலக்ஷியம், சோம்பல் மற்றும் சாக்குப்போக்கு போன்ற 70-ஆண்டு விளையாட்டை பார்த்து விட்டார். சரி 70-ஆண்டுகள் இல்லாவிட்டாலும், 50, 40, 30, 20-ஆண்டு காலம் ஆகியிருக்கலாம். இவ்வளவு ஆண்டு காலமாக குழந்தைகளின் விளையாட்டை நன்றாகவேப் பார்த்திருக்கின்றார். இன்றைக்கு பக்த ஜனங்கள் கண்விழித்திருக்கிறார்கள். உறங்குவதில்லை. அப்படியானால் உங்களுடைய கண் விழிப்பு என்பது என்ன? எந்த விஷயத்தில் அடிக்கடி உறங்கி விடுகிறீர்கள்? அலக்ஷியம், சோம்பல் மற்றும் சாக்குப்போக்கு என்ற உறக்கத்தில் மிகவும் சௌகரியமாக தூங்கி விடுகிறீர்கள்.

ஆதலால் இன்று பாப்தாதா இந்த மூன்று விஷயங்களிலும், ஒவ்வொரு நேரத்திலும் விழிப்புணர்வோடு இருப்பதைப் பார்க்க விரும்புகின்றார். எப்போதாவது கோபம் வருகிறது. அபிமானம் வருகிறது, பேராசை வருகிறது என்றால் இதற்கு என்ன காரணம் சொல்கின்றார்கள். பாப்தாதாவுக்கு ஒரு டிரேட் மார்க் (வார்த்தகச் சின்னம்) தெரிகிறது. ஏதாவது ஒரு விஷயம் நடந்து விடுகிறதென்றால், என்ன சொல்கிறார்கள் என்று தெரியவில்லை என்கிறார்கள் ஆனால் இந்தச் சொல் எதைக் குறிக்கிறது என்றால், இப்படித்தான் நடக்கிறது, இது நடந்து கொண்டே தான் இருக்கிறது, இதில் புதிய விஷயம் என்ன இருக்கிறது? இப்படி நடக்கத்தான் செய்கிறது என்று சொன்னால், இதற்கு என்ன பொருள்? அலக்ஷியம் இல்லையா? இவரும் கூடத்தான் செய்கிறார். மெஜாரிட்டி கோபத்திலிருந்து தப்பித்துக் கொள்வதற்காக,

இப்படிச் செய்தார், இது தான் காரணம். நான் தவறு செய்து விட்டேன் என்று சொல்ல மாட்டார்கள். இவர் தானே செய்தார். இப்படி நடந்ததல்லவா? ஆகவே தான் இப்படி ஆனது மற்றவர் மீது பழி சுமத்துவது மிகவும் எளிது. இவர் இப்படி செய்யாமலிருந்திருந்தால் இப்படி நடந்திருக்காது. என்ன பாபா சொன்னாரோ அப்படி நடப்பதில்லை. அவர் இப்படி நடந்து கொண்டால் சரியாகி விடும்! அப்படியானால், பாபாவின் ஸ்ரீமத் மூலம் கோபத்தை நீக்கி விட முடியாதா? தற்சமயம் கோபத்தின் குழந்தையான ஆவேசம் வருகிறது. இதில் பல வகைகளும் உண்டு. ஆகவே இன்றைய தினம் இந்த நான்கிலும் உறுதிமொழி (விரதம்) எடுத்துக் கொள்வீர்களா? எப்படி முதலாவது விஷயத்தில் மெஜாரிட்டி விசேஷ திட சங்கல்பம் எடுத்துக் கொண்டீர்களோ, இதே போலவே மற்ற நான்கிலும் சங்கல்பம் எடுத்துக் கொள்ள வேண்டும். இதில் சாக்குப்போக்குச் சொல்லக்கூடாது. இவர் இப்படிச் செய்ததால் தான் நான் அப்படி நடக்க வேண்டியதாகி விட்டது. எதை பாபா அடிக்கடி கூறியிருந்தாரோ அது நினைவுக்கு வரவில்லை ஆனால் மற்ற நபர் செய்தது நினைவுக்கு வந்து விட்டது. ஆகவே இது சாக்குப்போக்கு தானே? ஆதலால் இன்று பாப்தாதா பிறந்த நாள் அன்பளிப்பு எதிர்பார்க்கின்றார். இந்த மூன்று விஷயங்கள், நான்கினை சுலபமாக ஆக்கி விடும். சம்ஸ்காரத்தை எதிர்க்கத்தான் வேண்டும். சம்ஸ்காரம் எதிர்க்கவில்லை, இது பேப்பர் (சோதனைத் தாள்). ஒரு ஜன்ம படிப்பு, முழு கல்பத்திற்கும் பிராப்தி. அரைக்கல்பம் இராஜ்ய பாக்கியம். அரைக்கல்பம் பூஜ்ய நிலை. முழுக் கல்பத்திற்கும், ஒரு ஜன்மத்தின் பிராப்தி. அதுவும் சிறிய ஜன்மம் முழு ஜன்மம் இல்லை. சிறு ஜன்மம் (குறைவான காலம்). அப்படியானால் தைரியம் இருக்கிறதா? யார், இப்படி நினைக்கிறார்கள், நிச்சயமாக தைரியத்துடன் நடப்போம். இப்படியெல்லாம் நடக்க மாட்டோம், கவனம் வைப்போம் என்று இதுபோல் ஓம், ஓம் என்பது வேண்டாம். சிறு குழந்தைகள் அல்ல. 70-ஆண்டுகள் முடிந்து விட்டது. மூன்று அல்லது நான்கு மாதக் குழந்தைகள் தான் ஓம், ஓம் (நடப்போம், செய்வோம்) என்று சொல்லும் ஆனால் நீங்கள் தந்தைக்குத் துணைவர்கள், இல்லையா! விஷ்வ கல்யாணகாரி. இவர்களுக்கு 70-ஆண்டுகள் முடிந்து கொண்டிருக்கிறது. பாப்தாதா கை உயர்த்த சொல்ல மாட்டார். ஏனென்றால் பாப்தாதா பார்க்கின்றார் அல்லவா? கை உயர்த்தினாலும் கூட சில சமயம் அலக்ஷியமாக இருந்து விடுகின்றார்கள் ஆனால் யார் இப்படி

நினைக்கிறார்களோ அதாவது என்ன நடந்தாலும் சரி, மலைபோல பரீக்ஷை வந்தாலும் சரி. மலையைப் பஞ்சாக்கி விடுவோம் என்று திட சங்கல்பம் செய்ய வேண்டும். எனினும் சங்கல்பம் (எண்ணம்) என்னவோ, நன்றாகத்தான் செய்கிறீர்கள். நீங்கள் இப்படி சங்கல்பம் செய்யும் போது பாப்தாதாவுக்கும் குஷியாகத்தான் இருக்கிறது ஆனால் என்னவென்றால் 70-ஆண்டுகள் அலக்ஷியமாக இருந்து விட்டீர்கள். என்றாலும் பாப்தாதா பார்த்துக் கொண்டிருக்கின்றார். நேரத்தை நம்ப முடியாது. மேலும் இந்த ஞானத்தின் ஆதாரத்தில், ஒவ்வொரு முயற்சியிலும் வெகு காலத்திற்கான கணக்கு அடங்கியிருக்கிறது. நல்லது இப்போதே செய்து விடுவீர்கள். வெகு காலத்திற்கான கணக்கு ஏனென்றால், ஒவ்வொருவரும் என்ன பிராப்தி வேண்டும் என எதிர்பார்க்கிறார்கள்? இப்போது கை உயர்த்தச் சொல்லலாம். இராம்-சீதா வாக ஆக வேண்டும் என்று விரும்புபவர்கள் இருக்கிறார்களா? லக்ஷ்மி-நாராயணர் ஆக மாட்டீர்களா? கை உயர்த்துகிறார்களா? பாருங்கள், நீங்கள் பாருங்கள் கை உயர்த்துகிறார்கள். ஃபாரினர்ஸ் கை உயர்த்துகிறார்களா? இரட்டை வெளிநாட்டை சேர்ந்தவர்கள் யாராவது கை உயர்த்துகிறார்களா? எப்போது வெகு காலத்திற்கான பாக்கியத்தை அடைய விரும்புகிறீர்களோ லக்ஷ்மி-நாராயணர் ஆக வேண்டும் என்று, அதாவது வெகு கால இராஜ்ய பாக்கியம் அடைய வேண்டும் என்றால், ஒவ்வொரு விஷயத்திலும் முயற்சியிலும், வெகுகாலம் செய்திருக்க வேண்டுமல்லவா? இப்போது 63-ஜன்மம் என்ற வெகு காலத்து சம்ஸ்காரம் என்று கூறுகிறீர்கள் அல்லவா? இது என்னுடைய எண்ணமுமில்லை, பாவனையுமில்லை ஆனால் 63-ஜன்மத்து விஷயம் என்கிறீர்கள். ஆகவே இது வெகு காலத்திய கணக்காகி விட்டது. ஆகவே தான் பாப்தாதா என்ன விரும்புகின்றார் என்றால் சங்கல்பத்தில் (எண்ணத்தில்) உறுதி குறைந்து விடுகிறது. ஆகி விடும், செய்து கொண்டுதானிருக்கிறோம், நடக்கட்டும், யார் தயாராகியிருக்கிறார்கள் என்பது போன்ற எண்ணம். இத்தோடு இன்னொரு நல்ல விஷயம் எல்லோருக்குமே வருகிறது. இந்த விஷயங்களை பாப்தாதாவும் கவனித்திருக்கின்றார். தனக்கு தைரியம் போதவில்லை, மகாரதிகளும் கூட இப்படித்தானே இருக்கிறார்கள், நாம் செய்தால் இது ஒன்றும் பெரிதல்ல என்று நினைக்கிறார்கள் ஆனால் பாப்தாதா கேட்கின்றார். எந்த சமயத்தில் மகாரதி தவறு செய்கிறாரோ, அப்போது அவர் மகாரதியா? ஆகவே மகாரதி என்ற சொல்லுக்கு ஏன் இழுக்கு

உண்டாக்குகிறீர்கள்? அந்த சமயத்தில் அவர் மகாரதியே இல்லை. அப்படியிருக்கும்போது அவர் மகாரதி என்று சொல்லி தன்னை ஏன் பலவீனப்படுத்திக் கொள்கிறீர்கள்? இது தன்னையே ஏமாற்றிக் கொள்வதாகும். மற்றவரைப் பார்ப்பது எளிதாயிருக்கிறது. தன்னைப் பார்ப்பதில் கொஞ்சம் தைரியம் வேண்டும். ஆதலால் தான் பாப்தாதா கணக்குப் பார்க்க வந்திருக்கின்றார் மேலும் கணக்குப் புத்தகத்தில் உள்ள கணக்கை முடித்து விடச் செய்வதற்கான அன்பளிப்பு பெறுவதற்காக வந்திருக்கின்றார். பலவீனம் மற்றும் சாக்குப்போக்கு என்ற கணக்குப் புத்தகம் மிகப் பெரியதாக இருக்கிறது. செய்து காட்டுவோம் என்று நினைக்கும் ஒவ்வொருவரும் செய்யத்தான் வேண்டும். பணியத் தான் வேண்டும், மாறத்தான் வேண்டும், பரிவர்த்தனை விழா கொண்டாடத்தான் வேண்டும். நாங்கள் அப்படிச் செய்வோம் என்று சங்கல்பம் செய்பவர்கள் கை உயர்த்துங்கள். உறுதியானதா? வழக்கம்போல உள்ளதா? சாதாரண சங்கல்பம் மற்றும் திட சங்கல்பமும் என்ற இருவகை இருக்கிறது. இதில் உங்களுடைய சங்கல்பம் திடமானது தானே! திடமான சங்கல்பத்தினுடைய கை தான் உயர்த்தினீர்கள் அல்லவா! மதுபன் வாசிகள் உயரமாக கை உயர்த்துங்கள். இதுபோதாது. இங்கே மதுபன் வாசிகள் அமர்கின்றார்கள். மிகவும் அருகாமையில் அமருவதற்கான வாய்ப்பு கிடைத்திருக்கிறது. மதுபன் வாசிகளோ, எதிரிலேயே அமர்ந்திருக்கின்றார்கள். முதலாவது இருக்கை (சீட்) மதுபன் வாசிகளுக்குக் கிடைக்கிறது. பாப்தாதாவுக்கு மகிழ்ச்சியாயிருக்கிறது. முதலாவதாக அமர்ந்திருக்கின்றீர்கள், முதலாவது இடத்திலேயே இருக்க வேண்டும்.

ஆகவே இன்றைய அன்பளிப்பு மிகவும் சிறப்பானதாக ஆகி விட்டதல்லவா? பாப்தாதாவுக்கும் குஷியாக இருக்கிறது. ஏனெனில் நீங்கள் தனிப்பட்ட ஒருவரல்ல. உங்கள் பின்னால் உங்களுடைய இராஜதானியில், உங்களுடைய இராஜ குடும்பத்தினர், உங்களுடைய ராயல் பிரஜைகள், பிறகு துவாபர யுகத்திலிருந்து உங்களுடைய சதோ, ரஜோ, தமோகுனி பக்தர்கள் இருக்கிறார்கள். மூன்று விதவிதமான பக்தர்கள். நீண்ட வரிசை உங்களுக்குப் பின்னால் இருக்கிறது. நீங்கள் என்ன செய்கிறீர்களோ அதைப் பார்த்து பின்னால் வருபவர்கள் செய்வார்கள்! நீங்கள் சாக்குப்போக்கு சொன்னால் உங்கள் பக்தர்களும் சாக்குப்போக்கு சொல்வார்கள். இப்போது பிராமண பரிவாரமும் கூட,

உங்களைப் பார்த்து நேருக்கு மாறாகக் காப்பியடிப்பதில் கெட்டிக்காரர்களாயிருக்கிறார்கள் அல்லவா? ஆகவே இப்போது திட சங்கல்பம் செய்யுங்கள். சம்ஸ்கார மோதல் இருந்தாலும் சரி, சுபாவத்தில் ஒத்துப்போகாமலிருந்தாலும் சரி, மூன்றாவது விஷயம் பலவீனம் அதாவது யாராவது யார் மீதாவது பொய் சொல்லி விட்டால் எங்களுக்கு அப்படிப்பட்ட பொய் சொல்பவர் மீது கோபம் வருகிறது என்று அநேக குழந்தைகள் கூறுகிறார்கள் ஆனால் உண்மையான தந்தையிடம் சரியானதுதானா என்று சரி பார்த்தீர்களா? உண்மையான தந்தை உங்களோடு இருக்கின்றார். ஆகவே முழு பொய்யான உலகம் ஒருபக்கம். மறுபக்கம் நீங்கள் ஒரு தந்தையின் துணையில் இருக்கிறீர்கள். உங்களுடைய வெற்றி நிச்சயிக்கப்பட்டிருக்கிறது. யாரும் உங்களை அசைக்க முடியாது. ஏனென்றால் தந்தை உங்களோடு இருக்கின்றார். சொல்கிறார்கள் பொய் என்று அப்படியானால், பொய்யானதை, பொய்யானதாகவே ஆக்கி விடுங்களேன். ஏன் பெரிதாக்குகிறீர்கள்? ஆதலால் இன்று தந்தைக்கு சாக்குப்போக்கு சொல்வது பிடித்தமானதாக இல்லை. இப்படி நடந்தது, இது நடந்தது. இது நடந்தது... ! இது, இது என்கிற பாட்டு பாடுவதை நிறுத்தி விட வேண்டும். நன்றாகவே நடந்தது. நன்றாகவே நடக்கும். நன்றாகவே இருப்போம். எல்லோரையும் நல்லவர்களாக ஆக்குவோம். அச்சா, அச்சா என்ற பாட்டு பாடுங்கள், சரிதானா? பிடித்தமாயிருக்கிறதா? சாக்குப்போக்கை நிறுத்தி விடுவீர்கள் நிறுத்திவிடுவீர்களா? இரு கைகளையும் உயர்த்துங்கள். இரண்டிரண்டு கைகளை உயர்த்துங்கள். நன்று ஆம் நன்றாக கையை அசையுங்கள் நல்லது. பார்ப்பவர்களும் கை அசைக்கிறார்கள். எங்கே பார்க்கிறீர்களோ, கை அசையுங்கள். நீங்கள் அசைக்கின்றீர்கள் நல்லது. கையை கீழே போடுங்கள். இப்போது உங்களுடைய பரிவர்த்தனைக்கு கை தட்டுங்கள். நன்று.

இந்த நாள், இந்த சமயம், இந்த குரூப்பின் போட்டோ சதா எதிரிலேயே வைத்திருங்கள். எப்போதாவது பலவீனம் வந்தால், வரவிடக்கூடாது. கதவு மூடியிருக்க வேண்டும். கதவு எது என்பது தெரியுமல்லவா? மூடி விடுங்கள். இரட்டைப் பூட்டு போடுங்கள். இந்தக் காலத்தில் ஒருமுறை பூட்டுவது, பாதுகாப்பில்லை. ஒன்று நினைவுக்கு, இன்னொன்று மனதை சேவையில் சுறுசுறுப்பாக வைத்துக் கொள்வதற்கு! இப்படி இந்த இரண்டு சர்வ சக்தியான (ஆல்மைட்டி பூட்டு) பூட்டு போட்டு விட

வேண்டும். காட்ரெஜ் அல்ல. காட் (GOD) பக்காவாக விழிப்பு வேண்டும். பக்கா விரதம் இருக்க வேண்டும். பாப்தாதாவுக்கு ஒவ்வொரு குழந்தையிடமும் அதிக அன்பு இருக்கிறது. கடைசி நம்பராக இருந்தாலும் சரி, பாப்தாதாவுக்கு அந்த குழந்தையின் மீது கூட மிகுந்த அன்பு இருக்கிறது. ஏன்? இப்படிப்பட்ட குழந்தைகள், எந்த ஒரு தந்தைக்காவது கிடைப்பார்களா? ஒரே ஒரு பாப்தாதா, இவரை பிராமண குழந்தைகள் சந்திக்கிறார்கள். எந்த ஒரு மகாத்மாவானாலும், மகா மண்டலேஷ்வரானாலும், தர்ம பிதாவானாலும் சரி, யாருக்கும் இப்படிப்பட்ட குழந்தைகள் கிடைத்தார்களா? யாரை, ஒவ்வொரு குழந்தையும் மேரா பாபா (என்னுடைய தந்தை) என்று அழைக்கின்றார்களோ, அப்படிப்பட்ட தந்தை. இப்படி யாராவது இருந்தார்கள் என்று சரித்திரம் இருக்கிறதா? ஆகவே தான் பாப்தாதா ஒவ்வொரு குழந்தையின் மகத்துவத்தையும் அறிந்தவராக இருக்கின்றார். நாங்கள் ஆஹா பாபா ஆஹா (வாஹ் பாபா) என்று பாடுகின்றோம் என்று குழந்தைகள் கூறுகின்றார்கள். சரியா? ஆஹா, ஆஹா தானே! மதுபன் வாசிகள் ஆஹா! ஆஹா குழந்தைகள் தானே! பின்னால் இருப்பவர்கள் ஆஹா, ஆஹா குழந்தைகள் தானே! நன்று.

**போபால் ஜோன் (மண்டலம்) சேவை:** சரிதான். கொடியசைத்தால் நன்றாகக் காணப்படும். நன்றாக இருக்கிறது. போபாலும் கூட மத்திய பிரதேசத்தில் உள்ளது. மேலும் மத்திய பிரதேசம் மிகப் பெரியது. சேவை செய்திருக்கிறார்கள். ஆரம்பத்தில் நல்ல, நல்ல ஆளுநர் மற்றும் வி.ஐ.பிக்களை அழைத்து வந்திருந்தனர். இப்போது இவ்வளவு விசேஷமானவர்கள் யாரையும் அழைத்து வரவில்லை. ஆதலால் விசேஷமாக பாப்தாதா, டீச்சர்ஸ் (சகோதரிகள்) கவனமாக கேட்க வேண்டும். இரண்டு சேவைகள் கொடுக்க விரும்புகின்றார் சொல்லட்டுமா என்னவென்று? ஒன்று விசேஷமான வி.ஐ.பி. அழைத்து வர வேண்டும். உதாரணமாக இராஜஸ்தானிலிருந்து ஆளுநர் வந்தார். தெய்வீக குடும்பம் இவர் நல்ல அனுபவம் செய்து கொண்டு சென்றிருக்கின்றார். இத்தோடு சேவைக்கான பொறுப்பையும் ஏற்றுக் கொண்டு சென்றிருக்கிறார். நன்றாக இருக்கிறது, மிக நல்ல காரியம் செய்கிறார்கள் என்று சொல்வதோடு நின்று விடவில்லை. பொறுப்பையும் ஏற்றுக் கொண்டிருக்கின்றார். இப்படிப்பட்ட விசேஷமான வி.ஐ.பி. யாராவது இருக்கிறார்களா மத்திய

பிரதேசத்தில்? பாப்தாதாவுக்குத் தெரியும். மறைந்திருக்கிறார்கள். அவர்களை மைதானத்தில் கொண்டு வந்து விட்டால் போதும். இரண்டாவது எத்தனை பெரிய பெரிய சேவா கேந்திரங்கள் இருக்கின்றனவோ, எதை நீங்கள் பெரிய சென்டர் என்று கருதுகிறீர்களோ அந்த பட்டியல் கொடுங்கள். எந்தெந்த சென்டரின் மேற்பார்வையில் கிளை சேவை நிலையங்கள், கீதா பாடசாலைகைள் நிறைய இருக்கின்றதோ, அப்படிப்பட்ட ஒவ்வொன்றும், குறைந்த பட்சம் ஒரு ஆண்டுக்குள்ளாக, நிறைய நேரம் கொடுக்கின்றேன், இவ்வளவு கொடுக்கக் கூடாது, பிரசித்தமான வாரிசு குவாலிட்டியான வி.ஐ.பிக்களை அழைத்து வர வேண்டும். உங்கள் சென்டரில் வாரிசுகள் நிறைய இருக்கிறார்கள் என்று நீங்கள் நினைக்கலாம். வாரிசு குவாலிட்டி மறைந்திருக்க மாட்டார்கள். வாரிசு குவாலிட்டி உள்ளவராயிருந்தால், மறைந்திருக்க மாட்டார். பாப்தாதா குப்தமாக இருக்கும் வாரிசை ஏற்க மாட்டார். அவருடைய தொடர்பு, அவருடைய உறவு, சட்டப்படி உயர்வானதாக இருக்கத்தான் வேண்டும். இப்படிப்பட்ட வாரிசை ஒவ்வொரு பெரிய சென்டரும் எதிரில் அழைத்து வாருங்கள். கொண்டு வர முடியுமல்லவா? பெரிய சென்டர்! இதில் நாங்கள் சிறியவர்கள் என்று சொல்லக்கூடாது. சிறியவராக ஆகவும் கூடாது. சிறியவர்களும், பெரியவர்கள் ஆக வேண்டும் சரிதானா டீச்சர்ஸ்? சரியாகச் சொல்லியிருக்கிறேனா? சிறியவர்களாக இருக்கும் நாங்களும் பெரியவர்கள் ஆகிக் காட்டுவோம் என்று சொல்பவர்கள் கை உயர்த்துங்கள். கொடியசைத்துக் காட்டுங்கள். மனப்பூர்வமாக கொடி அசைக்கிறீர்கள் அல்லவா? இப்படி, இந்த இரண்டு காரியம் போபால் செய்ய வேண்டும் ஆமாம். போபால்காரர்கள் உங்களுக்குள்ளேயும் கூட யாரவாது வாரிசு ஆவீர்கள் அல்லவா? பார்க்கலாம். 6-மாதங்களில் தயாராக வேண்டும். இருப்பினும் பாப்தாதா ஒரு ஆண்டு அனுமதி அளித்திருக்கின்றார். சரிதான். மற்றபடி இந்த சேவையில் கோல்டன் சான்ஸ் எடுத்துக் கொண்டிருக்கிறீர்கள். இது நல்லது. பாப்தாதா சதா கூறிக் கொண்டே இருக்கின்றார். இது சுய உன்னதிக்கான நல்ல வாய்ப்பு ஏனென்றால் சேவைக்கான பொறுப்பும் தனிப்பட்டதாக இல்லை. யக்ஞ சேவைக்கான பொறுப்பு அங்கேயோ நேரம் மற்றும் கவனம் கொடுக்க வேண்டியதிருக்கும், இங்கேயோ ஒரு கவனம் தான், சுய உன்னதி அல்லது யக்ஞ சேவை. யக்ஞ சேவையின் புண்ணியத்தை ஒவ்வொரு சமயத்திலும் சேமித்துக் கொண்டேயிருந்தால், உங்களுடைய

புண்ணியக் கணக்கு மிகவும் சீக்கிரமாகவே அதிகரிக்க முடியும். நன்றாகச் செய்தீர்கள். எண்ணிக்கையும் அதிகம் கொண்டு வந்திருக்கிறீர்கள். வாய்ப்பையும் பயன்படுத்திக் கொண்டீர்கள். இனி அடுத்து வரும் ரிசல்ட்டைப் பார்க்கலாம். நன்று.

**60-தேசங்களிலிருந்து 700-டபுள் விதேஷிகள் வந்துள்ளனர்:** பாப்தாதாவுக்கு டபுள் விதேஷிகளைப் பார்த்து ஒரு விஷயத்தில் விசேஷ குஷியாக இருக்கிறது. அதிக குஷி உண்டாகிறது. என்ன விஷயமென்றால், ஆரம்பகாலத்தில் எப்போது டபுள் ஃபாரினர்ஸ் வந்தார்களோ, டீச்சர்களுக்கு ஞாபகமிருக்கும், வெவ்வேறு கலாச்சாரத்திலிருந்து மாறுவதில் கொஞ்சம் கடினமானதாக இருந்தது ஆனால் இப்போது பாப்தாதா பார்க்கின்றார். இது பற்றிய பேச்சு அவ்வளவாக இல்லை. ஏன்? என்ன காரணம்? ஏனென்றால் ஒருவருக்கொருவர் சந்திப்பதால் நன்றாக விருத்தியாகியுள்ளது அல்லவா! மேலும் பாப்தாதா கேள்விப்படுகின்றார் மெஜாரிட்டி தங்கள் தங்கள் அருகாமையிலுள்ளவர்களுக்கு செய்தி அளிப்பதற்கு அவரவர்க்கான யுக்தியை அவரவர்களே கையாளுகின்றனர். இவ்வாறு செய்தி கொடுப்பதற்கான ஆர்வம் மிக நன்றாக இருக்கிறது. ஆதலால் இந்த ரிசல்ட்டில், பார்த்தபோது, ஒவ்வொரு முறை வரும்போதும். விதேஷிகளினுடைய குரூப் குறைவதில்லை. குவாலிட்டியும் நன்றாக இருக்கிறது. மேலும் எண்ணிக்கையும் அதிகரித்துக் கொண்டேயிருக்கிறது. ஆகையால் ஒரு சந்தன மரம் ஆகி விட்டது. இவ்வாறான சந்தன மரத்தைப் பார்த்து பாப்தாதாவுக்கு மகிழ்ச்சியாக இருக்கிறது. சமாச்சாரம் பாப்தாதாவை வந்த டைந்து விடுகிறது. நீங்கள் இ.மெயில் மூலமாக அனுப்பியிருந் தாலும் சரி, பாப்தாதாவிடம் முன்கூட்டியே காப்பி வந்து விடுகிறது. சேவைக்கான ஆர்வம் நன்றாக இருக்கிறது. மற்றபடி, இப்போது இன்றைய விரதத்தை (உறுதி) திடமாக்க வேண்டும். நம்பர் வாங்குவீர்களல்லவா, விதேஷிகள்? நம்பர் வாங்குவீர்களா? என்ன நம்பர்? முதல் நம்பரா, இரண்டாவ தென்றாலும் பரவாயில்லையா (முதல்) யாருக்கு ஒரு தந்தையிடம் அன்பிருக்கிறதோ, அவர்கள் ஒரே சமமாக ஒரே விதமான நம்பர் ஆவார்கள். ஒரு சுலோகன் இருக்கிறதல்லவா? ஒரு பாபா தான் உலகம் எப்போது உலகம் ஒன்று தான் என்றால் நம்பர்-1றாகி விட்டதல்லவா? எப்படி உங்களுக்கு டபுள் ஃபாரினர்ஸ் என்ற டைட்டில் இருக்கிறதோ,

அவ்வாறு முயற்சியில் சங்கல்பத்தின் உறுதியிலும் கூட முயற்சியிலும் டபுள் வேகத்தை செய்து காட்டுங்கள். கவனம் வைக்கிறார்கள் ஆனால் ஒரே ஒரு வித்தியாசம் உள்ளது. ஆதாவது தீவிரமான உறுதி பலவீனமாகி விடுகிறது. புரோகிராம் (திட்டம்) நன்றாகச் செய்கிறார்கள். பாப்தாதாவும் தலைப்பை அறிவார். ஒவ்வொரு குரூப்பினுடைய முயற்சியின் விஷயத்தைப் பார்த்து மிகவும் குஷி அடைகின்றார் ஆனால், எப்போது ஒரு தலைப்பில் முயற்சியில் இறங்குகிறீர்கள், அல்லது லக்ஷியம் வைக்கிறீர்கள். அதில் மிக அதிக வேகம் ஆரம்பத்தில் வைக்கிறீர்கள் பிறகு கொஞ்சம் சோதனை வரும் போது, தீவிரம் குறைந்து போய் விடுகிறது. சோதனைத்தாள் வரத்தான் வேண்டும். பரீக்ஷை எழுதாமல் யாரும் பாஸாக முடியாது. இதில் உறுதி குறைந்து விடுகிறது. முயற்சி சாதாரணமாகி விடுகிறது. சதா தீவிரமாக இருக்க முடிவதில்லை. வேகம் குறைந்து போய் விடுகிறது. ஆதலால் எல்லாவற்றிலும் டபுள் முயற்சி வேண்டும். செய்து காட்டுவீர்கள். ஆகியும் காட்டுவீர்கள் சரிதானே! இவ்வளவு ஆர்வம், உற்சாகம் இருக்கிறதல்லவா? இருக்கிறது. உறுதியை மட்டும் சற்று சோதித்துக் கொண்டால் போதுமானது. விஷயங்களில் மூழ்கி விடாதீர்கள். உறுதியைப் பாருங்கள். நல்லது.

டபுள் விதேஷி குமாரிகளுடன்: இந்த பேனர் நன்றாகத் தயார் செய்திருக்கிறார்கள். கை அசையுங்கள். இது நன்றாகச் செய்கிறீர்கள். ஏனெனில் மதுபன் வாயுமண்டலத்திலும் கூட பிரபாவத்தை உண்டாக்குகிறது. தாதிகளுக்கும் கூட அன்பு மற்றும் உள்ளுணர்வானது வாயுமண்டலத்திற்கு உதவியாக இருக்கிறது. எந்த ஒரு ஸ்பெஷல் (சிறப்பு) தலைப்பு வைக்கிறீர்களோ, மேலும் தங்களுக்குள் பேசிக் கொள்ளும்போது, விசேஷமாக உதவி கிடைப்பதாகக் கருதுகிறீர்கள். கிடைக்கிறதா, உதவி? நல்லது. இந்த நஷா எவ்வளவு நேரம் இருக்கிறது? 6-8 மாதங்கள் இருக்கிறதா, சதா இருக்கிறதா? இதை நினைத்துப் பாருங்கள். உள்ளுக்குள்ளேயே நினைவுக்குக் கொண்டு வாருங்கள், உணருங்கள். எந்தெந்த பாயிண்ட் ஞானத்தைப் பற்றிய எந்த விஷயமாக இருந்தாலும் அதை நினைவு செய்து உணருங்கள். எந்தெந்த கருத்துக்கள் அறிவுரையாகக் கிடைக்கிறதோ, அல்லது நஷா மற்றும் குஷியை தருவதாக இருக்கிறதோ அதை உணர்ந்து அனுபவம்

செய்யுங்கள். உங்களுக்குள்ளேயே உணர்ந்து பாருங்கள். ஒவ்வொன்றிலும் என்ன அனுபவம் உண்டாகிறது என்று பாருங்கள். அனுபவம் செய்திருக்கிறீர்களா? அல்லது ஞானத்தின் ஆதாரத்தில் அறிவது, நினைப்பது, கேட்பது, வர்ணனை செய்வது என்பதாக இருக்கிறதா? பாப்தாதா மொத்தமாக என்ன பார்த்தார் என்றால் உள் நாட்டிலும், வெளிநாடுகளிலும் ஒவ்வொரு பாயிண்ட் பற்றி மிக ஆழமாகச் சொல்ல வேண்டுமென்பதில் கொஞ்சம் கவனக் குறைவு இருக்கிறது. கேட்பது, சொல்வது என்பதில் கவனம் நன்றாக இருக்கிறது. இதில் நம்பர் ஓன் என்று கூறலாம் ஆனால் அனுபவி மூர்த்தி ஆவது இங்குமங்கும் சென்று கொண்டிருக்கும் போதும் ஆத்மாவுக்கு அனுபவம் ஆவது, பாபாவுடன் கம்பைண்டு ரூபத்தில் இருக்கும் அனுபவம் ஆவது, இதில் குறை உள்ளது. ஆதலால் தான் இதைப் பற்றி உணர்ந்தீர்களானால், ரியல் கோல்டு ஆகி விடுவீர்கள். மற்றப்படி பாப்தாதாவுக்கு குஷியாக இருக்கிறது. டீச்சர்களும் கவனம் கொடுக்கிறார்கள். உங்களுடைய தாதி (ஜனாகி தாதி) மிகுந்த கவனம் கொடுக்கின்றார். எவ்வளவு உங்கள் மீது நீங்கள் கவனம் வைக்கிறீர்களோ, அவ்வளவு தாதி உங்கள் மீது கவனம் வைக்கிறார். நீங்கள் ஒவ்வொருவரும் எவ்வளவு பாபா மீது நம்பிக்கை வைத்திருக்கிறீர்களோ, அவ்வளவு உங்கள் மீது தாதி நம்பிக்கை வைத்திருக்கின்றார். இவ்வாறு கவனம் வைப்பதால் நம்பர்-1 என்பது நிச்சயமாகி விட்டது போலத்தான். உங்களுடைய பலவீனத்தை நீங்கள் உணருகின்றீர்கள் என்றாலும் கூட, பரிவர்த்தனை கொண்டு வருவதில் குறை இருக்கிறது. இதில் பாப்தாதா பார்க்கின்ற விஷயம், உறுதியில் குறை இருக்கிறது என்பதாகும். இரண்டாவது, மனதை ஏகாக்கிரஹம் செய்ய வேண்டும் எங்கே செய்ய வேண்டும்? இதில் குறை உள்ளது. இந்த விஷயத்தில் பாரதவாசிகளானாலும் சரி, வெளி நாட்டினரானாலும் சரி, கவனம் கொடுக்க வேண்டும். உறுதி மற்றும் ஏகாக்கிரத்தா? இன்று வரையிலும் கூட வீணானது உள்ளது. சிக்கனம் இல்லை. சங்கல்பம், பேச்சு, சம்மந்தம், தொடர்பில் கூட ஒவ்வொரு சம்ஸ்காரம், சுபாவத்திலும் கூட சிக்கனமாகச் செலவு செய்யுங்கள். சிக்கனமும் அவசியம் தான். யக்ஞத்தின் சிக்கனம். எவ்வளவு சங்கல்பத்தில் சிக்கனம் உள்ளதோ அவ்வளவு யக்ஞத்திலும் கூட யக்ஞத்திலும் கூட சிக்கனமில்லாமல் இருக்க முடியாது. யக்ஞத்தில் சிக்கனம் வரவில்லை, சம்ஸ்காரம் விழிப்படையவில்லை. இதன்

மூலமாக அறியுங்கள் நேரம் சங்கல்பம் என்ற பொக்கிஷங்களில் சிக்கனம் வேண்டும் என்பதில் பழக்கமே இல்லை. ஆகவே தான் யக்ஞ சிக்கனத்தின் சம்ஸ்காரம் எழுச்சியுடனில்லை. ஆதலால் உறுதி, ஏகாக்கிரத்தா, மற்றும் சிக்கனம் (எகானமி) சரி. மற்றபடி பாப்தாதாவுக்கு குஷி தான். சேவை பிளான் பற்றியும் குஷி தான். நன்றாக சேவை செய்கிறீர்கள் அல்லவா? இங்கே எதிரில் அமர்ந்திருக்கின்றார் அல்லவா? சேவையில் ஆர்வம் அதிகம் இருக்கிறதல்லவா? காயத்திரி எப்படி இந்த அடையாள ரூபமான கொடியை பறக்க விட்டார். மேலும் மலர்களைத் தூவினார். இது போலவே ஒவ்வொரு ஆத்மாக்களின் இதயத்தில் தந்தையின் நினைவாகிய கொடியை, உணர்வின் கொடியை பறக்க விடுங்கள். உங்களுடைய உள்ளத்தில் இருக்கவே இருக்கின்றார் ஆனால் இப்போது எல்லோருடைய உள்ளத்திலும் தந்தையின் கொடியை அதாவது நினைவாகிய கொடி பறக்கட்டும். இதனால் உலகம் பூந்தோட்டம் ஆகி விடும். இப்படிப்பட்ட சங்கல்பம் சதா உள்ளத்தில் எழுச்சியுடன் இருக்கட்டும். செய்யத்தான் வேண்டும். ஆகத்தான் வேண்டும். நடந்து முடிந்தே விட்டது. நிமித்தமாக இருந்தால் போதும் நல்லது.

**இன்டர் நேஷனல் மதர் (தாய்மார்கள்) குரூப்:** படம் நன்றாக தயார் செய்து விடுகிறார்கள். இது இவர்களுடைய விசேஷம். நன்றாகத் தயார் செய்கிறார்கள். பாருங்கள் இவ்வளவு தாய்மார்கள் (மதர்ஸ்) ஒவ்வொரு மாதாவும் ஜகத்மாதா ஆகி விட்டால், உள்ளுணர்வு மூலம் ஒவ்வொரு நேரத்திலும், ஒவ்வொரு சங்கல்பத்திலும், ஒவ்வொரு மாதாவும் ஜகத்மாதாவின் சொரூபத்தில் நிலைத்து விட்டார்களானால், எவ்வளவு வைப்ரேஷன் உலகில் பரவும். ஏனென்றால், மாதாக்களின் பாவனை சீக்கிரமாகச் சென்றடைகிறது. ஆகவே எவ்வளவு மாதாக்கள் இப்போது நின்று கொண்டிருக்கிறார்களோ ஒவ்வொரு நேரத்திலும் உலகிலுள்ள தங்களுடைய குழந்தைகளுக்கு சகோதரர்களுக்கு வைப்ரேஷன் கொடுத்துக் கொண்டேயிருங்கள். எப்படி தாய் அன்புடன் குழந்தையைப் பராமரிக்கிறாரோ அதுபோல நீங்கள் எல்லோரையும் குழந்தை என புரிந்து பாலனை செய்யுங்கள். வைப்ரேஷன் பரவச் செய்யுங்கள். சரி தான். இனி பார்க்கலாம். முழு நாளும் ஒவ்வொரு மாதாவும் ஜகத்மாதாவாகி வைப்ரேஷன் பரப்பட்டும். இதில் சுய உன்னதி தானாகவே உண்டாகும். இதை செய்து பாருங்கள். மாதாக்கள்

நல்லவர்கள். பாப்தாதாவின் பார்வையில் இருக்கிறார்கள். மேலும் தைரிய சாலிகள் செய்ய முடியும். ஆதலால் முன்னேறிக் கொண்டேயிருக்க வேண்டும் நல்லது.

ரஷ்யாக்காரர்கள்: திட்டம் தீட்டியிருக்கிறார்கள். இதில் 50-ஆயிரம் கிலோ மீட்டர் பயணம் செய்து 150-நகரங்களில் சேவை செய்வார்கள்: நன்றாக இருக்கிறது. பாப்தாதா குழந்தைகள் மூலமாகக் கூட சமாச்சாரம் தெரிந்து கொண்டார். பாப்தாதாவுக்கு இதில் ஒரு விஷயம் பிடித்தமானதாக இருந்தது. பாப்தாதா கூறியிருந்தார் அல்லவா? ஒ.கே. என்று ரிசல்ட் அனுப்ப வேண்டும் என்பது. இதை நல்ல முறையில் அனுப்பியிருந்தார். இதற்கு வாழ்த்துக்கள்.

பின்பு சகோதரி மோகினி, தாதிகள், மூன்று சகோதரர்கள் இவர்களை பாப்தாதா சந்தித்தார்.

போலி தாதி பிப்ரவரி, **9'**ம் தேதி சரீரத்தைத் துறந்தார்**:** போலியும் அனைவராலும் விரும்பப்பட்டார். ஆரோக்கியம் எப்படி இருந்தாலும் சரி, பிரம்மாதந்தை பண்டகசாலையின் பொறுப்பு அளித்ததால் இறுதி வரை அதை விட்டு அவர் வெளியேறவில்லை, செயலில் சிறப்பு தேவியாக இருந்தார். அதனாலேயே எல்லோருடைய உள்ளத்து அன்பும் நன்றாக இருந்தது. (இப்போது மீராவும் நன்றாக செய்வார்) ஆம், ஏன் செய்ய மாட்டேன், கண்டிப்பாகச் செய்வேன். பாலனை நன்றாக கிடைத்துள்ளது. நல்லது.

பாப்தாதா டைமன்ட் ஹால் மேடை மீது தனது திருக்கரங்களால் சிவ கொடியை ஏற்றி, அனைவருக்கும் வாழ்த்துக்கள் அளித்தார்**:** தந்தையின் பிறந்தநாளையும், தனது பிறந்தநாளையும் அனைவரும் மிக்க அன்புடன் கொண்டாடினீர்கள், இதற்காக கோடான கோடி மடங்கு வாழ்த்துக்கள், வாழ்த்துக்கள்! எப்படி இந்த அடையாள ரூபமான கொடியை ஏற்றி, மலர்கள் பொழிந்தது போல, ஒவ்வொரு ஆத்மாவின் இதயத்திலும், தந்தையுடைய நினைவின் கொடியை ஏற்ற வேண்டும். அது உங்கள் இதயத்தில் உள்ளது ஆனால் இப்போது அனைவரது உள்ளத்திலும் தந்தையின் கொடியை, அதாவது நினைவின் கொடியை ஏற்றினீர்கள் என்றால் உலகம் முழுவதும் மலர்களின் தோட்டமாக

மாறும். முட்களின் காடு முடிந்து பூக்களின் தோட்டமாக மாறி விடும். இத்தகைய சங்கல்பத்தை சதா உங்கள் இதயத்தில் எழட்டும், செய்தயாக வேண்டும், நடந்தேயாக வேண்டும், நடந்துள்ளது, நீங்கள் நிமித்தமாக மட்டுமே ஆக வேண்டும். நல்லது.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

**03.03.2007 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்**

# பரமாத்மாவின் சேர்க்கையில் (சம்மந்தம்), ஞானம் எனும் வர்ணம், குணம் மற்றும் சக்திகள் எனும் வர்ணம் பூசி அலங்கரிப்பது தான் (பூசிக்கொள்வது) உண்மையான ஹோலி கொண்டாடுவதாகும்!

இன்று பாப்தாதா தன்னுடைய பேரதிருஷ்டசாலிகளான மகான் பவித்திர குழந்தைகளுடன் ஹோலி கொண்டாடுவதற்காக வந்துள்ளார். உலகத்தில் உள்ளவர்களோ, எந்த ஒரு உற்சவமானாலும், கொண்டாடுவதோடு சரி ஆனால் குழந்தைகளாகிய நீங்கள் கொண்டாடுவது மட்டுமல்ல, கொண்டாடுவது என்றால் ஆவது என்பதாகும். ஆதலால் ஹோலி என்றால், பவித்திர (தூய்மையான) ஆத்மாக்கள் ஆகி விட்டீர்கள். நீங்கள் எல்லோரும் எப்படிப்பட்ட ஆத்மாக்கள்? ஹோலி என்றால் மகான் பவித்திர ஆத்மாக்கள். உலகத்தார் சரீரத்தை ஸ்தூலமான கலர்ப் பொடிகளைத் தூவி சாயம் பூசிக் கொள்கிறார்கள் ஆனால் ஆத்மாக்களாகிய நீங்கள் மற்ற ஆத்மாக்களை எந்த விதமான வர்ணம் பூசி அழகு செய்கிறீர்கள்? எல்லாவற்றிலும் மிக நல்ல வர்ணம் எது? அழிவற்ற வர்ணம் எது? உங்களுக்குத் தெரியும், நீங்கள் எல்லோரும் பரமாத்மாவுடனான சேர்க்கை (சங்) எனும் வர்ணத்தை ஆத்மாக்களுக்குப் பூசி விட்டீர்கள். இதன் மூலமாக ஆத்மாவானது, பவித்திரத்தா (தூய்மை) எனும் வர்ணத்தால் மிகவும் அழகாகக் காட்சியளிக்கிறது. இந்த பரமாத்மாவின் சேர்க்கை மூலமாகப் பெற்ற வர்ணம் எவ்வளவு மகானாகவும், எளிதாகவும் இருக்கிறது. ஆதலால் பரமாத்மாவுடன் சேர்க்கையின் (சங்) மகத்துவம் இப்போதைய கடைசி நேரத்திலும் கூட, சத்சங்கம் என்ற மகத்துவமுடையதாக இருக்கிறது. சத்சங்கம் என்பதன் பொருள் பரமாத்மாவுடன் தொடர்பு. இது எல்லாவற்றிலும் எளிதானது.

சம்மந்தத்தில் இருப்பது மற்றும் உயர்ந்ததிலும் உயர்ந்த சம்மந்தத்தில் இருப்பது கஷ்டமாக இருக்கிறதா என்ன? இத்தகைய சம்மந்தத்தில் இருப்பதன் காரணமாக, எப்படி பரமாத்மா உயர்ந்தவரிலும், உயர்ந்தவராக இருக்கின்றாரோ, அதுபோல குழந்தைகளாகிய நீங்களும் கூட உயர்ந்ததிலும், உயர்ந்த பவித்திர மகான் ஆத்மாக்களாக, பூஜ்ய ஆத்மாக்களாக ஆகி விட்டீர்கள். இந்த அழிவற்ற சம்மந்தத்தினால் உண்டான நிறம் பிரியமானதாக இருக்கிறதல்லவா? உலகினர் எவ்வளவு முயற்சி செய்கிறார்கள்? பரமாத்மாவுடனான தொடர்பை விடுங்கள், நினைவு செய்வதற்கும் கூட எவ்வளவு கடின முயற்சி செய்கிறார்கள்? ஆனால் ஆத்மாக்களாகிய நீங்களோ, தந்தையை அறிந்து கொண்டீர்கள். உள்ளன்போடு "மேரா பாபா" என்றீர்கள். தந்தையும் கூட "மேரே பச்சே" (என்னுடைய குழந்தைகளே!) என்றார். ஆதலால் சாயம் ஒட்டிக் கொண்டது. தந்தை எந்த ஒரு வர்ணம் பூசினார்? ஞானம் எனும் கலர்ப்பொடியைத் தூவினார். குணங்கள் எனும் வர்ணம் பூசினார். சகதிகள் எனும் வர்ணம் பூசினார். இந்த வர்ணங்களின் மூலமாக நீங்களோ தேவதைகள் ஆகி விட்டீர்கள் ஆதலால் இப்போதைய கலியுகக் கடைசி வரையிலும் கூட உங்களுடைய பவித்திரமான ஸித்திரங்கள் தேவ ஆத்மாக்கள் என்ற ரூபத்தில் பூஜிக்கப்படுகின்றன. பவித்திர ஆத்மாக்களாக நிறைய பேர் ஆகின்றார்கள். மகான் ஆத்மாக்களாகவும் நிறைய ஆகின்றார்கள். தர்ம ஆத்மாக்களாகவும் நிறைய பேர் ஆகின்றார்கள் ஆனால், உங்களுடைய பவித்திர தேவ ஆத்மாக்களின் ரூபத்தில், ஆத்மாவும், பவித்திரமாகிறது. ஆத்மாவோடு சரீரமும் பவித்திரமாகிறது. இவ்வளவு சிரேஷ்ட பவித்திரமாக எப்படி ஆனது? பரமாத்மாவோடு தொடர்புத் ஏற்படுத்திக் கொண்டதால் மட்டுமே தான். நீங்கள் எல்லோரும் மிடுக்காகக் கூறுகின்றீர்கள், யாராவது குழந்தைகளாகிய உங்களிடம் கேட்பார்களேயானால், பரமாத்மா எங்கே இருக்கின்றார் என்று? பரந்தாமத்தில் தான் இருக்கின்றார் என்றாலும், இப்போது சங்கம யுகத்தில் பரமாத்மா உங்களிடம் எங்கே இருக்கின்றார்? நீங்கள் என்ன பதில் கூறுவீர்கள்? பரமாத்மாவுக்கு இப்போது பவித்திர ஆத்மாக்களாகிய உங்களுடைய மன சிம்மாசனம் தான் விருப்பமுள்ளதாக இருக்கின்றது. அப்படித்தானே? உங்களுடைய உள்ளத்தில் தந்தை இருக்கின்றார் தந்தையின் உள்ளத்தில் நீங்கள் இருக்கின்றீர்கள். இருக்கின்றீர்களா? யார் இருக்கின்றார்களோ, அவர்கள்

கை உயர்த்துங்கள் இருக்கின்றீர்களா? நல்லது ரொம்ப நல்லது மிடுக்காகக் கூறுகின்றீர்கள். பரமாத்மாவுக்கு எனது உள்ளத்தைத் தவிர வேறு எது நன்றாக இருக்கின்றது? ஏனென்றால், கம்பைண்டாக (இணைந்து) இருக்கிறீர்கள் அல்லவா? கம்பைண்டாக இருக்கிறீர்கள் தானே! அநேகக் குழந்தைகள் கம்பைண்டாக இருக்கிறோம் என்று சொன்னாலும், கூட, தந்தையினுடைய துணையைப் பயன்படுத்திக் கொள்வதில்லை. துணைவனாக ஆக்கிக் கொண்டார்கள், உண்மை தான். மேரா பாபா என்று சொன்னதன் மூலம் துணைவனாக ஆக்கிக் கொண்டார்கள். என்றாலும் ஒவ்வொரு நேரத்திலும், துணையின் பயனை அனுபவம் செய்வதில் வித்தியாசம் உண்டாகி விடுகிறது. இதில் பாப்தாதா பார்ப்பது என்னவென்றால், நம்பர் வாராக பயன்படுத்திக் கொள்கிறார்கள். காரணம் என்ன? உங்களுக்கு நன்றாகவே தெரியும்.

பாப்தாதா இதற்கு முன்னரும் கூட கூறியிருக்கின்றார். உங்களுடைய உள்ளத்தில் இராவணனுடைய பழைய சொத்தானது பழைய சம்ஸ்கார ரூபத்தில் தங்கி விட்டதால் இராவணனுடைய பொருள் அந்நியப் பொருளாகி விட்டதல்லவா? அந்நியப் பொருள் ஒருபோதும் தன்னிடம் வைத்துக் கொள்ளப்படுவதில்லை. வெளியேற்றப்பட்டு விடும் ஆனால் பாப்தாதா பார்க்கின்றார். ரூஹ்ரிஹான் செய்யும்போது (அமிர்தவேளை ஆன்மீக சம்பாஷைனையில்) கேட்கவும் செய்கின்றார். குழந்தைகள் என்ன கூறுகின்றார்கள்? பாபா நான் என்ன செய்வது? என்னுடைய சம்ஸ்காரமே அப்படித்தான் இருக்கிறது. அப்படியானால், இது உங்களுடையதா? என்னுடைய சம்ஸ்காரம் என்று சொல்கின்றீர்களே, அது உங்களுடையதா? இப்படிச் சொன்னால் இது சரியா? என்னுடைய பழைய சம்ஸ்காரம். என்னுடைய சுபாவம் (நேச்சர்) என்று சொன்னால் சரியா? இது சரி என்று சொல்பவர்கள் கை உயர்த்துங்கள். யாருமே கை உயர்த்தவில்லை. அப்படியானால் என்னுடையது என்று ஏன் கூறுகின்றீர்கள்? தவறுதலாகக் கூறி விட்டீர்களா? இப்போது மறுபிறவி எடுத்து விட்டீர்கள். ஆதலால் உங்களுடைய சர் நேம் (வீட்டுப்பெயர்) என்ன? பழைய ஜன்மத்தினுடைய பூர்வாங்க (இன்ஷியல்) குடும்ப பெயரா? அல்லது பி.கே. வா? நீங்கள் எப்படி எழுதுகிறீர்கள்? பி.கே. என்றா? அல்லது இன்னார், இன்னார் என்றா? எப்போது மறுபிறவி எடுத்து விட்டீர்களோ, அப்போது பழைய சம்ஸ்காரம் என்னுடையது

என்று எப்படிச் சொல்ல முடியும்? இந்தப் பழையதோ, அந்நியப் பொருளாகி விட்டது. ஆதலால் என்னுடையது இல்லையல்லவா? ஆகவே, இந்த ஹோலியில் ஏதாவது கொஞ்சம் எரிப்பீர்கள் அல்லவா? ஹோலியில், எரிக்கவும் செய்கின்றார்கள், சாயம் பூசிக் கொள்ளவும் செய்கிறார்கள். ஆகவே இந்த ஹோலியில் என்ன எரிக்கப் போகிறீர்கள்? என்னுடைய சம்ஸ்காரம் என்பதை உங்களுடைய பிராமண வாழ்க்கையின் அகராதியிலிருந்து எடுத்து விடுங்கள். வாழ்க்கையும் கூட ஒரு அகராதி தானே? ஆதலால் இனி ஒருபோதும் சொப்பனத்திலும் கூட, சங்கல்பம் என்ற பேச்சை விடுங்கள், பழைய சம்ஸ்காரத்தை என்னுடைய சம்ஸ்காரம் என்று சொப்பனத்திலும் கூட நினைக்கக் கூடாது. இப்போதோ, எது தந்தையினுடைய சம்ஸ்காரமோ, அது தான் உங்களுடைய சமஸ்காரம். எல்லோரும் கூறுகிறீர்கள் அல்லவா? பாபா சமானம் ஆக வேண்டும் என்பது தான் எனது லக்ஷியம். ஆதலால் எல்லோருமே, மனப்பூர்வமாக திடசங்கல்பத்துடன் தங்களுடைய உறுதிமொழி எடுத்துக் கொண்டீர்களா? தவறியும் கூட, எனது சம்ஸ்காரம் என்று சொல்லக் கூடாது. நீங்கள் என்னுடையது, என்னுடையது என்று சொல்வதால் தான் பழைய சம்ஸ்காரம் இருக்கிறதல்லவா, அது பயன்படுத்திக் கொள்கிறது. நீங்கள் என்னுடையது என்று சொல்வதாலேயே, அது இடத்தைப் பிடித்துக் கொண்டிருக்கிறது, வெளியேறுவதில்லை.

பாப்தாதாவுடம் கூட, குழந்தைகளை எந்த ரூபத்தில் பார்க்க விரும்புகின்றார்? தெரிந்து கொண்டுமிருக்கிறீர்கள். ஏற்றுக் கொண்டுமிருக்கிறீர்கள். பாப்தாதா ஒவ்வொரு குழந்தையையும் பிருகுட்டியாகிய சிம்மாசனத்தின் அதிகாரியாக, சுய இராஜ்ய அதிகாரியாக இருக்கின்ற இராஜா குழந்தையாக, அடிமை குழந்தையாக அல்ல, இராஜா குழந்தையாக, கன்ட்ரோலிங் பவர் (வசப்படுத்தும் சக்தி), ரூலிங் பவர் (ஆளுமை சக்தி), மாஸ்டர் சர்வ சக்திவான் சொரூபத்தில் பார்க்க விரும்புகின்றார். நீங்கள் உங்களை எந்த சொரூபத்தில் பார்க்கின்றீர்கள்? இப்படித்தானே! இராஜ்ய அதிகாரி என்று தானே! அடிமை இல்லையல்லவா? அடிமைகளாக இருக்கின்ற ஆத்மாக்களையும் அதிகாரிகளாக ஆக்குபவர்கள். ஆத்மாக்கள் மீது இரக்கம் காட்டி, அடிமைத்தனத்திலிருந்து அவர்களையும் கூட அதிகாரி

ஆக்குபவர்கள். அல்லவா? நீங்கள் எல்லோரும் ஹோலி கொண்டாட வந்திருக்கிறீர்கள்.

பாப்தாதாவுக்கும் குஷியாக இருக்கிறது. எல்லோரும் சிநேகம் எனும் விமானம் மூலமாக, எல்லோரிடமும் விமானம் இருக்கிறதல்லவா? அப்படியானால் எல்லோரிடமும் மனம் எனும் விமானம் இருக்கிறதா? மிக நன்றாக கை உயர்த்தியிருக்கிறார்கள். சரியா? பிராக்டிக்கலாக (நடைமுறையில்) அப்படியிருக்கிறதா? சிறகுகள் சரியாக இருக்கின்றனவா? புறப்படுவதற்கான (ஸ்டார்ட்) ஆதாரம் சரியாக இருக்கிறதா? சோதிக்கிறீர்களா? எப்படிப்பட்ட விமானம் ஒரு செகண்டில் மூன்று லோகத்திலும் சஞ்சாரம் செய்யக் கூடிய விமானம் தைரியம் மற்றும் ஆர்வம், உற்சாகம் என்ற இரண்டு சிறகுகளும் யதார்த்தமாக இருக்கிறது என்றால் ஒரு செகண்டில் ஸ்டார்ட் செய்ய முடியும் ஸ்டார்ட் செய்வதற்கான சாவி எது? மேரா பாபா! மேரா பாபா என்று சொன்னதுமே, மனம் எங்கே செல்ல விரும்புகின்றதோ உடனே அங்கு சென்றடைய முடியும் இரண்டு சிறகுகளும் சரியாக இருக்க வேண்டும். தைரியத்தை ஒருபோதும் இழந்து விடக்கூடாது. ஏன்? பாப்தாதா வாக்கு கொடுத்திருக்கின்றார். வரதானம் இருக்கிறது. தைரியமாக ஒரு அடி முன்னே எடுத்து வைப்பது உங்களுடையது. நூறு மடங்கு உதவி தந்தையினுடையது. எப்படிப்பட்ட கடுமையான சம்ஸ்காரமாக இருந்தாலும் சரி தான், தைரியத்தை ஒருபோதும் இழந்து விடாதீர்கள். காரணம்? சர்வ சக்திவான் தந்தை துணையாக இருக்கின்றார். கம்பைண்டாக இருக்கின்றார். சதா ஆஜராக இருக்கின்றார். நீங்கள் தைரியமாக, சர்வ சக்திவான் கம்பைண்டு தந்தையின் மீது அதிகாரம் செலுத்துங்கள். உறுதியாக இருங்கள் நடக்கத்தான் வேண்டும் தந்தை என்னுடையவர், நான் தந்தையினுடையவன். இந்த தைரியத்தை மறந்து விடாதீர்கள் அப்போது என்ன ஆகும்? எப்படிச் செய்வது என்ற எண்ணம் வருகிறதல்லவா? அந்த எப்படி என்ற சொல் மாறுதலடைந்து, இப்படி என்றாகி விடும். எப்படிச் செய்வது? என்ன செய்வது? என்பதல்ல. இப்படித்தான் என்றாகி விடும் எப்படிச் செய்வது? என்ன செய்வது? என்பதல்ல. இப்படித்தான் என்பது ஏற்கனவே நிச்சயமாகி விட்டது நினைக்கிறீர்கள், செய்து கொண்டுமிருக்கிறீர்கள், ஆகும், ஆகத்தான் வேண்டும் தந்தை உதவி செய்வார்! நடந்து முடிந்து விட்ட விஷயம்.

திடமான நிச்சய புத்தியுடையவர்களுக்கு உதவி செய்வதற்காக தந்தை கட்டுப்பட்டிருக்கின்றார். ரூபத்தை கொஞ்சம் மாற்றிக் கொண்டு விடுகிறீர்கள். தந்தை மீது உரிமை கொண்டாடுகிறீர்கள் ஆனால் ரூபத்தை மாற்றிக் கொண்டு விடுகிறீர்கள். பாபா! நீங்கள் உதவி செய்வர்கள் அல்லவா? நீங்கள் கட்டுப்பட்டிருக்கிறீர்கள் அல்லவா? இப்படி இல்லையா? இல்லையா? என்ற வார்த்தையை உபயோகிக்கிறீர்கள். நிச்சய புத்தியுடையவர்களுக்கு வெற்றி என்பது உறுதியாகி விட்டிருக்கிறது. ஏனென்றால், பாப்தாதா ஒவ்வொரு குழந்தைக்கும் பிறந்தவுடனேயே, வெற்றித் திலகத்தை நெற்றியில் இட்டு விட்டார். உறுதி என்பதை உங்களுடைய முயற்சியில் சாவியாக பயன்படுத்துங்கள் பிளான் நன்றாகச் செய்கிறீர்கள். பாப்தாதா எப்போது உங்கள் ஆன்மீக சம்பாஷணையைக் கேட்கின்றாரோ அதில் தைரியத்தைப் பார்க்கின்றார் பிளானும் மிகவும் சக்திசாலியாக இருப்பதையும் பார்க்கின்றார், ஆனால் பிளானை எப்போது பிராக்டிக்கலில் (நடைமுறைப்படுத்துவது) கொண்டு வருகிறீர்களோ, அப்போது தெளிந்த புத்தியுடன் செய்வதில்லை. அதாவது எண்ணத்தில் பலவீனம் கலப்படமாகி விடுகிறது. செய்து கொண்டுதான் இருக்கிறோம், ஆகத்தான் வேண்டும், இப்படி சுய நம்பிக்கையில் உறுதி இல்லை. அதாவது வீண் எண்ணங்களை கலப்படம் செய்து விடுகிறீர்கள்.

இந்த நேரத்தின் கணக்குப்படி, தெளிந்த புத்தியுடையவராகி, எண்ணத்தை நடைமுறையில் (செயலில்) கொண்டு வாருங்கள். கொஞ்சம் கூட பலவீனமான எண்ணம் எழுச்சியடையாமல் இருக்க வேண்டும். நினைவிருக்கட்டும். இப்போது இந்த ஒரு முறை தான் செய்யவில்லை, அநேக முறை செய்து முடித்திருப்பதை, மீண்டும் திரும்பவும் செய்கிறோம். நினைத்துப் பாருங்கள். எத்தனை முறை கல்ப, கல்பமாக வெற்றியடைந்திருக்கிறோம் என்று. அநேக முறை வெற்றியடைந்தவர்கள். வெற்றி என்பது அநேக கல்பத்தின் பிறப்புரிமை (ஜன்மசித்த அதிகாரம்) ஆகியிருக்கிறது. இந்த அதிகாரத்தின் (உரிமை) மூலமாக நிச்சய புத்தியுடையவராகி, உறுதி என்னும் சாவியை உபயோகியுங்கள். வெற்றி பிராமண ஆத்மாக்களாகிய உங்களை விட்டு வேறு எங்கே செல்லும்! பிராமணர்களாகிய உங்களுடைய வெற்றி உங்களுடைய பிறப்புரிமை. கழுத்து மாலை. நஷா இருக்கிறதல்லவா?

நஷா இருக்கிறதா? ஆகுமா, ஆகாதா என்பதல்ல. நிச்சயிக்கப்பட்டு விட்டது. இவ்வளவு நிச்சயபுத்தியுடன் ஒவ்வொரு காரியத்தையும் செய்யுங்கள். வெற்றி நிச்சயிக்கப்பட்டு விட்டது. இப்படிப்பட்ட நிச்சயபுத்தி ஆத்மாக்களாகத்தான் இருக்கின்றீர்கள். இருக்கின்றார் களா, இல்லையா? என்று பாப்தாதா சொல்லவில்லை. இருக்கத்தான் செய்கின்றார்கள். இந்த நஷா இருக்கட்டும். இருந்தது. இருக்கிறது இனி மேலும் இருக்கும். இப்படிப்பட்ட ஹோலி தானே! ஹோலியஸ்டாக இருக்கிறீர்கள் (மகான் தூய்மை) ஆகவே பாப்தாதாவின் ஞானமாகிய வர்ணப்பொடி பூசி ஹோலி கொண்டாடி விட்டீர்கள். இப்போது இனி என்ன விளையாடப் போகிறீர்கள்?

பாப்தாதா பார்த்தார். எல்லோருக்கும் மெஜாரிட்டி ஆர்வம், உற்சாகம் மிக நன்றாக வந்திருக்கிறது. இப்படிச் செய்வோம், இதைச் செய்து விடுவோம், இப்படி நடந்து விடும். பாப்தாதாவுக்கும் இதைப் பார்த்து குஷியாக இருக்கிறது ஆனால் இந்த ஆர்வம், உற்சாகம் சதா எழுச்சியுடன் இருக்கட்டும். சில சமயம் அமிழ்ந்து போய்விடுகிறது. சில சமயம் எழுச்சியுடன் இருக்கிறது. அமிழ்ந்து போய் விடக்கூடாது. சதா எழுச்சியுடனேயே இருக்க வேண்டும் ஏனெனில், உங்களுடைய உற்சவம் (பண்டிகை) முழு சங்கமயுகத்திலும் உற்சவம் தான். உலகிலுள்ளவர்கள் சில சமயத்தில் தான் உற்சவம் கொண்டாடுகிறார்கள். ஏனெனில் அவர்கள் அதிகமாக எப்போதும் டென்ஷனில் (மன இறுக்கம்) இருந்து கொண்டிருக்கிறார்கள். இதன் காரணமாக உற்சாகமாக இருப்பதற்காக, ஆடலாம், பாடலாம், ருசியாக உணவருந்தலாம், மாற்றம் உண்டாகும் என நினைக்கிறார்கள் ஆனால் உங்களிடம் ஒவ்வொரு செகண்டிலும் ஆடலும் இருக்கிறது பாடலும் இருக்கிறது. நீங்கள் சதா மனதில் குஷியில் ஆடிக் கொண்டு தான் இருக்கிறீர்களா? அல்லது இல்லையா? ஆடுகிறீர்கள். குஷியில் ஆட வருமா? ஆட வரும். ஆடத் தெரிந்தவர்கள் கை உயர்த்துங்கள். ஆட வருமா? நல்லது. ஆடத் தெரியுமானால், வாழ்த்துக்கள். அப்படியானால் சதா ஆடிக் கொண்டேயிருக்கிறீர்களா (மனதில்) அல்லது எப்போதாவதா?

பாப்தாதா இந்த ஆண்டுக்கான ஹோம் ஒர்க் கொடுத்திருந்தார். இரண்டு வார்த்தைகளை ஒருபோதும் நினைவு செய்யக்கூடாது என்று. ஒன்று

சம்டைம் இன்னொன்று சம்திங். அது என்ன? இப்போதும் கூட சம்டைம் இருக்கிறதா? சம்டைம், சம்திங் (கொஞ்ச நேரம், கொஞ்சம்) இருக்கக்கூடாது. இந்த ஆட்டத்தில் (மன மகிழ்ச்சியில் கூத்தாடுவது) களைப்படைதல் என்ற விஷயமே இல்லை. ஓய்வெடுத்துக் கொண்டிருந்தாலும் சரி, வேலை செய்து கொண்டிருந்தாலும் சரி, நடந்து கொண்டிருந்தாலும் சரி, உட்கார்ந்து கொண்டிருந்தாலும் சரி, குஷியாகிய டான்ஸ் செய்ய முடியும். மேலும் பாபாவிடமிருந்து பெற்ற பிராப்திகளைப் பற்றிய பாடலையும் பாடிக் கொண்டே இருக்க முடியும். பாட வருமல்லவா? இந்தப் பாடல் எல்லோருக்கும் வரும். வாய் மூலமாகச் சிலருக்குத்தான் பாட வரும். சிலருக்குப் பாட வராது ஆனால் பாபாவின் பிராப்திகள், பாபாவின் குணங்கள் பற்றி எல்லோருக்கும் பாடத் தெரியும் பாட வரும். ஆகவே ஒவ்வொரு நாளும் உற்சவம் தான். பாடிக் கொண்டேயிருங்கள். அனுபவியுங்கள். சுமையை ஏன் சுமக்கிறீர்கள்? அனுபவியுங்கள், ஆடுங்கள், பாடுங்கள், போதும். நல்லது.

ஹோலி கொண்டாடி விட்டீர்கள் அல்லவா? இனி வர்ணம் பூசுகிற ஹோலியும் கொண்டாடலாம். நல்லது. உங்களை பக்தர்கள் காப்பி அடிப்பார்கள் அல்லவா? நீங்கள் பகவானுடன் ஹோலி விளையாடுகிறீர்கள் என்றால் பக்தர்கள் தேவதைகளாகிய உங்களில் யாராவது சிலரோடு விளையாடிக் கொண்டேயிருக்கிறார்கள். நல்லது. இன்று அநேக குழந்தைகளிடமிருந்து இமெயில் வந்திருக்கிறது. கடிதங்கள் வந்திருக்கின்றன. தொலைபேசி மூலமாகவும் பேசியிருக்கிறார்கள். இப்படி என்னென்ன சாதனங்கள் இருக்கின்றனவோ, அதன் மூலமாக ஹோலி பண்டிகை வாழ்த்துக்களை அனுப்பியிருக்கிறார்கள் ஆனால் எப்போது சங்கல்பம் செய்கிறார்களோ, அப்போதே பாப்தாதாவிடம் வந்து சேர்ந்து விடுகிறது. அதாவது நாலா திசைகளிலும் உள்ள குழந்தைகள் விசேஷமாக நினைவு செய்கிறார்கள். செய்து கொண்டுமிருந்தார்கள். பாப்தாதாவும் ஒவ்வொரு குழந்தைக்கும் ஆயிரமாயிரம் மடங்கு ஆசிகளையும், ஆயிரமாயிரம் மடங்கு உள்ளன்பையும் இதற்குப் பதிலாக ஒவ்வொரு குழந்தையின் பெயர் மற்றும் விசேஷத்துடன் வழங்குகின்றார். எப்போது செய்தியாளர் செல்கின்றாரோ, அப்போது ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் சார்பாக அன்பு நினைவுகளை அளிக்கின்றார்கள்.

இவ்வாறு கொடுத்தனுப்பாதவர்களுடைய நினைவும் கூட பாப்தாதாவை வந்தடைந்து விட்டது. இது தான் பரமாத்ம அன்பினுடைய விசேஷம். இந்த ஒவ்வொரு நாளும் எவ்வளவு அன்பானதாக இருக்கிறது. கிராமங்களில் இருப்பவர்களானாலும் சரி, பெரிய நகரங்களில் இருப்பவர்களானாலும் சரி, கிராமங்களில் நினைவுகளை அனுப்பக் கூடிய சாதனங்கள் இல்லாதிருக்கும் நிலைமையிலும் கூட, தந்தையிடம் குழந்தைகளின் நினைவுகள் வந்து சேர்ந்து விடுகின்றன. ஏனென்றால், தந்தையிடம் ஆன்மீக சாதனங்கள் நிறைய இருக்கின்றதல்லவா!

நல்லது. எல்லோரும் தாதியைப் பற்றிய நினைவையும் மிக அதிகம் அளித்திருந்தார்கள். எல்லோருக்கும் ஒரே சங்கல்பம் தான் இருக்கிறது. தாதி வெகு சீக்கிரமாகவே மதுபன் வந்து சேர்ந்து விட வேண்டும். பாப்தாதாவும் இதைத்தான் விரும்புகின்றார். தாதி பேசுவதில்லை, ஆனால் உள்ளத்தில் சங்கல்பம் மூலமாக மதுபன் நினைவு பிராமணர்களுடைய நினைவு, தன்னுடைய பேகத் சேவையின் பொறுப்பு ஆகிய நினைவுகள் இருக்கின்றன. நீங்கள் எல்லோருமே மிக மிக அன்போடு நினைவு செய்து கொண்டிருக்கிறீர்கள். பாப்தாதா பார்க்கின்றார்: பாப்தாதாவிடம் எல்லோருக்கும் அன்பு இருக்கிறது. என்றாலும் தாதியிடமும் கூட அன்பு குறையவில்லை. அன்பு நினைவுகள் தாதியிடம் சென்றடைகிறது. அப்படிப்பட்ட சக்திசாலியான, எப்படி பவர்புல் மருந்து கொடுக்கிறார்கள் அல்லவா, ஆனால் இப்போது மருந்திலும் கூட பவர் வித்தியாசப்படுகிறதல்லவா! ஆகவே நீங்கள் எல்லோரும் சிநேகம் என்ற மருந்தை அனுப்பியிருக்கிறீர்கள் ஆனால் இப்போது எல்லோரும் சேர்ந்து சக்திசாலியான நலம் பெறுவீராக! (தந்துருஸ்த் பவ) என்று திட சங்கல்பத்துடன் கூடிய கிரணங்களை அனுப்புவீர்களேயானால், அந்தக் கிரணங்கள் தன்னுடைய வேலையை ஆரம்பித்து விடும். கொஞ்சம் சமயம் ஆகலாம் ஆனால் பிராமணர்களாகிய உங்களுடைய மனப் பூர்வமான சகயோக கிரணங்கள் தன்னுடைய வேலையைக் காண்பிக்கும். அங்குள்ள அறையின் வாயுமண்டலமும் கூட உள்ளத்தின் சக்திசாலி வைப்ரேஷன் (அதிர்வலைகள்) என்ன நடந்தது? என்ன நடந்து கொண்டிருக்கிறது என்பதாக இருக்காது. நடந்து கொண்டிருக்கிறது. நடக்கத்தான் வேண்டும். இப்படிப்பட்ட ஆர்வம், உற்சாகமானது எல்லா

பிராமணர்களும், சேவாதாரிகளாயினும் சரி, எல்லோருடைய வாயுமண்டலம் அப்படி சக்திசாலி நிலையுடையதாகி விடட்டும். உங்கள் எல்லோருடைய உள்ளன்பின் அதிர்வலைகள் பாப்தாதாவிடம் வந்து சேர்கிறது. எந்த ஒரு சேவாதாரியானாலும், சேவைக்கு நிமித்தமாகியிருப்பவர்கள் எல்லோரிடமும் சதா இதே அதிர்வலைகள் இருந்து கொண்டே இருக்கட்டும். நிச்சயபுத்தியுடையவர்களாகி சக்திசாலி கிரணங்களின் ஆன்மீக சக்தியை சதா கொடுத்துக் கொண்டே இருங்கள். சேவை மனதார செய்து கொண்டிருக்கிறீர்கள். பாவனையும் மிக நன்றாக இருக்கிறது. இப்போது சக்திசாலி சங்கல்பம் என்ற மருந்து கொடுங்கள். எந்த ஒரு வீணான எண்ணமும் மனதில் கொண்டு வராதீர்கள். என்ன நடக்கும் என்பதல்ல. நன்றாக ஆகி விடும். நல்லது.

சேவையின் வாய்ப்பு குஜராத் மண்டலம் (6500-பேர் வந்திருக்கிறார்கள்): குஜராத் இருக்கிறதல்லவா? குஜராத்தின் 6500-பேர் வந்து விட்டனர். நல்லது. வரட்டும். குஜராத்தை பாப்தாதா பார்த்தார். மெஜாரிட்டி, ஒன்று கீதாபாடசாலைகள் நிறைய இருக்கின்றன. கீதா பாடசாலை நடத்துபவர்களும் நிறைய பேர் இருக்கின்றனர். இத்தோடு கூடசேவாதாரிகளும் அதிகம் இருக்கிறார்கள். சேவையும் அதிகம் இருக்கிறது. சேவை செய்யக்கூடிய டீச்சர்கள் குரூப்பும் அதிகம் இருக்கின்றனர். இனி குஜராத் என்ன செய்யப் போகிறீர்கள்? சேவாதாரிகள் நிறைய இருக்கிறார்கள். சேவையும் நிறைய இருக்கிறது. இனி புது சேவை என்ன செய்வீர்கள்? இதுவரை வேறு யாரும் செய்யாத சேவை செய்வதற்கான பிளான் ஏதாவது செய்திருக்கிறீர்களா? எதை வேறு யாரும் செய்யவில்லையோ, அதை குஜராத் செய்து காண்பிக்கட்டும். பிளான் செய்திருக்கிறீர்களா? கொஞ்சம் யோசித்துக் கொண்டிருக்கிறார்கள். எல்லோரும் சேர்ந்து செய்வீர்கள். பாப்தாதா இந்த மாதிரியாக எல்லா ஜோனுக்கும் கூறுகின்றார். அதாவது நல்ல பேச்சாளரை தயார் செய்யுங்கள். நீங்கள் பேசுகிறீர்கள். அவர்கள் அல்ல ஆனால் உங்கள் சார்பாகப் பேசக்கூடிய அப்படிப்பட்ட பேச்சாளரை தயார் செய்யுங்கள். இவருடைய குரல் எல்லோரையும் சென்றடைய வேண்டும். குரல் ஓங்கி ஒலிக்க வேண்டும். இதைக்கேட்டு, அநேகருக்கு நன்மை உண்டாக வேண்டும். இப்படிப்பட்டவர்கள் இருக்கிறார்களா? ஒவ்வொரு ஜோனிலும் இப்படிப்பட்டவர் இருக்கிறார்கள், ஆனால் மேடையில் வரவில்லை. பாப்தாதா என்ன விரும்புகின்றார்என்றால்

பிராமணர்கள் முதுகெலும்பு போல இருந்து கொண்டு மற்ற ஆத்மாக்களை பேசுவதற்கு முன்னிறுத்தி நிமித்தமாக்க வேண்டும். இது அநேகருடைய உள்ளத்தைத் தொட வேண்டும். ஏனெனில் நேரத்தின் கணக்குப்படி ஒவ்வொரு ஜோனும் யாரெல்லாம் விதிப்படி சேவை செய்தார்களோ, அதெல்லாம் நன்றாகவே செய்தார்கள். பாப்தாதா சேவைக்கு நிமித்தமாகியிருக்கின்ற குழந்தைகளின் ஆர்வம், உற்சாகத்தைப் பார்த்து குஷியடைகின்றார் ஆனால் இன்னும் ஏதாவது புதுமை இருக்கட்டும். இதில் யாராவது தானே நிமித்தமாகி எந்த ஒரு சேவை செய்ய முடியுமோ, அதற்கான பிளான் கொடுக்கட்டும். ஏனெனில் விங்-சேவை ஆரம்பித்து வெகு நாட்கள் ஆகி விட்டது. ஒவ்வொரு விங் (துறை)சார்பாக யாராவது பேச்சாளர் தயாராகட்டும். நீங்கள் தலைப்பைக் கொடுத்து, அது பற்றி அவர்கள் பேசுவது அல்ல. இதை நான் செய்ய வேண்டும் என்று தானே ஆர்வத்துடன் அவர் முன் வர வேண்டும். இப்படி ஏதாவது பிளான் செய்யுங்கள். இதற்கு ஆதாரம் சுயம் நிமித்தமாகக்கூடியவர், ஒரு வினாடியில் வீணானதிலிருந்து விலகி நல்லவற்றின் பிரபாவத்தை வாயுமண்டத்தில் பரப்பட்டும். வீணானது இப்போதும் இருக்கிறது. இதன் காரணமாக மனம் மூலமாகச் செய்யும் சேவைக்கான பிரதிபலன் நடைமுறையில் குறைவாக இருக்கிறது. எப்படி ஆரம்பத்தில் ஸ்தாபனை சமயத்தில் பார்த்தீர்கள் அல்லவா? பிரம்மாபாபாவின் மன வைப்ரேஷன் அநேகருக்கு வீட்டிலிருந்தபோதே சாட்சாத்காரம் ஆனது. குரலும் கேட்டது. யாரோ வந்திருக்கிறார், செல்லுங்கள் என்று. இப்படிப்பட்ட நல்ல எண்ணங்கள் வாயுமண்டலத்தில் பரவியிருந்தால் அருகாமையில் கொண்டு வர முடியும். எந்த ஒரு விஸ்தாரத்திலும் செல்ல வேண்டாம். சுருக்கமாக. ஏதாவது காரிய விவகாரம் பற்றி பேச வேண்டுமென்றால், செய்யத்தான் வேண்டும் ஆனால் அதை முடிந்த வரையிலும் குறைத்துக் கொண்டு, சக்திசாலியான மனசா சேவையை அதிகரியுங்கள். எப்படி வேட்டைக்காரன், கெட்டிகாரனாக இருந்தால் அவன் அம்பு எய்ததுமே, அம்புதைத்த இறையானது பட்ட அம்போடு காலில் வந்து விழுந்து விடும். இங்கு மனசா சேவை அவ்வளவு சக்திசாலியாக ஆகட்டும். ஆத்மாக்களுக்கு பிராப்திகளின் அனுபவமாகட்டும். இருக்க முடியாத நிலை உண்டாக்கட்டும். மனசா சக்திசாலி மூலமாக, மனசா சேவைக்கு ஸித்தி (வெற்றி) ஆகப் போகிறது. ஆகவே குஜராத் என்ன செய்யப்போகிறது? மனசா சேவையில் நம்பர்-1 ஆகிக்காட்டுங்கள். இது

எல்லோருக்கும் தான் ஆனால் இப்போது குஜராத் சேவையில் நிமித்தமாகியிருப்பதால், குஜராத் சேவாதாரிகளிடம் கூறுகின்றேன். எனினும் இப்போது மனம் (சுயம்) சக்திசாலி ஆவதன் மூலமாக மனசா சேவையின் ரிசல்ட் எதிரில் தென்படும். எப்படி சொற்பொழிவு மூலமாக சேவைக்கு இதற்கு முன்பு வரை ரிசல்ட் இல்லாமல் இருந்தது ஆனால் இப்போது கிடைக்கிறது. நல்ல முயற்சி செய்திருக்கிறார்கள். பாப்தாதா முயற்சிக்கும், நிமித்த முயற்சிக்கும் வாழ்த்துக்களையும் அளிக்கின்றார் ஆனால் நேரம் வேகமாக நகர்ந்து கொண்டிருக்கிறது. இன்னும் இப்போது அதிக வேகமாகச் சென்று கொண்டிருக்கிறது. நல்லது. வாழ்த்துக்கள். குஜராத்துக்கு ஒரு பெயர் இருக்கின்றது. மிக அருகாமையில் இருப்பது, தேசத்தின் இருப்பிடப் பிரமாணம் அருகாமையில் இருப்பதைப்போலவே, தந்தையின் உள்ளத்திலும் அருகாமையில் இருக்கிறார்கள். நல்லவர்களாக இருக்கிறார்கள். ஆரம்பத்திலிருந்து பார்க்கும்போது, இப்போது புதிதாக வந்திருப்பவர்களும் கூட மிக நல்லவர்களாக இருக்கின்றார்கள். பாண்டவர்களாயினும், சக்திகளாயினும் நல்லவர்கள் வந்து சேர்ந்திருக்கின்றார்கள். இதுபோல நல்ல பேச்சாளரையும் தயார் செய்யுங்கள். நீங்கள் சக்தி கொடுங்கள். அவர்கள் பேசட்டும். நல்லது. ரெம்ப நல்லது. நூறு மடங்கு வாழ்த்துக்கள்.

**98-தேசங்களிலிருந்து 1200-விதேஷி (வெளிநாடு) சகோதர, சகோதரிகள் வந்திருக்கின்றனர்:** நல்லது. வெளிநாட்டினர் எழுந்திருங்கள். நல்லது. நீங்களும் கை அசையுங்கள். எப்போது வெளிநாட்டுக் குழந்தைகள் சேர்ந்து அமர்ந்து கொண்டு தங்களுக்குள் சுய உன்னதி மற்றும் சேவையின் அபிவிருத்தி பற்றி பிளான் செய்கிறார்களோ அது பாப்தாதாவுக்கு பிடித்தமானதாக இருக்கிறது. ஏனெனில் வெளி நாட்டில் தூரம் தூரமாக விலகியிருக்கிறார்கள் ஆனால் இங்கேயோ ஒன்று நேரமும் கிடைக்கிறது. இன்னொன்று ஒன்றாக இணைந்திருப்பதும் எளிதாகிறது. இதன் காரணமாக சுய உன்னதி மற்றும் சேவைக்கான பிளான் நன்றாகத் தயார் செய்கிறார்கள். பாப்தாதாவிடம் இந்த ரிப்போர்ட் (திட்ட அறிக்கை) வருகிறது. சமாச்சாரம் கிடைத்துக் கொண்டேயிருக்கிறது. தனித்தனி குழுவாக அமர்கிறார்கள். குரூப் சிறிதாக இருக்கும் போது நல்ல கவனம் கொடுக்க முடிகிறது. நெருக்கத்தில் வருவதற்கான வாய்ப்பும் கிடைக்கிறது. இப்படி குரூப்பாக

அமர்ந்து பேசி என்ன சேவை செய்தார்களோ அதை நன்றாகவே செய்திருக்கிறார்கள். இப்போது டபுள் விதேஷிகளிடம் முயற்சியின் வேகம் சூடு பிடித்திருக்கிறது ஆனால் இன்னமும் கூட கொஞ்சம் குறை இருக்கிறது. முயற்சியின் பக்கம் கவனம் நன்றாக இருக்கிறது. கவனமும் நன்றாகவே கொடுக்கிறார்கள். என்றாலும் இதனைக் கொஞ்சம் தொடர்ந்து செய்யும்படியான ஒரு பிளான் செய்தால் இன்னும் நன்றாக இருக்கும். இதன் மூலமாக இங்கிருந்து அங்கு சென்ற பிறகும் கூட புத்துணர்வானது அதிகரித்துக் கொண்டேயிருக்க வேண்டும். சேவைக்கான சாதனமும் கூட நல்ல முறையில் தயாரிக்கிறார்கள். வி.ஐ.பி. மற்றும் வெவ்வேறு விதமான சேவை எதைச் செய்கின்றார்களோ, அதுவும் கூட நன்றாகவே செய்திருக்கிறார்கள். மேலும் அடுத்த ஆண்டு வரும்போது ஏனெனில் இப்போது சீசன் முடியப் போகிறதல்லவா? ஆதலால் அடுத்த முறை வரும்போது, ரிசல்ட் கொடுக்க வேண்டும். எல்லோரும் எவ்வளவு மனசா சேவை செய்தீர்கள். எவ்வளவு வாணி மூலமாக சேவை செய்தீர்கள். சம்மந்தம் தொடர்பு மூலமாகச் செய்யும் சேவை கர்மனா சேவை ஆகி விட்டதல்லவா? முகம் மற்றும் நடத்தை மூலமாகச் செய்யும்போது வீணான பேச்சுக்கள் வருவதற்கான வாய்ப்பு அல்லது இடைவெளி இல்லாமல் போய்விடுகிறது. ஃபுல் பிஸி எப்போதும் சுறுசுறுப்பு சுறுசுறுப்பாகவும் இருக்க வேண்டும். மாயை வருவதற்கான இடைவெளியும் இருக்கக் கூடாது. சங்கல்பத்திலும் சரி, ஓரிருவருடன் சேர்ந்து சேவையில் சகயோகியாக இருக்கும் போதும் சரி ரிசல்ட்டைப் பார்க்க முடியும். இப்படி சோதிக்க முடியும்! இவ்வளவு தீவிரமாக கவனத்துடன் இருக்க முடியுமா? அல்லது இன்னும் அவகாசம் வேண்டுமா? ஒரு வருடம் இருக்கிறது. பாப்தாதா இந்தியாவிலும் கூட இதைத்தான் விரும்புகின்றார். வெளிநாட்டிலும் கூட இப்படிப் பார்க்க விரும்புகின்றார். மாயை வர முடியாது என்ற குரல் உரக்கக் கேட்க வேண்டும். எனினும் இதற்காக அதிக முயற்சி செய்ய வேண்டிய அவசியம் இருக்கக் கூடாது. பார்க்கலாம், எந்த ஜோன் செய்கிறது என்று பாப்தாதா ஏற்கனவே கூறியிருக்கின்றார், பாப்தாதா டைமண்டு கப் கொடுக்க விரும்புகின்றார் ஆனால் பிரச்சினையே இல்லை என்று நிரூபணம் ஆகி விட வேண்டும். என்ன பிரச்சினை உண்டாகிறதோ அதன் பெயர், அடையாளமே இருக்கக்கூடாது. பாபா கூறினார் என்றால் நடந்து முடிந்து விட்டது என்று பொருள். பாருங்கள் ஆகத்தானே

வேண்டும். நீங்கள் ஆகவில்லையென்றால், வேறு யார் ஆக முடியும்? ஆகியே தீரும். அவர்களை நெருக்கமாக கொண்டு வாருங்கள். போதும். சரி தானே! டபுள் ஃபாரினர்ஸ்? டைமண்டு கப் வாங்கக் கூடியவர்கள். பாப்தாதா சதா வழங்குவதற்குத் தயாராக இருக்கின்றார் ஆனால் ஒருவருக்கொருவர் துணையாகவும், இருக்க வேண்டும். நான் சரியாக இருக்கிறேன் என்று சொன்னால் மட்டும் போதாது. துணையில் இருப்பவரும் சரியாக இருக்க வேண்டும். பாரதம் மற்றும் வெளிநாடு இரண்டும் சேர்ந்து டைமண்டு கப் வாங்குவார்கள். உங்களுடைய வாயில் குலாப்ஜாமுன் ஆகியே தீரும். நேரத்தைக் கொஞ்சம் அருகாமையில் கொண்டு வாருங்கள். ரிசல்ட் நன்றாக இருக்கிறது. ரிசல்ட் முன்னை விட நிறைய வித்தியாசம் இருக்கிறது. இதற்கு வாழ்த்துக்கள் ஆனால் இப்போது முழு அளவு இல்லை. கொஞ்சம் கொஞ்சம் உணர்வு இருக்கிறது. இனி ஃபுல் ஆகி விடும். பாப்தாதா வதனத்திலிருந்து மிகச் சிறந்த பரிஷ்தா நிலைக்கான அன்பளிப்பு அளிப்பார். ஒவ்வொருவரும் நான் ஒளிமயமான பரிஷ்தா என்று அனுபவம் செய்வார்கள். ஆகத்தான் வேண்டும். நன்றாக இருக்கிறது. உட்காருங்கள். களைப்படைந்து விடுவீர்கள். நன்று.

பாப்தாதா கூறுகின்றார்: தற்கால வாழ்க்கைச் சூழ்நிலையில் மருத்துவர்கள் கூறுகின்றார்கள், மருந்தை விட்டுவிடுங்கள், உடற்பயிற்சி செய்யுங்கள் என்று ஆகவே பாப்தாதாவும் கூறுகின்றார். யுத்தம் செய்வதை விட்டுவிடுங்கள். கஷ்டப்பட்டு முயற்சி செய்வதையும் விட்டுவிடுங்கள். முழு நாளும் 5-5 நிமிடங்கள் மனப்பயிற்சி செய்யுங்கள் என்று. ஒரு நிமிடத்தில் நிராகாரி, ஒரு நிமிடத்தில் ஆகாரி, ஒரு நிமிடத்தில் எல்லா விதத்திலும் சேவாதாரி. இந்த மனப்பயிற்சி 5 நிமிடங்கள் முழு நாளும் வெவ்வேறு நேரத்தில் செய்யுங்கள். இதன் மூலம் ஆரோக்கியமாக இருப்பீர்கள். உழைப்பிலிருந்து தப்பித்து விடுவீர்கள். செய்ய முடியுமல்லவா? செய்ய முடியுமா? மதுபன்காரர்கள், மதுபன் அஸ்திவாரம். மதுபன் வைப்ரேஷன் நாலாபக்கமும் தானாகவே சென்றடைந்து விடுகிறது, உதாரணமாக ஒரு நாள் மதுபனில் ஏதாவதொரு விஷயம் நடந்தால் அடுத்த நாளே பாரதம் முழுவதிலும் ஒவ்வொரு இடத்தையும் சென்றடைந்து விடுகிறது. இவ்வளவு மதுபனில் ஏதோ ஒரு சாதனம் வைக்கப்பட்டிருக்கிறது. எந்த விஷயத்தையும் மறைக்க முடியாது.

நல்லது நடக்கிறது என்றால், புருஷாரத்தமும் கூட, ஆகவே மதுபன் என்ன செய்கிறதோ, அந்த வைப்ரேஷன் தானாகவே மற்றும் எளிதாகவும் பரவி விடும். முதலில் மதுபன்வாசிகள் வீணான எண்ணங்களை நிறுத்தட்டும். செய்ய முடியுமா? செய்ய முடியுமா? முன்னே வந்து அமர்ந்திருக்கிறார்கள் அல்லவா? மதுபன்வாசிகள் கை உயர்த்துங்கள். ஆதலால் மதுபன் நிவாசிகள் வேஸ்ட் இல்லாமல் போய்விடும்படியாக, உங்களுக்குள் ஏதாவது ஒரு பிளான் (திட்டம்) போடுங்கள். இதற்காக சங்கல்பமே செய்யக் கூடாது என்று பாப்தாதா கூறவில்லை. வேஸ்ட் சங்கல்பம் இல்லவே இல்லை. வீண் சங்கல்பத்தால் பலன் ஒன்றுமில்லை பிரச்சனை தான். செய்ய முடியுமா? மதுபன் நிவாசிகள் தங்களுக்குள் மீட்டிங் செய்து இப்படிச் செய்யலாம் என்று நினைப்பவர்கள் கை உயர்த்துங்கள். செய்வீர்கள். செய்ய வேண்டுமென்றால், உயரமாக கை உயர்த்துங்கள். இருகைகளையும் உயர்த்துங்கள். வாழ்த்துக்கள். பாப்தாதா உள்ளத்திலிருந்து வாழ்த்துக்களை அளிக்கின்றார். மதுபனில் தைரியம் இருக்கிறது. என்ன வேண்டுமோ அதைச்செய்ய முடியும். செய்விக்கவும் முடியும் மதுபனில் சகோதரிகளும் இருக்கிறார்கள், சகோதரிகள் கை உயர்த்துங்கள். பெரிதாக கை உயர்த்துங்கள். மீட்டிங் செய்ய வேண்டும். தாதிகள் மீட்டிங் செய்விக்க வேண்டும். பாருங்கள். எல்லோரும் கை உயர்த்துகிறார்கள். இனி கைக்கு மரியாதை வைத்திருக்க வேண்டும். நன்று.

இப்போது ஒரு வினாடியில் பிரம்மாபாபா கடைசியில் வரதானம் கொடுத்தாரல்லவா, நிராகாரி, நிர்விகாரி, நிரஹங்காரி -இது பிரம்மாபாபாவின் கடைசி வரதானம். இது குழந்தைகளுக்கு அளித்த மிகப் பெரிய அன்பளிப்பாகும். ஒரு வினாடியில் பிரம்மாபாபாவின் அன்பளிப்பை மனதில் ஏற்றுக் கொள்ள முடியுமா? திட சங்கல்பம் செய்ய முடியும் தந்தையின் அன்பளிப்பை சதா நடைமுறை வாழ்க்கையில் கொண்டு வர வேண்டுமா? ஏனெனில் ஆதி தேவின் அன்பளிப்பு குறைந்ததல்ல பிரம்மா கிரேட், கிரேட் கிராண்ட் ஃபாதர் (முப்பாட்டனார்). அவருடைய அன்பளிப்பு குறைந்ததல்ல. ஆதலால் தங்கள், தங்களுடைய புருஷாரத்த பிரமாணமாக சங்கல்பம் செய்யுங்கள். இன்றைய ஹோலி தினத்தில் ஹோலி என்றால் எது நடந்ததோ, அது முடிந்து விட்டது. நடந்து விட்டது ஆனால்

இப்போதிருந்து அன்பளிப்பை அடிக்கடி எமர்ஜ் செய்து பிரம்மாபாபாவின் சேவைக்கு கைமாறு செய்வீர்களா? பாருங்கள். பிரம்மாபாபா கடைசி நாளில் கடைசி நேரம் வரை சேவை செய்தார். இது பிரம்மாபாபா குழந்தைகள் மீதும், சேவையின் மீதும் வைத்திருந்த அன்பின் அடையாளமாகும். ஆதலால் பிரம்மாபாபாவுக்கு கைமாறு செய்ய வேண்டும். அதாவது அடிக்கடி வாழ்க்கையில் கொடுக்கப்பட்ட அன்பளிப்பை ரிவைஸ் செய்து (பயிற்சி) செய்து) நடைமுறையில் கொண்டு வர வேண்டும். ஆகவே, எல்லோரும் உங்களுடைய உள்ளத்தில் பிரம்மாபாபாவின் அன்புக்கு கைமாறாக (ரிடர்ன்) சங்கல்பத்தை உறுதி செய்யுங்கள். இது தான் பிரம்மாவின் சிநேகத்தின் அன்பளிப்பிற்கு கைமாறு. நன்று.

நாலா பக்கமுள்ள லக்கியஸ்ட், ஹோலியஸ்ட் குழந்தைகளுக்கு சதாதிட சங்கல்பத்தின் சாவியை நடைமுறையில் கொண்டு வரக் கூடிய தைரியசாலி குழந்தைகளுக்கு சதா தங்களுடைய மனதை விதவிதமான சேவையில் சுறுசுறுப்பாக வைத்திருக்கின்ற ஒவ்வொரு அடியிலும் நூறு மடங்கு வருமானத்தை சேமிக்கக் கூடிய குழந்தைகளுக்கு சதா ஒவ்வொருநாளும் உற்சாகத்தில் இருக்கக்கூடிய ஒவ்வொரு நாளையும் உற்சவமாக நினைத்து கொண்டாடக்கூடிய சதா மகிழ்ச்சியில் திளைத்திருக்கும் குழந்தைகளுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்தே.

<u>மோகினி சகோதரி, ஈஷூ சகோதரிகளுடன்:</u> இப்போது அங்கேயும் கூட (ஹாஸ்பிடலிலும் கூட) புரோகிராம் செய்ய வேண்டும். யார் அறையில் அமர்ந்திருப்பவர்களானாலும் அல்லது வெளியில் அமர்ந்திருப்பவர்களானாலும் சரி, எதுவும் பேசக் கூடாது. இப்படிப்பட்ட வாயுமண்டலம் உருவாக்க வேண்டும் எப்படி மக்கள் சாதனம் மூலமாக வாயுமண்டலத்தை சரி செய்கிறார்கள் அல்லவா? அதுபோல அங்கு முற்றிலும் சக்திசாலி வாயுமண்டலம் இருக்க வேண்டும் யார் வந்தாலும் ஒரு செகண்டில் அசரீரி அனுபவம் செய்ய வேண்டும். இப்படி இந்த மருந்து சக்திசாலியானது. கொஞ்ச நாள் உடல் நிலை சரியாக இருக்கிறது, பிறகு ஏதாவது கீழே மேலே ஆகி விடுகிறது. இப்போதோ விளையாட்டு நடந்து கொண்டிருக்கிறதல்லவா? இப்போது இந்த வாயுமண்டலம், மருந்து மற்றும் ஆசிகள் ஆகிய இரண்டும்

கூடவே இருக்க வேண்டும். நாலா பக்கமும் சென்டரிலும் கூட யோகம் நடந்து கொண்டிருக்கிறது. எல்லா பக்கமும் விசேஷ யோகத்தில் அமர வேண்டும். மேலும் சுறுசுறுப்பாகவும் இருக்க வேண்டும் ஆனால் லக்ஷியம் இதுவாக இருக்க வேண்டும். இங்கே நாங்கள் சேவை செய்ய வேண்டும் என்பதை புரிந்து கொள்ள வேண்டும். அன்பிற்கு ரிடர்ன் இது தான்.

**தாதா விஷ்வரத்தன் 26-பிப்ரவரி நாளன்று திடீரென தன்னுடைய பழைய சரீரத்தை விட்டுவிட்டார்.** ஏனென்றால் டிராமாவில் ஒரு சில ஆத்மாக்களுக்கு திடீரென மற்றும் எவர்ரெடி பாடம் பக்கா செய்விக்க வேண்டியதாயிருக்கிறது. பாருங்கள். எப்போது சந்திரமணி சரீரத்தை விட்டாரோ கொஞ்ச நாள் அந்த அலைகள் நன்றாக இருந்தது. எல்லோரும் திடீரென நடக்கும் என்ற பாடத்தில் பக்காவாக இருந்தார்கள். பிறகு கொஞ்சம் கொஞ்சமாக சாதாரணமாகி விட்டனர். பிறகு எது டிராமாவில் பார்ட் இருக்கிறதோ அது வாயுமண்டலத்தில் திடீரென மற்றும் எவர்ரெடி பாடத்தை பக்கா செய்வதற்காக நிமித்தம் ஆனது. விஷ்வ ரத்தன் தாதாவுக்கு நிராகார் ஸ்திதியில் கவனம் நன்றாக இருந்தது, குப்தமாக இந்த பாடம் பக்காவாக இருந்தது. ஆதலால் சீக்கிரமாக ஒரு செகண்டில் பார்ட் முடிந்து விட்டது. இப்படிப்பட்ட சமயமும் கூட எல்லோருடைய கவனத்தை ஈர்ப்பதற்கு நிமித்தமாகிறது. எல்லோரும் கொஞ்சம், கொஞ்சம் இப்போது புரிந்து கொண்டார்கள். இப்போதோ நேரம் இன்னும் இருக்கிறது என்ற இந்த அலை இப்போது இருக்கக்கூடாது. எவர்ரெடியாக இருக்க வேண்டும். ஏனென்றால் வெகு காலம் கவனம் இருக்க வேண்டியதாயிருக்கிறது. நன்று.

(தாதிகளுடன்) உங்களுடைய குரூப் கவனமாக இருப்பவர்கள் தானே! கவனம் இருக்கிறதல்லவா! நல்லது. உங்களுடைய கவனம் இருக்கிறதல்லவா, எவர்ரெடியா?

**தாதாவின் சேவாதாரி மனோஜ்:** டிராமாவைப் பார்த்து குஷியாக இருக்கிறதல்லவா? டிராமாவில் என்ன நடக்கிறதோ, அது நன்றாகவே தான் இருக்கும். (தாதாவின் நினைவு அதிகமாக வருகிறது) நினைவு வந்தால் வரட்டும். அவருடைய குணம், அவருடைய கடமை

நினைவில் வரட்டும். பிறகு அதைப் பின்பற்றுங்கள். நினைவு வரத்தான் செய்யும். சரி, கட்டளை இது தான் பின்பற்றுங்கள். குஷியாயிருங்கள், குஷியை எல்லோருக்கும் தாருங்கள்.

நிர்வயர் சகோதரர்: தாதிஜி பற்றிய சமாச்சாரம் கூறினார் மேலும் எல்லோருடைய நினைவுகளையும் கொடுத்தார். எல்லோருடைய சேவைக்கும் வாழ்த்துக்கள். மேலும் நினைவைத் தாருங்கள். முன்னி சகோதரி நினைவுகளைத் தந்திருக்கின்றார். தாதிஜியை சீக்கிரத்திலும் சீக்கிரமாக மதுபன் கொண்டு செல்ல விரும்புகின்றோம். அவசரப்பட வேண்டாம். சீக்கிரமாக என்ற சங்கல்பம் வேண்டாம், போதும். வாயுமண்டலத்தை சக்திசாலியாக ஆக்குங்கள். இப்போது இந்த சங்கல்பம் செய்யவே வேண்டாம். இதைச் செய்யுங்கள். நல்லது. நல்லது. நல்லது. ஆகி விடும். ஒன்று மில்லை.

ரமேஷ் சகோதரரிடம்: பாம்பே என்ன செய்யப்போகிறது? ஏதாவது புது பிளான் கண்டு பிடியுங்கள். விங் சர்வீஸ் புரோகிராம் நடந்து கொண்டேயிருக்கிறது. இன்னும் வேறு ஏதாவது கண்களுக்குத் தெரியும்படியாக புதுமை செய்யுங்கள். செய்தோம், வந்து விட்டார்கள். சேவை ஆரம்பித்து விட்டார்கள். இவ்விதமாக இப்போது உடனே தானம் செய்தோம், மகா புண்ணியவானாக ஆனோம் இப்படி!

போபால் சகோதரர் கோலாக் சகோதரருடன்: மதுபன் நாலா பக்கமும் சக்திசாலி வாயுமண்டலம் தயார் செய்யுங்கள். மீட்டிங் செய்ய வேண்டும். (தாதி ஜானகியுடன்) மதுபன்வாசிகள் மீட்டிங் செய்விக்க வேண்டும்.

சந்திரஹாஸ் தாதாவுடன்: உடல் நலமாயிருக்கின்றது. நல்லது. தன்னுடைய உடலை நீங்களே புரிந்து கொண்டு நடத்திக் கொண்டேயிருங்கள். எல்லோரி லும் பெரிய டாக்டர் தனக்குத் தானே (சுயம்) கவனம் வைப்பது தான்.

டாக்டர் சுர்ஸன் சகோதரர் பட்டேல் (நிர்மா குரூப் சேர்மேன்): இப்போது எப்படி உங்களுடைய லௌகிக வியாபாரத்தை மேம் படுத்துகிறீர்கள் அல்லவா, அதுபோல இப்போது இந்த ஆன்மீக வியாபாரமும் கூட

செய்யுங்கள். பரமாத்மாவோடு வியாபாரம் செய்யுங்கள். மிக எளிது அது அழிவற்றதாயிருக்கும் இந்த வியாபரம் (லௌகீக) ஒரு பிறவிக்கு தான் இருக்கும். 21-ஜன்மம் செய்ய வேண்டியிருக்காது? உண்ணுவது உறங்குவது, சந்தோஷமாக காலம் கழிக்க வேண்டும். அவ்வளவு தான். இப்படிப்பட்ட பிஸினஸ் செய்யுங்கள் செய்ய விரும்புகிறீர்களா? நிமித்தமாகுங்கள். உங்களைப் பார்த்து மற்றவர் களுக்கும் ஆர்வம் உண்டாகும். இங்கு வந்து சேர்ந்தீர்கள் என்றால் நிச்சயமாக உங்களுடைய ஏதோ ஒரு பாக்கியம் மறைந்திருக்கிறது. இதனால் தான் இங்கு வந்து சேர்ந்தீர்கள். எந்த பாக்கியம் உங்களை இங்கே அழைத்து வந்தது. ஏதாவது நிமித்தம் ஆகுமல்லவா? போக வேண்டும். போக வேண்டும் என்று எத்தனை முறை நினைத்தீர்கள். இன்றைக்கு எப்படி வந்தீர்கள்? ஆகவே இந்த பாக்கியம் தான் உங்களை அழைத்து வந்தது. மிகவும் நல்லது செய்தீர்கள்.

சுவாமி சமர்ப்பணானந்தகிரிஜி, பூரி: ரெம்பவும் நல்லது. சேர்ந்து செய்தால் சப்தம் உரக்க கேட்கும். உரத்த குரல் எல்லோருடைய காதிலும் சென்றடையும். நல்லது, எல்லா தர்ம தலைவர்களும் சேர்ந்து செய்தார்களேயானால், குரல் மிக சீக்கிரமாக பரவும். இப்படியும் நடக்கும். கொஞ்ச நேரம் ஆகிக் கொண்டிருக்கிறது ஆனால் நடக்கும். எல்லோரும் சேர்ந்து ஒரே கொடியை பறக்க விடுவோம்.

ராகேஷ் மேத்தா, மின்வாரியம், டெல்லி: இங்கேயும் கூட பாருங்கள். ஆத்மா ஒளியாக இருக்கிறது. மேலும் லைட் ஹவுஸ் ஆகி ஒளி கொடுக்கவேண்டும். ஆகவே டபுள் லைட்டின் ஞானம் பெறக் கூடிய பாக்கியவான் ஆத்மா நீங்கள். அந்த ஒளியும் அவசியம் தான். இந்த ஒளியும் அவசியம் தான். இப்.போது நிமித்தமாகி, துக்கத்திலுள்ள ஆத்மாக்களுக்கு சுகம் கொடுங்கள். மன இறுக்கத்திலிருந்து விடுதலையடைந்த வாழ்க்கையைக் கொடுங்கள். நல்லது.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 17.03.2007 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# சிரேஷ்ட விருத்தி மூலம் (உள் உணர்வு) சக்திசாலி வைப்ரேஷன் மற்றும் வாயுமண்டலம் உருவாக்குவதற்காக தீவிர முயற்சி செய்யுங்கள் -ஆசிகளை வழங்குங்கள் மேலும் ஆசிகளைப் பெறுங்கள்!

இன்றைக்கு அன்பு மற்றும் சக்திக்கடலாக விளங்கும் பாப்தாதா தன்னுடைய அன்பான, வெகு நாளைக்குப் பிறகு கண்டெடுத்த செல்லமான குழந்தைகளைச் சந்திப்பதற்காக வந்துள்ளார். எல்லா குழந்தைகளும் கூட வெகு தூரத்திலிருந்து அன்பின் ஆகர்ஷணத்தால் சந்தித்து மகிழ்வதற்காக வந்து சேர்ந்திருக்கின்றனர். எதிரில் அமர்ந்திருப்பவர்களாயினும் சரி, உள் நாட்டிலும், பல வெளி நாடுகளிலும் அமர்ந்திருந்து அன்பான சந்திப்பை கொண்டாடிக் கொண்டிருக்கின்றனர். பாப்தாதா நாலா பக்கங்களிலுமுள்ள அன்பு நிறைந்த, சகயோகிகளாக கூடவே இருக்கின்ற எல்லா குழந்தைகளையும் பார்த்து மகிழ்ச்சியடைகின்றார்: பாப்தாதா பார்க்கின்றார்: மெஜாரிட்டி குழந்தைகளினுடைய உள்ளத்தில் ஒரே ஒரு சங்கல்பம் தான் இருக்கிறது. இப்போது வெகு சீக்கிரமாகவே தந்தையைப் பிரத்யக்ஷம் செய்ய வேண்டும். தந்தை கூறுகின்றார்: எல்லா குழந்தைகளிடமும் ஆர்வம் மிக நன்றாகவே இருக்கிறது ஆனால், எப்போது முதலில் தன்னை தந்தைக்குச் சமமானவராக சம்பன்னம் (முழுமை) சம்பூரணம் (நிறைவு) ஆகிக் காட்டுவார்களோ, அப்போது தான் தந்தையைப் பிரத்யக்ஷம் செய்ய முடியும். ஆகவே தான் எப்போது பிரத்யக்ஷம் ஆவீர்கள் என்று குழந்தைகளிடம் தந்தை கேட்கின்றார். நீங்கள் சம்பன்னம் ஆவதற்கான தேதியை நிச்சயப்படுத்தி

விட்டீர்களா? என்று பாபா கேட்கின்றார். வெளி நாட்டினர் கூறுகின்றனர், ஒரு வருடத்திற்கு முன்பாகவே தேதியை உறுதி செய்து விடுவோம் ஆதலால் உங்களை தந்தைக்குச் சமமானவராக ஆக்குவதற்காக, உங்களுக்குள் மீட்டிங் செய்து தேதியை உறுதி செய்து விட்டீர்களா? செய்து விட்டீர்களா?

பாப்தாதா பார்க்கின்றார்: தற்சமயம் ஒவ்வொரு துறையைச் சார்ந்தவர்களுக்கான மீட்டிங்கும் நிறைய நடக்கின்றன. டபுள் ஃபாரினர்ஸ் (இரட்டை வெளிநாட்டினர்) நடத்திய மீட்டிங் பற்றியும் பாப்தாதா கேட்டார் மிக நன்றாக இருந்தது. எல்லா மீட்டிங் சமாச்சாரமும் பாப்தாதாவிடம் வந்து சேர்ந்து விடுகிறது. ஆதலால் பாப்தாதா கேட்கின்றார். இதற்கான தேதி (பிரத்யக்ஷம் செய்தல்) எப்போதாவது நிர்ணயம் செய்திருக்கிறீர்களா? இந்த தேதியை டிராமா (நாடகம்) நிர்ணயிக்குமா? அல்லது நீங்கள் நிர்ணயம் செய்வீர்களா? யார் செய்வது? லக்ஷியம் நீங்கள் வைக்கத் தான் வேண்டும். மேலும் லக்ஷியம் மிக நன்றாக, மிகச் சிறப்பாக வைத்திருக்கிறீர்கள். இப்போது லக்ஷியத்திற்கேற்ப, லக்ஷணம் இருக்க வேண்டும். சிரேஷ்ட லக்ஷியத்திற்குச் சமமானதாக கொண்டு வர வேண்டும். இப்போது லக்ஷியத்திற்கும், லக்ஷணத்திற்கும் வித்தியாசமிருக்கிறது. எப்போது லக்ஷியமும், லக்ஷணமும் சமமானதாகி விடுகிறதோ, அப்போது லக்ஷியம் நடை முறையில் நிறைவேறி விடும். எல்லா குழந்தைகளும் அமிர்தவேளை சந்திப்பின் போது சங்கல்பம் செய்கிறார்கள். இது மிக நன்றாக இருக்கிறது, பாப்தாதா நாலா பக்கமும் உள்ள ஒவ்வொரு குழந்தையினுடைய ஆன்மீக சம்பாஷணையை கேட்கின்றார். மிக அழகாகப் பேசுகிறார்கள். முயற்சியும் கூட (புருஷாரத்தம்) மிக நன்றாகவே செய்கிறார்கள் ஆனால் முயற்சியில் ஒரு விஷயத்தில் தீவிரம் வேண்டும். முயற்சி செய்கிறார்கள் ஆனால் தீவிர முயற்சி செய்ய வேண்டும். தீவிரத்தில் உறுதி என்பதையும் சேர்த்துக் கொள்ள வேண்டும். இப்போதைய காலப் பிரமாணப்படி ஒவ்வொரு குழந்தையும் நம்பவர்வாராக இருக்கிறார்கள் என்பது பாப்தாதாவுக்குத் தெரியும் ஆனால் நம்பர்வாராக இருப்பவர்களிலும் கூட தீவிர முயற்சி என்பது சதா (தொடர்ந்து) இருக்க வேண்டும். இது மிக அவசியமானதாக இருக்கிறது. சமயம் (நேரம்) முடிவுக்கு வருவதில் வேகம் அதிகமாக இருக்கிறது ஆனால் குழந்தைகள் இப்போது பாபா சமானமாக ஆகியே

தீர வேண்டும். இது நிச்சயிக்கப்பட்டு விட்டது. என்றாலும் இதில் தீவிரம் வேண்டும். ஒவ்வொருவரும் நான் சதா தீவிர முயற்சி செய்து கொண்டிருக்கிறேனா என்பதை சோதித்துப் பார்க்க வேண்டும். ஏனென்றால் முயற்சி செய்து கொண்டிருக்கும் போது தான் சோதனைகளும் நிறைய வருகின்றன. வரத்தான் செய்யும் ஆனால் தீவிர முயற்சி செய்வதற்காக சோதனைகளிலும் பாஸாகத் தான் வேண்டும். மேலும் தீவிர முயற்சி (தீவிர புருஷார்த்தி) செய்பவர்களுக்கு சோதனையில் வெற்றி என்பது நிச்சயிக்கப்பட்டதாகவே இருக்கிறது. ஆகும் என்பதல்ல, ஆகி விட்டது. இது உறுதி. சேவையும் கூட எல்லோரும் மிக விருப்பத்துடன் செய்து கொண்டிருக்கிறார்கள் ஆனால் பாப்தாதா ஏற்கனவே கூறியிருக்கின்றார். தற்கால சூழ்நிலையின் அடிப்படையில் மனம், சொல், செயல் அதாவது நடத்தை மற்றும் முகம் மூலமாக மூன்று விதமான சேவையை செய்ய வேண்டும்.

அனுபவத்தை மனதின் மூலமாக செய்விக்க வேண்டும். வாய் மூலமாக ஞானப் பொக்கிஷத்தைப் பற்றிய அறிமுகம் செய்விப்பது, நடத்தை மற்றும் முகம் மூலமாக சம்பூரண யோகி வாழ்க்கையை தத்ரூபமாக அனுபவம் செய்விப்பது போன்ற மூன்று விதமான சேவையையும் ஒரே சமயத்தில் செய்ய வேண்டும். தனித்தனியாக அல்ல. நேரம் குறைவாக இருக்கிறது. மேலும் சேவை செய்ய வேண்டியதும் அதிகமாகவே இருக்கிறது. பாப்தாதா பார்த்தார். எல்லாவற்றிலும் மிகவும் எளிதான சேவைக்கான சாதனம் விருத்தி மூலமாக (உள்ளுணர்வு) வைப்ரேஷன் பரப்புவது, மேலும் வைப்ரேஷன் (எண்ணத்தின் மூலமான அதிர்வலைகள்) மூலமாக வாயுமண்டலம் உருவாக்குவது ஏனென்றால் விருத்தி, எல்லாவற்றையும் விட அதிக வேகமான சாதனம். எப்படி விஞ்ஞானம் மூலம் உருவாக்கப்படும் ராக்கெட் அதிவேகமாகச் செல்கிறதோ, அதுபோல உங்களுடைய ஆன்மீக சுப பாவனை, சுப அபிலாஷை நிறைந்த விருத்தியானது திருஷ்டி மற்றும் சிருஷ்டியை (உருவாக்குதல்) மாற்றி விடுகிறது. ஒரு இடத்தில் அமர்ந்திருந்தவாறே, விருத்தி மூலமாக, சேவை செய்ய முடியும். கேள்விப்படும் விஷயமாக இருந்தால், மறந்து விடக்கூடிய வாய்ப்பு இருக்கிறது ஆனால் வாயுமண்டலத்தின் மூலம் ஏற்படும் அனுபவம் மறந்து போகாது. உதாரணமாக பிரம்மாபாபாவின் கர்ம பூமியாகவும், யோக பூமியாகவும்,

நற்பண்புகளின் பூமியாகவும் இருக் கின்ற மதுபன் வாயுமண்டலத்தின் அனுபவம் இன்று வரையிலும் கூட எப்படி மறக்க முடியாத ஒன்றாக இருக்கிறது. காரணம் வாயுமண்டலத்தின் அனுபவம் உள்ளத்தில் பதிந்து விடுகிறது. பேச்சு மூலமாக பெரிய பெரிய புரோகிராம் செய்து கொண்டு தான் இருக்கிறீர்கள் ஆனால் ஒவ்வொருவரும் தங்களுடைய சிரேஷ்ட ஆன்மீக விருத்தி மூலம் வைப்ரேஷன் மூலமாக வாயுமண்டலம் உருவாக்க வேண்டும் ஆனால் விருத்தியானது (உள்ளுணர்வு) ஆன்மீகமாகவும், சக்திசாலியாகவும் எப்போது ஆகும் என்றால், எப்போது தன்னுடைய உள்ளத்திலும், மனதிலும் யாரைப் பற்றியும் எதிர்மறையான விருத்தியின் வைப்ரேஷன் இல்லாமல் இருக்குமோ அப்போது தான். தன்னுடைய மனோவிருத்தி சதா பரிசுத்தமாக இருக்க வேண்டும். ஏனென்றால் எந்த ஒரு ஆத்மாவின் மீதும் ஒருவேளை வீணான விருத்தி அல்லது ஞானத்தின் அடிப்படையில், எதிர்மறையான விருத்தி இருக்குமானால், எதிர்மறை (நெகட்டிவ்) என்றால் குப்பை. ஒருவேளை மனதில் அழுக்கு இருக்குமானால், சுப விருத்தியின் மூலம் சேவை செய்ய முடியாது. ஆதலால் முதலில் தன்னுடைய மனோவிருத்தி சுபமான ஆன்மீகமாக இருக்கிறதா என்று சோதித்துப் பாருங்கள். நெகட்டிவ் விருத்தியையும் கூட தன்னுடைய சுப பாவனை, சுப அபிலாஷை மூலம் நெகட்டிவை, பாஸிட்டிவாக (ஆக்க பூர்வமானதாக) மாற்ற முடியும். ஏனெனில் நெகட்டிவ் மூலமாக தன்னுடைய மனதில் குழப்பம் உண்டாகி விடுகிறதல்லவா? ஆகவே முதலில் தன்னை சோதியுங்கள். தன்னுடைய மனதில் எந்த ஒரு கோளாறும் இல்லை தானே! வரிசைக்கிரமம் (நம்பர்வார்) என்பது இருக்கிறது. நல்லவர்களும் இருக்கிறார்கள் என்றால், கூடவே கெட்டவர்களும் இருக்கிறார்கள். எனினும் இவர் இப்படிப்பட்டவர் என்று புரிந்து கொள்வது நல்லது தான். எது தவறோ, அதை தவறு என்றும் புரிந்து கொள்ள வேண்டும். எது சரியானதோ, அதை சரியானது தான் என்றும் புரிந்து கொள்ள வேண்டும் ஆனால் உள்ளத்தில் சேமித்து வைத்துக் கொள்ளக் கூடாது. புரிந்து கொள்வது வேறு, அறிந்தவராக இருப்பது நல்லது. தவறானதை, தவறானது என்று தான் சொல்வோமல்லவா? அநேக குழந்தைகள் கூறுகிறார்கள், பாபா இவர் எப்டிப்பட்டவர் என்று உங்களுக்குத் தெரியாது என்கிறார்கள். நீங்கள் பார்த்தீர்கள் என்றால் புரிந்து கொள்வீர்கள். தந்தை ஏற்றுக் கொள்கிறார். நீங்கள் சொல்வதற்கு

முன்பாகவே இவர் எப்படிப்பட்டவர் என்பதை தெரிந்து கொண்டிருக்கின்றார் ஆனால் இப்படிப்பட்ட விஷயங்களை தங்களுடைய உள்ளத்தில், விருத்தியில் வைத்துக் கொள்வதால் தானும் கூட கவலைக்குள்ளாக வேண்டியிருக்கிறதல்லவா? மேலும் ஒருவேளை தவறான பொருள் மனதில் இருந்தால் உள்ளத்தில் இருந்தால், எங்கே கெட்ட பொருள் இருக்கிறதோ, வீணான எண்ணங்கள் மனதில் ஓடிக் கொண்டிருக்கிறதோ, அப்படிப்பட்டவர் விஷ்வ கல்யாணகாரி எப்படி ஆக முடியும்? உங்கள் எல்லோருடைய தொழில் எது? சிலர் கூறுவார்கள் நான் லண்டன் கல்யாணகாரி, டெல்லியின் கல்யாணகாரி, யுபியின் கல்யாணகாரி அல்லது எங்கே இருக்கிறீர்களோ இந்த நாடு என்று இல்லா விட்டாலும் இந்த செண்டரின் கல்யாணகாரி என்ற தங்கள் தங்கள் தொழில் இது தான் என்று எல்லோருமே கூறுகிறார்கள். ஆதலால் நீங்கள் எல்லோரும் உண்மையில் யார்? விஷ்வ கல்யாணகாரியா? ஆம் என்றால் கை உயர்த்துங்கள். விஷ்வ கல்யாணகாரி! விஷ்வ கல்யாணகாரி! நல்லது அப்படியானால் மனதில் கெட்டது ஒன்றும் இல்லை தானே! புரிந்து கொள்வது வேறானது. சரியா, தவறா என்று புரிந்து கொள்ளலாம் ஆனால் மனதில் சேமித்து வைக்காதீர்கள். மனதில் இந்த உணர்வை (விருத்தி) வைத்துக் கொள்வதால் பார்வையும், செயலும் மாறி விடும். பாப்தாதா ஹோம் ஒர்க் கொடுத்திருந்தார். என்ன கொடுத்திருந்தார்? எல்லாவற்றிலும் எளிதான புருஷார்த்தம் (முயற்சி) ஒன்று இருக்கிறது. எல்லோருமே செய்ய முடியும். முதியவர்களும் செய்ய முடியும், இளைஞர்களும் செய்ய முடியும், சிறு குழந்தைகளும் செய்ய முடியும். அந்த விதி இது தான். ஒரே ஒரு வேலை செய்யுங்கள். யாருடைய தொடர்பில் வந்தாலும், ஆசி வழங்குங்கள், ஆசி பெறுங்கள். ஒருக்கால் அவர் உங்களை சபித்தாலும் சரி, ஆனால் நீங்கள் என்ன கோர்ஸ் (பாடமுறை) சொல்லித் தருகிறீர்கள். எதிர்மறையை, ஆக்கப்பூர்வமாக மாற்றிக் கொள்ள வேண்டும் என்று தானே? (நெகட்டிவை பாஸிட்டிவாக மாற்றுங்கள்). ஆதலால் இந்த பாடத்தை உங்களுக்கும் கற்றுக் கொடுங்கள். என்ன சவால் (சேலஞ்) எடுத்துக் கொண்டிருக்கிறீர்கள்? பிரகிருதியையும் கூட தமோபிரதானத்திலிருந்து, சதோபிரதானமாக மாற்ற வேண்டும். மாற்ற வேண்டுமல்லவா? தலை அசைத்துக் காண்பியுங்கள். கை அசையுங்கள், பாருங்கள் கடமைக்காக அசைக்கக் கூடாது. மனதார அசைக்க வேண்டும். ஏனென்றால் இப்போதைய

சூழ்நிலையின் அடிப்படையில் (காலப்பிரமாணமாக) தீவிர புருஷாரத்தம் அதாவது விருத்தி மூலம் வாயுமண்டலம் உருவாக்க வேண்டும். ஆகவே, ஒருக்கால், விருத்தியில் சிறிதளவு குப்பை இருந்தாலும், விருத்தி மூலம் வாயுமண்டலத்தை எப்படி உருவாக்க முடியும்? இயற்கைக்கும் உங்கள் வைப்ரேஷன் சென்றடையும். வாய் பேச்சு மூலம் சென்றடையாது. வைப்ரேஷன் செல்லும் மேலும் வைப்ரேஷன் உருவாவது விருத்தி மூலமாக மேலும் வைப்ரேஷன் மூலமாக வாயுமண்டலம் தயாராகிறது. மதுபனிலும் கூட, எல்லோருமே ஒரே மாதிரியாக இல்லையல்லவா? ஆனால் பிரம்மாபாபா மற்றும் அவருடைய நெருக்கமான குழந்தைகளின் விருத்தி மூலம் தீவிர முயற்சி மூலம் வாயுமண்டலம் உருவானது.

இன்றைக்கு உங்களுடைய தாதியின் நினைவு வருகிறது. தாதியிடம் என்ன விசேஷத்தைப் பார்த்தீர்கள். எப்படி கண்ட்ரோல் செய்தார்? எப்போதானாலும், எப்படிப்பட்ட விருத்தியுடையவராக இருந்தாலும், ஒருபோதும் மனதில் வைக்கவில்லை. எல்லோருக்கும் உற்சாகத்தைக் கொடுத்தார். உங்களுடைய ஜகதம்பா அம்மா வாயுமண்டலம் உருவாக்கினார். அறிந்திருந்தும் கூட, தன்னுடைய விருத்தியை சதா சுபமாக வைத்திருந்தார். அந்த வாயுமண்டலத்தின் அனுபவத்தை நீங்கள் எல்லோரும் அனுபவம் செய்து கொண்டிருக்கிறீர்கள். ஃபாலோ ஃபாதர் (தந்தையை பின்பற்றுவது) என்ற முறையிலானாலும் சரி, பாப்தாதா எப்போதும் கூறுவார். ஒவ்வொருவரிடமும் உள்ள விசேஷத்தை அறிந்து, அந்த விசேஷத்தை தன்னுடையதாக்கிக் கொள்ளுங்கள். மேலும் ஒவ்வொரு குழந்தையிடமிருந்தும் இதைப் பார்க்க வேண்டும், பாப்தாதாவுக்கு யார் குழந்தையானாரோ, அந்த ஒவ்வொரு குழந்தையிடமும் மூன்றாம் நம்பராக இருந்தாலும், இது டிராமாவின் விசேஷம். பாப்தாதாவின் வரதானம். எல்லா குழந்தைகளிடமும் 99-தவறுகள் இருந்தாலும் கூட, ஒரு விசேஷம் நிச்சயமாக இருக்கிறது, அந்த விசேஷத்தின் காரணமாகவே மேரா பாபா (என்னுடைய தந்தை) என்று அழைப்பதற்கு உரிமையுடையவரானார். மற்ற விஷயங்களில் வசப்பட்டு தவறாக நடந்து கொள்பவராக இருந்தாலும், பாபாவிடம் அன்பு நிச்சயமாக இருக்கிறது. ஆதலால் பாப்தாதா இப்போது சமயமானது நெருங்கிக் கொண்டிருக்கும் நேரக் கணக்குப்படி, ஒவ்வொருவரும் பாபாவின் எந்த ஒரு இடத்தில்

இருப்பவரானாலும், சிறு கிராமமாக இருந்தாலும், பெரிய மண்டலத்தில் இருந்தாலும், சென்டர்களில் இருந்தாலும், ஒவ்வொரு இடத்திலும், உடனிருப்பவர்களிடத்திலும் சிரேஷ்ட விருத்தியின் வாயுமண்டலம் நிச்சயமாக இருக்கிறது. ஒரே ஒரு எழுத்தை மட்டும் நினைவில் வைத்திருங்கள். ஒருவேளை யாராவது சாபம் கொடுப்பவராக இருந்தாலும், பெறுபவர் யார்? கொடுப்பவரும் பெறுபவரும் ஒருவரா? அல்லது இருவரா? ஒருவேளை யாரோ ஒருவர் உங்களுக்கு கெட்ட பொருளை கொடுக்கிறார் என்று வைத்துக் கொள்ளுங்கள். அப்போது நீங்கள் என்ன செய்வீர்கள்? உங்களிடம் வைத்துக் கொள்வீர்களா? திருப்பிக் கொடுத்து விடுவீர்களா? தூக்கி எறிந்து விடுவீர்களா? அல்லது அலமாரியில் பாதுகாப்பாக வைப்பீர்களா? உங்கள் உள்ளத்தில் வைத்துக் கொள்வீர்களானால், உங்கள் உள்ளம் பாபாவின் ஆசனமாக இருக்கிறது ஆதலால் ஒரு வார்த்தையை இப்போது மனதில் பக்காவாக நினைவில் வைத்துக் கொள்ளுங்கள், வாயில் அல்ல. மனதில் வையுங்கள். ஆசி வழங்க வேண்டும், ஆசி பெற வேண்டும். எந்த ஒரு எதிர்மறையான நெகட்டிவ்) விஷயத்தையும் மனதில் வைத்துக் கொள்ளாதீர்கள். நல்லது ஒரு காதில் கேட்டு, மற்றொரு காது வழியாக வெளியேற்றி விடுங்கள். இது உங்கள் வேலையா? மற்றவருடைய வேலையா? அப்போது தான் உலகில், ஆத்மாக்களில் அதிவேகமாக சேவை விருத்தி மூலமாக வாயுமண்டலம் உருவாக்கும் காரியத்தைச் செய்ய முடியும். விஷ்வ பரிவர்த்தனை செய்ய வேண்டுமல்லவா? ஆதலால் எதை நினைவில் வைத்துக் கொள்வீர்கள்? மனதில் வைத்துக் கொண்டு விட்டீர்களா? ஆசிகள் என்ற வார்த்தையை நினைவில் வையுங்கள். போதும். ஏனென்றால், உங்களுடைய ஜட ஸித்திரம் என்ன கொடுக்கிறது? ஆசி கொடுக்கிறதல்லவா? கோவிலுக்குச் செல்பவர்கள் என்ன கேட்கிறார்கள்? ஆசீர்வதிக்க வேண்டும் என்று கேட்கிறார்கள் அல்லவா? ஆசி கேட்கிறார்கள். ஆசி கிடைக்கிறது. ஆகவே தான் ஆசி கேட்கிறார்கள். உங்களுடைய ஜட ஸித்திரம் கடைசி பிறவியிலும் கூட ஆசி வழங்குகிறது. விருத்தி மூலமாக அவர்களுடைய அபிலாஷைகள் பூர்த்தியாகின்றன. ஆதலால் நீங்கள் அடிக்கடி இவ்விதமாக ஆசி வழங்கக் கூடியவராக ஆகியிருக்கிறீர்கள். ஆகவே தான், உங்களுடைய ஸித்திரம் கூட இன்று வரையிலும் ஆசி கொடுத்துக் கொண்டிருக்கிறது. சரி. அடிமைப்பட்டு பிரச்சினைக்குரியவர்களாகி இருக்கும் ஆத்மாக்களுக்கும் கூட, மன்னிக்கும் கடலாக விளங்குபவரின்

குழந்தைகள், மன்னித்து விட்டால் எவ்வளவு நன்றாக இருக்கும் அல்லவா? ஆகவே நீங்கள் எல்லோருமே மாஸ்டர் மன்னிக்கும் கடல் தான். அப்படித்தானே? அல்லது இல்லையா? அப்படித்தான் இருக்கிறீர்கள் அல்லவா? இதில் முதலில் கூறுங்கள் நான் என்று. இதில் ஹே, அர்ஜுன் ஆகுங்கள். யாரொருவர் எதிரில் வந்தாலும், அவர்கள் கொஞ்சமாவது அன்பை அனுபவம் செய்யட்டும். உதவியைப் பெறட்டும். மன்னிப்பை அனுபவம் செய்யட்டும். தைரியத்தை அனுபவம் செய்யட்டும். உதவியை அனுபவம் செய்யட்டும் உற்சாகம், ஊக்கத்தை அனுபவம் செய்யட்டும் இப்படி நடக்குமா? முடியுமா? முதல் வரிசையில் அமர்ந்திருப்பவர்கள் கூறுங்கள். செய்ய முடியுமா? கை உயர்த்துங்கள். முதலில் செய்ய வேண்டியதாயிருக்கும். முதலாவது வரிசை டீச்சர்ஸ். எல்லோரும் செய்வீர்களா?

நல்லது இப்போது கடைசி முறைக்கு 15-நாட்கள் இருக்கின்றன. சரிதானா? மதுபனில் உதவி எப்போதுமே இருக்கிறது. நீங்கள் எல்லோரும் எவ்வளவு பேர் இருக்கிறீர்களோ, எங்கிருந்து வந்திருந் தாலும் சரி, இந்த 15-நாட்கள் பயிற்சி செய்ய வேண்டும். அதாவது ஆசி வழங்குதல், ஆசி பெறுதல், இந்தப் பயிற்சி செய்ய வேண்டும். சரிதானா? இந்த ஹோம் ஒர்க் சரியா? செய்வீர்களா? மதுபன் வாசிகள், நன்றாக இருக்கிறது. மதுபன் வாசிகளுக்கு சீட் மிக நன்றாகக் கிடைத்திருக்கிறது. நல்ல இடத்தைப் பிடித்துக் கொண்டிருக்கிறார்கள். இனி நம்பர்-1 சீட்டையும் பிடிக்க வேண்டும். ஏனென்றால் மதுபன் வாசி ஆவது, பாக்கியத்தின் அடையாளம். இப்போது எல்லோரும் எதைச் சார்ந்தவர்களாக இருக்கிறீர்கள்? லண்டனா? அமெரிக்காவா? இப்போது எல்லோருமே மதுபன் வாசிகள் தான். இந்த சமயத்தில் மதுபனைச் சார்ந்தவர்களாகத்தானே இருக்கிறீர்கள் எவ்வளவு நன்றாக இருக்கிறது? எல்லோரும் இப்போது மதுபன் வாசிகள். ஆதலால் 15-நாட்களுக்குப் பிறகு பாப்தாதா ரிசல்ட் கேட்பார். சரிதானே! பின்னால் இருப்பவர்கள் கூறுங்கள் சரிதானே? மேலே கேலரியிலும் அமர்ந்திருக்கிறார்கள். கேலரியில் அமர்ந்திருப்பவர்கள் கூறுங்கள். சரிதானே? நல்லது, நல்லது தான். இப்போது உலக முழுமைக்கும் இது அவசிமாக இருக்கிறது. நீங்கள் நிவாரண மூர்த்தி ஆகி விடுங்கள். நீங்கள் நிவாரண மூர்த்தி ஆவதன் மூலம், ஆத்மாக்கள் நிர்வாண் தாம் செல்ல முடியும். ஒருவேளை நீங்கள் நிவாரண மூர்த்தி ஆகவில்லையென்றால்

அப்பாவிகளான ஆத்மாக்கள் முக்தியில் செல்ல முடியாது. முக்தியின் வாசலை நீங்கள் திறக்க வேண்டும். தந்தையுடன் கூடவே வாசலைத் திறப்பீர்கள் அல்லவா? வாசலைத் திறக்கும் விழா நடத்துவீர்கள் அல்லவா? இப்போது நீங்கள் எல்லாம் கூடிப் பேசி இதற்கான தேதியை நிர்ணயம் செய்யுங்கள். பாப்தாதா எல்லா மீட்டிங்கில் பேசுவதையும் கேட்கின்றார். பாப்தாதா விரும்பினால் ஸ்விச் ஆன் செய்ததும், கேட்பார். ஒரே சமயத்தில் எல்லா ஜோன், எல்லா நாடுகளில் நடக்கும் விஷயங்களைக் கேட்க முடியும். கேட்க விரும்புவாரேயானால், கேட்க முடியும். இப்போது எல்லையற்ற நிலைக்கு வந்து விடுங்கள். சிற்சில குழந்தைகள் கொஞ்சம் அதிகமாக விலகிய நிலையில் இருந்து விடுகிறார்கள். இம்மாதிரியான கம்பீரம் நல்லது தான் ஆனால் அதிகமான கம்பீரத்தன்மை ஆழ்ந்த ஆலோசனையிலிருப்பதாகத் தென்படுகிறது. இப்படியிருப்பது யாருக்கும் நன்றாகயிருப்பதில்லை. கம்பீரமாயிருங்கள் ஆனால் இந்த கம்பீரம் உள்ளுக்குள்ளே இருக்கட்டும். வெளியில் முகம் மலர்ந்திருக்கட்டும் மலர்ந்த முகம் எல்லோருக்குமே பிடிக்கும். மேலும் அதிகமாக மனம் இறுக்கமுள்ள முகத்தைப் பார்த்தால் பயப்படுவார்கள். தூரமாகப் போய் விடுவார்கள். சகயோகி ஆக மாட்டார்கள். பிரம்மாபாபாவின் புன்முறுவல், ஜகதம்பா அம்மாவின் புன்முறுவல், உங்களுடைய தாதியின் புன்முறுவல் நினைவிருக்கிறதல்லவா? டபுள் ஃபாரினாஸ்க்குக் கூட தாதியின் புன்முறுவல் பூத்த முகம் பிடித்தமானதாக இருக்கிறதல்லவா? கை அசைக்கிறார்கள். சிரிக்காதீர்கள், புன்முறுவல் செய்தால் போதும். சத்தமாக சிரிக்கக்கூடாது. புன்சிரிப்பு ஏனென்றால், பாப்தாதாவுக்கு இப்போது தீவிர முயற்சி செய்ய வேண்டும். ஏன்? ஏனென்றால் பாப்தாதா பார்த்தார், வெகு காலத்து சம்ஸ்காரம் அவசியமாயிருக்கிறது. ஒருவேளை கடைசியில் தீவிர புருஷாரத்தம் செய்வீர்களானால், வெகு காலத்து சேமிப்பு இருக்காது. ஒருவேளை வெகுகால சேமிப்பு உங்களிடம் இல்லையானால் 21-பிறவிக்கு வெகு காலத்து அதிகாரம் குறைந்து விடும். ஆதலால் தான் பாப்தாதா, ஒரு குழந்தை கூட, யார் மேரா பாபா என்று கூறினார்களோ அப்படி மேரா பாபா என்று அழைக்கும் குழந்தை, குறைவான அதிகாரியாக இருப்பதை விரும்பவில்லை. காலமானது குறையக் கூடாது ஏனென்றால், பாபா என்ன விரும்புகிறார் என்றால், கடைசி குழந்தையாக இருந்தாலும் சரி, பாபாவுக்குத் தெரியும் இவர் கடைசி என்று ஆனாலும் ஒருபோதும்

முரளியில் இனிமையிலும் இனிமையான குழந்தைகளே என்று சொல்லும்போது கசப்பான குழந்தைகளைத் தவிர்த்து மற்றவர்களுக்கு அன்பு நினைவுகள் என்று சொன்னதில்லை. கூறியிருக்கின்றாரா? கடைசி குழந்தை என்று அவருக்குத் தெரியும் என்றாலும் இனிமையிலும் இனிமையான குழந்தைகளே என்று தான் கூறியிருக்கின்றார். கசப்பான குழந்தைகளே என்று ஒருபோதும் சொல்லவில்லை. ஆகவே பாபா சமானமாக ஆக வேண்டுமல்லவா? பாப்தாதாவுக்கு மிகுந்த குஷியிருக்கிறது ஏன்? உங்கள் லக்ஷியம் என்ன என்று குழந்தைகளிடம் கேட்டால், எல்லா குழந்தைகளுமே பாபா சமானமாக ஆக வேண்டும் என்பது தான் என்று கூறுகின்றார்கள். கடைசி நம்பரில் வரக்கூடியவரும் கூட இதைத்தான் கூறுகின்றார். ஆகவே தான் பாப்தாதாவுக்கு குஷியாக இருக்கிறது. எனினும் லக்ஷியம் உயர்வாக இருக்கும்போது பாபா சமானமாக லக்ஷணமும் கூட சேர்ந்து கொண்டேயிருக்கும். வெகு கால சேமிப்பை ஒன்று சேர்க்க வேண்டும். பிறகு கடைசியில் வெகுகால சேமிப்பு இருக்க வேண்டும் என்பது எங்களுக்கு நினைவே இலலை என்று குறை சொல்லக்கூடாது. 63-பிறவிகள் வெகு காலத்து பிரபாவம் இன்று வரையிலும் கூட பார்க்கின்றீர்கள். விரும்பாவிட்டாலும் கூட நடந்து விடுகிறது. இதென்ன? வெகு காலத்தின் பிரபாவம் ஆதலால் பாப்தாதா ஒவ்வொரு அன்பிலும் அன்பான குழந்தைகளுக்கு இதைத்தான் கூறுகின்றார். தீவிர புருஷாரத்தி பவ! என்று ஹோம் ஒர்க் நினைவில் வைத்திருக்க வேண்டும். 15-நாட்களுக்குப் பிறகு ரிசல்ட் கேட்பேன். 15-நாட்களுக்குள் சம்ஸ்காரம் ஆகி விடுமல்லவா? அப்படியானால், அதன் பிறகும் இருக்கும். இங்கேயோ, வாயுமண்டலத்தின் உதவி இருக்கிறதல்லவா? எல்லா மதுபன் வாசிகளும் டியூட்டியில் இருக்கிறார்களா? அல்லது சேவை செய்வதற்கு எந்த ஜோன் நிமித்தமாயிருக்கிறதோ அவர்கள் டியூட்டியில் இருக்கிறார்களா? ஆகவே எல்லோருக்கும் டியூட்டியிலிருந்து விடுதலை தானே! ஆகவே என்ன செய்யப் போகிறீர்கள்? தாதி சொல்லுங்கள், என்ன செய்வீர்கள்? செய்து காண்பிப்பீர்கள். செய்து காண்பிக்கத்தான் வேண்டும். முதலில் உங்களை பிரத்யக்ஷம் செய்யுங்கள். அப்போது பாபா பிரத்யக்ஷம் ஆவார். ஏனெனில் உங்கள் மூலமாகத் தானே நடக்க வேண்டும்? ஆகவே தந்தை கூறுகின்றார், உங்களை எப்போது பிரத்யக்ஷம் செய்வீர்கள்? உங்கள் மூலமாக தந்தை பிரத்யக்ஷம் ஆகியே தீருவார்.

ஆர்வம் உண்டாகிறதா? எவ்வளவு உற்சாகம்? நிறைய உற்சாகம் இருக்கிறது. எல்லோருக்கும் யாருக்கு எவ்வளவுக்கெவ்வளவு உற்சாகம் இருக்கிறதோ, அவ்வளவுக்கவ்வளவு பாப்தாதா நூறு மடங்கு முன் கூட்டியே வாழ்த்துக்களை அளிக்கின்றார். நல்லது.

எல்லா இடங்களிலிருந்தும் குழந்தைகளிடமிருந்து இமெயில் கடிதம் வந்து கொண்டேயிருக்கிறது. மேலும் யார் கடிதம் அனுப்பவில்லையோ சங்கல்பம் மட்டும் செய்தார்களோ, அப்படி சங்கல்பம் செய்தவர்களுடைய அன்பு நினைவுகள் பாப்தாதாவை வந்து சேர்ந்து விட்டது. கடிதம் மிக இனிமையிலும் இனிமையாக எழுதுகிறார்கள். கடிதம் எப்படிப்பட்டதாக இருந்தாலும் ஆர்வம், உற்சாகத்தைப் பார்க்கும்போது பறந்து கொண்டே இருப்பதுபோலத் தோன்றுகிறது. சரிதான். நன்றாகத்தான் இருக்கின்றது. கடிதம் எழுதுவதன் மூலம் தங்களை பந்தனத்தில் கட்டிக் கொள்கிறார்கள். உறுதிமொழி எடுத்துக் கொள்கிறார்கள் அல்லவா! நாலா பக்கங்களிலும் யாரெல்லாம் பார்த்துக் கொண்டிருக்கிறார்களோ, அல்லது கேட்டுக் கொண்டிருக்கிறார்களோ, அவர்கள் எல்லோருக்கும் கூட பாப்தாதா எதிரில் அமர்ந்திருப்பவர்களை விட அன்பு நினைவுகளை அளிக்கின்றார். ஏனெனில் பாப்தாதாவுக்குத் தெரியும், சில நாடுகளில் ஒரு குறிப்பிட்ட நேரம், இன்னும் வேறு நில நாடுகளில் வித்தியாசமான நேரம் இருக்கிறதல்லவா? ஆனாலும் எல்லோரும் மிக உற்சாகத்துடன் அமர்ந்திருக்கிறார்கள். நினைவில் இருந்து கேட்டுக் கொண்டும் இருக்கிறார்கள். நல்லது.

**சேவைக்கான வாய்ப்பு உ.பி. (உத்திர பிரதேசம்) மற்றும் இந்தூர் மண்டலம்:** இவர்கள் எல்லோரும் டீச்சர்கள். இரண்டு பக்கமும் உள்ள டீச்சர்கள் நல்லது. பாப்தாதாவுக்கு டீச்சர்களைப் பற்றி பெருமையாக இருக்கிறது. ஏனென்றால் தைரியமாக சரண்டராகி முழு வாழ்க்கையையும் சேவையில் ஈடுபடுத்துவது என்று சங்கல்பம் எடுத்து விட்டனர். டீச்சர்ஸ் பக்கவாக இருக்கிறீர்கள் அல்லவா! பக்காவா? அல்லது கொஞ்சம் கொஞ்சம் கச்சாவா? டீச்சர்ஸ் கச்சாவாக இருக்கக் கூடாது. டீச்சர்ஸ் என்றால் தங்களுடைய தோற்றத்தின் மூலமாக, எதிர்காலத்தைக் காட்டக் கூடியவர்கள். இப்போது சங்கமயுகத்தின் எதிர்காலம், பரிஷ்தாபவ மற்றும் எதிர்காலத்தின் தோற்றம் தேவதா பவி ஆகவே எந்த குரூப் வந்திருக்கிறதோ அந்த சேவாதாரிகளுக்கு

டபுள் நஷா உள்ளது. பரிஷ்தா ஸோ தேவதா ஆகியே தீர வேண்டும் என்பது இதில் எல்லோரும் பக்கா தானே? ஆமாம் பாருங்கள் உங்கள் போட்டோ வருகிறது. போட்டாவில் வரக்கூடாது என்று ஒரு மாதிரியாக இருக்கக் கூடாது. நேராக பக்காவாக இருங்கள். ஏனென்றால் எப்போது கொஞ்சம் குழப்பம் உண்டாகிறதோ, அப்போது பயந்து விடுகிறார்கள். வெகு சீக்கிரமாகவே பயந்து விடுகிறார்.கள் ஆழமாக சிந்திப்பதில்லை. பயந்து விடுகின்றனர். மாறாக ஆழமாக சிந்தித்தால் மிகப் பெரிய குழப்பம் ஏற்பட்டாலும் சோதனை வந்தாலும் கூட, எப்படி சமுத்திரத்தின் ஆழத்தில் செல்பவர்கள் அதிகமாகப் பொருட்களை எடுத்துக் கொண்டு வருவதுபோல, மகிழ்ச்சியடைவார்களே தவிர பயப்பட மாட்டார்கள். மேலோட்டமாகப் பார்க்கக் கூடாது. மேலோட்டமாக பார்ப்பவர்களுக்கு மீன்கள் கிடைக்கலாம் ஆனால் ஆழமாகச் செல்பவர்களுக்கு நிறையப் பொருட்கள் கிடைக்கும். இதுபோல இங்கேயும் கூட ஏதாவதொரு விஷயம் நடந்தால், விஷயங்கள் வரும், நடக்கத்தான் செய்யும், இப்படி நடக்காது என்று பாப்தாதா சொல்ல மாட்டார். எவ்வளவு முன்னேறிக் கொணடே இருக்கிறீர்களோ, அவ்வளவு சூட்சுமமான விஷயங்கள் வரும். ஏனென்றால் பாஸ் வித் ஆனர் ஆக வேண்டுமல்லவா? டீச்சர்கள் என்ன ஆலோசனை செய்கிறீர்கள். பாஸ் வித் ஆனர் (மதிப்புடன் தேர்ச்சி) ஆக வேண்டுமா? அல்லது 33-மார்க் எடுத்து வெற்றி அடைந்தால் போதுமா? பாஸ் வித் ஆனர் ஆக வேண்டும் என்று நினைப்பவர்கள் கை உயர்த்துங்கள். இவர்களை போட்டோ எடுங்கள். நல்ல விதமாக எடுங்கள். நல்லது.

உங்களையும் போட்டோ எடுப்பார்கள் பயப்பட வேண்டாம். பாப்தாதாவை அந்த சமயத்தில் மறந்து விடுகிறீர்கள். தனியாகி விடுகிறீர்கள். இதன் காரணமாக சிறு விஷயம் கூட பெரிதாகத் தெரிகிறது. பாப்தாதா கம்பைண்டாக இருக்கின்றார். கம்பைண்டாக வைத்திருங்கள். அனுபவம் செய்தீர்களானால் மலையும் பஞ்சுபோல் ஆகி விடும். ஒன்றும் பெரிதல்ல எத்தனை முறை பாஸாகியிருக்கிறீர்கள். எத்தனை கல்பங்கள் பாஸாகியிருக்கிறீர்கள், தெரியுமா? நஷா இருக்கிறதா? அநேக முறை நான் பாஸாகியிருக்கிறேன், இப்போது திரும்பவும் ஆக வேண்டும். புதிய விஷயம் ஒன்றுமில்லை. மீண்டும் செய்ய வேண்டும். அவ்வளவு தான்.

இந்த நினைவு இருக்கட்டும். ஆகவே இந்தூர் யுபி -யுபி-க்கு சாகார் தந்தை தாயின் பாலனை நிறைய கிடைத்திருக்கிறது. ஆதலால் உ.பி. கமால் (அற்புதம்) செய்து காட்ட வேண்டும். மேலும் இந்தூருக்கு விசேஷமிருக்கிறது. சாகார் தந்தையின் பிரேரணை மூலமாக சென்டர் திறந்தது. அப்படித்தானே! இரண்டுக்கும் விசேஷம் உள்ளது. ஆகவே இப்போது இரண்டு பேரும் செய்யுங்கள் கமால். அப்படிப்பட்ட வாயுமண்டலம் தயார் செய்து காட்டுங்கள். எப்படி யாருக்காவது அறிமுகம் கொடுக்க வேண்டுமானால் என்ன சொல்கிறீர்கள். மதுபன் வந்து பாருங்கள் என்று சொல்கிறீர்கள் அல்லவா? இதுபோல உங்களுடைய ஜோனை, உங்களுடைய இடத்தை அந்த மாதிரி தயார் செய்யுங்கள். யாருக்காவது சொன்னால், இந்தூர் சென்று பாருங்கள், யுபி. சென்று பாருங்கள் என்னும் படியாக இருக்க வேண்டும் சரியா? பிடித்தமாக இருக்கிறதா? என்ன செய்ய முடியாது. உங்கள் ஒவ்வொரு மாஸ்டர் சர்வ சக்திவானுடைய சங்கல்பம் மூலமாக, பலம் மூலமாக நீங்கள் என்ன நினைக்கிறீர்களோ, அதைச் செய்ய முடியும் உறுதி இருந்தால் போதும் உறுதி என்னும் சாவியை சில சமயம் மாயை திருடி விடுகிறது. இந்த சாவியை சதா உபயோகியுங்கள். பத்திரமாக வைத்துக் கொண்டால் போதாது. சாவி இருக்கிறது என்று புத்தியில் இருந்தால் மட்டும் போதாது ஆனால் வேண்டிய சமயத்தில் உபயோகிக்க வேண்டும். நேரம் கழிந்து விடுகிறதல்லவா? பிறகு என்ன சொல்கிறீர்கள்? இப்படிச் செய்திருக்க வேண்டும், வேண்டும், வேண்டும் என்று சொல்கிறீர்கள். இனி இப்படி வேண்டும், இப்படிச் செய்திருக்க வேண்டும் என்று சொல்லக்கூடாது. வேண்டிய சமயத்தில் செய்ய வேண்டும். இப்படிச் செய்வீர்களானால் ஜோன் நம்பர்-1 ஆகி விடும். எல்லோருடைய லக்ஷியமும் நன்றாக இருக்கிறது. நம்பர்-1 ஆக வேண்டும். இருக்கிறதல்லவா லக்ஷியம்? இது தானே லக்ஷியம்? அல்லது எந்த நம்பர் கிடைக்கிறதோ, அதே போதும் என்று நினைக்கிறீர்களா? பாப்தாதாவுக்கும் கூட ஒவ்வொரு ஜோன் மீதும் அன்பிருக்கிறது ஏனென்றால், ஒவ்வொரு ஜோனிலும் ஏதாவதொரு விசேஷம் இருக்கிறது ஆனால் இப்போது பிரத்யக்ஷம் செய்யவில்லை. (செய்து காட்டவில்லை) முக்கியமானது விசேஷம். ஆகத்தான் போகிறது. ஆகத்தான் வேண்டும் என்பதல்ல, ஆகி விட்டிருக்கிறது திரும்பவும் செய்ய வேண்டும் அவ்வளவு தான். ஆகவே எல்லோருக்கும் குஷி தானே! ஒருபோதும் குஷியை இழந்து

விடாதீர்கள். குஷி இல்லையேல் வாழ்க்கையே இல்லை. சாரமற்ற வாழ்க்கையில் மகிழ்ச்சி இருக்காது சரி நல்லது ஏதாவது அற்புதம் செய்து காட்டுங்கள். இப்போது பாப்தாதா எல்லா ஜோன்களுக்கும் கூறியிருக்கின்றார். ஏதாவது புதுமை செய்து காட்டுங்கள் என்று.

இன்னும் புதுமை செய்து காட்டவில்லை. இப்படி பெரிய புரோகிராம் செய்ய வேண்டும். ஒவ்வொரு துறையினருக்கும் புரோகிராம் செய்ய வேண்டும். இதெல்லாம் செய்கிறீர்கள். நடந்து கொண்டுதானிருக்கிறது. நடந்து கொண்டேயிருக்கும். இப்போது ஏதாவது புதுமை செய்து காட்டுங்கள். இதில் எந்த ஜோன் முன்னே செல்கிறது என்று பார்க்கலாம். உள் நாடாயினும் சரி, வெளி நாடாயினும் சரி மற்றவர் காப்பியடிக்கும் படியாக இருக்க வேண்டும். புதுமை அப்படிப்பட்டதாக இருக்க வேண்டும். பார்க்கலாம். யார் செய்கிறார்கள் என்று? செய்யத்தான் வேண்டும். நல்லது. மிக நன்றாக வாய்ப்பை எடுத்துக் கொண்டீர்கள். பாப்தாதா கூறுகின்றார், யார் வாய்ப்பை ஒவ்வொரு விசேஷத்திலும் பயன்படுத்திக் கொள்கிறார்களோ அவர்கள் சான்ஸ்லர் ஆகி விடுகிறார்கள். யக்ஞ சேவையின் புண்ணியத்தை சேமித்து விட்டீர்கள். மிகப் பெரிய புண்ணியத்தை சேமித்து விட்டீர்கள். ஏனெனில் இங்கு வாயுமண்டலம் மற்றும் கவலையில்லாத உதவி கிடைக்கிறது. எந்த ஒரு பொறுப்பு பற்றிய கவலை இல்லை. எந்த டியூட்டி கிடைத்ததோ அதைத்தான் செய்ய வேண்டும். போதும். ஆகவே வருமானத்தை சேமித்தீர்கள். இரண்டு ஜோனும் சேமித்து விட்டீர்கள். நிறையவே சேமித்தீர்கள். கொஞ்சமாக சேமிக்கவில்லை. நிறைய சேமிப்பு. நல்லது.

**96-**தேசங்களிலிருந்து **900-**வெளிநாட்டு சகோதர சகோதரிகள் வந்திருக்கின்றனர். வெளிநாட்டினர் எண்ணிக்கையைப் பெருக்குவதில் நல்ல ரிகார்டு காண்பித்துக் கொண்டிருக்கிறார்கள். ஒரு பக்கம் எண்ணிக்கையை அதிகரிக்கிறார்கள். இன்னொரு பக்கம், அந்த பகுதியை (ஏரியா) சம்பன்னம் ஆக்குவதற்கான ஆர்வமும் நன்றாக இருக்கிறது பாப்தாதா கேள்விப்படுகின்றார். மெஜாரிட்டி எல்லா புறங்களிலும் இந்த இரண்டு விதமாகவும் ஆர்வம் இருந்து கொண்டிருக்கிறது. ஒவ்வொருவரும் தங்களுடைய பகுதியை சோதித்து செய்தி கொடுப்பதற்காக புரோகிராம் செய்து கொண்டிருக்கிறார்கள்.

விதவிதமான விதி மூலமாக செய்து கொண்டிருக்கிறார்கள். மேலும் என்ன செய்கிறீர்களோ, அதை நன்றாகவே செய்கிறீர்கள். உங்கள் மீது குற்றம் சுமத்துதவதற்கான வாய்ப்பை குறைத்துக் கொண்டிருக்கிறீர்கள். இந்த ஊக்கமும், உற்சாகமம் தன்னையும் பறக்க வைக்கிறது மேலும் மற்றவர்களுக்கும் இது பரவுகிறது. துக்கமான ஆத்மாக்களுக்கு எப்படி நீரில் மூழ்கிக் கொண்டிருப்பவர்களுக்கு ஒரு சிறு துரும்பும்கூட உதவியாயிருக்குமோ அதுபோல கொஞ்சம் உதவி கிடைக்கிறது. இதனால் அவர்களுடைய மனதிலிருந்து எந்த ஒரு ஆசி கிடைக்கிறதோ, அது உங்களுடைய புண்ணிய கணக்கில் சேமிப்பாகி விடுகிறது. இது ரகசியமான கணக்கு. எவ்வளவு பேருக்கு, இந்த பிராப்தி கிடைக்கிறதோ அது உங்கள் கணக்கில், பாக்கியமாக சேமிப்பாகிறது. மற்றபடி மீட்டிங் பற்றிய சமாச்சாரமும் கிடைத்தது. நல்ல கவனம் வைக்கிறீர்கள். உங்களுடைய ஸ்திதியிலும் முன்னேற்றம் உண்டாவ தற்கான வாய்ப்பையும் எடுத்துக் கொள்கிறீர்கள். மேலும் சேவைக்கான புரோகிராமிலும் கூட, எதிர்காலம் பற்றிய நல்ல புரோகிராம் செய்கின்றீர்கள். ஒரு ஆர்வம் நன்றாக இருக்கிறது. யார் சினேகியாக, சகயோகியாக இருக்கிறார்களோ, அவர்களை சகஜயோகி ஆக்குவதற்காக அருகாமையில் கொண்டு வந்திருக்கிறீர்கள். இப்படி பாரத வாசிகளும் செய்கிறார்கள் ஆனால் வெளிநாட்டினரும் மிக நன்றாகச் செய்கிறார்கள். இப்போது எல்லோரும் மெஜாரிட்டி எங்கெல்லாம் சேவை செய்கிறீர்களோ, வி.ஐ.பி. ஆக இருந்தாலும், சாதாரணமானவர்களாக இருந்தாலும், இங்கு ஏதோ கிடைக்கிறது என்று புரிந்து கொண்டிருக்கிறார்கள். கொஞ்சம் புதுமை இருக்கிறது. இப்படி இந்த வாயுமண்டலம் முன்னை விட போதுமான அளவு மாறி விட்டது. முன்பெல்லாம் எவ்வளவு கஷ்டப்பட்டு அழைத்துக் கொண்டிருந்தார்கள். இப்போது அவர்கள் தானாகவே கூறுகிறார்கள், நாங்களும் வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ள அனுமதியுங்கள் என்று. வித்தியாசமாக இருக்கிறதல்லவா? ஆதலால் வெளி நாட்டு சேவையிலும் கூட பாப்தாதாவுக்கு குஷியாக இருக்கிறது ஆனால் சுயசேவையில் என்ன சொன்னார்கள்? தீவிர புருஷாரத்தி. புருஷாரத்தியாக எல்லோருமே இருக்கிறார்கள் ஆனால் தீவிர புருஷாரத்தியாக வேண்டும். என்ன நினைத்தீர்களோ, அதைச் செய்ய வேண்டும். தந்தை சொன்னார், குழந்தைகள் செய்து விட்டனர். இது தான் உங்கள் ஜகதம்பாவின் யுக்தியாக இருந்தது. நம்பர்-1 ஆகி விட்டார்.

இன்று இரவு சிந்தித்துப் பாருங்கள், இங்குமங்கும் சென்று கொண்டிருந்தால் தந்தை என்ன சொன்னாரோ அதைச் செய்ய வேண்டும். நடக்க வேண்டும். சிந்திக்க வேண்டும், செய்ய வேண்டும். தந்தை என்ன சொன்னாரா, அதைச் செய்யத் தான் வேண்டும், மற்றபடி விருத்தியாகிக் கொண்டிருக்கிறது. கவனமும் இருக்கிறது. புரோகிராமும் கூட நன்றாகவே செய்கிறீர்கள். நல்லது. டபுள் வாழ்த்துக்கள்.

வெவ்வேறு துறையைச் சார்ந்தவர்களும் வந்திருக்கிறார்கள். பாப்தாதாவுக்குத் தெரியும் தங்கள், தங்களுடைய மீட்டிங்கும் செய்கிறார்கள் எந்தத் துறையைச் சார்ந்தவர்கள் வந்திருக்கிறார்களோ பிளான் நன்றாகவே செய்கிறார்கள். இப்போது கொஞ்சம் சேர்க்க வேண்டும். எப்போதெல்லாம் மீட்டிங் செய்கிறீர்களோ, அதில் சுயம் மற்றும் சேவை என்ற இரண்டிலும் பேலன்ஸ் (சரிசமம்) வைத்து, ஒருவருக்கொருவர் உற்சாகம் கொடுக்க வேண்டும் ஆனால் இத்துடன் சுயத்திற்கான உற்சாகம், உல்லாசத்தையும் கொடுங்கள், பேலன்ஸ் வையுங்கள். ஆகவே இப்படி இரண்டையும் செய்தால் டபுள் பிளஸிங் (இரண்டு ஆசிகள்) கிடைக்கும். இப்படி தானாகவே ஆசிகள் கிடைக்கிறது. கொடுக்க வேண்டியதில்லை, தானாகவே கிடைக்கிறது. பாப்தாதா பார்த்தார், சுய உன்னதிக்காவும் கூட சமாச்சாரம் அனுப்பியிருக்கிறார்கள் (ஸ்பார்க் மீட்டிங் சமாச்சாரம் ரமேஷ் சகோதரர் எழுதி, சந்தேஷி மூலமாக பாப்தாதாவுக்கு அனுப்பியிருக்கின்றார்) ரமேஷ் என்ன செய்கிறாரோ, சுய உன்னதிக்காவும் எழுதியிருக்கின்றார். இதில் அடிக்கடி கவனம் கொடுங்கள். சேவையில் நடைமுறையாக செய்து விடுகிறீர்கள் அல்லது செய்யவில்லை என்பது பற்றியும் சார்ட் எழுதுங்கள். மற்றபடி சமாச்சாரம் கிடைத்தது. ஆலோசனை நன்றாக இருக்கிறது. யாரெல்லாம் மீட்டிங் செய்திருக்கிறார்களோ, அவர்களுடைய சமாச்சாரம் பாபாவிடம் வந்து சேர்ந்தது. இதுவரையிலும் ஒரு துறையைச் சேர்ந்தவர்கள் மட்டும் பதில் கொடுக்கவில்லை. நினைவிருக்கிறதா? எது பற்றி பதில் தரவில்லை? பாப்தாதா விரும்புகின்றார் ஒவ்வொரு துறையிலும் ஒரு விசேஷமான சிநேகியாகவும், சகயோகியாகவும் இருக்கின்ற விஜபியாக இருந்தாலும், மைக்காக இருந்தாலும், சகயோகம் செய்ய வேண்டு மென்பதில் விருப்பமுடையவராக இருந்தாலும் தந்தையின் முன்னே

வரட்டும். எல்லாத் துறையிலிருந்தும், ஒரு துறை மட்டுமல்ல. எப்போதாவது ஒரு ஐபி வருகிறார், வி.ஐ.பி. வருகிறார். வரட்டும், வெல்கம் ஆனால் பாப்தாதா ஒரே சமயத்தில் ஒவ்வொரு துறையிலிருந்தும் விசேஷமான தகுதியுள்ள குரூப்பை பார்க்க விரும்புகின்றார். ஐ.பி. குரூப் வருகிறது ஆனால் துறைகளின் ஒவ்வொரு விசேஷ மைக், நீங்கள் சக்தி கொடுக்க, அவர்கள் பேச்சாளராக இருக்க வேண்டும். நீங்கள் மைட், அவர்கள் மைக் ஆகவே இப்போது இதைச் செய்து காண்பிக்க வேண்டும். வெளிநாட்டினர் புரோகிராம் செய்கிறார்கள். அதில் வந்து விடுகிறார்கள். கால் ஆப் டைம் செய்கிறார்கள் அதிலும் கூட ஐ.பி. வந்து விடுகிறார்கள். இவர்களை இந்தத் துறையைச் சார்ந்தவர்கள் என்ற வகையில் மைக் அழைத்து வர வேண்டும் இதை கவனத்தில் வைக்க வேண்டும் இப்படி ஒவ்வொரு துறையிலிருந்தும் பாரதத்தில் தயாராக வேண்டும். பாப்தாதா சந்திப்பதற்கான தேதி கொடுப்பார். இனி எல்லா துறையிலிருந்தும் ஒவ்வொரு மைக் இருக்கும்படியாக, அப்படிப்பட்ட குரூப் கொண்டு வாருங்கள். இதற்காக நேரம் கொடுக்கப்படும். நல்லது.

எல்லோருமே சங்கல்பம் செய்திருக்கிறார்கள். தீவிர புருஷாரத்தம் செய்து நம்பர்-1 ஆகத்தான் வேண்டும். சங்கல்பம் செய்தீர்களா? கை உயர்த்துங்கள். நல்லது செய்தீர்கள். இப்போது டீச்சர்ஸ் கை உயர்த்துகிறார்கள். முதலாவது வரிசை இருக்கவே இருக்கிறது. நல்லது. பாப்தாதா இந்த ஒரு டைரக்ஷனும் கொடுத்தார். அதாவது முழு நாளில் இடையிடையே 5-நிமிடங்கள் கிடைத்தாலும் சரி இதில் மனப்பயிற்சி செய்யுங்கள் ஏனெனில் தற்காலம் பயிற்சிக்கான காலமாக இருக்கிறது. 5-நிமிடங்களில் மனப்பயிற்சியை பரந்தாமத்திலிருந்து ஆரம்பம் செய்யுங்கள். சூக்ஷம வதன் பரிஷ்தாவை நினைவு செய்யுங்கள். பிறகு பூஜ்ய ரூபத்தை நினைவு செய்யுங்கள், பிறகு பிராமண ரூபத்தை நினைவு செய்யுங்கள், பிறகு தேவதா ரூபத்தை நினைவு செய்யுங்கள. எத்தனை ஆயிற்று ஐந்து. ஆகவே 5 நிமிடங்களில் இந்த பயிற்சி (எக்ஸர்சைஸ்) செய்யுங்கள் மேலும் முழு நாளில் இங்குமங்கும் சென்று கொண்டிருந்தாலும் செய்ய முடியும். இதற்காக மைதானம் அவசியமில்லை. ஓட வேண்டியதில்லை, நாற்காலியும் வேண்டாம். இருக்கையும் வேண்டாம், எந்த ஒரு கருவியும் வேண்டாம். இந்த விதமாக உடற்பயிற்சி வேண்டுமானாலும்

செய்து கொள்ளலாம், தடையில்லை ஆனால் இந்த மனதிற்கான (டிரில்) பயிற்சி செய்தால் மனதை குஷியாக வைத்துக் கொள்ள முடியும். ஊக்கம், உற்சாகத்திலும் இருக்கும்படியாகச் செய்யும். பறக்கும் கலையை அனுபவம் செய்விக்கும். ஆகவே இப்போதே இந்த டிரில் எல்லோருமே ஆரம்பம் செய்யுங்கள். பரந்தாமத்திலிருந்து, தேவதை வரை. நல்லது.

நாலா பக்கமுள்ள சதா தன்னுடைய விருத்தி மூலம் ஆன்மீக சக்திசாலியான வாயுமண்டலம் உருவாக்கக்கூடிய தீவிர புருஷாரத்தி குழந்தைகளுக்கு சதா தன்னுடைய ஸ்தானம் மற்றும் ஸ்திதியை சக்திசாலி வைப்ரேஷனில் அனுபவம் செய்விக்கக் கூடிய திட சங்கல்பமுள்ள சிரேஷ்ட ஆத்மாக்களுக்கு, சதா ஆசி வழங்குதல் மற்றும் ஆசி பெற்றுக் கொண்டும் இருக்கக்கூடிய இரக்க மனமுடைய ஆத்மாக்களுக்கு சதா தனக்குத்தானே பறக்கும் கலையை அனுபவம் செய்யக்கூடிய டபுள் லைட் ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்தே.

தாதிகளுடன்: உங்களுடைய குரூப் எல்லோருக்கும் சக்தி கொடுத்துக் கொண்டிருக்கிறது. கொடுக்கிறதல்லவா? அனுபவிகள் அல்லவா? அனுபவிகளின் பிரபாவம் அதிகம் உதவுகிறது. ஆதியிலிருந்து ஆத்மாக் களாகிய உங்களிடம் தந்தை மற்றும் தாய் இருவரும் அனுபவி மூர்த்தி யாவதற்கான சம்ஸ்காரத்தை உண்டாக்கி விட்டார்கள். உண்டாக் கினார்கள் அல்லவா? பாப்தாதாவுக்கு குஷியாக இருக்கிறது. நல்லது. சரிதானா? எப்படிப்பட்ட உடல் நிலை இருந்தாலும், யக்ஞத்தின் அலங்காரம் நீங்கள். இங்குமங்கும் ஓடி ஆடி சேவை செய்ய முடியாம லிருக்கலாம் ஆனால் உங்களைப் பார்த்ததும், உங்களைச் சந்தித்ததும் அவர்களுக்குப் பலம் கிடைத்து விடுகிறது. ஆதி ரத்தினங்கள் அல்லவா? ஆகவே ஆதி சம்ஸ்காரம் (பவர்புல்) சக்தி நிறைந்ததாக இருக்கிறது. ஆதியில் நடந்த பட்டி நினைவிருக்கிறதல்லவா? அந்த சாகார் பாலனையை எல்லோருமே நினைவு செய்கிறார்கள். நல்லது.

மோகினி சகோதரி தாதிஜியின் நினைவை பாப்தாதாவுக்கு அளித்தார்: பாப்தாதாவும் நிறைய நினைவுகளை அளிக்கின்றார். தந்தை மட்டும் நினைவு செய்கிறார் என்பதல்ல, எல்லோருடைய நினைவும்

இருக்கிறது. தந்தையும் நினைவு செய்கின்றார். ஆதலால் எப்படி பிரம்மாபாபா ஒரு உதாரணமாக இருந்தாரோ, அதுபோல தாதியும் கூட ஒரு உதாரணம் தான். உடனடியான பார்ட்டை எப்படி சகஜமானதாக்கி விட்டார். பிரம்மாபாபா யக்ஞத்தைப் படைத்தார் ஆனால் தாதி பிரம்மாபாபாவை விட அதிக காலம் இதை பராமரித்தார். ஆதலால் எல்லோருடைய உள்ளத்திலும் தாதியினுடைய நினைவு இருக்கிறது. ஏனெனில் அவருடைய குணம், அவருடைய முகம், அவருடைய நடத்தை விசேஷமாக இருந்தது. ஆகவே தான் எல்லோருடைய உள்ளத்திலும் விசேஷமான நினைவு இருந்து கொண்டிருக்கிறது. இப்போது எல்லோருமே யோகம் செய்தீர்கள் அல்லவா? இது அன்பின் அடையாளம். இனி மேலும் தீவிரமாக யோகம் செய்யுங்கள். இதனால் தாதி மதுபன் வந்து சேர்ந்து விடுவார். எப்படி ஆக்ஸிஜென் (பிராண வாயு) கொடுக்கிறார்கள் அல்லவா? வென்டிலேட்டர் மூலம் கொடுக்கிறார்கள் என்றால், அது விஞ்ஞான சக்தி மூலம் செய்கிறார்கள் ஆனால் உங்களுடைய சைலன்ஸ் சக்தி குறைந்ததா என்ன? இன்னும் யோகம் செய்யுங்கள். சக்திசாலி யோகம், பாருங்கள் உங்கள் சக்திசாலி யோகத்தின் மூலம் டாக்டர்களுக்கு டச்சிங் ஆனது. கொஞ்சம் விதியை மாற்றினார்கள். இப்போது கொஞ்சம் கொஞ்சமாக செய்து கொண்டிருக்கிறார்கள். உங்கள் எல்லோருடைய திட சங்கல்பம் மூலம் செய்முறையும் மாறும். சரிதானா? இனியும் யோகம் செய்யுங்கள். யோகம் செய்வதை குறைத்து விடாதீர்கள். நல்லது. யாரெல்லாம் அங்கு சேவாதாரிகளாக இருக்கிறார்களோ முன்னி சகோதரி இருக்கிறார், யோகினி இருக்கிறார், குப்தா இருக்கிறார் மற்றும் குமாரிகள் கூட இருக்கிறார்கள். இவர்கள் எல்லோருமே மனப்பூர்வமாக சேவை செய்து கொண்டிருக்கிறார்கள். பாப்தாதா உங்களுடைய உள்ளத்தின் உழைப்பைப் பார்த்து குஷியடைகின்றார். மேலும் உங்கள் முயற்சி நிச்சயமாக அதன் ரூபத்தைக் காட்டும்.

நிர்வயர் சகோதரர் எல்லோருடைய நினைவையும் அளித்தார்: எல்லோருடைய மனமும் இங்கு தான் இருக்கிறது. உடல் அங்கே இருக்கிறது. (இப்போது எல்லோருக்கும் ஒரு சங்கல்பம் தான் இருக்கிறது. தாதி நடக்க வேண்டும், சுற்ற வேண்டும்). இது நடக்கத் தான் போகிறது. நல்லது.

**பிரிஜ் மோகன் சகோதரரிடம்:** டெல்லியில், ஏதாவதொரு புதுமை கண்டு பிடியுங்கள். இதை எல்லோரும் செய்யும் படியாக இருக்க வேண்டும். சிறியவர், பெரியவர் எல்லோருமே செய்யும் படியாக இருக்க வேண்டும்.

**வெளிநாட்டைச் சார்ந்த முக்கிய சகோதரிகளிடம்:** மிக்க நன்று வெளி நாட்டில் அனுபவி ஆத்மாக்கள் இருப்பதன் காரணமாக நல்ல விதமாக முன்னேறிக் கொண்டிருக்கிறார்கள். ஏனென்றால் உங்களிடம் தந்தையின் நேர்முக பாலனையின் சக்தி உள்ளது. அந்த விதை பலன் அளித்துக் கொண்டிருக்கிறது இப்போது சேவையில் விருத்தி மற்றும் ஊக்கம் உற்சாகம் நன்றாக இருக்கிறது. அதிகரித்துக் கொண்டிருக்கிறது. ஆரம்பத்தில் கொஞ்சம் அலக்ஷியம் காட்டினார்கள். இப்போது அது முடிந்து விட்டது. கலாச்சாரமும் முடிந்து விட்டது. ஏனெனில், உங்களைப் பார்த்து, உதாரணம் அல்லவா? எல்லோரும் புரிந்து கொண்டு விட்டார்கள். என்ன செய்ய வேண்டும் என்பதைத் தெரிந்து கொண்டார்கள். மற்றபடி பிளான் நன்றாகச் செய்திருக்கிறீர்கள். நீங்கள் குரூப் குரூப்பாகப் பிரித்து பயிற்சி கொடுத்துக் கொண்டிருக்கிறீர்கள் அல்லவா, அது மிகவும் நன்றாக இருக்கிறது. டீச்சர்களுக்கும் உற்சாகம், வருபவர்களுக்கும் உற்சாகம் உண்டாகிறது. எந்த டிபார்ட்மெண்டுக்கு என்ன வேண்டுமோ, அது கிடைத்து விடுகிறது. இது நன்றாக இருக்கிறது. மேலும் இதில் கவனம் கொடுப்பதும் மிகவும் அவசியம். நன்றாகச் செய்திருக்கிறீர்கள். யக்ஞத்திலும் கவனம் கொடுத்தீர்கள். இதுவும் நன்றாக இருக்கிறது. நன்றாகச் செய்தீர்கள். ஏனெனில் யக்ஞத்தைச் சேர்ந்தவர்கள் அல்லவா? சேவைக்காகத்தான் வெளிநாடு சென்றிருக்கிறீர்கள். ஆதலால் உங்களுடைய கொஞ்சம் சைகையும் கூட நன்றாக இருக்கிறது. இது சரியல்ல என்று நினைக்காதீர்கள். நல்லது தான். பாப்தாதாவுக்கு குஷி தான். இவ்வளவு நேரம் கொடுக்கிறீர்கள் அல்லவா? மேலும் மற்றவர்களுடைய ஆலோசனைக்கும் செவி சாயுங்கள். இதன் மூலமாக எல்லோருமே ஒன்று தான் என்பதைப் புரிந்து கொள்ளட்டும். இவர்கள் எல்லோருமே ஒருவர் தான், 6-பேர் அல்ல என்று புரிந்து கொள்ளட்டும். இப்படி எல்லா ஆலோசனைகளிலும் ஒருவருக்கொருவர் நெருக்கமாக இருக்கட்டும். நடந்து கொண்டு தானிருக்கிறது. பாப்தாதா பார்த்துக் கொண்டிருக்கின்றார். செய்திருக்கிறீர்கள். இன்னும் செய்து

கொண்டேயிருப்பீர்கள். (உள்ளத்திலிருந்து மிக்க நன்றி) உங்களுக்கு மிக்க நன்றி. ஓம் சாந்தி.

✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳
✳✳✳✳✳✳✳✳

# 31.03.2007 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# உதாரணமானவராகி தன்னுடைய முகத்தோற்றத்தின் மூலம் தந்தையை வெளிப்படுத்தக்கூடிய, சேவை செய்வதோடு, நிர்மலமான பேச்சு மற்றும் பணிவான ஸ்திதியில் சமநிலை வைக்க வேண்டும்!

இன்று பாப்தாதா நாலா பக்கங்களிலுமுள்ள குழந்தைகளின் பாக்கிய ரேகையைப் பார்த்து மகிழ்ச்சியடைகின்றார். எல்லா குழந்தைகளின் நெற்றியில் பிரகாசித்துக் கொண்டிருக்கும் ஜோதியின் ரேகை மின்னிக் கொண்டிருக்கிறது. கண்களில் ஆன்மீகத்தின் பாக்கிய ரேகை தென்படுகிறது வாய்மொழியில் சிரேஷ்ட வாணியின் பாக்கிய ரேகை காணப்படுகிறது. உதடுகளில் ஆன்மீகப் புன்முறுவலைப் பார்க்கின்றார். கைகளில் பரமாத்மாவின் எல்லா பொக்கிஷங்களின் ரேகை தென்படுகிறது. ஒவ்வொரு நினைவிலும் நூறு மடங்கு ரேகைகள் தென்படுகின்றன. ஒவ்வொருவருடைய இதயத்திலும் தந்தையின் அன்பில் மூழ்கிக் கொண்டிருக்கின்ற ரேகையைப் பார்க்கின்றார். இப்படிப்பட்ட சிரேஷ்ட பாக்கிய ரேகைகளை சுயம் தந்தை ஒவ்வொரு சிரேஷ்ட கர்மம் என்ற பேனா மூலமாக வரைந்திருக்கின்றார். இப்படிப்பட்ட சிரேஷ்டமான பாக்கியம், எது அழிவற்றதாக இருக்கிறதோ, அது இந்த பிறவிக்கு மட்டுமல்ல, அநேக பிறவிகளின் அழிவற்ற பாக்கிய ரேகைகளாகும். அழிவற்ற தந்தை மற்றும் அழிவற்ற பாக்கியத்தின் ரேகைகளாக இருக்கின்றன. இந்த சமயத்தில் சிரேஷ்ட கர்மத்தின் ஆதாரத்தில் எல்லா ரேகைகளும் பிராப்தியாகின்றன. இந்த சமயத்தில் செய்கின்ற முயற்சியானது, அநேக ஜன்மங்களுக்கு பாக்கியத்தை உண்டாக்கி விடுகிறது.

பாப்தாதா எல்லா குழந்தைகளுக்கும் இந்த சமயத்தில் அநேக பிறவிகளுக்கும் எந்த ஒரு பாக்கியம் கிடைக்கவிருக்கிறதோ, அதை இந்த பிறவியில் புருஷாரத் (முயற்சி) மூலமான பாக்கியத்தின் பிராப்தியை இப்போதே பார்க்க விரும்புகின்றார். எதிர்காலத்தில் மட்டுமல்ல, இப்போதும் கூட இந்த எல்லா ரேகைகளும் சதா அனுபவத்தில் வர வேண்டும். ஏனென்றால், இப்போதையை இந்த திவ்ய சம்ஸ்காரம் உங்களுடைய புதிய உலகை ஸ்தாபனை செய்து கொண்டிருக்கிறது. ஆகவே, சோதனை செய்யுங்கள் சோதனை செய்யத் தெரியுமல்லவா! நீங்களே உங்களுக்கு சோதனையாளர் ஆகுங்கள். ஆதலால் எல்லா பாக்கிய ரேகைகளும் இப்போதும் கூட அனுபவம் ஆகிறதா? இந்த பாக்கியத்தின் அனுபவம் கடைசியில் தான் ஆகும் என்று நினைக்கவில்லை தானே! பிராப்தி இப்போது தான் என்றால், பாக்கியத்தின் அனுபவமும் கூட இப்போது தான் செய்ய வேண்டும். எதிர்கால உலகத்தின் சம்ஸ்காரம் இப்போது நடைமுறை வாழ்க்கையில் அனுபவம் ஆக வேண்டும். அப்படியானால் என்ன சோதனை செய்வீர்கள்? எதிர்கால உலக வாழ்க்கையின் சம்ஸ்காரம் பற்றி மகிமை செய்கிறீர்கள் எப்படி? ஒரு இராஜ்யம் இருக்கும் என்று நினைவிருக்கிறதல்லவா, அந்த உலகம் எத்தனை முறை அந்த உலகில் இராஜ்யம் செய்திருக்கிறீர்கள்? நினைவிருக்கிறதா? அல்லது ஞாபகப்படுத்தினால் தான் நினைவுக்கு வருகிறதா? எப்படி இருந்தது என்பது நினைவில் இருக்கிறதல்லவா? ஆனால் அதே சம்ஸ்காரம் இன்றைய வாழ்க்கையில் பிரத்யக்ஷ ரூபத்தில் இருக்கிறதா? (நடைமுறையில்) ஆகவே சோதித்துப் பாருங்கள். இப்போதும் கூட மனதில், புத்தியில், சம்மந்தம், தொடர்பு மற்றும் வாழ்க்கையில் ஒரு இராஜ்யம் என்பதாக இருக்கிறதா? அல்லது சில சமயம் இராஜ்யத்தோடு கூட மாயாவின் இராஜ்யமும் கூட இல்லை தானே? எப்படி வருங்கால பாக்கியத்தில் ஒரே ஒரு இராஜ்யம் தானே தவிர இரண்டு இல்லை. ஆதலால் இப்போதும் கூட இரண்டு இராஜ்யம் இல்லை தானே? எப்படி வருங்கால இராஜ்யத்தில் ஒரு இராஜ்யத்தோடு கூடவே ஒரு தர்மம் இருக்கிறது. அந்த தர்மம் எது? “சம்பூரண பவித்திரத்தாவின் தாரணை என்ற தர்மம்” ஆதலால் இப்போது சோதியுங்கள் பவித்திரத்தா சம்பூரணமாக இருக்கிறதா? சொப்பனத்திலும் கூட அபவித்திரத்தாவின் அடையாளம் எதுவுமே இருக்ககூடாது. பவித்திரத்தா (தூய்மை)

என்றால், சங்கல்பம் (எண்ணம்) பேச்சு, செயல் மற்றும் சம்மந்தம் தொடர்பில் ஒரே தாரணை சம்பூரண பவித்திரத்தாவாக இருக்கட்டும். பிரம்மாச்சாரி ஆக இருக்கட்டும். உங்களைச் சோதிக்கத் தெரியுமா? யாருக்கு தன்னை சோதிக்கத் தெரியுமோ அவர்கள் கை உயர்த்துங்கள். வரும், செய்து கொண்டுமிருக்கிறீர்கள், செய்கிறீர்கள். செய்கிறீர்களா? டீச்சர்களுக்கு வருகிறதா? டபுள் ஃபாரினர்ஸ்களுக்கு வருகிறதா? ஏன்? இப்போதைய பவித்திரத்தாவின் காரணமாகவே உங்களுடைய ஜடஸித்திரத்திடமிருந்து பவித்திரத்தாவை வேண்டுமென்று கேட்கின்றார்கள். பவித்திரத்தா என்றால் ஒரு தர்மம். இப்போது ஸ்தாபனையாகிறதல்லவா? அது எதிர்காலத்திலும் நடக்கும். இதே போல வருங்காலத்திற்கு என்ன மகிமை இருக்கிறது? ஒரு இராஜ்யம், ஒரு தர்மம் இப்போது ஸ்தாபனையாகிறதல்லவா? அது எதிர்காலத் திலும் நடக்கும். இதே போல வருங்காலத்திற்கு என்ன மகிமை இருக்கிறது? ஒரு இராஜ்யம், ஒரு தர்மம் இத்தோடு கூடவே சதா சுகம், சாந்தி சம்பத்து (செல்வம்), அகண்ட சுகம், அகண்ட சாந்தி, அகண்ட சம்பத்து (அகண்ட என்றால் தொடர்ந்து) ஆதலால் இப்போது உங்களுடைய சுய இராஜ்ய வாழ்க்கையில், அது விஷ்வ இராஜ்யம். மேலும் இந்த சமயத்தில் சுய இராஜ்யம். ஆகவே சோதியுங்கள். அழிவற்ற சுகம், ஏதாவது நிவாரணத்தின் (சால்வேஷன்) ஆதாரத்தில் சுகமானது ஆதாரப்பட்டு இருக்கவில்லை தானே! ஒருபோதும் துக்கத்தின் அலை, ஏதாவதொரு காரணமாக அனுபவம் ஆகக்கூடாது. ஏதாவது பெயர், புகழ், மரியாதை ஆதாரத்தில் சுகம் ஆதாரப்பட்டதாக இல்லை தானே? ஏன்? இந்த பெயர், புகழ், மரியாதை எல்லாமே அழியக்கூடியது. அல்ப காலத்திற்குத்தான். ஆதலால் அழியக்கூடியதின் ஆதாரத்தில் அழிவற்ற சுகம் கிடைக்காது. சோதித்துக் கொண்டேயிருங்கள். இப்போதும் கூட கேட்டுக் கொண்டேயிருங்கள். உங்களுக்கு நீங்களே சோதித்துக் கொண்டேயிருங்கள். இதன் மூலமாக இப்போதையை சம்ஸ்காரம், வருங்கால உலகத்தின் பாக்கியத்தில் எவ்வளவு வித்தியாசம் இருக்கிறது என்று தெரிந்து விடும். நீங்கள் எல்லோருமே, பிறந்த நாள் முதலாகவே பாப்தாதாவிடம், உறுதிமொழி (வாய்தா) கொடுத்திருக்கின்றீர்கள். நினைவிருக்கிறதா வாய்தா? வாய்தா நினைவிருக்கிறதா? மறந்து விட்டதா? வாய்தா இது தான். "நாங்கள் எல்லோரும் தந்தைக்குத் துணையாக இருந்து, விஷ்வ கல்யாணகாரியாகி புதிய சுகமயமான உலகை ஸ்தாபனை

செய்பவர்களாக இருப்போம்” நினைவிருக்கிறதா? நினைவிருக்கிறதா உங்களுடைய வாய்தா? இருக்கிறதா நினைவு? கை உயர்த்துங்கள். பின்னால் அமர்ந்திருப்பவர்களும் கூட கை உயர்த்துகிறார்கள். இங்கேயும் கூட கை உயர்த்துகிறார்கள். பக்கா வாய்தாவா? அல்லது கொஞ்சம் குழப்பம் உண்டாகி விடுகிறதா? புதிய உலகம் இப்போது பரமாத்மா சம்ஸ்காரத்தின் ஆதாரத்தில் செய்பவர்களாக இருக்கின்றீர்கள். ஆகவே இப்போது புருஷாரத்தம் மட்டுமே செய்வதல்ல. முயற்சியின் பாக்கியத்தையும் கூட இப்போது அனுபவம் செய்ய வேண்டும். சுகத்தோடு, சாந்தியையும் கூட சோதியுங்கள். அசாந்தியான சூழ்நிலை அசாந்தியான வாயுமண்டலம், இதிலும் கூட நீங்கள். சாந்திக்கடலான பாபாவின் குழந்தைகள் சதா கமல புஷ்ப சமான் (தாமரை மலர் போன்று) அசாந்தியையும் கூட, சாந்தி வாயுமண்டலமாக பரிவர்த்தனை செய்ய முடியுமா? சாந்தியான வாயுமண்டலத்தில், சாந்தியை அனுபவம் செய்வது ஒன்றும் பெரிய விஷயமல்ல ஆனால் உங்களுடைய உறுதிமொழி (வாய்தா) எது? அசாந்தியை, சாந்தியாக பரிவர்த்ததனை செய்பவர்கள் என்பது தானே? ஆதலால் சோதியுங்கள் செய்கிறீர்கள் அல்லவா, சோதனை? பரிவர்த்தகர்கள் நீங்கள் (பரிவர்த்தனை செய்யக்கூடியவர்கள்). எதற்கும் வசப்பட்டு விடுபவர்கள் இல்லை தானே? பரிவர்த்தக், பரிவர்த்தனை செய்பவர்கள் ஒருபோதும் புற வசத்திற்கு ஆளாக முடியாது இவ்விதமாக சம்பத்து, அகண்ட சம்பத்து என்பது சுய இராஜ்ய அதிகாரிகளாக இருக்கும் உங்களுக்கு ஒன்றுமே இல்லை. ஞானம், குணம் மற்றும் சக்திகள் தான் சுய இராஜ்ய அதிகாரிகளுடைய சம்பத்துக்கள் (சொத்து) ஆதலால் சோதியுங்கள். ஞானத்தின் முழு விஸ்தாரத்தையும், சாராம்ச ரூபத்தில் தெளிவாக புரிந்து கொண்டு விட்டீர்கள் அல்லவா? ஞானம் என்பதன் பொருள் இதுவல்ல. அதாவது சொற்பொழிவு செய்வது கோர்ஸ் செய்விப்பது மட்டுமல்ல. ஞானம் என்பதன் பொருள் புரிந்து கொண்டிருப்பது. ஆதலால் ஒவ்வொரு சங்கல்பமும், ஒவ்வொரு கர்மமும், ஒவ்வொரு பேச்சும், ஞானமுள்ளதாக அதாவது விவேக பூர்வமாக இருந்து செய்கிறீர்களா? எல்லா குணங்களும் நடைமுறை வாழ்க்கையில் எழுச்சியுடன் இருக்கிறதா? எல்லாமிருக்கிறதா? யதா சக்தி (சுய சக்தி) மட்டுமே இருக்கிறதா? இவ்விதமாக சர்வ சக்திகள் உங்களுடைய தலைப்பாக இருக்கிறது. மாஸ்டர் சர்வ சக்திவான். சக்திவான் அல்ல

அப்படியானால் சர்வ சக்திகள் சம்பன்னமாக இருக்கிறதா? மேலும் இன்னொரு விஷயம் சர்வ சக்திகள் வேண்டிய சமயத்தில் ஆஜராக இருக்கிறதா? அல்லது காலம் கடந்த பின் நினைவுக்கு வருகிறதா? சோதியுங்கள். மூன்று விஷயங்கள். ஒரு இராஜ்யம், ஒரு தர்மம் மற்றும் அழிவற்ற சுகம், சாந்தி, சம்பத்து, ஏனென்றால் புதிய உலகில் இப்போது சுய இராஜ்யமாக இருக்கின்ற சமயத்தில் இருக்கின்ற அனுபவம், பிறகு இருக்காது. இப்போது இந்த சம்ஸ்காரம் எழுச்சியுடன் இருந்தால் தான், அநேக பிறவிகள் பாக்கியம் என்ற ரூபத்தில் இருக்கும் ஆனால் தாரணை செய்து கொண்டிருக்கிறோம். ஆகி விடும், கடைசியில் நிறைவேறி விடும் என்று புரிந்து கொண்டிருக்கவில்லையல்லவா?

பாப்தாதா ஆரம்பத்திலேயே ஜாடையாக காட்டி விட்டார். அதாவது வெகு கால அப்பியாசம் இப்போது செய்து கொண்டிருக்கின்ற பயிற்சி வெகு கால பிராப்திக்கு ஆதாரமாக இருக்கிறது கடைசியில் ஆகி விடும் என்று நினைக்கக் கூடாது. ஆகி விடும் என்பதல்ல. ஆகியே தீர வேண்டும். ஏன்? சுய இராஜ்ய அதிகாரம் இப்போதிருக்கிறதல்லவா, இது வெகு கால பயிற்சி செய்ததாக இருக்க வேண்டும். ஒருவேளை இந்த ஒரு பிறவியில் அதிகாரி ஆக முடியவில்லை, அடிமையாகி விடுகிறீர்கள் என்றால், அநேக பிறவிகள் எப்படி அதிகாரியாக இருக்க முடியும்? ஆகவே தான், பாப்தாதா நாலா பக்கங்களிலுமுள்ள எல்லோருக்கும் ஜாடையாகக் கூறுகின்றார் எந்த விதமான சைகை? இப்போது சமயத்தின் வேகம் தீவிர கதியில் சென்று கொண்டிருக்கிறது. ஆதலால் எல்லா குழந்தைகளும் இப்போது புருஷாரத்தியாக இருக்கக் கூடாது. தீவிர புருஷாரத்தியாகி, புருஷாரத் தத்தின் பாக்கியத்தை இப்போது வெகுகாலம் அனுபவம் செய்ய வேண்டும். தீவிர புருஷாரத்தியின் அடையாளம், பாப்தாதா இதற்கு முன்பும் கூறியிருக்கின்றார். தீவிர புருஷார்த்தி சதா மாஸ்டர் வள்ளல் ஆக இருப்பார். பெறுபவராக இருக்க மாட்டார் கொடுப்பவராக இருப்பார். மாறாக இது தான் எனது புருஷாரத்தம், இவர் செய்தால் நானும் செய்வேன், இவர் மாறினால் நான் மாறுவேன். இவர் மாறட்டும், இவர் செய்யட்டும் என்று சொன்னால் இது வள்ளல் தன்மையின் அடையாளம் அல்ல. யார் செய்தாலும் சரி செய்யா விட்டாலும் சரி, நான் பாப்தாதாவுக்கு சமானமாக செய்வேன், பிரம்மாதந்தைக்குச் சமானமாக, சாகார் பாபாவைப் பார்த்தீர்கள், குழந்தைகள் செய்தால்

நான் செய்வேன் என்று ஒருபோதும் சொல்லவே இல்லை. நான் செய்து, குழந்தைகளையும் செய்விப்பேன். இரண்டாவது அடையாளம், தீவிர புருஷாரத்தம். சதா பணிவு, காரியம் செய்து கொண்டிருந்தாலும் பணிவு நிர்மாணித்தல் மற்றும் பணிவு என்ற இரண்டிலும் பேலன்ஸ் வேண்டும். ஏன்? பணிவுடன் காரியம் செய்வதில் எல்லோரிடமிருந்தும் உள்ள பூர்வமான அன்பு மற்றும் ஆசிகள் கிடைக்கின்றது. பாப்தாதா பார்த்தார் நிர்மாணித்தல் என்றால் சேவை சேத்திரத்தில் (கர்ம பூமி) தற்காலத்தில் எல்லோரும் ஊக்கம், உற்சாகத்துடன் புதுப்புது திட்டம் தயாரிக்கின்றார்கள். இதற்காக பாப்தாதா நாலா பக்கங்களிலுமுள்ள குழந்தைகளுக்கு வாழ்த்துக்கள் அளிக்கின்றார்.

பாப்தாதாவிடம், நிர்மாணித்தல் மற்றும் சேவைக்கான திட்டம் மிக மிக நல்ல முறையில் வந்திருக்கின்றது ஆனால் பாப்தாதா பார்த்தார், நிர்மாணித்தல் எனும் காரியம் மிக நன்றாகவே நடக்கிறது ஆனால் சேவை காரியத்தில் எவ்வளவு ஊக்கம், உற்சாகம் இருக்கிறதோ, அவ்வளவு பணிவுடன் நடப்பதிலும் பேலன்ஸ் இருந்தால் நிர்மாணித்தல் அதாவது சேவை காரியத்தில் மற்றும் வெற்றியடைவதில் இன்னும் அதிகமாக வெளிப்பட முடியும் பாப்தாதா இதற்கு முன்பும் கூறியிருக்கின்றார். பணிவான சுபாவம், பணிவான சொல் மற்றும் பணிவுடன் கூடிய ஸ்திதி மூலம் சம்மந்தம் மற்றும் தொடர்பில் வர வேண்டும். தேவதைகளை மகிமை செய்கிறார்கள் ஆனால் பிராமணர்களுக்கான மகிமை! தேவதைகளைப் பற்றி என்ன சொல்கிறார்கள் என்றால் இவர்களுடைய வாயிலிருந்து வெளி வரும் சொற்கள் வைரம் போன்று முத்துக்கள் போன்றதாக விலை மதிக்க முடியாததாக, நிர்மலமான பேச்சு, நிர்மலமான சுபாவம் என்கிறார்கள். இப்போது பாப்தாதா பார்க்கின்றார். ரிசல்ட் சொல்லட்டுமா? வேண்டாமா? ஏனென்றால் இது இந்த சீசனின் கடைசி முறை. ஆதலால் பாப்தாதா பார்த்தார். நிர்மலமான பேச்சு, பணிவான ஸ்திதி ஆகியவற்றில் இன்னும் கவனம் தேவை?

பாப்தாதா முதலில் பொக்கிஷம் மூன்று விதமாக கணக்கில் சேமியுங்கள் என்று ஏற்கனவே கூறியிருக்கின்றார். ரிசல்ட்டில் என்ன பார்த்தார்? மூன்று கணக்குகள் என்னென்ன? இது நினைவிருக்குமல்லா? இருந்தாலும் திரும்பவும் கூறுகின்றேன். ஒன்று

தனது புருஷாரத்தம் மூலம் சேமிப்புக் கணக்கை அதிகரித்தல், இரண்டாவது தானும் திருப்தியாயிருந்து, மற்றவர்களையும் திருப்திப்படுத்துவது. விதவிதமான சம்ஸ்காரத்தைப் பார்த்தபோதிலும் கூட திருப்தியா யிருப்பது திருப்திப்படுத்துவது, இதன் மூலம் ஆசீர்வாதக் கணக்கு சேமிப்பாகும். ஒருவேளை ஏதோ ஒரு காரணமாக, திருப்திப்படுத்துவதில் குறையிருந்து விடுகிறதென்றால், புண்ணியக் கணக்கில் சேமிப்பாகாது திருப்தி, புண்ணியத்திற்கான சாவி. வேண்டுமானால் இருங்கள், வேண்டுமானால் செய்யுங்கள். மூன்றாவது சேவையிலும் கூட சதா சுயநலமில்லாமலிருப்பது. 'நான்' என்பது கூடாது. 'நான்' செய்தேன் அல்லது எனக்கு வேண்டும், என்ற இந்த 'நான் மற்றும் 'எனது' என்பது எங்கே சேவையில் வந்து விடுகிறதோ, அங்கே புண்ணியக் கணக்கு சேமிப்பாகாது. எனது, இதில் உங்களுக்கு அனுபவம் இருக்கிறது. இந்த மாதிரி ராயல் ரூபத்தில் 'எனது' என்பது அதிகமிருக்கிறது. ராயல் ரூபத்தில் இருக்கின்ற 'எனது' என்பதற்கான பட்டியல் சாதாரண எனது என்பதை விட நீளமாக இருக்கிறது. ஆதலால் எங்கிருந்தாலும் நான் மற்றும் எனது என்ற சுயநலம் வந்து விடுகிறது சுயநலமற்றதாக இல்லை என்றால், அங்கு புண்ணியக் கணக்கு குறைவாக சேமிப்பாகிறது எனது என்பதற்கான பட்டியலைப் பற்றிப் பிறகு கூறுகின்றேன். மிகவும் நீளமானது. ஆதலால் பாப்தாதா பார்த்தார். தனது புருஷாரத்தம் மூலமாக தனது சுய சக்தி மூலமாக எல்லோரும் தங்கள், தங்களுடைய கணக்கை சேமித்துக் கொண்டிருக்கிறார்கள் ஆனால் ஆசிகளின் கணக்கு, புண்ணியத்தின் கணக்கு இன்னும் நிரப்ப வேண்டிய அவசியமிருக்கிறது ஆதலால் மூன்று விதமான கணக்கிலும் கவனம் வைக்க வேண்டும். சம்ஸ்காரம் இன்னும் விதவிதமாகத்தான் இருக்கிறது. எல்லோருடைய சம்ஸ்கார மும் இன்னும் சம்பூரணம் ஆகவில்லை ஆனால் தன்மீது மற்றவருடைய பலவீனமான சம்ஸ்காரம், பலவீனமான சுபாவத்தின் பிரபாவம் பாதிக்கக் கூடாது. நான் மாஸ்டர் சர்வ சக்திவான் பலவீனமான சம்ஸ்காரம் சக்திசாலியானதல்ல. மாஸ்டர் சர்வ சக்திவானாகிய என் மீது பலவீன சம்ஸ்காரத்தின் பிரபாவம் படக்கூடாது. தன்னைப் பாதுகாத்துக் கொள்வதற்கான சாதனம், பாப்தாதாவின் குடை நிழலில் (க்ஷத்திரச்சாயா) இருப்பது தான் பாப்தாதாவுடன் இணைந்திருப்பது. (கம்பைண்டாக) க்ஷத்திரச்சாயா (குடைநிழல்) என்பது ஸ்ரீமத்.

இப்போது இந்த சீசனின் கடைசி முறை. இரண்டாவது சீசன் அட்டவணைப்படி ஆரம்பமாகும் ஆனால் எப்போது புதிய சீசனில் சந்திப்பு ஆரம்பமாகுமோ அப்போது புதுமை என்ன தெரியும்? தனக்காக ஏதாவது புது பிளான் தயாரித்திருக்கிறீர்களா? எப்படி சேவைக்காக, புதிய புதிய பிளான் யோசனை செய்கிறீர்கள் அல்லவா, அதில் தனக்காக (ஸ்வ பிரதி) எந்த ஒரு பழைய விஷயம் இருக்கிறதோ, அதில் புதுமை கொண்டுவருவதற்காக என்ன யோசனை செய்திருக்கிறீர்கள்? ஒருவேளை யோசனை செய்யாமலிருந்தால் பாப்தாதா என்ன சைகை கொடுக்கின்றார் என்றால் தனக்காக (சுய முன்னேற்றம்) ஒவ்வொரு எண்ணமும், சொல்லும், சம்மந்தம் மற்றும் தொடர்பில், செயலில் புதுமை கொண்டு வருவதற்கான திட்டம் போடத்தான் வேண்டும். பாப்தாதா, என்ன ரிசல்ட் கொண்டு வந்திருக்கின்றார்கள் என்பதை முதலில் பார்ப்பார். எந்த பழைய சம்ஸ்காரத்தை தனது திட சங்கல்பம் மூலமாக பரிவர்த்தனை கொண்டு வந்திருக்கிறார்கள்? இந்த ரிசல்ட்டை முதலில் பார்ப்பார். என்ன யோசிக்கிறீர்கள்? இப்படிச் செய்யலாம்? செய்யலாமா? யார், செய்யலாம் என்று நினைக்கிறார்களோ, அவர்கள் கை உயர்த்துங்கள் செய்வீர்களா? நல்லது செய்வீர்களா? அல்லது மற்றவர்களைப் பார்ப்பீர்களா? என்ன செய்வீர்கள்? மற்றவர்களைப் பார்க்க கூடாது. பாப்தாதாவைப் பார்க்க வேண்டும். உங்களுடைய பெரிய தாதியைப் பார்க்க வேண்டும். எவ்வளவு நியாரி மற்றும் பியாரி ஸ்டேஜ்! (விலகியும், அன்பாகவும் இருக்கும் நிலை) பாப்தாதா கூறுகின்றார்: ஒருவேளை நான் மற்றும் ஸ்தூலமான எனது என்பதிலிருந்து விலகியிருப்பவர்களைப் பார்க்க வேண்டுமானால், உங்களுடைய பாப்தாதாவின் மன சிம்மாசனத்திற்கு அதிகாரியாக இருக்கின்ற தாதியைப் பாருங்கள். முழு வாழ்க்கையிலும், ஸ்தூலமான எனது ஸ்தூலமான நான் என்பதிலிருந்து விலகியிருந்தார். இதன் ரிசல்ட் நோய் எவ்வளவு இருந்தாலும், துக்கம், வேதனையின் பாதிப்பிலிருந்து விலகியிருக்கின்றார். ஒரே ஒரு சொல் பக்காவாக இருக்கிறது. யாராவது தாதியிடம் வலியிருக்கிறதா? தாதி என்று கேட்டால், தாதி என்ன செய்கிறது? என்று கேட்டால், என்ன பதில் கிடைக்கிறது? ஒன்றுமில்லை ஏனென்றால் சுயநலமில்லாததோடு, பரந்த உள்ளம், எல்லாவற்றையும் அடக்கிக் கொள்பவர், எல்லோருக்கும் அன்பானவர். இதன் தத்ரூப ரிசல்ட்டைப் பார்க்கிறீர்கள். ஆகவே, எப்போது பிரம்மாதந்தையைப் பற்றி பேசுகின்றீர்களோ,

அவரில் தந்தை இருந்தாரல்லவா? என்று ஆனால் தாதியோ, உங்களோடு பிரபு பாலனையில் இருந்தார். படிப்பில் இருந்தார். சேவையில் துணையாக இருந்தார். ஆதலால் எப்போது ஒருவர் ஆக முடியும் என்றால், சுயநலமில்லாமல் இருக்க முடிந்தது என்றால் நீங்கள் எல்லோரும் ஆக முடியாதா? ஆக முடியுமல்லவா? பாப்தாதாவுக்கு நம்பிக்கை இருக்கிறது. நீங்கள் எல்லோருமே ஆகக்கூடியவர்கள் தான். எத்தனை முறை ஆகியிருக்கிறீர்கள்? நினைவிருக்கிறதா? அநேக கல்பங்கள் பாபா சமானமாக ஆகியிருக்கின்றீர்கள்! மேலும் இப்போதும் கூட நீங்கள் தான் ஆகின்றீர்கள். இதே ஆர்வத்தோடு, உற்சாகத்தோடு பறந்து கொண்டேயிருங்கள். பாபாவுக்கு உங்கள் மீது நம்பிக்கை இருக்கிறது. நீங்கள் தான் ஆக விருக்கின்றீர்கள். பாபாவுக்கு உங்கள் மீது நம்பிக்கை இருப்பது போலவே, நீங்களும் கூட உங்கள் மீது நம்பிக்கை வைத்து நிச்சய புத்தியுடன் இருங்கள். ஆகத்தான் வேண்டும். இந்த மாதிரி நிச்சய புத்தியுடையவராகி பறந்து கொண்டேயிருங்கள். எப்போது பாபாவிடம் அன்பிருக்கிறதோ, அன்பில் 100-சதவிகிதத்தைவிட அதிகமாக இருக்கிறது. இப்படி கூறுகின்றீர்கள். இது சரியா? யாரெல்லாம் இங்கு அமர்ந்திருக்கிறீர்களோ, யார், யாரெல்லாம் தங்கள் தங்கள் இடங்களிலிருந்து கேட்டுக் கொண்டிருக்கிறார்களோ, பார்த்துக் கொண்டிருக்கிறார்களோ, அவர்கள் எல்லோரும் அன்பு என்ற பாடத்தில் தங்களை 100-சதவிகிதம் உள்ளது என்று நினைக்கிறீர்களா? அப்படியானால் 'கை உயர்த்துங்கள். 100% (எல்லோரும் உயர்த்துகிறார்கள்) நல்லது. பின்னால் இருப்பவர்கள் கையை உயரமாகத் தூக்குங்கள், கை அசையுங்கள். இதிலோ எல்லோருமே கை உயர்த்தி விட்டார்கள். ஆகவே அன்பின் அடையாளம் சமமாவது ஆகும். யாரிடம் அன்புள்ளதோ, அவரைப் போன்று பேசுவது, அவரைப் போன்று நடப்பது, அவரைப் போன்று சம்மந்தம், தொடர்பில் இருப்பது, இது தான் அன்பின் அடையாளம்.

ஆதலால் அடுத்து வரும் சீசனில் எல்லோருடைய தோற்றத்திலும், தந்தையின் தோற்றம் தெரியட்டும். ஒவ்வொருவருடைய சம்மந்தம், தொடர்பில் தந்தையைப் போன்ற சம்ஸ்காரம் தெரியட்டும். இது தான் சிநேகத்திற்கான மறுதளிப்பு (ரிடர்ன்) சுயத்தை திருப்புவது, பாருங்கள். உங்கள் எல்லோருடைய ஒரு சங்கல்பத்தின் உள்ளுணர்வு மூலம்

யோக சக்தியை, தாதியின் பரிவர்த்னைக்காக (உடல் நலம்) நான்கு புள்ளிகளை வைத்து விட்டீர்கள். சைலன்ஸ் சக்தி மூலமாக, ஓர்வழி நின்று ஒற்றுமையுடன், ஒரு உள்ளுணர்வு மூலம், பிரத்யக்ஷ பலனைக் காட்டியிருக்கிறீர்கள். இதற்கு எல்லோருக்கும் வாழ்த்துக்கள். பரவாயில்லை. கை தட்டுங்கள். எப்போது ஒரு விஷயத்தில் தத்ரூபமாக பார்த்து விட்டீர்களோ, அதன்படி தன்னைப் பார்க்க வேண்டும். தன்னை மாற்றிக் கொள்ள வேண்டும். ஒருவேளை பணிந்து போக வேண்டியிருந்தாலும் சரி, பரிவர்த்தனை செய்வதில் தான் பின்வாங்கக் கூடாது. இப்படி திட சங்கல்பத்துடன் ஒவ்வொருவரும் முன்மாதிரியாக, உதாரணமாக நடந்து காட்ட வேண்டும். ஏனென்றால் எல்லோருமே உதாரணமான குழந்தைகள். உதாரணமாக இருப்பவர்களுடைய வேலை, பிரத்யக்ஷமான (நடைமுறையில்,) உதாரணமாக இருக்க வேண்டும். நடந்து காட்ட வேண்டும். நல்லது. பாப்தாதா எந்த ஒரு ஹோம் ஒர்க் கொடுத்தாரோ (15-நாட்களுக்காக) ஒரு விஷயம் பற்றி ஹோம் ஒர்க் கொடுத்திருந்தார். நினைவிருக்கிறதா? யார், சங்கல்ப மாத்திரம் கூட துக்கம் தரவில்லையோ, துக்கம் எடுக்கவில்லையோ, சொப்பனத்திலும் கூட, அவர்கள் கை உயர்த்துங்கள். கை உயர்த்தியவாறே, எழுந்திருங்கள். யாரெல்லாம் பாஸ் மார்க் வாங்கியிருக்கிறீர்களோ, கொஞ்சம் மார்க் வாங்கியவர்கள் அல்ல, பாஸ் மார்க் வாங்கியிருக்கிறீர்களோ, ஏன்? முதலாவது லைன் வாங்கவில்லை. முதல் வரிசையில் இருப்பவர்கள் ஏன் கை உயர்த்தவில்லை? ஒருவேளை செய்திருந்தால் எழுந்திருங்கள். துக்கம் தரவில்லை என்றால், எழுந்திருங்கள். சொப்பனத்திலும் கூட, சங்கல்பத்திலும் கூட அப்படியானால் இவர்களுக்காக கை தட்டுங்கள். டபுள் ஃபாரினர்ஸ்களும் கை உயர்த்தியிருக்கிறார்கள். நல்லது நல்லது. அமரராக இருப்பீர்கள் அல்லவா? அமர் பவ! எனும் வரதானத்தை நினைவில் வைத்திருக்க வேண்டும். நல்லது.

சேவை ஈஸ்டன் ஜோன் (பெங்கால், பீஹார், ஒரிஸா, அஸ்ஸாம், நேபாளம், தமிழ்நாடு): இது மிக நன்றாக இருக்கிறது. எல்லா ஜோன்காரர்களும் வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளும் விதி நன்றாகச் செய்திருக்கிறார்கள். வங்காளம், பீஹார், ஒரிஸா, அஸ்ஸாம், நேபாளம் மற்றும் தமிழ்நாடு என்று எத்தனை இராஜதானிகள். நிறைய இருக்கிறது. ஆகவே சேவையில் புதுமை

செய்து காட்டுவதற்கான வாய்ப்பு நல்லது. நீங்கள் எல்லோரும் ஏதாவது புதிதான முறையைக் கண்டு பிடித்திருக்கிறீர்களா? சேவையில் புதுமை என்பது பற்றி யோசனை செய்திருக்கிறீர்களா? எல்லா ஜோன்களைச் சார்ந்த விசேஷ டீச்சர்கள் கை உயர்த்துங்கள். வெவ்வேறு ஸ்தானத்திலும் தலைமை ஸ்தானத்தில் இருப்பவர்கள், ஒரு ஜோன் தலைமை அல்ல, ஆனால் ஒவ்வொரு ஜோனையும் சேர்ந்த தலைமை பொறுப்பாளர். நல்லது. சரி. நீங்கள் சேவையில் என்ன புதுமை செய்து காட்ட வேண்டும் என்று திட்டம் தீட்டியிருக்கிறீர்கள்? யாராவது செய்திருக்கிறீர்களா? எதிரில் அமர்ந்திருக்கும் டீச்சர்கள் தயாரித்திருக்கிறார்களா? அல்லது தயாரித்துக் கொண்டிருக்கிறீர்களா? செய்து கொண்டிருக்கிறீர்கள். ஏனெனில் உங்களுடைய ஜோனில் விஸ்தாரம் அதிகமாயிருக்கிறது. எவ்வளவு ஆத்மாக்கள் இருக்கிறார்கள்! எத்தனை தேசங்கள் இருக்கின்றன. எத்தனை கிராமங்கள் இருக்கின்றன! ஆதலால் இப்படி திட்டம் தயார் செய்யுங்கள். எப்படி பாப்தாதா பார்த்தார், வெளிநாட்டில் ஆப்பிரிக்காகாரர்கள் பிளான் மட்டும் செய்யவில்லை. நடைமுறையில் (பிராக்டிக்கலாக) எல்லா பகுதிகளிலும் சேவை செய்திருக்கிறார்கள். உங்கள் பகுதிகளிலோ, இப்படி நிறைய இடங்கள் இருக்கின்றன. சமயம் முடிந்து விட்டால் எத்தனை ஆத்மாக்கள் செய்தி தெரியாமல் வஞ்சிக்கப்பட்டு விடுவார்கள்? அல்லவா? எல்லோரும் சேர்ந்து ஒரு நல்ல அப்படிப்பட்ட திட்டம் தயார் செய்யுங்கள் இதேபோல பாப்தாதாவுக்கு ரஷியாக்காரர்களிடமிருந்து கூட பிளான் வந்திருக்கிறது. மேலும் இன்று செய்தி சொன்னார்கள் இன்று முதல் அவர்கள் புரோகிராம் ஆரம்பித்து விட்டார்கள். இன்று கிராமத்து மக்களும் கூட கூறினார்கள் (கிராம முன்னேற்றத்துறை சார்பாக அகில பாரத மோட்டார் சைக்கிள் யாத்திரை நடத்துவது சம்மந்தமாக, சந்தேஷி மூலமாக பாப்தாதாவுக்கு செய்தி அனுப்பப்பட்டது) இதிலிருந்து வந்த செய்தி என்னவென்றால் இந்தியாவில் ஒவ்வொரு ஜோனிலும் உள்ள கிராமங்களுக்கு செய்தி அளிப்பதற்காக மோட்டார் சைக்கிள் யாத்திரை புரோகிராம் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். எல்லா ஜோன்களும் சேர்ந்து செய்வார்கள். ஆதலால் அதில் நீங்களும் கூட உங்களுக்குள் பிளான் செய்யுங்கள். எந்த ஒரு பகுதியும் விடுபட்டு போய் விடக்கூடாது. குறைந்த பட்சம் செய்தியாவது கிடைக்கட்டும். இல்லையென்றால், உங்கள் மீது குற்றம் சுமத்துவார்கள். நம்முடைய தந்தை வந்தார், எங்களுக்கு

அறிவிக்கவேயில்லை என்று மற்றபடி அடுத்தது, தமிழ்நாடும் இருக்கிறது. இப்படி பிளான் செய்திருக்கிறார்களா? என்று அவர்களும் பார்க்க வேண்டும். ஒவ்வொரு ஜோனும் தங்களுக்குள் அமர்ந்து இப்படிப்பட்ட பிளான் தயார் செய்யத்தான் வேண்டும் குஷி உண்டாகிறது. மனதிலும் திருப்தி ஏற்படுகிறது நாங்கள் எங்களுடைய சேவை காரியத்தில் செய்தி கொடுப்பதற்கான சேவையை பூர்த்தி செய்து விட்டோம் என்பதாக இருக்கிறதா? அல்லது இனியும் செய்ய வேண்டுமா? செய்ய முடியுமல்லவா? பெங்கால்காரர்கள் கை உயர்த்துங்கள். பிஹார்காரர்கள் கை உயர்த்துங்கள். நேபாளத்துக்காரர்கள், ஒரிஸ்ஸாக்காரர்களோ பகதூர்கள். இன்னும் இருக்கிறதல்லவா? அஸ்ஸாம். பாருங்கள் எவ்வளவு பகுதியை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். பெரிய இராஜா ஆக வேண்டுமல்லவா? அடுத்த சீசனில் இந்த செய்தி கொடுப்பதற்கான காரியம் பற்றிய பிளான் தயார் செய்து பிராக்டிக்கலாக ஆரம்பித்து விட வேண்டும். செய்ய முடியுமல்லவா? செய்ய முடியுமா? ஏனென்றால் பாப்தாதாவுக்கும் கூட எந்த ஒரு குழந்தையிடமிருந்தும் குறை கேட்பது நன்றாக இல்லை. பிளான் பாப்தாதா கேட்டார். எல்லோரும் மிக நல்ல பிளான் செய்திருக்கிறார்கள் ஆனால் பாப்தாதா எப்போதுமே கூறுகின்றார். பிளான் செய்வதோடு கூட பிளெயின் புத்தி (திட்டத்தோடு தெளிவான புத்தி) இரண்டும் சேர்ந்திருக்க வேண்டும். இப்படியிருந்தால் வெற்றி மிகவும் சுலபமாகவும், சிரேஷ்டமாகவும் கிடைக்கும். ஆகவே தமிழ்நாடும் கூட செய்வார்கள், இல்லையா? செய்வீர்களா? பாருங்கள் பாப்தாதா எல்லா குழந்தைகளினுடைய ஆர்வம் மற்றும் உற்சாகம் மேலும் தைரியத்திற்கான வரதானம் ஒரே மாதிரியே கொடுத்திருக்கின்றார். சிலருக்கு அதிகமாகவும், சிலருக்குக் குறைவாகவும் கொடுக்கவில்லை. ஆதலால் எங்கே ஆர்வம், உற்சாகம், இருக்கிறதோ அங்கே தைரியம் இருக்கும். ஆகவே என்ன செய்ய முடியாது? நடக்க முடியாததும் நடந்து விடும். எல்லோரும் கேட்கிறார்கள், இன்னும் என்ன செய்ய வேண்டும். என்று? பாப்தாதாவுக்கு சங்கல்பம் இருக்கிறது இனிமேல் அதிகத்திலும் அதிகமாக தயாராக இருக்கின்ற மேடையில் வாய்ப்பு எடுத்துக் கொள்ளுங்கள். அவர்களை சகயோகிகளாக ஆக்குங்கள் அவர்களுக்கு நீங்கள் சக்தியளிப்பவர்களாக இருங்கள். 70-ஆண்டுகள் உங்களுடைய தைரியத்தில் செய்தீர்கள். இனி மற்றவர்கள் பாக்கியம் அடையும்படி

செய்யுங்கள். பாக்கியம் அடைவதற்கான வாய்பை அவர்களுக்குக் கொடுங்கள். பாக்கியம் செய்விப்பதற்காக, எந்த ஒரு சக்தியை நீங்கள் தர வேண்டும்? ஒன்று அதிகம் இரக்க மனமுடையவர்கள் ஆகுங்கள். மன்னிப்பதில் தந்தையைப் போன்றவராயிருங்கள். நாலா பக்கமிருந்தும் மற்றவர்கள், தாங்களே அழைப்பு விடுமளவுக்கு வாயுமண்டலத்தை அவ்வளவு சக்திசாலியாக ஆக்குங்கள். ஒவ்வொரு ஜோனிலிருந்தும் அழைப்பு வரட்டும் இங்கே வாருங்கள், இங்கே வாருங்கள். இங்கே வாருங்கள் என்று, அப்போது தான் இவர் தான் என்பது தானாகவே பிரசித்தமாகி விடும். இப்போது அவர்களுக்கும் சகயோகி ஆவதற்கான அன்புடையவராவதற்கான வாய்ப்பினைத் தாருங்கள் ஏனென்றால் பாப்தாதா பார்த்தார். அன்புடையவர், சகயோகிகள் ஒவ்வொரு ஜோனிலும் சுயசக்தி என்ற ஆதாரத்தில் இருக்கின்றனர் ஆனால் அவர்களை சேவையில் துணையாக்குங்கள். அவர்களுக்கும் ஆர்வம், உற்சாகத்திற்கான சிறகுகளைத் தாருங்கள். இருக்கிறார்கள் நாலா பக்கங்களிலும் ஏனென்றால், பாப்தாதா சுற்றி வருகின்றார் அல்லவா? அப்போது தன்னுடைய குழந்தைகளையும் பார்க்கின்றார். சிநேகி, சகயோகி ஆத்மாக்களையும் பார்க்கின்றார். பாப்தாதாவின் பார்வையில் இருக்கிறார்கள் ஆனால், வாய்ப்பு அளிக்கப்படவில்லை. பிராக்டிக்கலாக வாய்ப்பை எடுத்துக் கொள்ளவில்லை ஆதலால் இந்த ஆண்டு அவர்களை நிமித்தமாக்குங்கள். சிநேகி, சகயோகிகளை ஆர்வம், உற்சாகத்தில் கொண்டு வாருங்கள். கொண்டு வர வேண்டும், இல்லையென்றால், அவர்களும் உங்கள் மீது குற்றம் குறை சொல்வார்கள். இப்படியும் கூட செய்ய முடியும் என்பதைப் பற்றிக் கூறவே இல்லை என்பார்கள். ஆதலால் இப்போது வாய்ப்பு அளிப்பவர் ஆகுங்கள். எப்படி வெளிநாட்டினர் ஆக முடியும்? ஆக முடியுமல்லவா? ஆக முடியுமா, வெளிநாட்டினர்? வெளி நாடு சகோதரர்கள் எழுந்திருங்கள். யார் சேவையில் நிமித்தமாகியிருக்கிறார்களோ அவர்கள் எழுந்திருங்கள். பாருங்கள், எத்தனை நல்ல நல்ல சக்தி அளிக்கக் கூடிய ஆத்மாக்களாக இருக்கிறீர்கள்! இனி பார்க்கலாம் எல்லாவற்றிலும் எந்த ஒரு ஜோன் தயாராக இருக்கும் மேடையை பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். எப்படி இந்த ஆண்டில் மெகா புரோகிராம் செய்ய வேண்டுமென்பதிலேயே மூழ்கியிருந்தார்கள். இதே போலவே இனி தயாராக இருக்கும் மேடையைப் பயன்படுத்திக் கொள்வதை பிரபலப்படுத்துங்கள். செய்ய முடியுமா? ளி நாட்டினர்

செய்ய முடியுமா? செய்ய முடியும்! உங்கள் எதிரில் கூறுகின்றார்கள் ஆஸ்திரேலியாவின் பிரெயின் சகோதரர் கூறுகின்றார். அற்புதம் செய்து காட்ட வேண்டும். ஜானகி தாதியின் ஒப்புதலுடன் செய்து கொண்டேயிருங்கள். பாப்தாதா துணையாக இருப்பார். இப்போது செய்ய முடியும். ஏனென்றால் எல்லோரும் மூத்த சகோதரர்கள், சர்வீஸபிள் (சேவாதாரிகள்). (ஜெயந்தி சகோதரி பாபாவிடம் கூறினார்): வெளிநாட்டில் இந்த ஆண்டு இம்மாதிரி 4-இன்டர்நேஷனல் அழைப்பு கிடைத்துள்ளது அதில் தாதிமார்கள் வந்து ஆசீர்வாதம் அளிக்க வேண்டும் என்று. லண்டனில் பாபா கடை (சேவை நிலையம்) உள்ளது, இதன் சேவைக்காக கோல்டு மெடல் கிடைத்துள்ளது. நல்லது. வாழ்த்துக்கள். எல்லோரும் கரவொலி எழுப்பி வாழ்த்துக்களைக் கொடுங்கள்.

**500-டபுள் விதேஷிகள் (வெளிநாட்டினர்) வந்திருக்கிறார்கள்:** பாப்தாதா சதா கூறுகின்றார். டபுள் விதேஷி மதுபன் அலங்காரம் என்று எப்படி ஒவ்வொரு பிரதேசமும் தத்தமது விசேஷத்தின் ஆதாரத்தில் முன்னேறிக் கொண்டிருக்கிறதோ, அது போல வெளி நாடும் ஒன்றும் குறைந்ததல்ல. வெளிநாட்டினரும் குறுகிய காலத்தில் நல்ல விதமாக விஸ்தரித்திருக்கிறார்கள். இனி வெளி நாடு ஒரே ஒரு பரிசு வாங்க வேண்டும். சொல்லட்டுமா, என்ன பரிசு வாங்க வேண்டுமென்று. குறிப்பாக வெளிநாட்டினர், நாலா பக்கங்களிலும் சுயம் மற்றும் சேவையில் பேலன்ஸ் என்ற பரிசு வாங்க வேண்டும். விருப்பமுள்ளதாக இருக்கிறதா? வெளிநாட்டினருக்கு பிடித்தமானதாக இருக்கிறதா? வாங்க வேண்டும். கை உயர்த்துங்கள். வெல்கம். வாழ்த்துக்கள். முன்கூட்டியே அட்வான்ஸ் வாழ்த்துக்கள். ஜெர்மனியில் ஒரு பெரிய குரு தன்னுடைய புரோகிராமில் சொற்பொழிவு ஆற்றுவதற்காக பிரம்மா குமாரிகளுக்கு அழைப்பு விடுத்திருந்தார். மிகவும நன்றாக இருக்கிறது. இதே போல இந்தியாவிலும் கூட அழைப்பு வருகிறது ஆனால் இப்போது அலை பரவட்டும். அவ்வப்போது தான் கிடைக்கிறது  ஆனால் நாலா பக்கமும், ஒவ்வொரு ஜோனிலும், உள் நாட்டிலும், வெளிநாட்டிலும் அலை பரவட்டும். நல்லது.

மதுபன் நிவாசிகள் என்ன செய்யப் போகிறீர்கள்? என்ன செய்வீர்கள், மதுபன் நிவாசிகள். செய்வீர்களா? அபுவில் மேடை தயார் ஏதாவது

புதுமை செய்யுங்கள் மதுபன்காரர்கள். மதுபனில் ஒரு விசேஷம் மிகவும் நன்றாக இருக்கிறது. யார் வந்தாலும் எந்த ஒரு ஜோன் மூலமாக சேவை நடந்தாலும் சேவை அவரவர் இடங்களிலும் நடக்கிறது என்றாலும் மதுபனில் செய்யும் சேவைக்கு முத்திரை விழுகிறது. ஆதலால் மதுபன் வாசிகளின் வாயுமண்டலம், வைப்ரேஷன், பரிசுத்தம் மற்றும் அன்பின் முத்திரை நன்றாக பதித்து விடுகிறார்கள். எப்படி நீங்கள் மதுபன் வீட்டில் வசிக்கிறீர்கள் அல்லவா? இதே போலவே யார் வருகிறார்களோ, அவர்களையும் கூட இந்த வீட்டுக்காரர்களாக ஆக்கி விடுகிறீர்கள். இது மதுபன் விசேஷம். செய்கிறீர்கள் அல்லவா இப்படி? சேவை நன்றாகச் செய்கிறீர்கள் அல்லவா? செய்கிறீர்கள் தானே? இங்கே மதுபன் வாசிகள் அமர்ந்திருக்கிறார்கள். மதுபன் வாசிகள் எழுந்திருங்கள். நல்லது வெளியிலும் கூட மதுபன் வாசிகள் அமர்ந்திருக்கலாம். பாப்தாதாவுக்குத் தெரியும். வெளியில் நிறைய பேர் அமர்ந்திருக்கிறார்கள். நல்லது. அவர்கள் அழைத்து வருகிறார்கள். நீங்கள் அவர்களைப் பறக்கச் செய்யுங்கள். டபுள் லைட் ஆக்கி அவர்களை மிக நன்றாக கவனியுங்கள். நன்றாக உணவளியுங்கள். பாலனை செய்யுங்கள். உங்களுடைய அனுபவத்தைக் கூறுங்கள். முத்திரை பதியுங்கள். செய்கிறீர்கள் அல்லவா சேவை? எல்லோருமே செய்கிறார்கள். வாயுமண்டல சேவை செய்கிறீர்களல்லவா? நல்லது தாதிகளும் கூட எழுந்திருக்கின்றனர். வாழ்த்துக்கள் தாதிகளுக்கு கரவொலி எழுப்புங்கள். நல்லது. மதுபன், மதுபன் தான். மேலும் கடைசியில் எல்லோரும் எங்கே வந்து சேர வேண்டும்? மதுபன் தான் வந்து சேர்வீர்கள் அல்லவா? சேவை நன்றாக செய்கிறீர்கள். தங்கள் கடமையை நன்றாகச் செய்கிறீர்கள். மற்றபடி இன்று பாப்தாதா என்ன சொன்னாரோ, அதை மாத்திரம் கவனத்தில் வையுங்கள். சுய தீவிர புருஷாரத்தம் மற்றும் சேவை இந்த இரண்டிலும் பேலன்ஸ். இதற்கு உங்களுக்குள் இணைந்து பேலன்ஸாக இருந்து காட்டுங்கள். அடுத்த சீசனில் என்ன செய்வீர்கள்? மதுபன்காரர்கள் செய்வார்களா? உங்களுக்குள் மீட்டிங் செய்யுங்கள். தாதிமார்களின் சகயோகம் பெற்று பேலன்சின் மகத்துவத்தைக் காட்டுங்கள் எப்படி ஒருவரையொருவர் சந்திக்கும்போது குசலம் விசாரிக்கிறார்கள் அல்லவா? உங்கள் சௌகரியம் எப்படி இருக்கிறது. உங்கள் நடைமுறை வாாழ்க்கை எப்படி இருக்கிறது? ஆனால் உங்களை யார் சந்தித்தாலும் உங்கள்

எல்லோருடைய மகிழ்ச்சியான முகத்தையும், பரிஷ்தாவின் அசைப்பையும் பார்க்கட்டும். எங்கே பார்க்கிறார்களோ அங்கெல்லாம் பரிஷ்தாக்கள் இயங்கிக் கொண்டிருப்பது போல தென்பட வேண்டும். நடந்து செல்லும் காட்சி அல்ல, பறந்து செல்லும் காட்சி நடந்து கொண்டிருப்பவர்கள் பின் தங்கி விடுவார்கள். பறப்பவர்கள் தந்தையுடன் செல்வார்கள். ஆதலால் மதுபனில் இருப்பவர்கள் முதல் வாய்ப்பை எடுத்துக் கொள்ள வேண்டும். பின்னால் தாமதமாக வருவதல்ல எடுத்துக் கொள்வீர்கள் அல்லவா வாய்ப்பினை, மீட்டிங் செய்வீர்களா? ஆமாம். சொல்லுங்கள். அப்படி மீட்டிங் செய்வீர்களா? நல்லது ஒரு மாதத்தில் ரிசல்ட் கொடுக்க வேண்டும். ஒரு மாதம் போதுமல்லவா? திட நிச்சயம் என்ற கை உயர்த்துகிறீர்கள் அல்லவா? பிறகு மதுபன்காரர்களுக்கு ஏதவாது அன்பளிப்பு பாப்தாதா தருவார். நல்லவர்கள் மதுபன் நிவாசிகள் என்ற டைட்டில் மிக சிறப்பானது. இது பக்கா தானே! இப்போது பக்கா! என்ன நடந்தாலும் சரி, மற்ற வரைப் பார்க்கக் கூடாது. தன்னைப் பார்க்க வேண்டும் நான் செய்ய வேண்டும். நான் மாற வேண்டும். மற்றவர் மாறினால் நான் மாறுவேன் என்பதல்ல. இப்படிச் செய்வீர்களா? பின்னால் இருப்பவர்கள் செய்வீர்களா? பக்கா? பக்கா என்றால் இப்படி கை உயர்த்துங்கள். பாருங்கள் எல்லோருக்கும் எவ்வளவு குஷியாக இருக்கிறது. மதுபன் வாசி என்ற பெயர் கேட்டதும் குஷி வந்து விடுகிறது. நல்லது.

**ஏப்ரல்-7, 2007 முதல் ஆண்டு மீட்டிங் வைக்கப்பட்டிருக்கிறது. இதற்காக பாப்தாதாவின் பிரேரணை:** அந்த மீட்டிங்கில் பாப்தாதா எந்த ஒரு சாதனத்தை சேவையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று கூறினாரோ அதாவது தயாரான மேடை மற்றும் இத்தோடு கூடவே புருஷாரத்தமும் அதன் பாக்கியமும் என்ற இந்த இரண்டிலும் பிராக்டிக்கல் சொரூபத்தில் பிரத்யக்ஷம் செய்ய வேண்டும் என்பது யார் மீட்டிங்கில் வந்திருக்கிறீர்களோ அவர்கள் ரிசல்ட் கொடுக்க வேண்டும். இவர்கள் தங்களுக்குள் மீட்டிங் செய்து முடிவெடுத்து இரண்டு மாத காலத்தில் அல்லது 3-மாத காலத்தில் ஒரு மாதம் தீர்மானித்தல் மற்றும் ரிசல்ட் பிராக்டிக்கலில் கொண்டு வருதல், இதை பாப்தாதா பார்ப்பார். ஏனென்றால் இந்த மீட்டிங் விசேஷமாக நிமித்த ஆத்மாக்களுக்கானது ஒருவேளை நிமித்த ஆத்மாக்கள் பேலன்ஸில் விசேஷத்தை காண்பிப்பார்களேயானால், இந்த வாயுமண்டலம் மிக சீக்கிரமாக

மற்றும் சக்திசாலியாகப் பரவும். தன்னை பிரத்யக்ஷம் செய்தால் தந்தையின் பிரத்யக்ஷமும் கூட மிகவும் சுலபமாகவும், சீக்கிரமாகவும் நடக்கும். மீட்டிங்கில் யாருடைய பெயர் உள்ளதோ அவர் பொறுப்பாளர் கேட்பது, சொல்வதற்கு மட்டுமல்ல பொறுப்பாளர். பேலன்ஸ் வைத்தல் பேலன்ஸ் இருக்கும்படி பார்த்துக் கொள்தல், இது தான் மீட்டிங்கில் விசேஷ காரியம். மேலும் பாப்தாதா சந்தேஷி மூலமாக ரிசல்ட் கேட்டுக் கொண்டேயிருப்பார். பிறகு இதன் பிறகு செய்ய வேண்டிய சேவைக்கான புரோகிராம் கொடுப்பேன்.

பாப்தாதாவின் லக்ஷியத்தை எல்லோருமே புரிந்து கொண்டீர்கள். அதாவது ஒவ்வொரு குழந்தையையும் அதிகாரி ரூபத்தில் பார்க்க விரும்புகின்றார். எந்த ஒரு சேவையில் அல்லது புருஷாரத்தத்தில் எதிலும் வசப்படாமல் இருக்க வேண்டும். அதிகாரி. ஒவ்வொருவரும் இராஜ்ய அதிகாரி எல்லோரும் இராஜா தானே அல்லது இராஜா இல்லையா? இராஜ யோகிகள். பிரஜா யோகி இல்லையல்லவா? ஆதலால் இராஜ்ய அதிகாரியாக பார்க்க விரும்புகின்றார். நான் என்ன செய்வேன், நடந்து விட்டது என்பதல்ல. விரும்பவில்லை. என்றாலும் நடந்து விட்டது என்பதல்ல. சுய அதிகாரி. பழைய சுபாவம், சம்ஸ்காரத்திற்கு அடிமை அல்ல. அதிகாரி. சரிதானா? நல்லது.

இப்போது பாப்தாதா எந்த ஒரு டிரில் பற்றி கூறினாரோ, அது நினைவிருக்கிறதா? 5-5 நிமிடங்கள் முழு நாளில் அநேக முறை டிரில் செய்ய வேண்டும். எது என்ன? யார் இந்த டிரில் செய்கிறார்களோ, அவர்கள் கை உயர்த்துங்கள். கொஞ்சம் பேர் தான் கை உயர்த்துகிறார்கள். ஏன்? கொஞ்ச நேரம் செய்தீர்கள் ரெம்ப நேரம் செய்யவில்லை. அப்படியானால் இப்போது என்ன செய்வீர்கள்? கொஞ்சம் சொல்லட்டுமா? குறைந்த பட்சம் 8-முறை ஒரு நாளில் செய்ய முடியுமா? செய்ய முடியுமா? இதில் கை உயர்த்துங்கள். செய்வீர்களா? செய்வீர்களா? நல்லது. பிறகு ஆரம்பமாகுமல்லவா? அப்போது பாப்தாதா எல்லோரிடமிருந்தும் ரிசல்ட் கேட்பார். பிறகு ஒரு விஷயம் சொல்வேன். இப்போது சொல்ல மாட்டேன். பிறகு சொல்வேன். மதுபன் காரர்கள் செய்வார்கள் அல்லவா? முதல் நம்பர் இந்த ஆண்டு ஹோம் ஒர்க், இந்த சீசனின் ஹோம் ஒர்க், அடுத்த சீசன் வரை குறைந்த பட்சம் 8-முறை இந்த டிரில் அவசியம் செய்ய

வேண்டும். அவசியமாக பார்க்கலாம் என்பதல்ல. செய்யத்தான் வேண்டும். ஒருவேளை மறந்து போய் விட்டால் மீதி எத்தனை முறை செய்ய வேண்டியதிருக்கிறதோ அத்தனை முறையும் ஒரு மணி நேரத்தில் அநேக முறை செய்து முடிக்க வேண்டும். தூக்கம் பிறகு, முதலில் டிரில் 8-முறை செய்து முடித்த பிறகு தூங்க வேண்டும். சரிதானா? டீச்சர்ஸ் விசிறியை கையில் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். சூடாகி விட்டது. ரெம்பவும் நல்லது. டீச்சர்களின் வாயுமண்டலம் தானாகவே பரவும். இன்று பாப்தாதா எல்லோரையும் இப்படிப் பார்க்க விரும்பு கின்றார். ஒரு செகண்டில் சுய இராஜ்ய ஆசனத்தில் அமரக்கூடிய கன்ட்ரோலிங் பவர், ரூலிங் பவர் ஆகிய சம்ஸ்காரத்தில் எமர்ஜ் ரூபத்தில் (எழுச்சி நிலையில்) அமர்ந்திருத்தல். ஒரு செகண்டில், இரண்டு, மூன்று நிமிடங்கள் இராஜ்ய அதிகாரி ஆசனத்தில் அமர்ந்திருங்கள். நல்லது.

நாலா பக்கங்களிலுமுள்ள குழந்தைகளின் அன்பு நினைவுகள் அடங்கிய கடிதங்கள், அத்தோடு விஞ்ஞான சாதனத்தின் மூலமாக அன்பு நினைவுகள் பாப்தாதாவிடம் வந்து சேர்ந்து விட்டது. தங்களுடைய மனதிலுள்ள சமாச்சாரத்தையும் அநேக குழந்தைகள் எழுதியிருக்கிறார்கள். ஆன்மீக சம்பாஷணையின் போதும் கூறு கின்றார்கள். பாப்தாதா அந்த அநேக குழந்தைகளுக்கும், ஏற்றுக் கொண்டு ஆமோதிக்கின்றார். அதாவது உண்மையான உள்ளத்தில் கடவுள் குடியிருக்கின்றார். (சச்சி தில் பர் சாஹப் ராசி) உள்ள பூர்வமான ஆசிகள் மற்றும் பாப்தாதாவிடம் உள்ளன்பு வைத்திருக் கும் அந்த ஆத்மாக்களுக்காக பாப்தாதாவின் விசேஷமான அன்பு உண்டு. நாலா பக்கங்களிலுமிருந்தும் யாரெல்லாம் சமாச்சாரம் கொடுத்திருக்கிறார்களோ, திட்டம் தயாரித்திருக்கிறார்களோ அந்த நல்ல நல்ல எல்லா குழந்தைகளின் ஆர்வம், உற்சாகத்திற்கு பாப்தாதா வாழ்த்துக்களை அளிக்கின்றார். முன்னேறிக் கொண்டேயிருங்கள். முன்னேற்றிக் கொண்டேயிருங்கள் என்ற வரதானமும் அளிக்கின்றார். நாலா பக்கமும் உள்ள பாப்தாதாவின் கோடியில் சிலர், அந்த சிலரிலும் சிலராக இருக்கின்ற சில சிரேஷ்ட பாக்கியவான் குழந்தைகளுக்கு பாப்தாதாவின் விசேஷ அன்பு நினைவுகள், பாப்தாதா எல்லா குழந்தைகளுக்கும் தைரியம், ஆர்வம், மற்றும் உற்சாகத்திற்கு வாழ்த்துக்களை அளிக்கின்றார். மேலே இன்னும் தீவிர புருஷாரத்தி

ஆவதற்கு பேலன்ஸாக இருப்பதற்கு பதமாபதம் மடங்கு ஆசிகளையும் வழங்குகின்றார். எல்லோருடைய பாக்கிய நட்சத்திரம் சதா மின்னிக் கொண்டேயிருக்கிறது. மற்றவர்களுக்கும் பாக்கியத்தை உண்டாக்கிக் கொண்டேயிருக்கிறார்கள். இதற்கும் கூட ஆசிகள் வழங்குகின்றார். நாலா பக்கமும் உள்ள குழந்தைகள் தங்கள் தங்கள் ஸ்தானத்தில் இருந்தபடியே கேட்டுக் கொண்டுமிருக்கிறார்கள். பார்த்துக் கொண்டுமிருக்கிறார்கள். மேலும் பாப்தாதாவும் கூட தூரமாக அமர்ந்திருக்கும் எல்லா குழந்தைகளையும் பார்த்துப் பார்த்து குஷியடைந்து கொண்டிருக்கின்றார். பார்த்துக் கொண்டேயிருங்கள். மேலும் மதுபன் அழகையும் சதா அதிகரித்துக் கொண்டேயிருங்கள். ஆகவே, எல்லா குழந்தைகளுக்கும் உள்ள பூர்வமான ஆசிகளுடன், நமஸ்தே.

**தாதிகளுடன்:** உங்கள் எல்லோருடைய சைலன்ஸ் சக்தி (அமைதி சக்தி) டாக்டர்களைத் தொட்டது. புதுப்புது வழிகளைக் கண்டுபிடிக்கின்றனர். எல்லாமே சுலபமாக நடப்பதற்கேற்ப புது வழியைக் கையாளுகின்றனர். (மோகினி சகோதரி எல்லோரின் நினைவுகளையும் தந்தார்) எல்லோரும் மிக நல்ல முறையில் சேவை செய்கிறார்கள். உள்ளன்போடு சேவை செய்கிறார்கள். (அங்கிள், ஆண்டி நினைவைத் தந்திருக்கின்றனர்) அவர்களுக்கு விசேஷ அன்பு நினைவுகள் டோலி அனுப்ப வேண்டும். நல்லது. ஸ்தாபனைக் காரியத்தில் நிமித்தமாகியிருந்தனர். வெளிநாட்டில் வி.ஐ.பி. ரூபத்தில் இவர்கள் முதல் உதாரணம். சேவைக்கு நிமித்தமானவர்கள். நல்லது தாதிகள் அனைவரும் சௌகரியமாயிருக்கிறார்கள்.

**பரதாதிஜியுடன் (நிர்மல் சாந்தா தாதிஜி):** கமால் செய்து (அற்புதம்) காண்பித்தார். 4-மாதங்கள் அஹமதாபாத்தில் இருந்தார். அவரும் சேவை செய்தார். சும்மா இருக்கவில்லை. சேவை செய்தார். (பாபாவின் மடியில் வந்து விட்டார்) சதா பாபாவின் மடியிலே தான் இருக்கின்றார். நல்லது.

**யோகினி சகோதரியுடன்:** நல்ல தைரியமுள்ளவர். அன்பு இருக்கிறது. உழைப்பு செய்ய வேண்டியதிருக்கவில்லை. இது பாம்பேகாரர்களுக்கு

ஒரு லிஃப்ட் கிடைத்தது போல. தன்னுடைய தைரியத்தை நல்ல முறையில் வைத்திருந்தார்.

**சாந்தாமணி தாதிஜி:** இவரும் அற்புதம் செய்து காட்டினார். இவர் மனோ தைரியம் உள்ளவர் என்பதை டாக்டர்களும் ஏற்றுக் கொண்டனர். இவர் மனோ தைரியத்தை பிரத்யக்ஷமாகக் காட்டினார். இதற்கு வாழ்த்துக்கள். ஒரு உதாரணம் ஆனார். மனோ தைரியம் என்றால் எப்படியிருக்கும் என்பதற்கு உதாரணம் ஆனார். பாப்தாதாவுக்கு பிடித்தமானதாக இருந்தது. வாழ்த்துக்கள்.

ஒவ்வொரு நிமித்த தாதிக்கும் விசேஷம் இருக்கிறது. மேலும் பாருங்கள் ஒரு தாதியும் இல்லையென்றால் எல்லோருமே கூறு கின்றனர் வெறிச்சோடி இருக்கிறது என்று 1000-பேர் இருக்கின்றனர். இருந்த போதிலும் கூட காலியாக இருப்பது போன்ற உணர்வு உண்டாகிறது. எங்கே தாதிகள் இருக்கின்றனரோ அங்கு ஆனந்தம் இருக்கிறது. இதே போல இருப்பதற்கு எல்லோருக்கும் கற்றுக் கொடுங்கள். இப்படிப்பட்ட குரூப் தயார் செய்யுங்கள், பாப்தாதா அன்பளிப்பு தருவார். இப்படிப்பட்ட குரூப் தயார் செய்யுங்கள். பாண்டவர்களுக்கும் இந்த மாதிரி ஒரு குரூப் தயார் செய்ய வேண்டும். இதில் உள்ளவர்கள் ஒருவருக்கொருவர் ஆமாம், ஆமாம், சரி தான் என்று கூறுபவர்களாக இருக்க வேண்டும். மேலும் இதோ நான் தயாராயிருக்கிறேன், பார்க்கலாம். தாதிகளுடைய குரூப் முதலில் தயார் ஆவார்களா? பாண்டவர்களுடைய குரூப் தயாராவார்களா? தாதிகள் நிமித்தமாயிருப்பவர்கள் தான் ஆனால் ஒருவருக்கொருவர் தைரியம் வைக்க வேண்டும். தைரியம் உங்களுடையது உதவி தாதிகளுடையது. பாப்தாதா இருக்கவே இருக்கின்றார். ஏதாவது குரூப் அவசியம் வேண்டும். பாண்டவர்களுக்கும் குரூப் வேண்டும். சக்திகளுக்கும் வேண்டும். இதனால் வாயுமண்டலம் சீக்கிரமாக பரவும் நன்றாக இருக்கிறது.

**டாக்டர் அசோக் மேத்தாவுடன்:** எவர்ரெடியின் பிராக்டிக்கல் ரூபம் காட்டி விட்டார். இதே போல புருஷாரத்தத்திலும் எவர்ரெடி நல்லது. மருத்துவமனை ஒரு உதாரணமாக இருக்கிறது. இந்த மருத்துவமனையில், எல்லோருக்கும் முகவரி கிடைக்கும்படியான

வாயுமண்டலம் தயாராக வேண்டும். ஒருவேளை உங்களைப் பார்த்தால் நீங்கள் எப்படி சகஜயோகி மற்றும் சகஜ தாரணை சொரூப சேவாதாரியாக இருக்கிறீர்கள் என்று தெரிய வேண்டும் ஆனால் சேவை செய்து கொண்டே யோகி இப்படி ஒரு உதாரணமாக, உதவியாளர்களையும் சேர்த்து தயார் செய்யுங்கள். இப்படி குரூப் தயார் செய்தால் அவர்கள் எல்லோருக்கும் முகவரியைக் கொடுத்துக் கொண்டேயிருப்பார்கள் இவர்கள் வேலை செய்து கொண்டிருந்தாலும் அப்படியே இருக்கிறார்கள் என்று ஆச்சரியப்படுவார்கள். இப்படி ஏதாவது புதுமை செய்து காட்டுங்கள். மருத்துவமனை வேலையோ நடந்து கொண்டேதானிருக்கும் ஆனால் நீங்கள் ஒரு புதுமை செய்து காண்பியுங்கள். இப்படி ஒரு குரூப் தயார் செய்யுங்கள். பிறகு அவர்களை பாப்தாதாவிடம் அழைத்து வர வேண்டும். இவர்கள் கர்மயோகி வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருப்பவர்கள். எங்கே வேண்டுமானாலும் செய்யலாம் ஆனால் கூறுகிறார்கள் அல்லவா? இந்த மருத்துவமனையில் நல்ல மருந்து கிடைக்கிறது என்று, இங்கு ஆபரேஷன் நன்றாகச் செய்கிறார்கள் என்று. இப்படி கர்மயோகி குரூப் பார்க்க வேண்டுமானால் இங்கே பாருங்கள் என்று பேசும் அளவுக்கு பிரசித்தமாக வேண்டும். இதைச் செய்து காட்ட வேண்டும். (இதில் உங்களுடைய ஆசீர்வாதம் வேண்டும்.) பாப்தாதாவின் ஆசீர்வாதத்தினாலேயே பிறந்திருக்கிறீர்கள். பிறப்பே ஆசீர்வாதத்தால் ஆகியிருக்கிறது பிறந்தாகி விட்டது. பலனும் உண்டாகட்டும். நல்லது உங்களை அதிகமாக சிக்க வைத்துக் கொள்ளாதீர்கள். ஏதாவது புதுமை செய்து காட்டுங்கள். நல்லது.

பிரிஜ் மோகன் சகோதரரிடம்: சேவை நடந்து கொண்டிருக்கிறது ஆனால் இப்போது ஏதாவது சேவையில் புதுமை செய்து காட்டுங்கள். இந்த மாதிரியான புதுமை செய்யுங்கள். யாரெல்லாம் சிநேகி, சகயோகிகளாக இருக்கின்றார்களோ ஒவ்வொரு துறையிலிருந்தும் குரூப் அழைத்து வாருங்கள். டெல்லியில் இதற்கு முந்தையை சீசனில் குரூப் தயார் செய்திருந்தீர்களல்லவா, அதுபோல ஒவ்வொரு துறையிலிருந்தும் இருக்க வேண்டும் இன்னும் சிறு குரூப் தயார் செய்தால் உங்களை காப்பி அடிப்பார்கள்.

ரமேஷ் சகோதரரிடம்: நல்லது பாம்பேயிலும் கூட ஒரு பிளான் தயார் செய்யுங்கள். குறைவாகவும் இருக்கட்டும், அதே சமயம் புதுமையானதாகவும் இருக்க வேண்டும்.

டாக்டர் பிரதாப் சகோதரருடன்: மருத்துவமனையில் உள்ளவர்களுக்கு விசேஷமாக அன்பு நினைவுகளைத் தாருங்கள். நீங்களும் கூட மிக நன்றாகச் செய்கிறீர்கள். நீங்கள் சொல்வதில்லை. பாப்தாதாவுக்குத் தெரியும். நீங்கள் என்ன செய்கிறீர்கள்? எவ்வளவு செய்கிறீர்கள்? என்று தெரியும் கவலைப்பட வேண்டாம். பறந்து கொண்டேயிருங்கள் பாப்தாதாவினுடைய சர்டிபிகேட் சரிதானா?

போபால் சகோதாரிடம்: சாந்திவனுக்கு அழகு தானே! எல்லோருக்கும் சுகம் கிடைத்ததல்லவா? அவருக்கு ஆசிகள் கிடைக்கிறது.

கோலக் சகோதரரிடம்: இவரும் சரி தான். களைப்படைவதில்லை தானே? தைரியம் உங்களுடையது. உதவி பாபாவினுடையது. இப்போது லக்ஷியம் நன்றாக வைத்திருக்கிறீர்கள். இனி நடந்து கொண்டேயிருக்கும். (மீட்டிங் பற்றியது) தாதிகளிடம் ரிசல்ட் கூற வேண்டும்.

கொஞ்சம் ஐ.பி.க்கள் பாப்தாதாவை சந்திக்கின்றனர்: பாருங்கள். நீங்கள் எல்லோரையும் விட அதிக சேவை செய்ய முடியும். ஏனென்றால், நீங்கள் மத்தியஸ்தராயிருந்து (நியூட்ரல்) உங்களுடைய அனுபவத்தின் ஆதாரத்தில் சேவை செய்ய முடியும். சக்திசாலியான பேச்சாளரை (மைக்) தயார் செய்யுங்கள். எப்படி மின்சாரம் மூலம் வேலை செய்யும் மைக் இருக்கிறதல்லவா, நீங்கள் சக்திசாலியான மைக் ஆகி விடுங்கள். ஆக முடியும். எவ்வளவு நன்றாக ஆக முடியும்! எத்தனை மாதாக்களுக்கு நன்மை செய்ய முடியும். மாதாக்களை விழிப்படையச் செய்யுங்கள் சிவசக்தி ஆக்குங்கள். இளைஞர்கள் விழிப்படையட்டும். எல்லோருமே சேவை செய்ய முடியும். பாப்தாதாவின் வாழ்த்துக்கள்.

உங்களுடைய அதிருஷ்டம் மிகப் பெரியது ஏனெனில் கோடியில் ஒருத்தர் என்று கூறுகிறீர்கள் அல்லவா? நீங்கள் அப்படிப்பட்ட சிலர் தான். இனி எப்படி ஆக வேண்டும்? அந்தச் சிலரிலும் சிலராக ஆக

வேண்டும் அல்லவா? கோடியில் சிலர் ஆகி விட்டீர்கள் ஆனால் இப்போது அந்த சிலரிலும் சிலராக ஆக வேண்டும். ஆகவே என்ன ஆக வேண்டும்? சேவை செய்ய வேண்டும் அல்லவா? எல்லோருக்கும் உங்களுடைய பாக்கியத்தைப் பற்றி, பிராப்தி பற்றி கூறுங்கள். ஏனென்றால் பிராக்டிக்கலாக செய்த அனுபவத்தின் பிரபாவம் சீக்கிரமாக உண்டாகிறது வேறு எதுவும் சொல்ல வேண்டியதில்லை எனக்கு என்ன கிடைத்தது? வாழ்க்கையில் என்ன வித்தியாசம் உண்டானது? இதைக் கேட்பதால் உங்களுக்கு புண்ணியம் கிடைக்கும். புண்ணியக்கணக்கு சேமிக்க வேண்டுமல்லவா? எதிர்காலத்தை உருவாக்க வேண்டுமல்லவா? ஆகவே தற்சமயம் உடனே குஷி உண்டாகும். பிறகு எதிர்காலத்திற்கு புண்ணியம் சேமிப்பாகும் டபுள் பலன் சொற்பொழிவை சிலர் கேட்பார்கள், சிலர் கேட்க மாட்டார்கள் ஆனால் நீங்கள் சொல்கின்ற கதையைக் கேட்பார்கள் ஏனென்றால் இது உங்கள் வாழ்க்கையின் கதையாக ஆகி விட்டது. கதையென்றால், எல்லோரும் விருப்பத்துடன் கேட்பார்கள். மேலும் கதை என்றால் ஞாபகத்திலும் இருக்கும். ஆதலால் இப்படிப்பட்ட சேவை செய்யுங்கள் செய்ய முடியுமல்லவா? செய்ய முடியும்.

இவருடைய விசேஷம் இது தான். என்ன சங்கல்பம் செய்கிறாரோ அதைச் செய்து விடுவார். இந்த சகோதரி குழந்தையும் கூட நல்லவர். முழு குடும்பமும் அதிருஷ்டசாலிகள் மாதாஜியும் கூட அதிருஷ்டசாலி தான். பாருங்கள் எங்கிருந்து வந்திருப்பவரானாலும் சரி சேவை செய்பவர்கள். மிக நன்றாக சேவை செய்ய முடியும். ஆசீர்வாதம் இது தான் -சதா திருப்தியோடிருங்கள், திருப்தி செய்யுங்கள்! உங்கள் முகத்தைப் பார்க்கும் போது நீங்கள் திருப்தியாயிருப்பது தென்படட்டும். இந்த மாதிரியான வாழ்க்கை வாழ வேண்டும். எல்லோரும் திருப்தியுடன் இருக்கவே விரும்புகின்றனர். உங்களுடைய தோற்றம் பேசட்டும். உங்களுடைய முகம் பேசட்டும். பேச்சல்ல, முகம் பேச வேண்டும்.

யார் ஈஸ்வரிய காரியத்தில் சகயோகி ஆகின்றார்களோ, சக யோகத்திற்குப் பிரதி பலனாக, தந்தையின் உதவி கிடைக்கும். தைரியம் உங்களுடையது, உதவி தந்தையினுடையது. சதா இது நினைவில் இருக்க வேண்டும். தைரியம் என்னுடையது உதவி தந்யையினுடையது.

எல்லா காரியமும் சுலபமாகவே நடந்தேறிக் கொண்டேயிருக்கும். யாரெல்லாம் வந்திருக்கிறீர்களோ, சேவையில் இறங்க வேண்டும். எல்லோருக்கும் உங்களுடைய அனுபவத்தின் ஆதாரத்தில் செய்தி கொடுங்கள். எங்கே காரியம் செய்தாலும் சரி, அங்கே உங்களுடைய அனுபவத்தின் ஆதாரத்தில் மற்றவருக்கு அனுபவி ஆக்கிக் கொண்டேயிருங்கள். யாரைச் சந்தித்தாலும் குஷியைக் கொடுத்துக் கொண்டேயிருங்கள் புண்ணியக்கணக்கு சேமிப்பாகிக் கொண்டேயிருக்கும்.

வெளிநாட்டு மூத்த சகோதரிகளுடன்: பேலன்ஸ் மூலமாக சதா ஆசீர்வாதங்களைப் பெறுபவர்கள். எங்கே பேலன்ஸ் இருக்கிறதோ, அங்கு தானாகவே ஆசீர்வாதம் (பிளஸிங்) கிடைக்கும். எவ்வளவு பிளஸ்ஸிங் கிடைக்கிறது? அமிர்த வேளையில் ஸ்வ ஸ்திதியை எமர்ஜ் செய்யுங்கள். மற்றபடி சேவை அதிகமாகிக் கொண்டேயிருக்கிறது இதற்கு வாழ்த்துக்கள். இப்போது சேவை மற்றும் ஸ்வ (ஆத்மா) இரண்டிற்கும் பேலன்ஸ் வைத்திடுங்கள். எல்லோருக்கும் மத்தியில் உதாரணமாக இருக்கக்கூடிய அப்படிப்பட்ட சேவா கேந்திரத்தை உருவாக்குங்கள். எப்படி மியுஸியம் இருக்கிறதல்லவா? அங்கு எல்லா முகவரிகளையும் தருகிறார்கள் அல்லவா? நகரத்தில் எங்கு சென்றாலும் இங்கே செல்லுங்கள், அங்கே செல்லுங்கள் என்று முகவரி கொடுக்கிறார்கள் அல்லவா! இதுபோல யாருக்கு சாந்தி வேண்டுமோ, தைரியம் வேண்டுமோ ஆர்வம், உற்சாகம் வேண்டுமோ, அவர்கள் உங்களுடைய இடத்திற்கு வந்து சேரட்டும். இப்படி பரவட்டும். ஒருவேளை சாந்தியின் வைப்ரேஷன் அனுபவம் செய்ய வேண்டுமென்றால் இங்கே செல்லுங்கள், தைரியம் வேண்டுமென்றால் அங்கே செல்லுங்கள் இப்படி ஸ்பெஷலாக தயார் செய்யுங்கள். சரிதானா? மற்றபடி மியூஸயம் மற்றும் ஆங்காங்கே ஆன்மீக மியூஸியமும் இருக்கிறது. நிறைய பேர் சொற்பொழிவும் ஆற்றுகிறார்கள். இப்படி நிறைய இருக்கிறது ஆனால் அனுபவம் செய்ய வேண்டுமென்றால் உங்களிடம் வர வேண்டும். இப்படி பிரசித்தமாக வேண்டும். உங்களுக்கு அனுபவம் செய்ய வேண்டுமா? இதோ இந்த முகவரிக்குச் செல்லுங்கள் என்று கொடுக்க வேண்டும். தற்காலத்தில் மக்களுக்கு கேட்பதற்கு பழக்கம் இல்லை. அனுபவம் செய்வதற்கும் பழக்கமில்லை. மற்றபடி எல்லோரும் நல்லவர்கள்.

நிமித்தமாகியிருக்கிறீர்கள். பாப்தாதாவுக்கு சேவை என்றால் மிகவும் பிடித்தமானது. சேவை நன்றாகச் செய்கிறீர்கள். இதில் முன்னேறிக் கொண்டேயிருங்கள்.

டபுள் விதேஷி முக்கிய சகோதரர்களுடன்: நன்றாக இருக்கிறது உங்களுடைய குரூப். சிறப்பானதாக இருக்கிறது. ஒருக்கால், தந்தை இன்று கூறினாரல்லவா? பேலன்ஸ் பற்றி. சுயம் மற்றும் சேவை இந்த இரண்டில் பேலன்ஸ் இருந்தால், பிளஸ்ஸிங் கிடைத்துக் கொண்டேயிருக்கும். மற்றபடி எல்லோரும் தங்கள் தங்கள் சேவையில் நன்றாகவே செய்து கொண்டிருக்கிறீர்கள். இதற்கு வாழ்த்துக்கள். நிர்விக்னமாக இருக்கிறீர்கள் அல்லவா? ஏனென்றால் நீங்கள் நிமித்தமாயிருப்பவர்கள் ஆகவே நிமித்தமாயிருப்பவர்கள் என்ன செய்கிறார்களோ அதைப் பார்த்து மற்றவர்களும் செய்வார்கள். இதற்கு அதிகப்படியாக புண்ணியம் கிடைக்கிறது. ஏனென்றால், மற்றவர்களுக்கு தைரியம் கிடைத்தது. இதனால் அவர்களும் முன்னேறினார்கள். இம்மாதிரி உங்களுடைய அனுபவம் மூலமாக மற்றவர்களும் அனுபவசாலியாவர்கள். முன்னேறினார்கள். இதனால் அவர்களுக்குக் கிடைக்கும் பலன் உங்களுக்கும் கிடைக்கிறது. அப்படி என்ன கிடைக்கிறது. உள்ளுக்குள் குஷி. இலகுவான தன்மை. ஏதாவது பிரச்சினை வந்தாலும் அது பிரச்சனையாகத் தெரியாது. மகிமை செய்யப்படுகிறதல்லவா? மலை, மடு போலாகி விட்டது என்று. பார்ப்பதற்கு பெரிய பிரச்சினை போலத் தெரியும் ஆனால் அனுபவத்தின் ஆதாரத்தில் பஞ்சு போல அவ்வளவு இலகுவானதாகி விடும். ஆகவே பிரச்சினை புரூப் ஆகி விடும். இப்படிப்பட்ட வாழ்க்கையாக ஆகி விடும். பிரச்சினை என்பதே இல்லை என்பது போல. பிரச்சினை இருக்கிறதா? இருந்தால் உள்ளன்போடு நினைவு செய்யுங்கள். எந்த ஒரு சிறியதும், பெரியதுமான விஷயங்கள் வந்தாலும் மேரா பாபா போதும். பாபா நீங்கள் எடுத்துக் கொள்ளுங்கள் என்றால் பிரச்சினை பாபாவிடம் சென்று விடும். நீங்கள் இலேசாகி விடுவீர்கள். தந்தையோடு கூடவே செல்ல வேண்டுமல்லவா? பின்னால் தாமதமாக வரப் போவதில்லை தானே! கூடவே செல்ல வேண்டுமென்றால், பறக்க வேண்டியதிருக்கும். தந்தை பறப்பார். குழந்தைகள் இலகுவானவர்களாக ஆகவில்லை என்றால், எப்படி பறக்க முடியும்? கூடவே செல்ல முடியாது. ஆதலால் டபுள் லைட். எந்த விதமான சுமையும் இருக்கக் கூடாது. ஏதாவது சுமை

இருந்தால் தந்தையிடம் கொடுத்து விடுங்கள். நீங்கள் சுமையற்றவர்களாகவே இருங்கள். கொடுக்கத் தெரியும் தானே! மேலும் மிக நல்ல விதமாக உங்கள் பார்ட்டைச் செய்கிறீர்கள். பிரச்சினையைப் பார்க்காதீர்கள். டபுள் லைட்டாகி முன்னே பறந்து சென்று கொண்டேயிருங்கள். இவருடைய (தாதி ஜனாகி) டைரக்ஷன் படி செல்லுங்கள். தந்தை உங்களுக்கு உதவி செய்வார். நிறைய சேவை செய்ய முடியும். விசேஷம் உங்களிடம் இருக்கிறது. எல்லோருமே விசேஷமானவர்கள் தான். குரூப் விசேஷம் நிறைந்த குரூப் ஒவ்வொருவரிடமும் ஏதாவதொரு விசேஷம் நிச்சயமாக இருக்கிறது. இதன் காரணத்தாலேயே இந்த குரூப் தயாரானது. இந்த விசேஷத்தை காரியாம்சத்தில் கொண்டு வாருங்கள். தாமதிக்காதீர்கள். காரியத்தில் கொண்டு வாருங்கள். சரிதானா? நிமித்த ஆத்மாக்களாகிய நீங்கள் எல்லோருமே மிகவும் நல்லவர்கள். பாப்தாதாவுக்கு விசேஷ அன்பு உண்டு. நீங்கள் எல்லோரும் ஒருவரைவிட இன்னொருவர் நல்லவராகவே இருக்கிறீர்கள் நல்லது.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

## 06.09.2007 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

## விசேஷ 'போக்' சமயத்தில் பாப்தாதாவின் வருகை மதியம் 11.30 மணி. தாதிஜியின் கையில் பிரத்யக்ஷதாவின் திரையை விலக்குவதற்கான பட்டன் இருக்கிறது. இதில் நீங்கள் எல்லோரும் சகயோகி (உதவியாளர்) ஆகுங்கள்!

இன்று பாலக் ஸோ மாலிக் (குழந்தை மற்றும் எஜமான்) குழந்தைகளின் அழைப்பின் பேரில் பாப்தாதா இதோ வந்து விட்டேன் என்று ஆஜராகி விட்டார். பாப்தாதா ஒவ்வொரு குழந்தையையும் தன்னுடைய தலை மீதுள்ள கிரீடமாகப் பார்க்கின்றார். பாப்தாதா பார்த்தார் உங்கள் எல்லோருடைய அன்பான தாதி தனது விருப்பத்தின் காரணமாக, மிகவும் அன்புடன் நிர்சங்கல்ப சமாதியில் மற்றும் சாதனாவில் இருந்து கொண்டே சுய விருப்பத்தின் பேரில் பாபா சமானமாக, தீவிரமாக எல்லையற்ற சேவையை அனுபவம் செய்வதற்காக சாத்தி, சாட்சி மற்றும் சமான் ஸ்திதியை அனுபவம் செய்வதற்காக, பாபாவிடம் வதனத்திற்கு வந்து சேர்ந்து விட்டார். இத்தோடு கூடவே நீங்கள் எல்லோருமே அனுபவம் செய்திருக்கிறீர்கள் ஆதி முதலாக கடைசி வரையிலும் சுயநலமற்ற அன்பு, தவறில்லாத சாதனை பரிஸ்திதி (பிரச்சனைகள்) மற்றும் ஸ்துதி (வீண் புகழ்ச்சி) ஆகிய இரண்டிலிருந்தும் விலகியிருந்தும், எல்லோருடைய அன்பு நிறைந்த வாழ்க்கையின் பிரபாவம், நாலா பக்கமும் எந்த ஒரு கஷ்டமுமின்றி உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் தூய்மையான அன்பின் அதிர்வலைகள் தானாகவே, இயல்பாகவே பரவி விட்டது என்பதை சொல்லத் தேவையில்லை, அழைக்கவில்லை என்றாலும் கூட எல்லோருடைய உள்ளத்திலும் அன்பிற்கு மறுதளிப்பு அளிப்பதற்கான ஆர்வம் உற்சாகம்

இயற்கையாகவே வெளிப்பட்டுக் கொண்டிருக்கிறது. இது தான் பிரத்யக்ஷ சிநேகம், சகயோகம் மற்றும் சமான் ஸ்திதியின் (நிலை) பிரபாவம். தாதிஜியின் வாழ்க்கையில் ஒரே சங்கல்பம் தான் இருந்தது. அதாவது இப்போது வெகு சீக்கிரமாகவே தந்தையின் பிரத்யக்ஷம் பற்றிய சப்தம் பரவி விட வேண்டும். ஆகவே இந்த பிரத்யக்ஷதா, தாதியின் பிரத்யக்ஷம் மூலமாக ஈஸ்வரிய விஷ்வ வித்யாலயம் மற்றும் பாப்தாதாவின் பிரத்யக்ஷம் என்ற முதலாவது அத்யாயம் சிறிய அத்யாயம் ஆரம்பமாகி விட்டது. இவர் யார்? ஆன்மீக வித்யாலயம் என்பது என்ன? என்று எல்லோருடைய பார்வையிலும், மனதிலும், உள்ளத்திலும் ஒரு கேள்விக்குறி ரூபத்தில் உற்பத்தியாகியிருக்கிறது. முதலில் என்ன? என்ன? என்ற கேள்வி எழும். பிறகு இது தான், இது தான் என்ற பதில் எதிரில் வரும். தாதிக்கு ஏதாவது புதுமையாகச் செய்ய வேண்டும் என்ற ஆர்வம் இருந்தது. சேவை விசால ரூபத்தில் செய்ய வேண்டும் என்பது. ஆதலால் தானாகவே மிகச் சுலபமாக அறிமுகம் எனும் கொடி பறந்து கொண்டிருக்கிறது. இப்போது நீங்கள் எல்லோரும் அன்பே உருவான சொரூபத்தில், நடைமுறையில் கொண்டு வந்து, இந்த பிரத்யக்ஷம் என்ற கொடியை இன்னும் உயரமாகப் பறக்க விட வேண்டும். தாதி பிரத்யக்ஷதாவின் கொடி மற்றும் பிரத்யக்ஷத்தாவின் திரை ஆகிய இதன் சுவிட்ச்சை (பட்டன்) ஆன் செய்வதற்கான பட்டனை கையில் பிடித்துக் கொண்டிருக்கின்றார். ஆகவே இதில் நீங்கள் எல்லோரும் கூடவே இருக்கின்றீர்கள் அல்லவா? தாதியிடம் மிகுந்த அன்பிருக்கிறதல்லவா? ஆகவே தாதி எப்படி தன்னுடைய சுய விருப்பத்தின் மூலமாக எவர்ரெடியாக, நஷ்டமோகாவாக ஆகி விட்டார்! எல்லோரும் எதிரில் நின்று கொண்டிருந்தனர். என்றாலும் கூட, நிர்மோகி (மோகமற்ற நிலை) மூர்த்தியாக இருந்து தாதி பறந்து சென்று விட்டார். இம்மாதிரியாக, தாதி பிரம்மாதந்தையைப் பின்பற்றிக் கொண்டிருந்தார். அச்சானக் (திடீரென) என்ற பார்ட்டில் (பாகம்) தாதி வெற்றி அடைந்து விட்டார். இந்த கடைசி பாடத்தை அன்பு நிறைந்த ஆத்மாக்களுக்கு இவ்வாறான சைகை கொடுத்து விட்டுச் சென்றிருக்கின்றார். இளி நீங்கள், உங்களைப் பற்றி யோசியுங்கள். தாதி பிரத்யக்ஷதாவின் பட்டனைக் கையில் பிடித்துக் கொண்டிருக்கும் இந்த பார்ட்டில் நாம் எப்படி சகயோகியாக இருக்க வேண்டும் என்பது பற்றி சிந்தியுங்கள். பட்டன் பிரஸ் செய்வதற்கு முன், விசேஷ பார்ட்தாரியாக கூடவே இருக்கின்ற, நீங்களும் எவர் ரெடி (எப்போதும் தயார் நிலை)

தானே? இப்போது நீங்கள் நான் சென்டர் நிவாசி மதுபன் நிவாசி, லௌகீக் சேவாதாரி என நினைக்கக் கூடாது. நீங்கள் உலக சேவை மேடையில் இருக்கின்ற விசேஷ பார்ட்தாரிகள் (விசேஷ நடிப்பு நடிக்கக்கூடியவர்கள்). இப்போது உலகில் உள்ள எல்லோருடைய பார்வையும், தாதியின் பிரத்யக்ஷதாவில் கூடவே இருக்கின்ற உங்கள் பக்கமாக இருக்கிறது. உலகினருடைய பார்வை என்பது யார் பிரம்மா குமாரி என்ற சொல்லிக் கொண்டிருக்கின்றார்களோ, அவர்கள் யாராயிருந்தாலும், சிறியவர் பெரியவர், எந்த ஒரு காரியத்தில் த நிமித்தமாக இருந்தாலும் சரி, இவர்கள் ஒவ்வொருவர் மீதும் இருக்கிறது. இவ்வளவு பெரிய பொறுப்பு தங்களுக்கு இருக்கிறது என்பதை உணருகிறீர்களா? அல்லது நம்மை விட பெரியவர்கள் இருக்கிறார்கள் என்று அவர்களைப் பார்க்கிறீர்களா? பெரியவர்களாக இருப்பவர்கள் புரிந்து கொள்ள வேண்டும். இதில் எல்லோருடைய கூட்டு சக்தி அவசியம் (சங்கடன் கி சக்தி) இது ஆன்மீக கோட்டை. கோட்டையின் ஒவ்வொரு செங்கலுக்கும் பொறுப்பு இருக்கிறது. நான் பிரம்மா குமாரி, பிரம்மா குமார் என்று தங்களை கருதுபவர்கள் எல்லோருமே. பிரத்யக்ஷத்தாவிற்கு நிமித்தமாயிருக்கும் இந்த ஆன்மீக கோட்டையின் ஆத்மாக்கள் ஆவார்கள். கோட்டைச் சுவரின் ஒவ்வொரு செங்கலும் பொறுப்புள்ளது தான். அடித்தளத்தில் இருக்கும் செங்கலாக இருந்தாலும், மையத்தில் இருக்கும் செங்கலானாலும் மேல் பகுதியில் இருக்கும் செங்கலானாலும் சரி தான். ஏனெனில் இதில் உள்ள ஒரு செங்கல் ஆடினாலும், கோட்டையைப் பாதிக்கவே செய்யும். எல்லோருக்கும் தாதியிடம் அன்பிருக்கிறது ஆனால் தாதிக்கு எதன் மீது அன்பு இருக்கிறது. உங்கள் பாப்தாதா பார்த்தார். தாதியின் அன்பு முகத்திற்குப் பலனாக எல்லையற்ற அன்பு கிடைத்து விட்டது. இப்போது தாதியின் அன்பு எந்த விஷயத்தில் இருக்கிறது. தாதி கூறுகின்றார். நாளைய விஷயத்தை விட்டுவிடுங்கள். இன்றைக்கு என்பது கூட அல்ல. இப்போது பிரத்யக்ஷத்தா கொடியை உயர்த்துவதற்காக, உயர்ந்த ஸ்திதியினுடைய சம்பன்ன சொரூபத்தைக் காட்டுங்கள். ஆகவே யாரெல்லாம் இங்கு அமர்ந்திருக்கிறீர்களோ, தாதி கூறிக் கொண்டிருந்தார், எல்லோரிடமும் கேட்க வேண்டும் என்று. என்னுடைய சங்கல்பம் என்று சொன்னாலும் சரி, பாபாவின் சங்கல்பம் என்று சொன்னாலும் சரி, எல்லோரும் சம்பூரணம் (முழுமை நிலை) அடைவதற்காக தன்னுடைய ஏதாவதொன்றை மாற்றிக் கொள்ள

வேண்டியிருந்தாலும் சரி, சகித்துக் கொள்ள வேண்டியிருந்தாலும் சரி, இரக்கப்பட வேண்டியதகா இருந்தாலும் சரி, நிர்மலமான பேச்சாக இருக்க வேண்டியிருந்தாலும் சரி. சுப பாவனா (சுபமான எண்ணம்), சுப காம்னா (சுப ஆசை) இயற்கையானதாக ஆக்கிக் கொள்ள வேண்டியதாக இருந்தாலும் சரி. தாதி உங்களிடம் என்னை கேட்கும்படியாகக் கூறுகின்றார் என்னைப் போன்று சமானமாக ஆவதற்குத் தயாராக இருக்கின்றீர்களா? வெறுமனே கை உயர்த்தக்கூடாது. மனதார கை உயர்த்த வேண்டும். வலது கையை உயர்த்த வேண்டும் என்பது பெரிய விஷயமல்ல. எனினும் வலது கையை உயர்த்துவது தான் சரியான அடையாளம். என்ன நடந்தாலும் சரி நான் மாற வேண்டும். தன்னை மாற்றிக் காண்டு, பிறகு மற்றதை மாற்ற வேண்டும். இது இப்படி அது அப்படி என்று சொல்லிக் கொண்டேயிருந்தால் சரியல்ல. இப்படி நடந்து கொண்டு தான் இருக்கும் ஆனால் நான் என்ன செய்ய வேண்டும்? தாதிக்கு சமமாக ஆக வேண்டுமல்லவா? தாதி எத்தனையோ பேர்களை நடத்திக் காண்பித்தார். எத்தனை ஆண்டுகள்! ஒரு வருஷம். இரண்டு வருஷமல்ல. சிறியவராயிருந்தாலும், பெரியவர்களாயிருந்தாலும், சேவை செய்பவர்களாயிருந்தாலும், சொற்பொழிவு நிகழ்த்துபவர்களாக இருந்தாலும், ஜோனில் (மண்டலம்) உள்ளவர்களாக இருந்தாலும், மற்ற தாதிகள் தாதாக்கள் எல்லோரையும் நடத்திக் கொண்டிருந்தார். இருப்பினும் நிர்மோகியாகி விட்டாரல்லவா? கடைசியில் இவர்கள் யாரையாவது நினைவு செய்தாரா? செய்தாரா? நீங்கள் எல்லோரும் எதிரில் நின்று கொண்டிருந்தீர்கள். யாரைப் பற்றியாவது நினைவு வந்ததா? மூச்சு தெளிவாக வந்தது. அனுபவம் செய்தீர்கள் அல்லவா? அதாவது சாந்தி தேவியாக இருந்தார். சம பாவனை சிரேஷ்ட பாவனை பிரத்யக்ஷ ரூபம் காண்பித்தார். இப்படி வேறு யாருக்கும் மூச்சு செல்லவில்லை. நீங்கள் எல்லோருமே அக்கம் பக்கமாக நின்று கொண்டு தான் இருந்தீர்கள். நான் போய்க் கொண்டிருக்கிறேன், நான் போய்க் கொண்டிருக்கிறேன். வரலாற்றில் முதல் உதாரணமாகும். பாப்தாதாவோ உள்ளத்தில் இருந்தார் ஆனால் நீங்கள் எல்லோரும் சாகாரத்தில் (ஸ்தூலமாக) எதிரில் இருந்தீர்கள். இப்படிப்பட்ட சூழ்நிலையில், தாதியைப் போல வேறு யாரும் விடைபெறவில்லை. கேட்டீர்களா? இப்போது என்ன செய்ய வேண்டும்? கேட்டீர்கள் அல்லவா? கவனமாகக் கேட்டீர்கள். பின்னால் இருந்தவர்களும் கேட்டார்கள். சரி. இப்படி யார் நினைக்கிறீர்கள் அதாவது என்ன

நடந்தாலும் சரி, சகித்துக் கொள்ள வேண்டியிருந்தாலும் சரி, மாறியே தீர வேண்டும். இப்போது கை உயர்த்துங்கள். நல்லது. இது உறுதியான கைதானே! அல்லது இப்படி, அப்படியா? உள்ளூக்குள்? பார்க்கலாம். செய்து பார்க்கலாம் என்பதல்ல. முயற்சி செய்வோம். வோம், வோம்... என்று இருக்கக் கூடாது, வோம் வோம். அல்ல. மிக நன்று,

தாதியிடம் நீங்கள் செய்தி அனுப்பினீர்கள். தாதி கூறுகின்றார். நான் நிச்சயம் வருவேன் உங்களுடன் சம்பாஷனை செய்வேன். மற்றபடி உங்கள் எல்லோருடைய அன்பான பாவனை எல்லாம் தாதியிடம் தெள்ளத் தெளிவாக கண் முன்னே தெரிந்து கொண்டிருக்கிறது. யாருடைய மனதில் எப்படிப்பட்ட ஸ்திதி இருக்கிறது? என்று எல்லோரையும் சுற்றிப் பார்த்து தெரிந்து கொண்டு வந்திருக்கின்றார். தாதி கூறினார்: நான் வந்து கூறுவேன், எவ்வளவு மறைத்து வைத்திருந்தாலும் கூட, வதனத்தில் மறைக்க முடியாது. அங்குள்ள இயந்திரம் ஆன்மீக இயந்திரமாகும். நல்லது.

நாலா பக்கமும் தாதியினுடைய அன்பின் பிரத்யக்ஷ சொரூபத்தைக் காண்பிக்கக் கூடிய, எப்படி தாதி பிரம்மாபாபாவின் சாகார வாழ்க்கையைப் பின்பற்றிக் காண்பித்தாரோ, அதே போல தந்தை மற்றும் விசேஷ வாரிசு குழந்தையாகிய தாதியைப் பின்பிற்றி பிரத்யக்ஷத்தா கொடியை பறக்க விடுவதற்குத் துணையாக இருக்கின்ற ஆத்மாக்களை பாப்தாதா பார்த்து கொண்டிருக்கின்றார். உள் நாட்டிலும், வெளிநாடுகளிலும் உள்ள குழந்தைகள் சமான் ஆவதற்காக ஆர்வம், உற்சாகத்துடன் பிளான் தயார் செய்து கொண்டிருக்கிறார்கள். அந்த நாளை சமீபத்தில் கொண்டு வர வேண்டும். சமயம் வரும்போதல்ல. சமயத்தை உங்களுக்குச் சமீபமாகக் கொண்டு வர வேண்டும். சமயம் வரும் போதல்ல. சமயத்தை உங்களுக்குச் சமீபமாகக் கொண்டு வர வேண்டும். ஆகவே இதுபோல ஸ்வ பரிவர்த்தக் (ஆத்ம பரிவர்த்ததனை/ சுய மாற்றம் செய்பவர்கள்), உறுதிபடைத்த மனதுடன் நாலா பாகங்களிலும் இருக்கின்ற குழந்தைகளைப் பார்க்கின்றார். எதிரில் இருந்தாலும், இல்லாவிட்டாலும், பாப்தாதாவும், தாதியும் நாலா பக்கங்களிலுமுள்ள கீதாபாடசாலையில் உள்ள ஆத்மாக்களையும் பார்க்கின்றார். ஆகவே, எல்லோருமே தந்தைக்குத் துணையாக இருப்பவர்கள், தாதிக்கு துணையாக இருப்பவர்கள். ஆகிய அனைத்து

# 2007 அவ்யக்த முரளி

பிராமண ஆத்மாக்களுக்கு பாப்தாதா மற்றும் தாதியின் சார்பாக ஒவ்வொருவருடைய பெயர் மற்றும் விசேஷம் சகிதமாக அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்தே.

தாதி உங்களுடைய வகுப்புகளுக்கு வந்து கொண்டிருக்கின்றார், வருவதில்லை என்று சொல்வீர்களானால், அது சரியல்ல. நீங்கள் எந்த ஒரு சமாதி தயார் செய்திருக்கிறீர்களோ, அதனைச் சுற்றிச் சுற்றியும் வந்து கொண்டிருக்கின்றார் ஆனால் உங்களோடு சம்பாஷணை செய்ய விரும்புகின்றார். ஆதலால் அவருக்கு இன்னும் கொஞ்சம் அவகாசம் வேண்டும். மற்றபடி தாதிக்கு 12-நாட்கள் முடிவடையப் போகிறது. தாதிக்கு சாகார வதனத்தில் விசேஷமாக நியாரா, பியாரா மிக அவசியமான காரியங்களில் நிமித்த மாத்திரம் பார்ட் செய்ய வேண்டியதிருக்கிறது, ஆனால் தாதியினுடைய ஜன்மம், காரியம் மிகவும் அலாதியானதாக இருக்கிறது. அவர் பிறகு ஒரு முறை விஸ்தாரமாகக் கூறுவார். பாப்தாதாவுக்கும் டிராமாவில் நிச்சயிக்கப்பட்ட பார்ட்டை செய்ய வேண்டியதாக இருக்கிறது. பார்ட் செய்விக்க வேண்டியதாகவும் இருக்கிறது. அலௌகீகத்தா என்றால் என்ன என்பது பற்றி பிறகு கூறுவேன். சரி தானே? முதல் லைனில் அமர்த்திருப்பவர்களுக்கு சரிதானே! தாதிகளுக்கு சரி தானே! பாண்டவர்களுக்கு சரியாக இருக்கிறதல்லவா? இரண்டு மடங்கு பின்பற்றுதல். தாதியினுடைய மூன்று வார்த்தைகளை நினைவில் வைத்திருக்க வேண்டும். நிமித்தம்-நிர்மான்(பணிவு)-நிர்மல் வாணி -இந்த மூன்று வார்த்தைகளை அடிக்கடி, ஒவ்வொரு காரியத்தையும் ஆரம்பிப்பதற்கு முன்பு, காரியம் மாறினாலும் இந்த மூன்று வார்த்தைகளின் நினைவு மாறக்கூடாது. எவ்வளவு கடினமான காரியமாக இருந்தாலும் சரி, இந்த மூன்று வார்த்தைகளை எப்படி நினைக்க வேண்டும் என்றால், எப்படி பாப்தாதா தீதி தாதி என்று மூன்று பேர் இருக்கிறார்கள் அல்லவா, இது போல இந்த மூன்று வார்த்தைகளை மறந்து விடக்கூடாது, காரியம் ஆரம்பிப்பதற்கு முன், இதை நினைவு செய்து பிறகு ஆரம்பிக்க வேண்டும். ஆதலால் மிக சீக்கிரமாக தாதிக்கு சமானமாக, எளிதாக சமான் ஆகி விடுவீர்கள். நல்லது. இப்போது என்ன செய்ய வேண்டும்?

எல்லா தாதிகளும், பாப்தாதாவை சந்திக்கிறார்கள். முதலாவதாக நிர்மல் சாந்தா தாதி சந்தித்தார். பிறகு மற்ற தாதிகள்.

தாதிசாந்தாமணி: நன்றாக முன்னேறினீர்கள். எந்த லக்ஷியம் வைத்திருந்தீர்களோ, அதை நடைமுறையில் கொண்டு வந்து கொண்டிருக்கிறீர்கள். இதற்கு வாழ்த்துக்கள்.

மனோகர் தாதி: யக்ஞத்தின் ஆதி சகயோகி ஆத்மா. சகயோகியாக இருக்கிறேன். சகயோகியாக இருப்பேன். அண்டர் லைன். ஏனென்றால் தாதிகள் அலங்காரம் என்றால் உங்களில் ஒரு தாதி கூட மிஸ் ஆகக் கூடாது. ஆமாம் என்று சொல்லுங்கள். பலம் வந்து விடும். ஆமாம் என்பதை நடந்து காட்ட வேண்டும். செய்யத் தான் வேண்டும். யார் எவ்வளவு தடுத்தாலும், நான் செய்தேயாக வேண்டும். தாதியின் தோழி அல்லவா? ஆகவே தாதி ஒருபோதும் இல்லை என்று சொன்னது கிடையாது. ஒவ்வொரு காரியத்திலும் ஆம். ஆம் அப்படியே செய்கிறேன் என்றார்கள். இதே போலவே வேண்டும்.

ரத்தன் மோகினி தாதி: நீங்களோ ஆல் ரவுண்டர். இப்போது தாதிகள் மற்றும் எல்லோருக்கும் தங்களுடைய பார்ட்டை எல்லோர் முன்னிலையிலும் செய்து காண்பிக்க வேண்டும். எல்லோருடைய பார்வையும் பாண்டவர்கள் மற்றும் தாதிகள் பக்கமாக இயற்கையாகவே செல்கிறது. ஆம். செய்து கொண்டிருக்கிறார்கள். செய்து கொண்டேயிருப்பீர்கள். நல்லது.

பாண்டவர்கள் என்ன செய்யப் போகிறீர்கள்? மூன்று பேரும் வாருங்கள். (நிர்வயர் சகோதரர், ரமேஷ் சகோதரர். பிரிஜ்மோகன் சகோதரர்) உங்கள் மூவருக்கும் இப்போது என்ன செய்ய வேண்டும்? மூன்று வார்த்தைகள் தாதிக்கு விசேஷமாக இருந்தது. சிறியவர்களும், பெரியவர்களும் தன்னுடையவர் என்றே எண்ணினார்கள். நம்மவர் என்ற உணர்வை எல்லோரையும் விட அதிகமாக தாதி கொடுத்தார். இந்த தாதிகள் இருக்கிறார்கள் ஆனால் தாதிகளில், தாதியிடம் இந்த விசேஷம் அதிகமாக இருந்தது. ஆகவே உங்களிடமும் கூட இப்படிப்பட்ட கடமை உணர்வு இருக்க வேண்டும். சந்திப்பு எப்படிப்பட்டதாக இருக்க வேண்டும். எனில், ஒவ்வொருவருக்கும் நம்மவர் என்ற அனுபவம் ஆக

வேண்டும். நம்மவர் என்ற உணர்வு உண்டாக வேண்டும். கடமைக்காக அல்ல. நம்மவர் என்பதை எவ்வளவு கொண்டு வருகிறோமோ, அவ்வளவு. தாதிக்கு இவ்வளவு அன்பு மறுதளிப்பாக எப்படி கிடைத்தது? வி.ஐ.பி.ஆகி இருந்தாலும் சரி, வேறு யாராக இருந்தாலும் நம்மவர் என்ற உணர்வு உண்டாகியது. எங்களுடைய தாதி என்று. இப்போதும் கூட பாருங்கள். எங்கள் தாதிமா. தாதிமா... வாயால் சொல்வதில்லை ஆனால் அவ்வளவு வாஞ்சையுடன் சொன்னார்கள். இது தான் நம்மவர் என்ற அனுபவத்தை உண்டாக்குவதற்கான ரிசல்ட். எப்படி தாதிகள் பக்கமாக எல்லோருடைய பார்வை இருக்கிறதோ, இதே போலவே விசேஷ நிமித்த பாண்டவர்கள் பக்கமாகவும் இருக்கிறது. ஆகவே செய்ய வேண்டியதிருக்கும். செய்ய வேண்டியதிருக்குமல்லவா? செய்யத் தான் வேண்டும். இப்போது ஒவ்வொருவருக்கும். மீடியாவைச் சார்ந்தவர்களாயிருந்தாலும், வி.ஐ.பி.க்களாக இருந்தாலும், சாதாரண பொது ஜனங்களாக இருந்தாலும் எல்லோரும் வீட்டிலிருந்தவாறே, சிரத்தாஞ்சலி கொடுத்திருக்கிறார்கள். வராமலிருக்கலாம் ஆனால் டி.வி. மூலமாக எல்லோரும் மெஜாரிட்டி பார்த்திருக்கிறார்கள். சிரத்தாஞ்சலி கொடுப்பதில் சகயோகியாகவும் ஆகியிருக்கிறார்கள். ஆகவே இப்போது இந்த ஈஸ்வரிய விஷ்வ வித்யாலயம் மறைமுகமானதாக இல்லை. ஒவ்வொரு காரியத்தையும் கண் திறந்து பார்க்கிறார்கள். தவறானவர்கள், தவறாகவேப் பார்க்கிறார்கள். நேர்மையானவர்கள் நேர்மையையே பார்க்கிறார்கள் ஆனால் விசேஷமாக எல்லோருடைய பார்வையிலும் வந்து விட்டது. ஆகவே இதை அனுசரித்து நீங்கள் எல்லோரும் சேர்ந்து, எல்லா இடங்களிலும் வாயுமண்டலத்தை சக்திசாலியாக செய்ய வேண்டியதாயிருக்கும். ஏனெனில் தாதி உலகின் பார்வையில் கொண்டு வந்து விட்டார். ஒன்று யார் பிரஸிடெண்டாக ஆக வேண்டியிருந்ததோ அவர் காரணமாக எல்லோருடைய பார்வையிலும் வந்தது. பிறகு தாதியின் காரணமாக அதிகமாக பார்வையில் வந்து விட்டதென்றால் இப்போது விசேஷமாக இந்த வித்யாலயத்தின் பக்கமாக எல்லோருடைய பார்வையும் இருக்கும். ஆதலால் அண்டர் லைன், கேட்டீர்களா?

முன்னி சகோதரி (பாபா, பாதி காட்டேஜ் வெறிச்சோடி இருக்கிறது) இனி மேலும் கூட அங்கே சேவைக்கான சாதனங்கள் செய்து வைக்கப்பட வேண்டும். (நாங்கள் எந்த விஷயத்தில் கவனம் செலுத்த வேண்டும்)

எப்படி தாதி செய்து கொண்டிருந்தாரோ, அதுபோல புன்முறுவலுடன் கூடிய சக்திசாலியாக இருக்கின்ற தோற்றத்தடன் இரக்கமுள்ள பாவனை. திருப்தி எனும் சேவை செய்து கொண்டே இருக்க வேண்டும். வெறுங்கையோடு அனுப்பக்கூடாது. (தாதியின் நினைவு நிறைய வருகிறது). அவர் வருவாரல்லவா? எப்படி மறக்க முடியும்? கொஞ்ச நாட்களாவது நினைவு வந்து கொண்டு தான் இருக்கும். (சாகாரத்தின் கணக்குப்படி) ஏனெனில் 24-மணிநேரம் கூடவே இருந்திருக்கிறீர்கள். ஆகவே நினைவு வரத்தான் செய்யும். தாதி சந்திக்க வருவார். தேதி குறிக்கப்படவில்லை ஆனால் அவசியம் வருவார்.

தாதி ஜானகி **(நாளைக்கு வெளி நாடு செல்கிறார்):** சம்மதம் கொடுக்கப்பட்டுள்ளது ஆனால் குறைவான தூரம் வழியாக பிரயாணம் தயாரிக்கப்பட்டிருக்கிறது அல்லவா?

**மோகினி சகோதரி:** (இப்போது நாங்கள் என்ன செய்ய வேண்டும்). தாதிக்கு தெரிவியுங்கள். தாதிக்கு இப்படித்தான் பார்ட் உள்ளது. எப்போது விரும்புகிறாரோ அப்போது வந்து விடுவார். உங்களுக்குத் தெரிய வரும். உங்களுக்கு வதனத்தைப் பற்றிய அனுபவம் இருக்கிறதல்லவா? ஆதலால் உங்களுக்குத் தெரிய வரும். பாப்தாதா எல்லாவற்றிலும் நல்ல பார்ட்டை செய்விப்பர். இந்த மூன்று வார்த்தைகளை மட்டும் முதலில் நினைவு செய்ய வேண்டும். சேவை செய்யுங்கள். ஆல் ரவுண்டு சேவையில் சுறுசுறுப்புடன் இருங்கள். இங்கேயும் கூட சதா சேவையில் இருங்கள். நாலா பக்கமும் செய்ய வேண்டிய சேவையில் நேரம் கிடைக்கமாலிருந்தது. இப்போது நேரம் இருக்கிறது. கொடுக்க முடியும். நல்ல சேவை நடக்கும். கவலைப்பட வேண்டாம். தந்தை உடன் இருக்கின்றார்.

(யாரெல்லாம் தாதிக்கு சேவை செய்திருக்கிறார்களோ, அந்த முழு குழுவினரும் பாப்தாதா முன்னிலையில் இருக்கிறார்கள்) மிகவும் நல்லது. எவ்வளவு நல்ல குரூப்பாக இருக்கிறது, பாருங்கள். எல்லோரும் டிராமாபடி ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் பார்ட்டை செய்தார்கள். மேலும் எல்லோருமே மிக நன்றாக பார்ட் செய்தார்கள் ஆனால் இப்போது சுய பரிவர்த்தனை மூலமாக வாயுமண்டலத்தை பரிவர்த்தனை செய்ய வேண்டும். உங்களிடம் தந்தையின்

லக்ஷணங்கள் தெரிய வேண்டும். எப்படி லௌகீகத்தில் கூட அநேக குழந்தைகளிடம் தந்தையின் லக்ஷணங்கள் (குணங்கள்) முகத்தில் காணப்படும். ஆகவே உங்கள் ஒவ்வொருவரிடமும் தந்தையின் (பாபா) லக்ஷணங்கள் தெரியட்டும். லக்ஷணம் வந்து விட்டால் என்ன ஆகும்? லக்ஷியம் தெளிவாகத் தெரியும். தற்காலத்தில் உயர்ந்த லக்ஷியம் வைக்கிறார்கள் ஆனால் அதற்கான லக்ஷணம் இருப்பதில்லை ஆனால் நீங்கள் லக்ஷணம் மூலமாக லக்ஷியத்தை தெளிவு படுத்துங்கள். ஏனெனில், எல்லோருடைய பார்வையும் லக்ஷணத்தின் மீது உள்ளது. ஆதலால் எவ்வளவு லக்ஷணமுள்ள நடத்தை இருக்கிறதோ, அப்போது லக்ஷியம் தானாகவே நிறைவேறி விடும். இவர்கள் யார்? என்ன செய்ய விரும்புகிறார்கள் என்பது. சரி. யாரைப் பற்றியதாக இருந்தாலும் சரி, பேச்சு நடக்கத்தான் செய்யுமல்லவா? மாலை அல்லவா? நம்பர்வாராகத்தானே இருக்கிறார்கள். ஆதலால் இவர்கள் என்ன செய்கிறார்கள். ஏன் இப்படி நடக்கிறது என்று சொல்லாதீர்கள். நான் என்ன செய்ய வேண்டும்? இப்படிப்பட்ட சூழ்நிலையில் நான் எப்படிப்பட்ட சகயோகம் கொடுக்க முடியும். ஒருவேளை செய்ய முடியாவிட்டால் விலகியிருங்கள் ஆனால் அதைப் பற்றி வாயுமண்டலத்தில் பரப்பி விடாதீர்கள், நிமித்த ஆத்மாக்களாகிய நீங்கள் இந்த ஸ்திதியில் இருந்தீர்களானால் தானாகவே வாயுமண்டலம் சீராகி விடும். கஷ்டப்பட வேண்டியிருக்காது. உங்களைப் பார்த்துக் கொள்ளுங்கள். போதும். சரிதானா? பக்காவா? சரிதானா?

சக்தி சேனை குறைந்ததா என்ன? சக்திகளும் ஒன்றும் குறைந்தவர்கள் அல்ல. நான் வாயுமண்டலத்தை சிரேஷ்டமாகச் செய்ய வேண்டும். ஏதாவது சிறு விஷயங்கள் நடந்தால், அதை திரும்பத் திரும்பச் சொல்லாதீர்கள். ஒன்றைப் பற்றி வர்ணனை செய்வது என்றால் பலருடைய காதுகளுக்கு எட்டி விடச் செய்வதாகும். அந்தர் முகி, சதா சுகி. எப்படி தாதி ஆன்மீக ரீதியாக நம்மவர் என்ற உணர்வைக் கொடுத்தாரோ, சரீர சம்மந்தத்தில் அல்ல, நம்மவர் என்பதன் ரிசல்ட் இது. ஒன்று உபராம். இன்னொன்று நம்மவர், சைகை மூலமாகவும் கொடுத்தார் ஆனால் மனதில் வைத்துக் கொள்ளவில்லை. வாய் மூலமாக வந்தது. முடிந்து விட்டது. மனதில் வைக்கவில்லை. இந்த மாதிரி நீங்கள் நிமித்தமாயிருக்கிறீர்கள். ஆதலால் நிமித்தமாயிருந்த

தாதியை பின்பற்றுவது மிகவும் அவசியம். சக்தி எல்லோரிடமும் இல்லையல்லவா? நம்பர் வாராகத்தானே இருக்கிறார்கள். சகயோகம் கொடுங்கள். சக்தி கொடுங்கள். இரக்கம் காட்டுங்கள், ஆத்மீக அன்பு கொடுங்கள். ஏனெனில் எல்லோருடைய பார்வையும் இப்போது உள்நாடு மற்றும் வெளிநாடுகளிலுள்ள நிமித்த ஆத்மாக்கள் மீது உள்ளது. ஏனெனில் மீடியா நாலா பக்கமும் தெளிவாகக் காட்டி விட்டது. ஆதலால் எல்லோருடைய பார்வையும் உள்ளது. என்ன நடக்கிறது. என்ன நடக்கிறது? என்று இன்னும் அதிகமாக கவனிப்பார்கள். என்ன எப்படி என்று. ஆகவே தான் கோட்டையைப் பலப்படுத்த வேண்டும். நீங்கள் நிமித்தம், வந்தது கொஞ்சப் பேராக இருக்கலாம் ஆனால் எல்லோருக்கும் செய்தி எட்டி விடும். எனினும் வந்து சேர்ந்து விட்டீர்கள். வாழ்த்துக்கள். எவர் ரெடி ஆகி விட்டீர்கள் அல்லவா? தாதியோடு, நீங்கள் எல்லோரும் எவர் ரெடி என்ற பாடத்தை படித்துக் கொண்டீர்கள். இது சரி தான். எல்லோருக்கும் புரிய வைக்க வேண்டும். நான் நிமித்தம் என்று. வாயுமண்டலத்தை பவர்ஃபுல் ஆக்குவதற்காக நான் நிமித்தமாயிருக்கிறேன். அடுத்தவர் அல்ல. மற்றவர்கள் எல்லாம் நம்பர்வாராக இருக்கிறார்கள். நீங்களோ நிமித்தமாயிருக்கிறீர்கள். மிகவும் நல்லது. சரி தான்.

(தாதிக்கு சேவை செய்த சகோதரிகளுடன்) மிக நன்றாக சேவை செய்தீர்கள். (தாதியின் நினைவு அதிகமாக வருகிறது). நினைவு வரத்தான் செய்யும். பாப்தாதா வதனத்தில் சென்றால் பாப்தாதாவின் நினைவு வராதா? வரும் ஆனால் சேவை இருக்கிறதல்லவா. உலக தாதி அல்லவா? மதுபனுக்கு மட்டுமல்ல. மற்றறவர் எல்லோரும் சேவையை அன்புடன் செய்தார்கள். மேலும் இப்போது கூட சமான் ஆவதற்கான சேவை செய்ய வேண்டும். அன்பிற்கான மறுதளிப்பு (return) இது தான். நல்லது. பாண்டவர்களும் கூட சேவையில் நல்ல விதமாக இருந்தார்கள். பாண்டவர்களும் கூட சேவை நன்றாகச் செய்தார்கள். அன்பின் அடையாளத்தைக் காட்டினார்கள். எல்லோரும் அவரவருடைய சேவையின் அடிப்படையில் உடன் இருந்தார்கள். ஏனெனில் எல்லோருடைய பார்வையும் இருக்கிறதல்லவா? இவர் இனி என்ன செய்வார்? பார்க்கலாம் என்னென்ன செய்கிறார் என்று? எல்லோருடைய பார்வையும் இருக்கிறதல்லவா? ஆகவே மற்ற எல்லோரும் வாஹ் வாஹ்! என்று மெச்சுகின்ற அளவுக்கு, நீங்கள்

நடந்து, செய்து காண்பிக்க வேண்டும். தாதி உங்களிடம் எப்படி அன்புடன் நடந்து கொண்டார் என்பது உங்கள் நடத்தையில் தெரியும். தெரியத்தான் செய்யும். ஏனெனில் அன்பு இருந்தது அல்லவா? அன்பில் எல்லோரும் பாஸாகி விட்டீர்கள். அன்பிற்கான சர்டிபிகேட் மிக நன்றாக உள்ளது. நன்று.

பாப்தாதா எல்லோரிடமும் விடை பெற்றுக் கொண்டு வதனத்தை அடைந்தார். மேலும் தாதி குல்ஜார் வதனத்திலிருந்து திரும்பி வந்ததும் வதனத்தில் கண்ட காட்சியை விவரித்தார்.

இது போல தாதிக்கு விடை கொடுப்பது மாலையில் நடக்கும். ஆகவே தான் பாபா கூறினார், தான் சந்தித்து வந்திருக்கிறேன் என்று. நானும், தாதியும் சந்தித்தோம். தாதி கூறினார். என்னை பாபா அனுப்புகிறார் ஆனால் நான் 12-நாட்கள் அனுபவம் செய்தேன். அது மிகவும் சிறப்பாக இருந்தது. அனுபவம் செய்தேன். மேலும் நிறைய விஷயங்கள் எதை சாதாரணமாகப் பார்க்க முடியாதோ, அப்படி பார்க்க முடியாததை நான் பார்த்தேன். இவ்வாறு கூறிய பிறகு மேலும் சொன்னார். பாபா என்னை அனுப்புகிறார் ஆனால் நான் பிறவி எடுக்கக் கூடாது என்று தான் நினைத்திருந்தேன் ஆனால் பாபா, இதன் இரகசியத்தை எனக்குப் புரிய வைத்தார். ஆதலால் மகிழ்ச்சியுடன் செல்கிறேன். நாமும் கூட நினைத்தோமல்லவா? தாதியை பாபா எப்படி இம்மாதிரி அனுப்புகிறார் என்று. இதற்கு தாதி கூறினார்: பாபாவின் இரகசியத்தை புரிந்து கொண்டேன். ஆதலால் மகிழ்ச்சியுடன் செல்கிறேன். இன்னொரு விஷயம் தாதி கூறினார்: பிறகு மாலையில் விடை கொடுக்கப்படும். அதைப் பார்த்த பிறகு எல்லோருக்கும் கூற வேண்டும். மற்றபடி என் சார்பாக எல்லோருக்கும் ஒவ்வொருவருக்கும் சொல்ல வேண்டும். உங்கள் ஒவ்வொருவருக்கும் தாதி நினைவுகளைத் தந்தார் என்று கூறுங்கள். நினைவோடு கூடவே அன்பும் இருக்குமல்லவா? விடை பெறுவது சம்மந்தமான செய்தியை பிறகு கூறுவேன். நல்லது. ஓம் சாந்தி.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

## 15.10.2007 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

## சங்கமயுகத்தின் ஜீவன் முக்தி ஸ்திதியை அனுபவம் செய்வதற்காக எல்லா சுமைகளையும், பந்தனங்களையும் தந்தையிடம் ஒப்படைத்து விட்டு, டபுள் லைட் ஆகுங்கள்!

இன்று, உலகைப் படைப்பவரான பாப்தாதா, தன்னுடைய முதலாவது படைப்பின், அன்பும, அதிருஷ்டமுமுள்ள குழந்தைகளுடன் சந்திக்கும் விழாவினைக் கொண்டாடுகின்றார். குழந்தைகள் எதிரில் இருக்கின்றனர். கண்கள் மூலமாகப் பார்த்துக் கொண்டிருக்கின்றனர். மேலும் அநேக குழந்தைகள் உள்ளத்தில் அமர்ந்திருக்கின்றனர். பாப்தாதா ஒவ்வொரு குழந்தையின் நெற்றியில் மூன்று பாக்கியத்தின் மூன்று நட்சத்திரங்கள் பிரகாசித்துக் கொண்டிருப்பதைப் பார்க்கின்றனர். ஒரு பாக்கியம் பாப்தாதாவின் சிரேஷ்ட பாலனை, இரண்டாவது ஆசிரியர் மூலமாக படிப்பு, மூன்றாவது சத்குரு மூலமாக எல்லா வரதானங்கள் ரூபத்தில் பிரகாசிக்கும் நட்சத்திரம். நீங்கள் எல்லோரும் கூட உங்கள் நெற்றியில் பிரகாசிக்கின்ற நட்சத்திரத்தை அனுபவம் செய்கிறீர்கள் அல்லவா? சர்வ சம்மந்தமும் பாப்தாதாவுடன் இருக்கிறது. இருந்தாலும் வாழ்க்கையில் இந்த மூன்று சம்மந்தங்கள் அவசியமாக இருக்கின்றன. மேலும் காணாமல் போய் மீண்டும் கிடைக்கப் பெற்ற செல்லமான குழந்தைகளாகிய உங்களுக்கு இம் மூன்று சம்மந்தங்களும் சுலபமாகவே கிடைத்து விட்டது. கிடைத்து விட்டதல்லவா? நஷா (போதை) இருக்கிறதல்லவா? உள்ளத்தில் ஆஹா பாபா ஆஹா ஆஹா: ஆசிரியரே ஆஹா! ஆஹா! சத்குருவே ஆஹா! என்று பாட்டும் பாடிக் கொண்டேயிருக்கிறீர்கள் அல்லவா?

உலகில் உள்ளவர்களோ மகான் ஆத்மா என்று அழைக்கப்படுகின்ற லௌகீக குருவிடமிருந்து ஒரு வரதானம் பெறுவதற்காக எவ்வளவு முயற்சி செய்கின்றார்கள்! ஆனால் உங்களுக்கோ, தந்தை, பிறந்த உடனேயே சுலபமாகவே வரதானங் களால் பகவானாகிய தந்தை நம் மீது இவ்வளவு அர்ப்பணிப்பார் என்று இது போன்ற இவ்வளவு சிரேஷ்ட நிரப்பி விட்டார். பாக்கியத்தின் சொப்பனமாவது கண்டிருப்போமா? பக்த ஜனங்கள் பகவானை புகழ் பாடுகிறார்கள் ஆனால் பகவானாகிய தந்தை யார் புகழ் பாடுகின்றார்? அதிருஷ்டசாலி குழந்தைகளாகிய உங்களுடைய புகழ் அல்லவா!

இப்போதும் கூட நீங்கள் எல்லோரும் வெவ்வேறு தேசங்களிலிருந்து எந்த விமானத்தில் வந்தீர்கள்? ஸ்தூல விமானத்தில், பரமாத்மாவின் அன்பு விமானத்தில் எல்லா பக்கங்களிலுமிருந்தும் வந்து சேர்ந்து விட்டீர்கள். பரமாத்ம விமானம் எவ்வளவு எளிதாகக் கொண்டு வருகிறது. எந்த ஒரு கஷ்டமுமில்லை. ஆகவே நீங்கள் எல்லோரும் பரமாத்ம அன்பு விமானத்தில் வந்து சேர்ந்து விட்டீர்கள். இதற்கு வாழ்த்துக்கள், வாழ்த்துக்கள், வாழ்த்துக்கள். பாப்தாதா ஒவ்வொரு குழந்தை யையும் பார்த்து சிலர் முதல் முறையாக வந்திருக்கலாம், சிலர் நீண்ட காலமாகவும் வந்து கொண்டிருக்கலாம். இருப்பினும் பாப்தாதா ஒவ்வொரு குழந்தையின் விசேஷத்தையும் அறிவார். பாப்தாதாவுக்கு எந்த ஒரு குழந்தையானாலும், சிறுவயதினராயினும், பெரியவராயினும், மகாவீரராக இருந்தாலும், புருஷசரத்தியாக இருந்தாலும், ஒவ்வொருவருமே கண்டெடுக்கப்பட்டவர்கள் தான், ஏன்? நீங்களும் தந்தையை தேடினீர்கள் ஆனால் பாப்தாதா தன்னுடைய ஒவ்வொரு குழந்தையையும், மிக மிக அன்போடு, மூலை மூடுக்குகளிலெல்லாம் தேடினார். அன்பு இருந்ததால் தானே தேடினார் ஏனெனில் விசேஷமில்லை என்று சொல்லும் படியாக எனக்கு ஒரு குழந்தை கூட இல்லை. ஏதாவதொரு விசேஷம் நிச்சயமாக ஒவ்வொரு குழந்தையிடமும் இருக்கிறது. இந்த விசேஷம் தான் இங்கே கொண்டு வந்திருக்கிறது. குறைந்த பட்சம் குப்த ரூபத்தில் வந்திருக்கின்ற தந்தையை அடையாளம் தெரிந்து கொண்டிருக்கிறார்கள் அல்லவா? மேரா பாபா (என்னுடைய பாபா) என்றார். எல்லோருமே மேரா பாபா என்று கூறுகிறீர்கள் அல்லவா? தேரா பாபா (உன்னுடைய பாபா) என்க! சொல்லக்கூடியவர் யாராவது இருக்கிறார்களா? யாராவது உண்டா?

எல்லோருமே கூறுகின்றார்கள். மேரா பாபா. இது விசேஷம் தானே? எவ்வளவோ பெரிய, பெரிய அறிவியல் அறிஞர்களால், வி.ஐ.பிக்களால் கண்டு கொள்ள முடியவில்லை ஆனால் நீங்கள் எல்லோருமே கண்டு கொண்டீர்கள் அல்லவா? தன்னுடையவராகவும் ஆக்கிக் கொண்டு விட்டீர்கள் அல்லவா? ஆதலால் தந்தையும், தன்னுடையவர்களாக ஆக்கிக் கொண்டு விட்டார். இதே குஷியில் வளர்ந்து, பறந்து கொண்டிருக்கிறீர்கள் அல்லவா? பறந்து கொண்டிருக்கிறீர்கள், நடந்து கொண்டிருக்கவில்லை, பறக்கிறீர்கள். ஏனென்றால், நடப்பவர்கள் தந்தையுடன் வீட்டிற்கு செல்ல முடியாது. ஏனென்றால் தந்தை பறப்பவர் அல்லவா? ஆதலால் நடப்பவர்கள் எப்படி கூடவே சென்றடைய முடியும்? ஆகவே தான் தந்தை எல்லோருக்கும் என்ன வரதானம் கொடுக்கின்றார்? ஃபரிஷ்தா சொரூப் பவ ஃபரிஷ்தி பறந்து செல்பவர். நடந்து செல்பவர் அல்ல. பறக்கின்றார் ஆனால் நீங்கள் எல்லோரும் கூட புறக்கும் கலை உள்ளவர்கள் தானே சரியா? நாங்கள் பறக்கும் கலை உள்ளவர்கள் என்று நினைப்பவர்கள் கை உயர்த்துங்கள். சில சமயம் பறக்கும் கலை, சில சமயம் நடக்கும் கலை. இப்படி இல்லை தானே? சதா பறக்கக்கூடியவர். டபுள் லைட். சரிதானா? ஏன்? எண்ணிப் பாருங்கள். தந்தை எல்லோரிடமிருந்தம் உத்தரவாதம் வாங்கியிருக்கின்றார். அதாவது யாரிடமும், எந்த ஒரு பாரமும் மனதிலோ, புத்தியிலோ இருக்குமானால் அதனை தந்தையிடம் கொடுத்து விடவேண்டும். தந். குழந்தைகளிடமிருந்து பாரத்தை பெற்றுக் கொள் வதற்காகவே வந்துள்ளார். ஆதலால், தந்தையிடம் பாரத்தைக் கொடுத்து விட்டீர்களா? அல்லது கொஞ்சம், கொஞ்சம் பத்திரப்படுத்தி வைத்திருக்கிறீர்களா? எப்போது வாங்குபவர், வாங்குவதற்காக வந்திருக்கிறார் என்றால், பாரத்தைக் கொடுத்து விடுவதில் யோசனை செய்வதற்கு ஏதாவது இருக்கிறதா, என்ன? 63 பிறவிகளாக பாரம் சுமந்து, சுமந்து பழக்கமாகி விட்டதல்லவா? ஆதலால் அநேக குழந்தைகள் சில சமயம் நாங்கள் விரும்பவில்லை யென்றாலும் பழக்க தோஷத்தால் வேறு வழி அறியாமல் பலவீனமாகி விட்டோம் என்று கூறுகின்றார்கள். இப்போது பலவீனமாக இல்லை தானே? பலவீனமாயிருக்கிறீர்களா? அல்லது பலசாலிகளாக இருக்கிறீர்களா? ஒருபோதும் பலவீனமாகக் கூடாது. பலசாலிகள். சக்திகள் சக்திசாலி களா? பலவீனமானவர்களா? சக்திசாலிகள் தானே! சுமையை வைத்துக் கொள்வது நன்றாக இருக்கிறதா என்ன?

மனதிற்குப் பிடித்த மாகி விட்டது! சுமையின் மீதும் மனம் பிடித்தமுள்ளதாக இருக்கிறதா? விட்டுவிடுங்கள். விட்டு விட்டால், விலகி விடும். விடவில்லையென்றால் விடாது. விலக்கி விடுவதற்கான சாதனம். திட சங்கல்பம். அநேக குழந்தைகள் கூறுகிறார்கள். திட சங்கல்பம் வைக்கிறோம் ஆனால், செய்த சங்கல்பத்தை திரும்பவும் கவனத்தில் கொண்டு வருவதில்லை. (ரிவைஸ் செய்வதில்லை). அடிக்கடி மனதில் ரிவைஸ் செய்யுங்கள். உணருங்கள் (ரியலைஸ்) சுமை என்பது என்ன? டபுள் லைட் அனுபவம் என்ன? இப்படி திரும்பவும் ஞாபகத்தில் கொண்டு வந்து உணருவதற்கான கோர்ஸ் கொஞ்சம் கோடிட்டுக் கொள்ளுங்கள். சொல்கிறீர்கள், சிந்திக்கிறீர்கள் ஆனால் உளமாற உணர்ந்து பாருங்கள். சுமை என்பது என்ன? டபுள் லைட் என்றால் எப்படியிருக்கும்? இதன் வித்தியாசத்தை முன் வையுங்கள். ஏனென்றால் பாப்தாதா சமயம் மிகவும் குறைவாக இருப்பதன் அடிப்படையில் ஒவ்வொரு குழந்தையிடமும் என்ன பார்க்க விரும்புகின்றார்? எதைச் சொல்கிறார்களோ, அதை செய்து காண்பிக்க வேண்டும். எதை சிந்திக்கிறார்களோ அதை சொரூபத்தில் கொண்டு வர வேண்டும். ஏனெனில் தந்தையின் ஆஸ்தியான முக்தியும், ஜீவன் முக்தியும் பிறப்புரிமை. எல்லோருக்கும் கொடுக்கின்ற அழைப்பிதழில் இதைத்தான் குறிப்பிடுகிறீர்கள் அல்லவா? உங்களையே கேளுங்கள், முக்தி தாமில் முக்தியை அனுபவம் செய்ய வேண்டுமா? மற்றும் சத்தியுகத்தில் ஜீவன் முக்தியை அனுபவம் செய்ய வேண்டுமா? அல்லது இப்போது சங்கமயுகத்தில் ஜீவன் முக்திக்கான சம்ஸ்காரம் தயார் செய்ய வேண்டுமா? ஏனென்றால் நீங்கள் கூறுகின்றீர்கள். நாங்கள் இப்போது எங்களுடைய ஈஸ்வரிய சம்ஸ்காரத்தின் மூலமாக தெய்விக சம்பிரதாயமுள்ள உலகை படைக்கப் போகிறோம். தன்னுடைய சம்ஸ்காரத்தின் மூலமாக, புதிய உலகைப் படைக்கிறோம் என்று. அப்படியானால் சங்கமயுகத்தில் தான் முக்தி, ஜீவன் முக்திக்கான சம்ஸ்காரம் எழுச்சியுடன் இருக்க வேண்டுமல்லவா? ஆதலால் சோதனை செய்யுங்கள். சர்வ பந்தனங்களிலிருந்து மனமும், புத்தியும் முக்தி (விடுதலை) அடைந்து விட்டதா? ஏனென்றால், பிராமண வாழ்க்கை யில் அநேக விஷயங்களிலிருந்து, அதாவது கடந்துபோன வாழ்க்கையின் பந்தனங்களிலி ருந்து விடுதலை அடைந்திருக்க வேண்டும் ஆனால் எல்லா பத்தனங்களிலிருந்தும்

முக்தியடைந்து விட்டீர்களா? அல்லது இன்னும் ஏதாவது பந்தனம் தன்னுடைய கட்டுப்பாட்டில் உங்களை வைக் கொண்டிருக்கிறதா? இந்த பிராமண வாழ்க்கையில் முக்தி. ஜீவன் முக்தியை அனுபவம் செய்பது தான் பிராமண வாழ்க்கையின் சிரேஷ்டமான தன்மையாகும். ஏனென்றால், சத்யுகத்தில் ஜீவள் முக்தி, ஜீவன் பந்தனம் என்ற இந்த இரண்டின் ஞானம் இருக்காது. ஜீவன் பந்தனம் என்றால் என்ன? ஜீவன் முக்தி என்றால் என்ன என்பதை இப்போது தான் அனுபவம் செய்ய முடியும். ஏனென்றால் நீங்கள் எல்லோரும் உறுதிமொழி கொடுத்திருக்கிறீர்கள் எல்லோரும் உறுதி மொழி எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அநேக முறை உறுதிமொழி கொடுத்திருக்கிறார்கள். என்ன உறுதிமொழி எடுத்துக் கொண்டு இருக்கிறீர்கள்? நினைவிருக்கிறதா? இந்த பிராமண வாழ்க்கையில் உங்களுடைய லக்ஷியம் என்ன என்று யாரிடம் கேட்டாலும் சரி, என்ன பதில் சொல்கிறார்கள்? பாப் சமான்(பாபாவிற்குச் சமமாக) ஆக வேண்டும். பக்கா தானே? பாபா சமானமாக ஆக வேண்டு மல்லவா? அல்லது கொஞ்சம், கொஞ்சம் ஆனால் போதுமா? சமான் ஆக வேண்டும் அல்லவா! ஆக வேண்டுமா சமானமாக? அல்லது கொஞ்சம் சமானமாக ஆகி விட்டால் போதுமானதா? போதுமா? இதை சமான் (சமம்) என்று சொல்ல முடியாது. சரி. தந்தை முக்தி நிலையில் இருக் கின்றாரா? பந்தனத்தில் கட்டுண்டவராக இருக்கின்றாரா? ஒருவேளை தேகம். தேக சம்மந்த பந்தனம் உண்டா? தேக சம்மந்தம் என்றால் மாதா, பிதா உற்றார் உறவினர், நண்பர்கள் அல்ல. தேகஇலுள்ள கர்மேந்திரியங்களுடனான சம்மந்தம் அதாவது எந்த ஒரு கர்மேந்திரிய சம்மந்தத்தின் உந்தனம் இருக்குமானால் பழக்க வழக்கத்தின் பந்தனம் இருக்குமானால், சுபாவத்தின் பந்தனம் இருக்கூமானால் பழைய சம்ஸ்காரத்தின் பந்தனம் இருக்குமானால் பாப் சமான் என்று எப்படி கூற முடியும்? பாபா சமம் ஆகுமா? மேலும் தினந்தோறும் பாப்சமான் ஆகத்தான் வேண்டும் என்று உறுதியும் எடுத்துக் கொள்கிறீர்கள். கையை உயர்த்துங்கள் என்று சொன்னால் எல்லோரும் என்ன சொல்கிறார்கள்? லக்ஷிமி-நாராயணன் அக வேண்டும் என்று. இதைக் கேட்டு பாப்தாதா வுக்கு மகிழ்ச்சியாக இருக்கிறது. மிக நன்றாக உறுதிமொழியும் கொடுக்கிறார்கள் ஆனால் எடுத்துக் கொண்ட உறுதிமொழியின் பலனை எடுத்துக் கொள்ளாமல் இருக்கிறார்கள். உறுதிமொழி மற்றும் பலன் என்ற இந்த இரண்டின் சமநிலையை

(பேலன்ஸ்) அறியாமல் இருக்கிறார்கள். உறுதி மொழிகளின் கோப்பு (ஃபைல்) பாப்தாதாவிடம் மிகமிகப் பெரிதாக இருக்கிறது. எல்லோருடைய கோப்பும் (ஃபைல்) இருக்கிறது. இதேபோன்ற கோப்புகள் பலனுக்கும் இருக்க வேண்டும். சரிசமமாக இருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்! இங்கே சென்டர் சகோதரிகள் அமர்ந்திருக்கிறார்கள் அல்லவா? இங்கேயும் கூட சென்டர் நிவாசிகள் அமர்ந்திருக்கிறார்கள் அல்லவா? அப்படியானால் சமான் ஆகக்கூடியவர்கள் ஆகி விட்டார்கள் அல்லவா? சென்டர் நிவாசி நிமித்தமாகியிருக்கின்ற குழந்தைகள் சமான் ஆக இருக்க வேண்டுமல்லவா? அப்படி இருக்கின்றீர்களா? இருக்கின்றார்கள்! ஆனால் சிலசமயம் குறும்புத் தனம் செய்பவர் ஆகி விடுகிறார்கள். பாப்தாதாவோ எல்லா குழந்தைகளினுடைய முழு நாளின் நிலை மற்றும் நடத்தை ஆகிய இரண்டையும் பார்த்துக் கொண்டேயிருக்கின்றார். உங்களுடைய தாதியும் வதனத்தில் இருந்தாரல்லவா? தாதியும் கூட இதனைப் பார்த்தார் என்றால் என்ன கூறினார் தெரியுமா? தாதி சொன்னார்: இப்படியும் கூட இருக்கிறதா? இப்படி நடக்கிறது? இப்படிச் செய்கிறார்கள்? நீங்கள் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறீர்களா? என்று கேட்டார். கேட்டீர்களா? உங்களுடைய தாதி என்ன பார்த்தார் என்று. இப்போது பாப்தாதா இதைத்தான் பார்க்க விரும்பு கின்றார். அதாவது ஒவ்வொரு குழந்தையும் முக்தி, ஜீவன் முக்தி என்ற ஆஸ்திக்கு அதிகாரியாக வேண்டும். ஏனென்றால் ஆஸ்தி இப்போது தான் கிடைக்கிறது. சத்யுகத்திலோ, இயற்கையான வாழ்க்கையாக இருக்கும். இப்போதைய அப்பியாசத்தின் அடிப்படையில் அமைகின்ற வாழ்க்கை ஆனால் ஆஸ்திக்கான அதிகாரம் இப்போது சங்கமத்தில் தான் உள்ளது. ஆதலால் பாப்தாதா இதைத்தான் விரும்புகின்றார். அதா நு ஒவ்வொருவரும் தனக்குத்தானே சோதித்துப் பார்க்க வேண்டும். ஏதாவது பந்தனம் அதன் பக்கமாக இழுக்கிறதா என்று. சுயம் சோதனை செய்ய வேண்டும். இருந்தால், இதற்கான காரணம் என்ன என்பதைப் பற்றி சிந்தித்துப் பார்க்க வேண்டும். காரணத்தை அறியுங்கள். பிறகு இதற்கு நிவாரணத்தைப் பற்றியும் சிந்தியுங்கள். நிவாரணம் பாப்தாதா அநேக முறை விதவிதமான ரூபத்தில் கொடுத்து விட்டார். சர்வ சக்திகளின் வரதானம் கொடுத்திருக்கின்றார். சர்வ குணங்களின் பொக்கிஷத்தைக் கொடுத்திருக்கின்றார். கஜானாவை (பொக்கிஷத்தை)

உபயோகிப்பதால் பெருகும். கஜானா எல்லோரிடமும் இருக்கிறது. பாப்தாதா பார்த்தார். ஒவ் வொருவரிடமுள்ள சேமிப்பையும் பார்க்கின்றார். புத்தி தான் கோடவுன். (சேமிப்புக் கிடங்கு) அனைவரிடமுள்ள சேமிப்பை பாப்தாதா பார்த்திருக்கின்றார். சேமிப்பில் இருக்கிறது ஆனால் கஜானாவை வேண்டிய சடயத்தில் உபயோகிப்பதில்லை. பாயிண்ட் ரூபத்தில் மட்டுமே யோசிக் கிறார்கள். ஆம். இதைச் செய்யக் கூடாது. இதைச் செய்யலாம் என்று பாயிண்ட் ரூபத்தில் உபயோகிக்கிறார்கள். யோகையும் செய்கிறார்கள் ஆனால் பாயிண்ட் ஆகி (சொரூபம்) பாயிண்டை (ஞானம், சக்தி) உபயோகம் செய்வதில்லை. ஆதலால் பாயிண்ட் உபயோகிக்கப்படாமல் இருக்கிறது. பாயிண்ட் சொரூபமாகி உபயோகித்தால், திவாரணம் கிடைத்து விடும். இதைச் செய்யக் கூடாது என்று சொல்லவும் செய்கிறார்கள் ஆனால் மறந்து விடுகிறார்கள். சொல்வதோடு கூடவே, மறப்பதும் நடக்கிறது. இவ்வளவு சுலடமான விதியை கூறியிருக்கின்றேன். இந்த பிந்தியின் (புள்ளி) அற்புதம் சங்கமத்தில் மட்டுமேயிருக்கும். பிந்தியை (புள்ளியை) உபயோகித்தால் போதும், வேறு எந்த ஒரு குறியீடுகளின் அவசியம் இல்லை. மூன்று புள்ளிகளை (பிந்தி) உபயோகி யுங்கள். ஆத்மா பிந்தி, பாப் பிந்தி, டிராமா' பிந்தி. இந்த மூன்று புள்ளிகளை உபயோகப்படுத்திக் கொண்டேயிருந்தால், பாப் சமான் ஆவதில் எந்த ஒரு கஷ்டமும் இருக்காது. புள்ளி (பிந்தி) வைக்க வேண்டும் என்று விரும்புகிறீர்கள் ஆனால் ' புள்ளி வைக்க ஆரம்பிக்கும்போது கை நடுங்கி விடுகிறது. புள்ளிக்குப் பதிலாக கேள்விக்குறியாகி விடுகிறது. அல்லது ஆச்சரியக்குறியாக ஆகி விடுகிறது. அங்கே கை நடுங்குகிறது. இங்கே புத்தி நடுங்குகிறது. இல்லையென்றால் மூன்று புள்ளிகளை நினைவில் (ஸ்மிருதி) வைப்பதில் என்ன கஷ்டமிருக்கிறது? கஷ்டமாயிருக்கிறதா? பாப்தாதாவோ இன்னொரு சுலபமான யுக்தியையும் கூறியிருக்கின்றார். அது என்ன? (துவா தோ, துவா லோ) ஆசீர்வாதம் கொடுங்கள், ஆசீர்வாதம் எடுங்கள். நல்லது. யோகம் சக்திசாலியாக இருப்பதில்லை. தாரணையும் கொஞ்சம் குறைவாகவே இருக்கிறது. சொற்பொழிவு செய்வதற்கு தைரியம் இருப்பதில்லை ஆனால் ஆசி கொடுங்கள். ஆசி எடுங்கள். இந்த விஷயம் மட்டும் செய்யுங்கள். மற்றவைகளை விட்டுவிடுங்கள். ஒன்று மட்டும் செய்ய வேண்டும். ஆசிகள் வாங்க வேண்டும். ஆசிகள் கொடுக்க வேண்டும். எது நடந்தாலும் சரி, யார்

என்ன கொடுத்தாலும் சரி, நான் ஆசிகள் கொடுக்க வேண்டும். ஆசிகள் பெற வேண்டும். இந்த ஒரு விஷயத்தையாவது பக்கவாக (உறுதியுடன்) செய்து விடுங்கள். இதில் எல்லாம் வந்து விடும். சரி. ஆசிகள் கொடுக் கிறீர்கள். ஆசிகள் பெறுகிறீர்கள் என்றால் இதில் சக்திகள், குணங்கள் வராதா? தானாகவே (ஆட்டோ மேட்டிக்) வந்து விடுமல்லவா? ஒரே ஒரு லக்ஷியம் வையுங்கள். செய்து பாருங்கள். ஒரு நாள் அப்பியாசம் செய்து பாருங்கள். பிறகு ஏழு நாட்கள் செய்து பாருங்கள். வேறு விஷயங்கள் புத்தியில் வரவில்லை என்றாலும் பரவாயில்லை, ஒன்றாவது வருமல்லவா? என்ன நடந்தாலும் சரி, ஆசிகள் கொடுக்க வேண்டும். எடுக்க வேண்டும். இதைச் செய்ய முடியுமா? முடியாதா? செய்ய முடியுமா? நல்லது. எப்போது செல்கிறீர்களோ, இதை அங்கு பயிற்சி செய்து பார்க்க வேண்டும். இதில் எல்லாம் யோக யுக்தாக தானாகவே ஆகி விடும். ஏனென்றால், வீண் செயல் செய்யவில்லை எனும் போது, யோக யுக்தாகவே ஆகி விடுமல்லவா? ஆனால் லக்ஷியம் வைக்க வேண்டும். ஆசி கொடுக்க வேண்டும். ஆசிகள் எடுக்க வேண்டும். செய்ய முடியுமா? செய்ய முடியும் என்று நினைப்பவர்கள் கை உயர்த்துங்கள். நல்லது. சக்திகள் கை உயர்த்துங்கள். ஆம். செய்ய முடியும். எல்லா பக்கங்களிலிருந்தும் டீச்சர்கள் வந்திருக்கிறீர்கள் அல்லவா? எப்போது நீங்கள் உங்கள் தேசத்திற்குச் செல்வீர்களோ, அப்போது முதன் முதலாக எல்லோரும் ஒரு வாரம் இந்த ஹோம் ஒர்க் செ வேண்டும். ரிசல்ட் அனுப்ப வேண்டும். எவ்வளவு பேர் வகுப்பில் மெம்பர் ஆகியிருக்கிறார்கள்? எவ்வளவு பேர் புரிந்து நடந்து கொண்டிருக்கிறார்கள். (ஓ.கே.) எவ்வளவு பேர் கச்சாவாக (புரியாமல், கடைப்பிடித்து நடக்காமல்) இருக்கிறார்கள்? எவ்வளவு பேர் பக்கா. எவ்வளவு பேர் கச்சா. பக்கா என்றால் ஓ.கே. ரிசல்ட் அனுப்பும் போது ஓ.கே. என்பதை கோடிட்டு அனுப்பினால் போதுமானாது. இந்த சமாச்சாரம் கொடுக்க வேண்டும். இதில் டபுள் ஃபாரினர்ஸ் வந்திருக்கிறார்கள் என்றால் டபுள் வேலை செய்வார்கள் அல்லவா? ஒருவார ரிப்போர்ட் அனுப்ப வேண்டும். பிறகு பாப்தாதா பார்ப்பார். சுலபமாக இருக்கிறதா? கஷ்ட மில்லை தானே! மாயா வரும். நீங்கள் கூறுவீர்கள். பாபா: மாயா என்னிடம் இது வரை வந்ததே இல்லை. இப்போது வந்து விட்டது. இப்படி நடக்கும் ஆனால் திடமான நிச்சயமுள்ளவர்களுக்கு நிச்சயம் வெற்றி தான். உறுதியின் பலன்

வெற்றி வெற்றியில்லை என்பதற்கான காரணம் உறுதியில் குறை. ஆதலால் உறுதியுடன் வெற்றியடையத் தான் வேண்டும்.

டபுள் ஃபாரினர்ஸ் நம்பர்-1 ஆகி விட வேண்டும். டபுள் அல்லவா? டபுள் ஃபாரினர்ஸ் என்றால் அற்புதம் (கமால்) செய்து காட்ட வேண்டும். வெளி நாட்டினர் எவ்வளவு பேர் வந்திருக்கிறார்கள். (90-தேசங்களிலிருந்து 300-சென்டரிலிருந்து வந்திருக்கிறார்கள்) 90-அற்புதம் செய்து காட்டுவீர்கள் அல்லவா? 90-தேசங்கள் டபுள் ஃபாரினர்ஸ். 10-இந்தியா. இரண்டும் சேர்ந்தும் 100-ஆகி விடும். செய்வீர்களா? என்ன நடந்தாலும் சரி செய்தே தீர வேண்டும். இவ்வளவு பேர் உறுதியுடன் இருக்கிறார்கள். பார்க்கலாம், முயற்சி செய்வோம்... என்று சொல்பவர் யாராவது இருக்கிறீர்களா? முயற்சி செய்வோம் என்று அப்படி யார் நினைக்கிறார்கள்? முயற்சி செய்வோம் என்று கூறுபவர்கள் கை உயர்த்துங்கள். யாருமில்லை. ஆகவே வாழ்த்துக்கள். கரவொலி எழுப்புங்கள். தாதிகள் எங்கே இருக்கிறார்கள்? பக்காவா? நல்லது. ஏனென்றால் டபுள் ஃபாரினர்ஸ் சுபாவம் இயற்கையாகவே அப்படித்தான் இருக்கிறது. யார் செய்ய வேண்டும். என்று நினைக்கிறார்களே. அவர்கள் செய்தே தீருவார்கள். இது டபுள் ஃபாரினர்களின் விசேஷம். இப்போது இந்த விசேஷத்தை இதில் காட்ட வேண்டும். சரி தானா? செய்து காட்ட வேண்டும். என்ன நடந்தாலும் சரி. பொறுமை சக்தி எனும் வரதானத்தை விசேஷமாக உடன் கொண்டு செல்ல வேண்டும் ஆனால் பாப்தாகா அவ்வப்போது குழந்தைகளைக் பற்றிய காட்சியை பார்த்திருக்கின்றார். குழந்தை களினுடைய காட்சியை தந்தை பார்த்துக் கொண்டேயிருக்கின்றார். அதில் என்ன பார்த்தார்? குழந்தைகள் மிக நல்ல முறையில் பொறுமை சாலிகளாக இருந்தனர். இப்படி நன்றாகவே நடந்து கொண்டார்கள். இதைப் பார்த்து பாப்தாதா ஆஹா! ஆஹா என்கின்றார். மிகவும் நன்றாக இருக்கிறது என்று புகழ்ந்து கொண்டிருந்தாரா? பார்த்துக் கொண்டேயிருந்தார். இதன் பிறகு என்ன பார்த்தார்? நன்றாக பொறுத்திக் கொண்டார்கள். முடிந்து விட்டது. ஆனாலும் இதன் பிறகு அடக்கிக் கொள்கின்ற (சமானே கி) சதி குறைந்த போனதன் காரணமாக பொறுத்துக் கொள்ள முடியவில்லையா, இங்குமங்கும் இதைப் பற்றி வர்ணிக்க ஆரம்பித்து விட்டார்கள். அடக்கி வைத்துக் கொள்ளும் சக்தியில்லை. பொறுளெய் சக்தியிருந்தது. பார்ட் நன்றாகவே செய்தார்கள் ஆனால் அடக்கிக்

கொள்ளும் சக்தி இல்லாத தன் காரணமாக இவர் இப்படிச் செய்தார், அப்படிச் செய்ததன் காரணமாக இழந்து விட்டாரல்லனுர என்பது போன்ற வர்ணனை. இப்படி செய்யக்கூடாது. பாப்தாதா குழந்தைகளைப் பற்றி நிறைய காட்சிகளைப் பார்க்கின்றார். முதலில் கரவொலி எழுப்பு கிறார்கள். பிறகு அமைதியாக இருந்து விடுகின்றார்கள். இதுபோல செய்யக்கூடாது. பொறுமை சக்தி (சகன் சக்தி) அடக்கிக் கொள்ளும் சக்தி (சமானே கி சக்தி) சர்வ சக்திகள் ஒன்றுக்கொன்று தொடர்புடையதாக இருக்கின்றது. ஆகவே தான் தந்தையை சர்வ சக்திவான் என்று அழைக்கின்றார்கள். சக்திவான் என்று சொல்வதில்லை. உங்களுடைய டைட்டில் கூட மாஸ்டர் சர்வ சக்திவான் என்பது தானே? சக்திவான் என்றா கூறுகிறீர்கள்? மாஸ்டர் சர்வ சக்திவான் இல்லையா? ஆகவே சர்வ சக்திகளும் ஒன்றுக்கொன்று சம்மந்தமுடையதாக இருப்பதால், கவனம் (அட்டென்ஷன்) வைக்க வேண்டும். நல்லது.

பாப்தாதாவுக்கு மகிழ்ச்சியாயிருக்கிறது. டபுள் ஃபாரினர்ஸ் அவரவருடைய இடங்களில் விருத்தி செய்திருக்கிறார்கள். பிராக்டிக்கலில் (நடைமுறையில்) ரஹம் தில், மெர்ஸிபுல் (இரக்கம், கருணை) என்ற பார்ட் மிக நல்ல முறையில் செய்திருக்கிறார்கள். பாப்தாதாவிடம் சமாச்சாரம் வந்து கொண்டேயிருக்கிறது. இப்போதும் கூட தெரிந்தது. ஆப்பிரிக்கா மற்றும் ரஷியாவில் எங்கெல்லாம் பாக்கியிருந்ததோ அந்த இடங்களில்லாம் மிக நன்றாக சேவை செய்திருக்கிறார்கள். அறிமுகம் கொடுத்திருக்கிறார்கள். பாரதத்திலும் கூட ஒவ்வொரு வர்க்கத்தைச் சேர்ந்தவர்களும், தைரியமாகவும், உற்சாகத்துடனும் கருணை உள்ளத்தோடும் ஆத்மாக்களுக்கு பாபாவின் அறிமுகம் கொடுத்திருக்கிறார்கள், சம்மந்தம் உண்டாக்குவதற்கும் ஆர்வத்தோடு சேவை செய்திருக்கிறார்கள். இதற்கும் பாப்தாதா வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றார். சரி. கரவொலி எழுப்ப வேண்டுமா, அவ்வாறே செய்யலாம். இதற்கு கரவொலி எழுப்பீனர்கள் அல்லவா? இனி பாப்தாதா 6 மாதம் என்பது அதிகம். அதிக நேரம் கொடுக்கின்றார். எப்படி சேவை ஊக்கம், உற்சாகத்தோடு செய்கிறீர்களோ, இதுபோலவே சுயசேவையும் செய்ய வேண்டும். சுய சேவை மற்றும் விஷ்வ சேவை. சுய சேவை என்பதன் பொருள், சோதிப்பது, தன்னை பாபாவுக்கு சமானமாக ஆக்குவது. ஏதாவது குறை இருந்தால் அதை பாபாவிடம் கொடுத்து விடவேண்டும். ஏன் வைத்துக் கொண்டிருக்கிறீர்கள்? இது

பாபாவுக்கு பிடித்தமானதாக இல்லை. ஏன் பலவீனத்தை வைத்துக் கொண்டிருக்கிறீர்கள்? கொடுத்து விடுங்கள். கொடுக்கும்போது சிறு குழந்தை ஆகி விடுங்கள். எப்படி சிறு குழந்தையானது, ஏதாவது ஒரு பொருளை தன்னிடம் வைத்துக் கொள்ள முடிய வில்லையென்றால். தனக்குப் பிடிக்கவில்லை என்றால் என்ன செய்கிறது? அம்மா அப்பா! இதை வாங்கிக் கொள்ளுங்கள் என்று கொடுத்து விடுகிறதல்லவா? இதைப்போல, உங்களிடம் ஏதாவது சுமை இருந்தால் உங்களுக்குப் பிடிக்காத பந்தனம் இருந்தால், பாப்தாதா பார்க்கின்றார். ஒரு புறம் நல்லதில்லை. சரியில்லை என்று நினைக்கிறார்கள் ஆனால் என்ன செய்வது, எப்படிச் செய்வது? இது நன்றாக இலலை தானே? ஒரு பக்கம் நன்றாகயில்லை என்று கூறுகிறார்கள். இன்னொரு பக்கம் பத்திரப்படுத்தி வைத்துக் கொள்கிறார்கள். இதை என்னவென்று சொல்வது? நல்லது தான் என்று கூறலாமா? நல்லதில்லை தானே? அப்படியானால் நீங்கள் எப்படி ஆக வேண்டும்? நல்லவரிலும் நல்லவர். சரி. ஒருவேளை ஏதாவது ஒரு விஷயம் இருக்கிறதென்றால். பாபா தயாராகவே இருக்கின்றார். அவர்டம் கொடுத்து விடலாம். ஒருவேளை திரும்பவும் வந்து விடுகிறது என்றால், பிறருடைய பொருளுக்கு, சொந்தம் கொண்டாடுவது சரியாகுமா? ஏனெனில் நீங்கள் கொடுத்து விடுகிறீர்கள் என்றால் அத தந்தைக்குச் சொந்தமான பொருளாகி விடுகிறது. தந்தையின் பொருளாக இருந்தாலும், வேறொருவருடைய பொருளாக இருந்தாலும், உங்களிடம் தவறுதலாக வந்து விடுகிறதென்றால் அதனை உங்கள் அலமாரியில் வைத்துக் கொள்வீர்களா? பத்திரப்படுத்தி வைப்பீர்களா? எடுப்பீர்கள் அல்லவா? எப்படியாவது எடுத்து விடுவீர்கள். வைத்துக் கொள்ள மாட்டீர்கள். பத்திரமாக பாதுகாக்க மாட்டீர்கள் தானே? ஆகவே கொடுத்து விடுங்கள். தந்தை வாங்குவதற்காகவே வந்திருக்கின்றார். வேறெதையும் உங்களிடம் வைத்துக் கொள்ளாமல் கொடுத்து விடுங்கள். கொடுத்து விட முடியுமல்லவா? எருக்கம்பூ இருக்கிறதா? அதை கொடுத்து விடுங்கள். பத்திரப்படுத்தி வைப்பது பிடித்தமானதாக இருக்கிறதா என்ன? 6 மாத காலமாக மிக ஆர்வத்துடன் சேவை செய்து கொண்டிருக்கிறீர்கள். ரஷியாவிலிருந்தும். ஆப்பிரிக்காவிலிருந்தும் சேவை பற்றிய சமாச்சாரம் வந்தது. இன்னும் மற்றவர்களிடமிருந்தும் சமாச்சாரம் வந்தது. சேவை செய்து கொண்டிருக்கிறார்கள். செய்தி வந்து கொண்டு தான் இருக்கிறது. இப்போது சுய முன்னேற்றத்திற்காக

நேரம் ஒதுக்கியிருக்கிறார்கள். இப்போது பார்த்து விட்டேன். பாப்தாதா எவ்வளவோ காலமாக 2 வார்த்தைகளை அடிக்கடி நினைவு படுத்திக் கொண்டேயிருக்கின்றார். அந்த இரண்டு வார்த்தைகள் எது? அச்சானக் மற்றும் எவர்டி. (திடீரென்று, தயார் நிலை) நினைவிருக்கிறதல்லவா? நினைவிருக்கிறதா? உங்களுடைய அன்ஜுன தாதி சந்திரமணி திடீரென சென்று விட்டார். அப்போதிருந்து எவ்வளவு காலம் ஆகி விட்டது. (10 ஆண்டுகள்) மேலும் இதன் பிறகு எத்தனை முறை அச்சானக் (திடீரென) நடந்தன. உங்களுடைய தாதி எப்படிச் சென்றார்? திடீரென சென்று விட்டாரல்லவா? நல்லது? தாதியிடம் அன்பிருக்கிறதா? ஆகவே அச்சானக் என்ற பாடத்தை தாதியை நினைத்து நினைவு செய்யுங்கள். எப்படி தாதி தனது லக்ஷியத்தை நிறை வேற்றி விட்டுச் சென்றார். நிறை வேற்றாமல் செல்லவில்லை. அவருக்கு சர்டிபிகேட் கிடைத்தது. கர்மாதீத். கர்மேந்திரியங்களும் தன்னுடைய ஆகர்ஷணத்தின் மூலமாக கட்டுப்படுத்தவில்லை. சாட்சியாக இருக்கும்போது, கர்மேந்திரியங்கள் சீதளமாகிக் கொண்டேயிருந்தன. ஆகிக் கொண்டேயிருந்தது. ஆகர்ஷணம் இழுக்கவில்லை. கர்மேந்திரியங்களும் தன் பக்கம் இழுக்கவில்லை. எந்த ஒரு ஆத்மாவின் மோகமும் (பற்று) இழுக்கவில்லை. நிர்மோகி, நஷ்டமோகா. இல்லையென்றால் அநேகர் பிரிந்து கொண்டிருக்கும் போதே, நினைவில் சிக்கிக் கொள்கின்றனர். அவர், இவர், அவர் என்று ஆனால் தாதி நஷ்டமோகா. ஸ்மிருதி சொரூபத்தில் சென்றார். கர்மேந்திரிய ஜீத் ஆகிச் சென்றார். எந்த ஒரு கர்மேந்திரியமும் தன் பக்கமாக துக்கத்தின் அலைகளாக இழுக்கவில்லை. நீங்கள் தாதி என்று கூறுகிறீர்கள் அல்லவா? நினைவு வருகிற தல்லவா? வரத்தான் செய்யும். ஏனெனில் நம்பர்-1னாக இருந்தார். ஒன் நம்பர். வின் (வெற்றி) செய்தார் அல்லவா? ஆனால் எப்போதெல்லாம் தாதியின் நினைவு வருகிறதோ. அப்போது ஸித்திரத்தை மட்டும் பார்க்காதீர்கள். நானும் கூட எவர்ரெடியாக இருக்கிறேன் என்று நினைவு செய்யுங்கள். எனக்கும் கூட அச்சானக் என்ற பாடம் நினைவிருக்கிறதா? இருக்கும்போதே அச்சானக் (திடீரென) செல்லவேண்டியிருந்தால் நஷ்டமோகா, பிரகிருதிஜீத் ஆக இருக்கிறேனா? இந்த தாதியின் அன்பளிப்பை உங்களிடம் வைத்திருங்கள் புரிந்ததா? நன்று.

நாலா பக்கங்களிலுமிருந்தும் கடிதங்கள், செய்திகள், இ.மெயில் எல்லாம் பாப்தாதாவிடம் வந்து சேர்ந்தது. எல்லோரும் தங்கள் அன்பின் அடையாளமாக, நேரில் வரமுடியாத நிலையில் கடிதங்கள், இ.மெயில் மூலமாக அனுப்பியிருக்கிறார்கள். பாப்தாதா ஒவ்வொருவரின் உளப் பூர்வமான அன்பு நிறைந்த கடிதங்கள் மற்றும் செய்திகள் என்ற அன்பளிப்பை ஏற்றுக் கொண்டார். மேலும் அவர்கள் ஒவ்வொருவருக்கும். பாப்தாதா தனது கண்களில் எமர்ஜ் செய்து அன்பிற்கு கைமாறாக, அன்பு நினைவுகளாக அளிக்கின்றார். நன்று. இந்த பரமாத்ம அன்பு புருஷாரத்தத்தில் மிகவும் உதவியாயிருக்கிறது. ஆகவே, ஒவ்வொருவரும் அன்பானவர் தான். அன்புடையவர்களாகவே இருப்பார்கள். மேலும் அன்பு எனும் ஊஞ்சலில் ஆடிக் கொண்டே, பாப்தாதாவுடன் தங்களுடைய வீட்டிற்குச் செல்வார்கள். அந்த நேரமும் வந்து விடும். எல்லோரும் கூடவே செல்ல வேண்டும். கூடவே செல்பவர்கள் தானே! பின் தங்கி விடக்கூடாது. பின்னால் வருபவர்களாக இருக்கக்கூ து. பின்தங்கி விட்டால் மஜாவாக இருக்காது. மஜா (ஆனந்தம்) என்றால் கை மீது கை. கூடக் கூடடுவ கை என்பது ஸ்ரீமத், ஸ்ரீமத், புத்தியில் இருக்கும். ஆத்மாவோடு பரமாத்மா உடனிருப்பார். விடு செல்வோம். செல்பவர்கள் தானே எல்லோரும். பின் தங்கி விடக் கூடாது. இப்போதும் கூடலே இருக்கின்றார். நீங்கள் எந்த மூலையில் இருந்தாலும் சரி. தந்தை கூடவே இருக்கின்றார். கூட லேர் இருப்பார். கூடவே வருவார். பிறகு பிரம்மாபாபாவோடு இராஜ்யம் செய்வீர்கள். உறுதிமொழி, உறுதியாக (பக்காவாக) இருக்கிறதல்லவா? இடையில் பின் தங்கி விடக்கூடாது. ஏதாவது சுங்கச்சாவடி பொருள் இருந்தால் தடுக்கப்படுவீர்கள். ராவணனுடைய பொருள் அனுமதிக்கப்பட மாட்டாது ஏதாவது ராவணனுடைய சம்ஸ்காரம், சுபாவம், தர்மராஜபுரி கஸ்டம்ஸில் பிடிப்பட்டுவிடும். தந்தையோடு கூடவே செல்ல வேண்டும். ஒருவேளை ஏதாவது இருந்தால் சுங்கச்சாவடியில் தாமதிக்க வேண்டியதாயிருக்கும். மகிழ்ச்சியா யிருக்குமா? இருக்காதல்லவா? தந்தைக்கும் கூட மகிழ்ச்சியாயிருக்காது. எப்போது கூடவே செல்வோம் என்று உறுதிமொழி கொடுத்திருக்கிறீர்களோ, அப்போது கூடவே இருப்பது தான் சரியாகுமல்லவா? பின்னால் அமர்ந்திருப்பவர்கள் என்ன நினைக்கிறார்கள்? வாய்தா (உறுதிமொழி) பக்காவா? பக்கா என்று சொல்பவர்கள் கை உயர்த்துங்கள். நல்லது. சரி தான். யாரெல்லாம்

வந்திருக்கிறார்களோ எங்கிருந்து வந்திருந்தாலும் சரி. நினைவில் வைத்திருங்கள். அதாவது துணையை விட்டுவிடக்கூடாது என்பது. ஒவ்வொரு சமயத்திலும் நீங்கள் தந்தையுடனேயே தான் இருக்க வேண்டும். (பாப் அவுர் ஆப்) ஆனந்தமாயிருக்கிறதல்லவா? டீச்சர்ஸ் இதில் ஆனந்தமாயிருக்கிறதா? அல்லது சிலசமயம் தனித்தனியாகவும் இருக்கலாமா? பாபாவின் கையை விட்டுவிடுவது நல்லதா? விடக்கூடாது. பக்காவா? ஒரு நொடிகூட விட்டுப் பிரியக் கூடாது. இதற்குத்தான் உண்மையான அன்பு என்று சொல்லப்படுகிறது. சரிதானா? பக்கா. பக்கா. பக்கா. தான். உங்களை போட்டோ எடுக்கிறார்கள். வதனத்தில் போட்டோ எடுக்கப்படுகிறது.' இந்தக் கேமராவில் வராது ஆனால் வதனத்தில் போட்டோ எடுக்கப்படுகிறது. மிகவும் நல்லது.

நல்லது. நாலா பக்கங்களிலுமுள்ள, பாப்தாதாவின் மனதிற்குப் பிடித்தமுள்ள குழந்தைகள், திலாராம் அல்லவா? திலாராமின் தில் பசந்த் குழந்தைகள் அன்பின் அனுபவத்தில் சதா மிதந்து கொண்டிருக்கும் குழந்தைகள், ஒரு பாபாவைத் தவிர வேறுயாருமில்லை, சொப்பனத்திலும் கூட வேறு யாருமில்லை. இப்படிப்பட்ட பாப்தாதாவுக்கு மிகவும் அன்பான தேக அடமானத்திலிருந்து முற்றிலுமாக விலகியிருக்கின்ற, மீண்டும் கண்டெடுக்கப்பட்ட நூறு மடங்கு பாக்கியசாலி குழந்தைகளுக்கு உள்ளத்தின் அன்பு நினைவுகள் மற்றும் ஆயிரமாயிரம் மடங்கு ஆசிகள். இத்துடன் பாலக் ஸோ மாலிக் குழந்தைகளுககு பாப்தாதாவின் நமஸ்காரம்.

**ஆப்பிரிக்காவின் 28-தேசங்களிலிருந்து முதன் முறையாக வந்திருந்த குழந்தைகள் எழுந்து நிற்கின்றனர்:** மிகவும் நல்லது. தாராளமாக வரட்டும். ஆப்பிரிக்காவுக்கு நிமித்தமாக இருப்பவர் எங்கே இருக்கின்றார்! பாருங்கள். நீங்கள் எவ்வளவு பாக்கியவானாக இருக்கின்றீர்கள். சுயம் தந்தை தனது குழந்தைகளை நினைவு செய்தார். மேலும் சிலர் மூலமாக செய்தியும் அனுப்பினார். நீங்கள் இப்போது உங்கள் பாக்கியத்தை நினைத்து குஷியடைகிறீர்கள் அல்லவா? மற்றெல்லோரும் கூட உங்களைப் பார்த்து குஷியடைந்து கொண்டிருக்கிறார்கள். ஏனெனில் பிராமண பரிவாரத்தில்

விருத்தியடைந்திருக்கிறதல்லவா? பாருங்கள் உங்கள் எல்லோரையும் பார்த்து எல்லோரும் குஷியடைந்து கொண்டிருக்கிறார்கள்.

மற்ற தேசங்களிலிருந்து முதன் முறையாக வந்திருப்பவர்கள் எழுந்திருங்கள்: வாழ்த்துக்கள், வாழ்த்துக்கள், வாழ்த்துக்கள்.

தாதிகளுடன்: மிக அன்பான தாதிகள் அல்லவா! தாதிகளா அல்லது துணைவர்களா? ஆனால் மிகவும் பிரியமானவர்கள். (தாதி ஜனாகியுடன்). அமருங்கள். இப்போதோ சீட்டில் செட்டாகி விட்டீர்களல்லவா? பாப்தாதா நிமித்தமாக்கி விட்டார். இந்தக் குழந்தை (குல்ஜார் தாதி)யையும் கூட நிமித்தமாக்கியிருக்கின்றார். இருவரும், மூவரும் சேர்ந்து மிக நல்ல முறையில் சுய புருஷாரத்தம், விஷ்வ சேவை மற்றும் விதி பூர்வமாக ஸித்தி பிராப்தி செய்வதற்கு நிமித்தமாக இருப்பீர்கள். உலகிலுள்ள மற்றவர்களோ, அல்பகாலத்திற்கான ரித்தி ஸித்தியாளர்கள் ஆனால் உங்களுடையது விதி மூலமாக ஸித்தி. விதி மூலமான ஸித்தி (வெற்றி) க்குப் பதிலாக, ரித்தி ஸித்தியாகச் செய்து விட்டார்கள். (பாப்தாதா தாதி ஜானகியின் தலைமீது கை வைத்தார்) நன்றாக இருக்கிறீர்களா? எல்லோரும் இணைந்து செய்வீர்கள். எல்லோரும் சேர்த்து எல்லோரையும் ஊக்கம், உற்சாகத்தில் கொண்டு வருவீர்கள். திமித்தமாக முதல் நம்பர். இரண்டாம் நம்பர், மூன்றாம் நம்பர் என்று சொல்லப்படுகிறது ஆனால் நீங்கள் எல்லோரும் சேவையில் கூட்டாளிகள். ஒருவருக்கொருவர் உற்சாகம் கொடுச்சு முன்னேறுவீர்கள். மேலும் எந்த ஒரு சங்கல்பம் தாதிக்கு இருந்ததோ, தந்தையை பிரத்யக்ஷம் செய்வது, தாதியும் பட்டனை கையில் வைத்திருக்கின்றார், ஆனால் பட்டனை பிரஸ் செய்வ நீங்கள் தானே? நீங்கள் தானே பிரஸ் செய்வீர்கள். நீங்கள் தான் பட்டன் பிரஸ் செய்வீர்கள் அல்லவா? ஆகவே நீங்கள் எல்லோரும் சேர்ந்து யாரெல்லாம் நிமித்தமாயிருக்கிறார்களோ எல்லோரும் சேர்ந்து ஒருவர் மற்றவர் மீது நம்பிக்கை வைத்து, ஏனெனில் கூட்டு சக்தியானது மிக சீக்கிரமாக, சுலபமாக -காரியம் செய்யக்கூடியதாகும். ஆமாம். ஆமாம் என்று சரணங்களில் விழச் செய்ய வேண்டும். குரூப் நன்றாக இருக்கிறது. ஒவ்வொருவருக்கும் ஒரு விசேஷம் இருக்கிறது. மேலும் இந்த விசேஷத்தை உங்களுக்குள் வர்ணனையும் செய்கிறீர்கள். விசேஷங் களைப் பற்றி வகுப்பு: எடுக்கிறீர்கள் அல்லவா? போதும்.

விசேஷம் உள்ளது. விசேஷங்களைப் பார்க்க வேண்டும். விசேஷங்களை வழங்க வேண்டும். விசேஷ காரியம் செய்வதற்காக வேசஷத்தைப் பாருங்கள் விசேஷத்தை ஒருவருக்கொருவர் பகிர்ந்து கொள்ளுங்கள். நன்றாக உள்ளது. (தாதி ஜானகியிடம் பாரமாகி விடவில்லை தானே? பாரமாக ஆவதில்லை தானே? (பாரமாக நினைக்கின்ற அறிவுர் இல்லை) அறிவு இல்லை. இது தான் நல்லது, இந்தக் குழந்தை (குல்ஜார் தாதி) யும் கூட உங்களுக்குத் துணையாக இருப்பார். இவர்கள் எல்லோரும் துணைவர்கள். (பரதாதியும் கூட குஷியில் ஆடி கொண்டிருக்கிறார்) மிகவும் குஷியாக இருக்கின்றார். ஆடிக் கொண்டேயிருக்கின்றார். (நன்றாகப் பாடவும் செய்கின்றார்) தாதியும் கூட பாட்டு பாடினார் அல்லவா? குழந்தைப் பருவத்தோழி அல்லவா? (மனோகர் தாதியுடன்) நன்றாக இருக்கிறீர்கள் அல்லவா? இந்தக் குழந்தையின் விசேஷம் என்ன வென்றால் சாகார் பாபா இருந்த சமயத்தில் எல்லா பக்கமும் சுற்றி வருவதில் நம்பர்-1னாக இருந்தார். பாப்தாதா கூறுவதுண்டு. சுற்றி வந்து கொண்டேயிருங்கள் என்று சொன்னவுடனே முதலாவதாக தயாராகி விடுவார். இப்போதும் கூட பாடம் சொல்வதில் முதல் நம்பர். சபைக்கு வந்து சேர்வதிலும் ஒவ்வொரு காரியத்திலும் நம்பர்-1. (இப்போது அதிகம் சாந்தமாக இருக்கின்றார்.) இப்போது குழந்தைப் பருவத்தை நினைவு செய்யுங்கள். நோயை அல்ல. குழந்தைப் பருவத்தை நினைவு செய்யுங்கள். (கிட்னியில் கல் இருக்கிறது) தற் சமயம் இந்த மாதிரி நோய் சர்வ சாதாரணமாகி விட்டது. உட்கார்ந்திருந்தபடியே நடந்து விடுகிறது. உறங்கினாலும், அமர்ந்திருந்தாலும், ஆகி விடுகிறது. தூங்கக் கூடாது. உட்கார்ந்திருக்கக் கூடாது. சுற்றிச் சுற்றி வர வேண்டும்.

வெளிநாட்டின் முக்கிய சகோதரிகளுடன்: நல்லது. ஃபாரின் குருப் வந்திருக்கிறது. பாப்தாதாவுக்கு குஷியாக இருக்கிறது. ஃபாரின் சேவையிலும், இந்தியாவைக் சேர்ந்த சகோதரிகளே நிமித்தமாகியிருக்கிறார்கள். இந்தியாவானது வெளிநாட்டில் அழகை கொண்டு வந்திருக்கிறது ஆனால் தன்னை இந்தியாவைச் சார்ந்தவர் என்று கருதவில்லை. உலகினைச் சார்ந்தவராகவே கருதுகின்றனர். இதன் காரணமாகவே சேவை செய்ய முடிகிறது. பதிலாக, இந்தியா என்ற அபிமானம் இருக்குமானால் சேவை நடக்க முடியாது ஆனால் இவர்கள் நல்ல முறையில் நடந்து கொள்கிறார்கள் வெளி நாடு

சென்றதும் விஷ்வ சேவை என்ற லக்ஷியம் வைத்திருக்கிறார்கள். பேகத்தில் (எல்லைக்காப்பாற்பட்ட) சென்று விட்டார்கள். எல்லைக்குப்பட்ட நிலையில் அல்ல. எல்லைக்காப்பாற்பட்ட நிலை. இதன் காரணமாக பாப்தாதாவுக்கு குஷியாக இருக்கிறது. மேலும் அங்குள்ள மற்றவர்களையும் கூடவே சேர்த்துக் கொண்டு செல்வதால் அவர்களும் கூட தாங்களும் முன்னிலையில் இருப்பதாகவே தங்களைச் கருதுகிறார்கள். ஆதலால் குரூப் நன்றாக இருக்கிறது. ஒருவர்க்கொருவருட னான பழக்கமும் நன்றாக இருக்கிறது, சரி தான். பாப்தாதாவுக்கும் பிடித்தம் தான். சர்டிபிகேட் (சான்றிதழ்) நன்றாக இருக்கிறது. எவ்வளவு நினைவு செய்கிறார்கள்? இன்னொரு லக்ஷியமும் கூட முழு உலகமும் நன்றாக இருக்கிறது. ஒரு இடத்திலுள்ளவர்கள் இன்னொரு இடத்திற்குச் சென்று சுற்றி வருவது அதாவது இடையிடையேர் ஒரு தேசத்திலிருந்து இன்னொரு தேசத்திற்குச் செல்வது, இந்த அனுபவம் புத்துணர்வைக் கொடுப்பதாக இருக்கிறது. ஆதலால் இது அவசியம் தான். வயதில் சிறு சகோதரியாயிருக்கலாம். இருப்பினும் தூரமான இடத்திலிருந்து வந்து, பாடம் நடத்தும்போது, ஒரு மாறுதலை உணருகிறார்கள். புதுமையான அனுபவமாகவும் இருக்கிறது. இது எல்லோருக்கும் விருப்பமுள்ள மாற்றமாகவும் இருக்கிறது. மூத்த சகோதரியாக இருந்தாலும் சிறிய வகுப்புகளையும் சில சமயம் நடத்துகிறார்கள். இது இனிமையாக இருக்கிறது. ஆதலால் சுற்றி வருகின்ற இந்த சிஸ்டம் (முறை) நன்றாகடோ எல்லாம் நன்றாகவே நடக்கிறதல்லவா? நன்று. (இம்முறை ஏதாவது புது இருக்கிறது. ஆகவே வரட்டும்) (ஜெர்மனியில் புத்தகக் கண்காட்சி மிக நன்றாக இருந்தது). நாளுக்கு நாள், அனுபவசாக களாகிக் கொண்டிருக்கிறீர்கள் அல்லவா? அனுபவமும் வேலை செய்கிறது. நல்லது. நன்றாக நடந்து கொண்டிருக்கிறார்கள். ஓம் சாந்தி.

✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵
✵✵✵✵✵

# 31.10.2007 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# தனது சிரேஷ்ட ஸ்வமானின் (சுய கௌரவ நிலை) பெருமிதத்திலிருந்து, நடைபெற முடியாததை, நடைபெறச் செய்து கவலையற்ற பாதுஷா (பேரரசன்) ஆகுங்கள்!

இன்று, பாப்தாதா தன்னுடைய நாலா பக்கங்களிலுமுள்ள சிரேஷ்ட ஸ்வமான்தாரி விசேஷ குழந்தைகளைப் பார்க்கின்றார். ஒவ்வொரு குழந்தையினுடைய சுய கௌரவம் மிகுந்த விசேஷமுள்ளதாக இருக்கிறது. இம்மாதிரியான விசேஷம் உலகில் வேறு எந்த ஒரு ஆத்மாவிடமும் இல்லை. நீங்கள் எல்லோரும் உலகிலுள்ள ஆத்மாக்களின் மூதாதையர்களாகவும் இருக்கிறீர்கள், பூஜைக்குரியவர்களாகவும் இருக்கிறீர்கள். முழு சிருஷ்டி எனும் விருக்ஷத்தின் ஆணி வேருக்கு நீங்கள் தான் ஆதார மூர்த்திகள். முழு உலகத்திற்கும் நீங்கள் பூர்வீக முதலாவது படைப்பு. பாப்தாதா ஒவ்வொரு குழந்தையின் விசேஷத்தைப் பார்த்து மகிழ்ச்சியடைகின்றார். சிறு குழந்தையாக இருந்தாலும், வயோதிக மாதாக்களாக இருந்தாலும். கிரஹஸ்திகளாக (குடும்பத்தில் உள்ளவர்கள்) இருந்தாலும் சரி, ஒவ்வொருவருக்கும் வெவ்வேறான விசேஷங்கள் இருக்கின்றன. தற்காலத்தில் எத்தனையோ பெரிய, பெரிய அறிவியல் அறிஞர்கள் இருக்கிறார்கள். உலகாயத ரீதியின் கணக்குப்படி இவர்கள் விசேஷமானவர்கள் தான் ஆனால் தத்துவங்களையாவது, வென்றவர்கள் ஆகலாமல்லவா. சந்திரமண்டலம் வரை சென்றடைந்தார்கள் ஆனால் இவ்வளவு சிறிய ஜோதி சொரூப ஆத்மாவைப் பற்றி அறிந்து கொள்ள முடியவில்லை. மேலும் இங்கு சிறு குழந்தையும் கூட "நான் ஆத்மா", ஜோதி பிந்துவை அறிவேன் என்று பளிச் சென்று சொல்கிறது. "நான் ஆத்மா", எவ்வளவு

பெரிய மகாத்மாக்கள் இருந்தாலும், பிராமண தாய்மார்கள் இருக்கிறார்கள், மாதாக்கள் தயங்காமல் கூறுகின்றார்கள். நாங்கள் பரமாத்மாவை அடைந்து விட்டோம் என்று. அடைந்து விட்டீர்கள் அல்லவா! மகாத்மாக்கள் என்ன கூறுகின்றார்கள்? பரமாத்மாவை அடைவது மிகவும் கஷ்டமான விஷயம். குடும்ப வாழ்க்கையில் இருப்பவர்கள், சவால் விடுகிறார்கள். நாங்கள் எல்லாம் குடும்ப வாழ்க்கையில் சேர்ந்திருந்தாலும் தூய்மையாக இருக்கிறோம். ஏனெனில் எங்களுக்கிடையில் தந்தை இருக்கின்றார். ஆகவே தான் இருவரும் கூடவே இருந்த போதிலும் கூட எளிதாகவே தூய்மையாக இருக்க முடிகிறது. ஏனென்றால், தூய்மை (பவித்திரத்தா) எங்களுடைய சுய தர்மம் (ஆத்ம தர்மம்). மற்ற தர்மம் கஷ்டமானது. (ஆத்ம தர்மம்) சுய தர்மம் எளிதானது. உலகினர் என்ன கூறுகிறார்கள்? நெருப்பும், பஞ்சும் ஒன்றாக இருக்க முடியாது. மிகவும் கஷ்டம் ஆனால் நீங்கள் எல்லோரும் என்ன கூறுகிறீர்கள். மிக எளிது. ஆரம்ப காலத்தில் உங்களுடைய பாடல் ஒன்றிருந்தது. எவ்வளவு பெரிய சேட்டாக இருக்கட்டும். சுவாமியாக இருக்கட்டும் ஆனால் ஒரு தந்தையை (பரமாத்மா) அறியவில்லை. மிகச் சிறிய புள்ளியான (பிந்து) ஆத்மாவையும் அறியவில்லை ஆனால் குழந்தைகளாகிய நீங்கள் எல்லோரும் அறிந்து கொண்டீர்கள், அடைந்து விட்டீர்கள். இவ்வளவு நிச்சயத்தோடு. பெருமிதத்தோடு சொல்கிறீர்கள். நடைபெற முடியாதது நடைபெறும். பாப்தாதாவும் கூட ஒவ்வொரு குழந்தையும் வெற்றி ரத்தினமாக ஆகியிருப்பதைப் பார்த்து, மகிழ்ச்சியடைகின்றார். ஏனென்றால், தைரியசாலி குழந்தைகளுக்கு, தந்தையின் உதவி எப்போதுமே உண்டு. ஆகவே தான் உலகினர் எதை சாத்தியமில்லை என்று நினைக்கிறார்களோ, அது உங்களுக்கு எளிதாகவும், சாத்தியமானதாகவும் ஆகி விட்டது. பெருமையாகவும் இருக்கிறது. நாங்கள் பரமாத்மாவின் நேர்முகமான (டைரக்ட்) குழந்தைகள் என்று. இந்த நஷாவின் காரணமாக, நிச்சய புத்தியின் காரணமாக பரமாத்மாவின் குழந்தையாக இருப்பதன் காரணமாக மாயையிடமிருந்தும் பாதுகாப்பாக இருக்கின்றீர்கள்.

ஆகவே, நீங்கள் உங்களுடைய இவ்வளவு சிரேஷ்டமான சுய கௌரவ நிலை (சுவமான்) பற்றி அறிந்திருக்கிறீர்கள் அல்லவா: ஏன் எளிதாக இருக்கிறது? ஏனென்றால் நீங்கள் சைலன்ஸ் (அமைதி) சக்தி மூலமாக,

பரிவர்த்தனை சக்தியை (சுய மாற்றம் செய்யக்கூடிய சக்தியை) காரியத்தில் உபயோகிக்கிறீர்கள். எதிர் மறையை (நெகட்டிவ்) நேர்மறையாக (ஆக்க பூர்வமாக) சுய மாற்றம் செய்து விடுகிறீர்கள். மாயை எத்தனையோ விதமாக சந்தேகம் என்ற ரூபத்தின் வருகிறது ஆனால் நீங்கள் சுய மாற்ற சக்தி மூலமாக, அமைதி சக்தி மூலமாக, சந்தேகத்தை சமாதான சொரூபமாக மாற்றி விடுகிறீர்கள். காரணத்தை. நிவாரண ரூபத்தில் மாற்றி விடுகிறீர்கள். இவ்வளவு சக்தி இருக்கிறதல்லவா! கோர்ஸ் (பாடமுறை) கொடுக்கிறீர்கள் அல்லவா! நெகட்டிவை, பாஸிட்டிவாகச் செய்யும் விதியை கற்பிக்கின்றீர்கள். இவ்வாறு சுய மாற்ற செய்யக்கூடிய சக்தி, தந்தையிடமிருந்து ஆஸ்தியாக கிடைத்துள்ளது. ஒரு சக்தி மட்டுமல்ல சர்வ சக்திகள் பரமாத்மாவிடமிருந்து ஆஸ்தி என்ற ரூபத்தில் கிடைத்திருக்கின்றது. ஆகவே தான் பாப்தாதா திளந்தோறும் கூறுகின்றார். தினந்தோறும் தவறாமல் முரளி கேட்கிறீர்கள் அல்லவா! பாப்தாதா இதைத்தான் கூறுகின்றார். தந்தையை நினைவு செய்யுங்கள், ஆஸ்தியை நினைவு செய்யுங்கள். தந்தையின் நினைவும் கூட எதனால் எளிதாகவே வருகிறது. எப்போது ஆஸ்தியாகிய பாக்கியத்தை நினைவு செய்கிறீர்களோ, அப்போது அந்த பாக்கியத்தின் காரணமாக, தந்தையின் நினைவு எளிதாகவே வந்து விடுகிறது. ஒவ்வொரு குழந்தைக்கும் இந்த ஆன்மீகப் பெருமிதம் இருக்கிறது. உள்ளத்தில் பாடவும் செய்கிறார்கள் -அடைய வேண்டியதை அடைந்து விட்டேன்! எல்லோருடைய உள்ளத்திலும் இந்தப் பாட்டு தானாகவே ஒலித்துக் கொண்டிருக்கிறதல்லவா? பெருமையாயிருக்கிறதல்லவா! எவ்வளவு இந்த பெருமிதத்தில் இருக்கிறீர்களோ, அப்படி இருப்பதன் அடையாளம், கவலையற்ற நிலையில் இருப்பீர்கள். ஒருக்கால் எந்த ஒரு விதத்திலாவது எண்ணத்திலோ. பேச்சிலோ, சம்மந்தம் தொடர்பிலோ கவலை இருக்கிறதென்றால், பெருமிதத்தில் இல்லை. பாப்தாதா கவலையற்ற இராஜாவாக ஆக்கியிருக்கின்றார். கூறுங்கள், கவலையற்ற பாதுஷா தானோ சரியா? யார் கவலையற்ற பாதுஷா என்று நினைக்கிறார்களோ, அவர்கள் கை உயர்த்துங்கள். கவலையே இல்லாதவர்களுக்கு அவ்வப்போது கவலை வந்து விடுகிறதா? சரி. எப்போது தந்தை கவலையற்றவராக இருக்கின்றாரோ, அப்போது குழந்தைகளுக்கு என்ன கவலை?

பாப்தாதா கூறியிருக்கின்றார் அல்லவா? எல்லாவிதமான கவலைகளையும். ஏதாவதொரு சுமை இருந்தாலும் பாப்தாதாவிடம் கொடுத்து விடுங்கள் என்று. தந்தை கடல் அல்லவா! எல்லா வித சுமைகளும் அதில் அடங்கி விடும். சில சமயம் பாப்தாதாவுக்கு குழந்தைகளினுடைய ஒரு பாட்டைக் கேட்டு சிரிப்பு வருகிறது. புரிகிறதா? என்ன பாட்டு என்று? என்ன செய்வது? எப்படிச் செய்வது? சிற்சில சமயங்களில் பாடுகிறீர்கள். பாப்தாதா கேட்டுக் கொண்டே தான் இருக்கின்றார் ஆனால் பாப்தாதா எல்லா குழந்தைகளுக்கும் இதைத்தான் கூறுகின்றார். ஹே இனிமையான குழந்தைகளே! செல்லமான குழந்தைகளே! சாட்சி திருஷ்டா ஸ்திதியாகிய (சாட்சியாயிருந்து பார்க்கும் ஸ்திதி) சீட்டில் செட்டாகி (அமர்ந்திருந்து) விளையாட்டைப் பாருங்கள். மிக ஆனந்தமாயிருக்கும். ஆஹா! திரிகாலதரிசி ஸ்திதியில் நிலைத்து விடுங்கள். சீட்டிலிருந்து கீழிறங்கி விடுகிறீர்கள். ஆகவே தான் அப்செட் (நிலை குலைந்து விடுதல்) ஆகி விடுகிறீர்கள். செட் ஆகியிருந்தால், அப்செட் ஆக மாட்டீர்கள். மூன்று விஷயங்கள் குழந்தைகளை அலைக்கழித்துக் கொண்டிருக்கின்றன. அந்த மூன்று விஷயங்கள் எது? (1) சஞ்சலமுள்ள மனம், (2) தடுமாறுகின்ற புத்தி இன்னும் என்ன (3) பழைய சம்ஸ்காரம். பாப்தாதாவுக்கு குழந்தைகளினுடைய ஒரு விஷயத்தைக் கேட்டு சிரிப்பு வருகிறது. தெரிகிறதா என்ன விஷயம் என்று? சொல்கிறார்கள் பாபா என்ன செய்வது, எனது பழைய சம்ஸ்காரம் இருக்கிறதல்லவா? பாப்தாதாவுக்கு சிரிப்பாக இருக்கிறது. என்னுடைய சம்ஸ்காரம் என்ற கூறுவீர்களேயானால், உங்களுடையதாக ஆக்கிக் கொண்டீர்களா? என் மீது அதிகாரம இருக்கத்தான் செய்கிறது. எப்போது பழைய சம்ஸ்காரத்தை. தன்னுடையதாக ஆக்கிக் கொண்டீர்களோ அப்போது என்னுடையது என்ற இடத்தை அது பிடித்துக் கொள்ளும் அல்லவா? அவ்வாறானால், பிராமண ஆத்மா, என்னுடைய சம்ஸ்காரம் என்று சொல்ல முடியமா? 'என்னுடையது' என்று சொல்லிச் சொல்லியே என்னுடைய என்பது தன்னுடைய இடத்தைப் பிடித்துக் கொண்டு விட்டது. பிராமணர்களாகிய நீங்கள் என்னுடையது என்று கூற முடியாது. இது கடந்த வாழ்க்கையின் சம்ஸ்காரம். பிராமண வாழ்க்கையினுடைதல்ல. நீங்கள் என்னுடையது, என்னுடையது என்று சொன்னதால், அதிகாரத்துடன் (உரிமை கொண்டாடி) அமர்ந்து கொண்டது. பிராமண வாழ்க்கையின் சிரேஷ்ட சம்ஸ்காரத்தை

அறிவீர்கள் அல்லவா? நீங்கள் எந்த ஒரு சமஸ்காரத்தை பழையது என்று கூறுகிறீர்களோ அதுவும் கூட பழையதல்ல. சிரேஷ்ட ஆத்மாக்களாகிய உங்களுடைய பழையதிலும், பழைய சம்ஸ்காரம் அநாதி மற்றும் ஆதி சம்ஸ்காரம் ஆகும். (சாந்திதாம், சுகதாம்) ஆனால் இதுவோ துவாபர யுகத்தின் இடைப்பட்ட சம்ஸ்காரம். ஆதலால் இந்த இடைப்பட்ட (மத்ய) சம்ஸ்காரத்தை இல்லாமல் செய்து விட வேண்டும் (சமாப்தி). தந்தையின் உதவி இருப்பதால், இது ஒன்றும் கடினமல்ல ஆனால் என்ன நடக்கிறது? வேண்டும்போது தந்தை கம்பைண்ட (இணைந்து) இருக்கின்றார். அவரை கம்பைண்டு என அறிந்து கம்பைண்டு என்பதன் பொருள். அவசியமான நேரத்தில் உதவி செய்கிறார் (சகயோகி) ஆனால் வேண்டும் போது உதவியைப் பெற்றுக் கொள்ளாமலிருப்பதன் காரணமாக இடைப்பட்ட (மத்ய) சம்ஸ்காரமானது, மகான் ஆகி விடுகிறது.

பாப்தாதா அறிவார் -எல்லா குழந்தைகளும் தந்தையின் அன்புக்குப் பாத்திரமானவர்கள், அதிகாரிகள். அன்பின் காரணமாகவே எல்லோரும் வந்து சேர்ந்து விட்டார்கள் என்பதையும் பாபா அறிவார். வெளிநாடுகளிலிருந்து வந்திருந்தாலும், உள் நாட்டிலிருந்து வந்திருந்தாலும், எல்லோரும் பரமாத்மாவின் அன்பில் ஆகர்ஷணத்தினால் தங்களுடைய வீட்டிற்கு வந்து விட்டார்கள். பாப்தாதா அறிவார் -அன்பின் மெஜாரிட்டி பாஸ். வெளிநாட்டினர் அன்பெனும் விமானத்தில் வந்து சேர்ந்து விட்டார்கள். கூறுங்கள். நீங்கள் எல்லோரும் அன்பெனும் கயிறால் கட்டுண்டு வந்து சேர்ந்து விட்டீர்கள் அல்லவா? இந்த பரமாத்ம அன்பு உள்ளத்திற்கு சுகம் கொடுப்பதாகும். நல்லது. யார் முதன் முறையாக வந்திருக்கிறார்களோ அவர்கள் கை உயர்த்துங்கள். கையை அசைத்துக் காட்டுங்கள். நன்றாக வரட்டும்.

இனி, பாப்தாதா ஹோம் ஒர்க் கொடுத்திருந்தார். ஹோம் ஒர்க் நினைவிருக்கிறதா? பாப்தாதாவிடம் அநேக விதமான ரிசல்ட் வந்திருக்கிறது ஆனால் இனி என்ன செய்ய வேண்டும்? எல்லோரிடமிருந்தும் ரிசல்ட் வரவில்லை. சிலரிடமிருந்து, இத்தனை சதவிகிதம் என்று வந்திருக் கிறது. பாப்தாதா என்ன விரும்புகின்றார்? பாப்தாதா இதைத்தான் விரும்புகின்றார். எல்லோரும் பூஜைக்குரிய

ஆத்மாக்கள். ஆகவே பூஜைக்குரிய ஆத்மாக்களின் விஷே லக்ஷணம் ஆசி வழங்குவது தான். நீங்கள் பூஜைக்குரிய ஆத்மாக்கள் என்பதை நீங்கள் எல்லோரும் அறிவீர்கள் தானே? ஆகவே ஆசி வழங்க வேண்டும். ஆசி வழங்குவது என்றால், ஆசி பெறுவதும் அதில் அடக்கம் என்பது புரியக் கூடியது தான். யார் ஆசி வழங்குகிறார்களோ, யாருக்கு வழங்குகிறார்களோ, அவர்களிடமிருந்து ஆசி உள்ளத்திலிருந்து எழத்தான் செய்யும். ஆகவே பூஜைக்குரிய ஆத்மாக்களாகிய உங்களுடைய உண்மையான சம்ஸ்காரம். ஆசி வழங்குவது. அநாதி சம்ஸ்காரம் ஆசி வழங்குவது தான். எப்போது உங்களுடைய ஜட ஸித்திரங்களும் கூட ஆசி வழங்குகிறது என்றால், சைத்தன்ய (இயங்கும்) பூஜைக்குரிய ஆத்மாக்களாகிய நீங்கள் ஆசி வழங்குவது என்பது இயற்கையாகவே உள்ள சம்ஸ்காரமாகும். இதனை நீங்கள் எனது சம்ஸ்காரம் என்று கூறலாம். இடைப்பட்ட துவாபரயுக சம்ஸ்காரம் இயல்பானதாக ஆகி விட்டது. சுபாவமாகி விட்டது. உண்மையில் இந்த சம்ஸ்காரம் ஆசி வழங்குவதற்கான இயற்கையான சுபாவம். எப்போது யாருக்காவது ஆசி கொடுத்தால், அந்த ஆத்மா எவ்வளவு மகிழ்ச்சியடைகிறது அந்த குஷி நிறைந்த வாயுமண்டலம் எவ்வளவு சுகமளிக்கக்கூடியதாக ஆகி விடுகிறது. ஆகவே யாரெல்லாம் செய்தார்களோ, அவர்கள் எல்லோருக்கும். இப்போது இங்கு வந்திருந்தாலும் சரி, வரவில்லையானாலும் சரி, அவர்கள் என் எதிரிலேயே இருக்கிறார்கள். ஆதலால் அவர்களுக்கு பாப்தாதா வாழ்த்துக்களை அளிக்கின்றார். செய்திருக்கிறார்கள். மேலும் தன்னுடைய இயற்கையான சுபாவமாக்கிக் கொண்டே, இப்போதும் செய்தும், செய்வித்துக் கொண்டும் இருக்க வேண்டும். மேலும் சிலர் கொஞ்சம் செய்திருக்கலாம். செய்யாமலும் இருக்காலம். இவர்கள் எல்லோரும் தங்களை சதா பூஜ்ய ஆத்மா, நான் தந்தையின் ஸ்ரீமத்படி நடக்கக்கூடிய விசேஷ ஆத்மா, இந்த நினைவை அடிக்கடி தன்னுடைய நினைவிலும் (ஸ்மிருதியில்) சொரூபத்திலும் கொண்டு வர வேண்டும். ஏனென்றால், ஒவ்வொருவரிடமிருந்தும், எப்போது நீங்கள் என்னவாக ஆகப் போகிறீர்கள் என்று கேட்டால், எல்லோரும் கூறுகிறார்கள் நாங்கள் லக்ஷிமி-நாராயனார் ஆகப் போகிறோம் என்று. ராம்-சீதை என்பதற்கு யாரும் கை உ.யர்த்து வது இல்லை. எப்போது லக்ஷியம் 16-கலையாக இருக்கிறதோ, அப்போது 16-கலை என்றால் பரம பூஜ்ய, பரம பூஜ்ய ஆத்மாவின் கடமை ஆசி வழங்குவது. இந்த சம்ஸ்காரத்தை

இங்குமங்கும் சென்று கொண்டிருக்கும்போதும், எளிதாகவும், சதா காலத்திற்குமாக செய்து விடுங்கள். பூஜைக்குரியவர்களாகத்தான் இருக்கிறீர்கள். 16-கலை உடையவர்களாகவும் இருக்கிறீர்கள். லக்ஷியம் இது தானே.

பாப்தாதா மகிழ்ச்சியடைகின்றார். யாரெல்லாம் செய்தார்களோ, அவர்கள் எல்லோருடைய நெற்றியிலும் வெற்றித் திலகம் தந்தையிடமிருந்து இட்டுக் கொண்டு விட்டனர். இத்தோடு சேவை சமாச்சாரமும் கூட எல்லோரிடமிருந்தும் ஒவ்வொரு வர்க்கத்திடமிருந்தும் சென்டர்களிலிருந்தும் பாப்தாதாவிடம் வந்து சேர்ந்து விட்டது. மிக நல்ல ரிசல்ட்டுடன் வந்து சேர்ந்திருக்கிறது. முதலாவது ஹோம் ஓர்க் செய்ததற்கு வாழ்த்துக்கள். அடுத்து செய்த சேவைக்கும் வாழ்த்துக்கள். பதினாயிரம் மடங்கு. தந்தை பார்த்தார். கிராமங்கள் தோறும் பாபா அறிமுகச் செய்தியினை மிக நல்ல முறையில் மெஜாரிட்டி பகுதிகளில் செய்திருக்கிறார்கள், இந்த சேவையும் கூட இரக்கமனதுடன், ஊக்கம், உற்சாகத்துடன் சேவை செய்த காரணத்தினால் நல்ல ரிசல்ட் கிடைத்திருக்கிறது. யாரெல்லாம், கஷ்டப்படாமல் ஆனால் தந்தையின் மீதுள்ள அன்பின் காரணமாக, செய்தி கொடுப்பதிலும் அன்போடு இவ்வாறு அன்பு நிறைந்த சேவை செய்திருக்கிறார்கள். ஆதலால் தந்தையிடமிருந்து கூட நூறு மடங்கு, ஆயிரம் மடங்கு கை மாறாக எல்லா சேவாதாரிகளுக்கும் தானாகவே பாக்கியமாக கிடைத்திருக்கிறது. இன்னும் கிடைக்கும். எல்லோருமே, தன்னுடைய அன்பான தாதியை மிக அன்புடன் நினைவு செய்த வாறே, தாதியின் அன்புக்கு கைமாறு கொடுக்கின்றார்கள். இந்த அன்பின் நறுமணம் பாப்தாதாவிடம் மிக நல்ல முறையில் வந்து சேர்ந்து விட்டது. மேலும் இப்போதும் கூட. எந்தக் காரியங்கள் மதுபனில் நடந்து கொண்டிருக்கிறதோ, வெளிநாட்டினரானாலும், பாரதமானாலும் அந்த எல்லா காரியங்களும் கூட. ஒருவருக்கொருவர் செய்யும் சகயோகம், மரியாதையின் ஆதாரத்தில் மிக நன்றாகவே வெற்றியடைந்திருக்கிறது. இன்னும் இனி மேலும் நடைபெறக்கூடிய காரியங்களுக்கும் வெற்றி என்பது நிச்சயிக்கப்பட்ட ஒன்றாகவே இருக்கிறது. ஏனெனில் வெற்றி என்பது உங்கள் கழுத்து மாலை. தந்தையின் கழுத்து மாலையாக இருப்பதோடு தந்தை ஏற்கனவே நினைவூட்டியிருப்பது போல, ஒருபோதும் தோல்வி என்பது அடையக்

கூடாது. ஏனெனில், நீங்கள் தந்தையின் கழுத்து மாலை. ஆகவே கழுத்தில் உள்ள மாலை ஒருபோதும் தோல்வி அடையாது மாலை ஆக வேண்டுமா? அல்லது தோல்வி அடையலாமா? இல்லையல்லவா? மாலை ஆவது தான் நல்லதல்லவா? ஆகவே ஒருபோதும் தோல்வி அடையக் கூடாது. தோல்வி அடையக்கூடியவர்களோ, அநேக கோடி ஆத்மாக்கள் இருக்கின்றனர். நீங்கள் மாலையாகி கழுத்தில் அணியப்பட்டு விட்டவர்கள். அப்படித்தானே! ஆதலால் சங்கல்பம் செய்யுங்கள். தந்தையின் அன்பில் எத்தனை விதமான மாயைப் புயல் வீசினாலும், மாஸ்டர் சர்வ சக்திவான் ஆத்மாக்களின் முன்னால் புயலும் கூட காணிக்கையாகி விடும். இந்த வரதானத்தை சதா நினைவில் வைத்திருங்கள். எவ்வளவு உயரமான மலையாக இருந்தாலும், மலை மாறுதலடைந்து பஞ்சாக ஆகி விடும். இப்போது நேரம் அருகாமையில் நெருங்கிக் கொண்டிருக்கும் கணக்குப்படி வரதானங்களை ஒவ்வொரு சமயமும் அனுபவத்தில் கொண்டு வாருங்கள். அனுபவத்தின் அத்தாரிட்டி ஆகுங்கள்.

எப்போது வேண்டுமோ, அப்போது அசரீரி ஆவதற்கு பரிஷ்தா சொரூபம் அடைவதற்கு பயிற்சி செய்து கொண்டேயிருங்கள். இப்போதைக்கிப்போது பிராமணன், இப்போதைக்கிப்போது பரிஷ்தா, உடனே அசரீரி. இங்குமங்கும் சென்று கொண்டிருக்கும்போதும் காரியங்கள் செய்து கொண்டிருக்கும்போதும் கூட, ஒரு நிமிடம், இரண்டு நிமிடம் நேரம் எடுத்துக் கொண்டு அப்பியாசம் செய்யுங்கள். சோதித்துப் பார்க்கவும் வேண்டும். என்ன நினைத்தோமோ, அதே சொரூபத்தை அனுபவம் செய்தோமா? நன்று.

நாலா பக்கங்களிலுமுள்ள சிரேஷ்ட சுவமான்தாரி, சதா தன்னை பரம பூஜ்ய மற்றும் மூதாதையர்கள் என்று அனுபவம் செய்யக்கூடிய சதா தன்னை, ஒவ்வொரு பாடத்திலும் (சப்ஜெக்ட்) அனுபவ சொரூபமாக ஆகக்கூடிய, சதா தந்தையின் மன சிம்மாசனத்திற்கு அதிகாரி, பிருகுட்டி (இரு புருவ மத்தி) சிம்மாசனத்தின் அதிகாரி, சதா சிரேஷ்ட ஸ்திதியின் அனுபவத்தில் நிலைத்து இருக்கின்ற நாலா பக்கமுமுள்ள எல்லா குழந்தைகளுக்கும் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்தே.

எல்லா பக்கமிருந்தும், எல்லோருடைய கடிதங்கள், இ.மெயில் செய்திகள் எல்லாம் பாப்தாதாவிடம் வந்து சேர்ந்து விட்டது. ஆகவே சேவை செய்ததனால் பலனும், பலமும் (சக்தி) எல்லா சேவாதாரிகளுக்கும் கிடைத்து விட்டது. இன்னும் கிடைத்துக் கொண்டேயிருக்கும். அன்புக்கு பாத்திரமான கடிதங்கள் நிறைய வருகின்றன. சுயமாற்றம் பற்றிய கடிதங்களும் நிறைய வந்திருக்கின்றன. சுயமாற்ற சக்தியுள்ளவர்களுக்கு, பாப்தாதா அமர்பவ என்னும் வரதானம் அளிக்கின்றார். சேவாதாரிகளுக்கு யாரெல்லாம் அதிகமாக ஸ்ரீமத்படி நடந்தார்களோ, அம்மாதிரி கடைப்பிடித்த குழந்தைகளுக்கு, சதா கட்டளைக்குக் கீழ்ப்படிந்து நடக்கின்ற குழந்தைகளே ஆஹா! என்ற வரதானம் அளிக்கின்றார். மேலும் அன்புள்ளவர்களுக்கு மிகமிக அன்புடன் உள்ளத்தில் அமர்த்தியிருக்கும் மிகவும் அன்பான மற்றும் பெரும் மாயை விக்னங்களைக் கடந்திருக்கின்றவர்களுக்கும் இந்த வரதானம் அளிக்கின்றார். நன்று.

**சேவைக்கான வாய்ப்பு -கர்நாடக மண்டலம்:** எல்லோருடைய கைகளிலும் கொடிகள் இருக்கின்றன. எல்லா கொடிகளும் மிக நன்றாகவே அசைகின்றன. நன்றாக இருக்கிறது. கர்நாடகக்காரர்கள், மிக நல்ல புரோகிராம் (சொர்ண கர்நாடகம்) செய்தீர்களல்லவா! ஆகவே இந்த புரோகிராம் கூட பாப்தாதா வெவ்வேறு இடங்களில் பார்த்தார், கேள்விப்பட்டார். மேலும் மெஜாரிட்டி மிக நல்ல விதமாக ஊக்கம், உற்சாகத்துடன் கிராமம், கிராமமாக பாப்தாதாவின் அறிமுகத்தைக் கொடுத்தார்கள். ஆதலால் பாப்தாதா கர்நாடக சேவாதாரிகளுக்கு நல்ல சேவைக்கும், ஸ்ரீமத் பாலனை செய்ததற்கும் வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றார். வாழ்த்துக்கள்! வாழ்த்துக்கள்! நன்று. சேவையில் வாய்ப்பை பயன்படுத்திக் கொண்டவர்களும் திருப்தியாயிருந்தார்கள். திருப்திப்படுத்தினார்கள். இதை விட தங்களுடைய சேமிப்புக் கணக்கை மிக நன்றாக சேமித்தார்கள். கர்நாடகம் எண்ணிக்கையில் குறைந்ததல்ல. எண்ணிகை நன்றாக இருக்கிறது. இப்போது எப்படி கூட்டாகச் சேர்ந்து நிர்விக்ன சேவை செய்தீர்களோ மேலும் மரியாதையுடன் நடநது கொண்டீர்களோ, அதே போல இனி மேலும் கூட கர்நாடகம் கூட்டாக மிக நல்ல அற்புதம் செய்து காட்ட முடியும். பாப்தாதாவிடம் வரை படம் உள்ளது. அற்புதம் செய்ய முடியும். ஆதலால் தான் கூட்டு சக்தியின் பிரபாவத்தை காண்பிக்க வேண்டும்.

இப்போது நன்றாகவே செய்தீர்கள். பரிவாரம் முழுவதுமே குஷியடைகின்றனர். நல்லது. பாப்தாதா கர்நாடகக்காரர்களுக்கு வேலை கொடுத்தார், நினைவிருக்கிறதா? என்ன கொடுத்தார்? வாரிசு, குவாலிட்டி தயார் செய்வதற்காக. நினைவுக்கு வருகிறதா? சேவையில் நம்பர் வாங்கி விட்டீர்கள், நல்லது தான். இப்போது நம்பர்-1 ஆகுமளவுக்கு வாரிசு குழந்தைகளை தயார் செய்ய வேண்டும். யார் ஏற்கனவே நிமித்தமாகியிருக்கிறார்களோ அவர்கள் இருக்கிறார்கள். இன்னும் புதிது புதிதாக தயார் செய்ய வேண்டும். பாப்தாதா எல்லா குழந்தைகளையும் பார்த்து குஷியடைகின்றார். கர்நாடகம் ஆரம்பத்திலிருந்து நல்ல, நல்ல வாரிசுகளைக் கொண்டு வந்தார்கள். இன்னும் கூட இனி தயார் செய்வார்கள். இருதய புஷ்பா தாதிக்கு (ரிடர்ன்) கைமாறு செய்வீர்களல்லவா? அட்வான்ஸ் பார்ட்டியில் அவரும் கூட எமர்ஜ் ஆகிறாரல்லவா? எல்லோரும் செய்தி கேட்கிறார்கள். அவ்வளவு நல்ல நல்ல வாரிசுகளை உருவாக்கியிருந்தார் ஆனால் நம்பர்-1 வாரிசு தயாரிப்பதில் நம்பர்-1 ஆக வேண்டும். முதலிலேயே இருக்கின்றீர்கள். தைரியம் இருக்கிறதா? டீச்சர்களுக்கு தைரியம் இருக்கிறதா? கை உயர்த்துங்கள். தைரியமிருக்கிறதா? எல்லோரிடமும் தைரியம் இருக்கிறது. அதிக தைரியம் இருக்கிறது. அப்படியானால் தந்தையின் உதவி நிறையவே இருக்கிறது. நல்லது. சேவையும் நன்றாகச் செய்திருக்கிறீர்கள். முதல் டர்ன் கிடைத்திருக்கிறது. முதல் தடவையில் எல்லா விஷயத்திலும் வேகம், தீவிர புருஷாரத்தம் நல்லது. எல்லோரும் மனப்பூர்வமாக சேவை செய்தார்கள் அல்லவா? களைப்பு ஏற்படவில்லை. களைத்திருக்கிறீர்களா! களைப்படையாத சேவை செய்தீர்கள். நல்லது.

**டபுள் விதேஷி (வெளி நாட்டவர்) 60-தேசங்களிலிருந்து 600-பேர் வந்திருக்கிறார்கள்:** இப்போது பாப்தாதா பார்த்தார். வெளிநாடுகளிலும் கூட சேவை செய்வதற்கான ஊக்கம் அதிகரித்துக் கொண்டிருக்கிறது. முதலில் கூறினார்கள்: வெளிநாட்டில் மாணவர்கள் ஆவது என்றால் மிகவும் கஷ்டமானது என்று. இப்போது எப்படி? இப்போது கஷ்டமாயிருக்கிறதா? எளிதாக இருக்கிறதா? எளிதா? பாப்தாதாவுக்கு மிகவும் பிடித்தமாக இருந்தது. தங்களுக்குள் ஒன்றாகச் சேர்ந்து நிர்விக்னமாக ஆக்குவதற்கான திட்டம் வகுத்தார்கள். மேலும் நிர்விக்னமாக ஆக்குவதற்கு திட்டம் மிகவும் விதிபூர்வமாக

நிர்விக்னமாகச் செய்தார்கள். இதற்கு மிகவும் மிகுந்த வாழ்த்துக்கள். நூறு மடங்கு வாழ்த்துக்கள். எந்த ஒரு புரோகிராம் செய்திருந்தாலும், அது மிகவும் வெற்றிகரமாகவே நடந்தது. ஆதலால் சதா வெற்றிக்கு வாழ்த்துக்கள். மேலும் சதா வாழ்த்துக்களுக்குப் பாத்திரமாயிருப்பீர்கள். பாப்தாதாவுக்கு சேவைக்கான பிரத்யக்ஷ பலனைப் பார்த்து குஷியாகயிருக்கிறது. இவர் "கால் ஆஃப் டைம்” நிகழ்ச்சியில் வந்தாரல்லவா! யாரெல்லாம் கால் ஆஃப் டைம் புரோகிராமில் வந்தார்களோ, அவர்கள் கை உயர்த்துங்கள். நன்று. மிக நன்றாகச் செய்தீர்கள். மிகவும் கெட்டிக்காரர்கள். முதலிலேயே வந்து விட்டார்கள். நன்றாகவே செய்தார்கள். தந்தைக்கும் மிகவும் அன்பானவர்கள். மேலும் உங்களுக்கும் கூட தந்தையிடம் மிகுந்த அன்பு இருக்கிறது. ஆகவே தான் வந்து சேர்ந்து விட்டீர்கள். ஆதலால் எல்லா பிராமண பரிவாரத்தினரிடமிருந்தும், தந்தையிடமிருந்தும் கூட உங்கள் ஒவ்வொரு வருக்கும் நூறு மடங்கு வாழ்த்துக்கள்! வாழ்த்துக்கள்! வாழ்த்துக்கள்! நல்லது. இவர்கள் எல்லோரும் மிக நல்ல வெளிநாட்டு சேவைக்கான மைக் மற்றும் குழந்தைகள். இரண்டு பார்ட்டையும் செய்வார்கள். மேலும் மைக் மற்றும் லைட் ஆகி சேவையில் அதிக விருத்தி அடைவதற்கு பாத்திரமாக இருப்பார்கள். ஆதலால் எல்லா பிராமணர்களின் சார்பாக உங்கள் அனைவருக்கும் வாழ்த்துக்கள்! நல்லது. இந்த ஈஸ்வரிய ஞானம் பற்றிய விளம்பரம் இப்போது வெளிநாடுகளிலும் கூட நிமித்தமாகி செய்து கொண்டிருக்கிறீர்கள். இப்போது அங்கெல்லாம் கூட சப்தம் பரவிக் கொண்டிருக்கிறது. நல்ல விதமாக பரவிக் கொண்டிருக்கிறது. மேலும் டிராமாபடி உங்கள் எல்லோர் சார்பிலும், ந்தையின் அன்பான தாதியின் நிமித்தமாகவும் கூட, நாலா பக்கமுமுள்ள பிராமண பரிவாரத்தினர் சார்பிலும் தந்தையின் புகழ் நல்ல விதமாக பிரத்யக்ஷம் ஆகி விட்டது. தாதி பெயரை பிரத்யக்ஷம் செய்தார். பெயர் மற்றும் சேவை இரண்டும் நடத்தினார் என்றால், தாதி மிக நன்றாக பெயர் பரவச்செய்தார். இனி அந்த ஆத்மாக்களை தங்களைச் சார்ந்தவர்களாக ஆக்கும் வேலை உங்களுடையது. பாப்தாதா பார்த்தார். இப்போது எப்படி ஒவ்வொரு ஆண்டும் விருத்தி செய்து பாபா முன்னால் கொண்டு வருகிறீர்களோ. இதே போலவே, இனிமேலும் கூட மிக அதிகமாக விருத்தி செய்து கொண்டேயிருப்பீர்கள். தந்தை மற்றும் தங்களுடைய பிரத்யக்ஷம் செய்து கொண்டேயிருப்பீர்கள். நல்ல குரூப். எல்லோரும் நிச்சய புத்தி

மற்றும் ஈஸ்வரிய நஷாவில் (போதையில்) இருப்பவர்கள், பறப்பவர்கள். நடப்பவர்களாக ஆகக்கூடாது. பறப்பவர்கள். நடப்பவர்கள் குறித்த நேரத்திற்குள் சென்றடைய முடியாது. பறப்பவர்கள் ஆக வேண்டும். டபுள் லைட், மற்றபடி பாப்தாதாவுக்கு குஷி தான். எதைச் செய்தீர்களோ, அது வெற்றி அடைந்து விட்டது. ஆகவே நீங்கள் எல்லோரும் என்னவாக ஆகி விட்டீர்கள் -வெற்றி நட்சத்திரங்கள். நல்லது. மிகவும் நன்று.

அரசியல், மகளிர் மற்றும் செக்யூரிட்டி மூன்று பிரிவினர் வந்திருக்கிறார்கள். பாருங்கள். எவ்வளவு ஊக்கம், உற்சாகத்தோடு எல்லோரும் அவரவர் வார்க்கத்தினர் சேவை செய்கிறார்கள். மூன்று பேரின் ரிசல்டும் நன்றாக இருக்கிறது. அரசு வரைக்கும் செய்தி நல்ல விதமாக பரவியிருக்கிறது. சேவை செய்ததால் தானே செய்தி பரவியிருக்கிறது! ஆகவே உங்களுடைய வர்க்கம் நல்ல விதமாக திட்டம் போட்டு தந்தையின் பிரத்யக்ஷம் என்ற கொடியினை நன்றாக பறக்கச் செய்திருக்கிறீர்கள். ஆரம்பத்திலோ, மிக கஷ்டத்துடன் வந்து கொண்டிருந்தனர். இப்போது அவர்களே கூறுகின்றனர். நாங்களும் வர விரும்புகிறோம் என்று, வித்தியாசம் இருக்கிறதல்லவா? இப்போது அவர்களே கூறுகின்றார்கள். உங்களுடைய சேவை நல்ல வெற்றி அடைந்து கொண்டிருக்கிறது என்று. ஆகவே இப்போது கண்கள் திறக்க ஆரம்பித்து விட்டது. படிப்படியாக கண்கள் திறந்து விடும். இதே போலவே எல்லா வர்க்கத்தைச் சார்ந்தவர்களும், தங்கள், தங்களுடைய வர்க்க சேவை நன்றாகவே செய்து கொண்டிருக்கிறார்கள். மகளிர் வர்க்கமும், செய்து கொண்டிருக்கிறார்கள். செக்யூரிட்டி வர்க்கமும் செய்து கொண்டிருக்கிறார்கள். அரசியல் வர்க்கமும் செய்து கொண்டிருக்கிறார்கள் ஆனால் பாப்தாதா பார்த்தார் நாளுக்கு நாள் வர்க்கத்தின் கணக்குப்படி சேவை செய்வதில் ஊக்கம், உற்சாகம் அதிகரித்துக் கொண்டிருக்கிறது. வருவதற்குத் தயாராக இருப்பவர்களை, இப்போது வேண்டாம் என்று தடுக்க வேண்டியதாயிருக்கிறது. ஆரம்பத்தில் வரவழைப்பதற்கு அதிக முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டியதாக இருந்தது. இப்போது எண்ணிக்கையில் அதிகம் பேர் வருகிறார்கள். எண்ணிக்கையிலும், விசேஷத்திலும் அதிகம் பேர் வருகிறார்கள் ஆனால் விசேஷ பிரமுகர்கள் வருகையும் ஆரம்பமாகி விட்டது. ஆதலால் மூன்று

வார்க்கத்தைச் சார்ந்த சேவாதாரிகளுக்கு பாப்தாதாவின் தரப்பிலிருந்து பிராமண பரிவாரத்தின் தரப்பிலிருந்து வாழ்த்துக்கள்! வாழ்த்துக்கள்! வாழ்த்துக்கள்! உங்களுடைய தாதி சங்கமத்தில் இருக்கின்றார். மேலும் சரீரம் அட்வான்ஸ் பார்ட்டி தரப்பில் இருக்கிறது.

**டிரெயினிங் டீச்சர்ஸ் மற்றும் இந்தூர், நடியாட் ஹாஸ்டல் குமாரிகளுடன்:** பாபா தான் எங்கள் உலகம் என்று எழுதப்பட்ட பேனரை காண்பிக்கிறார்கள், நல்லது. சுலோகன் மிக நன்றாக எழுதப்பட்டிருக்கிறது. இதே போல, தினமும் அமிர்த வேளையில் இதை நினைவு செய்ய வேண்டும். எல்லா குமாரிகளும் இந்தூரிலிருந்து வந்தவர்களானாலும், மதுபன் டிரெயினிங்கில் வந்திருப்பவர்களானாலும் அல்லது நடியாட் ஹாஸ்டல் குமாரிகளானாலும், எல்லோரும் அமிர்தவேளையில் இந்த சுலோகனை நினைவு செய்ய வேண்டும். ஏனென்றால் பாபா தான் நமது உலகம். ஆகவே எல்லா ஆகர்ஷணங்கள், முழு உள்ளத்தின் அன்பு எங்கே போகும் பாபாவிடம். கண்களில் பாபா மற்றும் முகத்தில் சதா தந்தையின் நஷா காணப்படும். சம்மந்தம், தொடர்பில் சதா நேரமும் பாபாவிடம் சர்வ சம்மந்தம் இணைந்திருக்கும். அப்போது என்ன ஆகும்? ஒரு பிரச்சினையும் இருக்காது. (நோ பிராபளம்) தாதியின் இரண்டு வார்த்தைகள் நினைவுக்கு வருகிறதா? தாதி அடிக்கடி கூறினார்: நிரவிக்னம் மற்றும் நிர்விகல்பம். தாதியிடம் அன்பிருக்கிறதல்லவா? எல்லா குமாரிகளுக்கும் தாதியிடம் அன்பிருக்கிறது. அதிக அன்பு இருக்கிறது. ஆகவே யார் அன்பானவராக இருக்கின்றாரோ, அவருடைய வார்த்தைகள் சதா காதுகளில் ஒலித்துக் கொண்டேயிருக்கும். ஆகவே சதா புத்தியிலும், காதுகளிலும் இந்த வார்த்தைகள் வந்து கொண்டேயிருக்கட்டும். நிர்விக்ன, நிர்விகல்ப, ஆகியே தீர வேண்டும். (விக்னமற்ற, எதிர்மறையற்ற) ஆவீர்கள் அல்லவா? ஆவிர்கள். ஆவீர்கள். நிச்சயமாக. ஏனென்றால் பாப்தாதாவுக்கு குமாரிகள் பக்கம் நிறைய கவனம் இருக்கிறது. மேலும் குமாரிகள் அதிருஷ்டசாலிகளும் கூட. சகோதரர்கள், யார் பாண்டவ சேனையில் இருக்கிறார்கள் அல்லவா, அவர்களும் புன்முறுவல் செய்கின்றனர். அவர்கள் கூறுகின்றார்கள் குமாரிகள் சீக்கிரமாகவே தாதிகள் ஆகி விடுகிறார்கள். பாண்டவர் களை தாதா என்று கூறுவதில்லை. சகோதரர் என்றே அழைக்கின்றனர். ஆகவே பாருங்கள். உங்களுடைய அதிருஷ்டம்

எவ்வளவு சிறந்ததாக இருக்கிறது! வந்ததுமே அதிருஷ்டத்தை அடைந்து விடுகிறீர்கள். பாப்தாதாவின் ஆசிரிய பீடம் (சிம்மாசனம்) கிடைத்து விடுகிறது. முரளியின் ஆசனம், குருவின் ஆசனமாகும். ஆகவே தான் பாப்தாதா டீச்சர்களை குருபாயி என்று கூறுகின்றார். குருபாயி என்பதை நினைவில் வைத்திருங்கள். குருவின் ஆசனம் கிடைக்கிறது. நல்லது. இந்த டிரெயினிங்கிற்கு என்ன விதி வைத்திருக்கிறார்களோ, இதன் மூலமாக நல்ல ரிசல்ட் கிடைக்கும் ஆனால் நீங்கள் எல்லோரும் நீங்களாகவே உங்களுடைய சார்ட்டை மதுபன் அனுப்பிக் கொண்டேயிருக்க வேண்டும். ஓ.கே. என்று மட்டும் எழுதினால் போதுமானது. அதிகமாக எழுத வேண்டாம். ஒருக்கால், ஏதாவது காரணம் இருந்தால் ஏதாவது கொஞ்ச நஞ்சம் பலவீனமிருந்தால், ஓ.கே. (O.K.) என்பதில் கே (K) என்பதிற்கிடையில் கோடிட வேண்டும். (அன்டர்லைன்) மற்றபடி அதிகமாக கடிதம் எழுத வேண்டாம். போதும். நல்லது. டீச்சர்களும் கூட அதிக முயற்சி எடுத்துக் கொள்கிறார்கள். பாப்தாதா பார்த்துக் கொண்டிருக்கின்றார். எந்த ஒரு டிபாாட்மெண்டிலும் கஷ்டப்படுவதில்லை. இதுவரை இல்லை ஆனால் இப்போது எல்லோரும் கஷ்டப்பட்டு முயற்சி செய்கிறார்கள். இப்போது ஒரு விஷயம் வேண்டும். சொல்லலாமா? ஒரு விஷயம் என்னவென்றால், சேவையிலும், ஒவ்வொரு காரியத்திலும், ஒவ்வொரு டிபார்ட்மெண்டிலும், ஒவ்வொரு வர்க்கத்திலும், ஒவ்வொரு சென்டரிலும், ஒவ்வொரு ஜோனிலும், சேவை அதிகமாகிக் கொண்டேயிருக்கிறது ஆனால் இப்போது அவசியமாக இருப்பது ஒற்றுமை மற்றும் சிக்கனம். இந்த இரண்டு விஷயங்களில் மரியாதை கொடுக்க வேண்டும். மரியாதை பெற வேண்டும். அதாவது ஒற்றுமை, ஒவ்வொருவருடைய சகயோகம் (உதவி) என்ற விரல் இருக்கத்தான் செய்கிறது. மகாரதியாக இருந்தாலும், கொஞ்சம் புருஷார்த்திகளாக இருந்தாலும், ஒவ்வொருவருடைய சகயோகமும் இருக்கிறது. ஒருக்கால் ஸ்தூலமான சேவை செய்பவர்களுடைய உதவி கிடைக்கவில்லையென்றால், நீங்கள் எப்படி சேவை செய்ய முடியும்? நேரப்படி எப்படி புறப்பட முடியும்? நேரப்படி எப்படி சேவை செய்ய முடியும்? சரிதானா? ஒவ்வொருவரும் விசேஷமானவர்கள் தான். மரியாதைக்குரிய அதிகாரிகள். ஆதலால் சிறியவர், பெரியவர் ஒவ்வொருவருக்கும் மரியாதை கொடுக்க வேண்டும். மரியாதை பெற வேண்டும். இரண்டு வார்த்தைகள் நினைவில் இருக்க வேண்டும்.

ஒற்றுமை மற்றும் சிக்கனம் மற்றபடி எல்லாம் நன்றாகவே இருக்கிறது. (டிரெயினிங்) பயிற்சி அளிக்கக்கூடிய டீச்சர்ஸ்) மிகவும் நல்லது. ஊக்கம், உற்சாகத்தில் கொண்டு வந்து விட்டீர்கள். இதற்கு வாழ்த்துக்கள். நன்று. பாப்தாதாவோ ஒவ்வொருவரையும் பார்த்து, ஒவ்வொருவருடைய விசேஷத்தையும் பார்த்து மகிழ்ச்சியடைகின்றார்.

கர்நாடக மாதாக்களுடன்: மாதாக்கள் நன்றாக இருக்கிறீர்களா? மாதாக்கள் கை உயர்த்துங்கள். நிறைய பேர் இருக்கிறார்கள். கர்நாடக மாதாக்கள் எழுந்திருங்கள். நல்லது. மாதாக்களின் எண்ணிக்கை நன்றாக இருக்கிறது. இனி கர்நாடக மாதாக்கள் என்ன அற்புதம் செய்து காட்டப்போகிறீர்கள்? ஏதாவது புதுமையான அற்புதம் செய்ய வேண்டும். சேவை செய்கிறீர்கள் ஆனால் இப்போது யாராவது புதிய மாதாக்கள் தங்களுடைய நடத்தையை பிரத்யக்ஷம் செய்ய வேண்டும். மாதாக்களுக்கு பாப்தாதாவின் வரதானம் உள்ளது. எந்த சென்டரில் மாதாக்கள் நிறைய பேர் இருக்கிறார்களோ, சென்டரில் சேவை செய்கிறார்களோ, அங்கே பண்டகசாலையும், பொக்கிஷ அறையும் நிறைந்திருக்கும். சம்பாதிக்காமல் இருக்கலாம் ஆனால் பெரிய மனசு உள்ளது. ஆகவே தான் மாதாக்களின் மகிமையை பாப்தாதா பாடுகின்றார். ஆதியில், ஆரம்பமானதிலிருந்து எப்போது சென்டர்கள் ஆரம்பிக்கப்பட்டதோ, எங்கே மாதாக்கள் இருந்தார்களோ, அங்கே ஒருபோதும் பண்டகசாலையும், பொக்கிஷ அறையும் காலியாக இருந்ததேயில்லை. ஆகவே தான் மாதாக்கள் என்றால் பாலனை செய்பவர்கள் இல்லையா? ஆகவே தான் புதுப்புது ஆத்மாக்களின் பாலனை மிக நன்றாக நடக்கிறது. நன்று.

கர்நாடக பாண்டவர்களுடன்: நல்லது. ஒவ்வொரு சென்டரிலும் பாண்டவர்களும் அவசியமாயிருக்கிறது. ஏனென்றால், பாண்டவர்கள் ஆல்ரவுண்டு சேவையில் உதவியாளர்களாக இருக்கிறார்கள். கடின உழைப்பானாலும், வெளியில் சென்று செய்தி பரப்ப வேண்டியிருந்தாலும் பாண்டவர்கள் உதவியாளர்களாக ஆகின்றார்கள். மேலும் பாண்டவர்கள் சென்டர் நடத்தவும், சென்டர் முன்னேற்றவும் நிமித்தமாகிறார்கள். பாண்டவர்களும் குறைந்தவர்கள் அல்ல. ஆதலால் இருக்கிறது. இதை சதுர்புஜ ரூபத்தில் காட்டியிருக்கிறார்கள். சதுர்புஜ

ரூபத்தில் ஒருவர் காட்டப்படவில்லை. இருவர் சேர்ந்திருக்கிறார்கள். மாதாக்கள் பாண்டவர்களை விட முன்னே இருக்கிறார்கள். மேலும் பாண்டவர்கள் மாதாக்களை விட முன்னே இருக்கிறார்கள். நன்றாக இருக்கிறது. கர்நாடகத்தில் பாண்டவர்களுக்கும் குறை இல்லை. மாதாக்களுக்கும் குறைவில்லை. மிக மிக நல்லவர்கள் இருக்கிறார்கள். ஜனக் குழந்தை (ஜானகி தாதி) கூறினார் அல்லவா? கர்நாடகத்தில் அதிகமாக வாரிசுகள் முதன் முதலில் தயாரானார்கள் என்று, இது சரி தான். இனி இவர்கள் அப்படிப்பட்ட வாரிசுகளைத் தயார் செய்ய வேண்டும். சரிதானா? ஊக்கம் இருக்கிறதா? ஆதலால் அடுத்த ஆண்டு ரிசல்ட் காண்பிப்பீர்கள் அல்லவா? எத்தனை வாரிசுகள் தயாராகியிருக்கிறார்கள் என்ற ரிசல்ட் வேண்டும். ரிசல்ட் சொன்ன பிறகு, பாப்தாதா அழைப்பார். முதலில் ரிசல்ட் பார்ப்பார். வர்க்கத்தைச் சார்ந்தவர்களும் முதலில் லிஸ்ட் தயார் செய்யுங்கள். எத்தனை வாரிசுகள் தயாராகியிருக்கிறார்கள் என்று. வெளிநாட்டினரும் இது போல தயார் செய்ய வேண்டும். புதுப்புது வாரிசுகள் தயார் செய்யுங்கள். இந்த லிஸ்ட்'ஐ அடுத்த ஆண்டு கொண்டு வர வேண்டும். பிறகு பாப்தாதா அழைப்பார். சரியா?

**டீச்சர்ஸ் எல்லோரும் எழுந்திருங்கள்:** டீச்சர்களும் ஒன்றும் குறைந்தவர்கள் அல்ல. பாப்தாதாவோ, எல்லா டீச்சர்களையும் குருபாயி என்று பார்க்கின்றார். குருபாயி என்பதன் பொருள் பாப்சமான். ஆகவே டீச்சர்களுக்கு, விசேஷமாக ஒவ்வொரு காரியத்தையும், பாப்சமானாக செய்யத்தான் வேண்டும். செய்வோம் அல்ல. செய்யத்தான் வேண்டும். ஏனென்றால் டீச்சர்ஸ் தந்தையின் தரப்பிலிருந்து மாணவர்களை முன்னேற்றுவதற்கு நிமித்தமாக சாகார் ரூபத்தில் பாப்சமானமாக இருக்கிறார்கள். டீச்சர்களுடைய ஒவ்வொரு கர்மமும் மாணவர்களுக்கு முன்பாக, பாப்சமானாக தென்பட வேண்டும். எல்லோருடைய வாயிலிருந்தும் இவர் தந்தையைப் பின் பற்றி பாபா சமானமாக ஆகியிருக்கின்றார் என்று கூற வேண்டும். அப்படியானால், உங்கள் லக்ஷியமும் அது தானே! இது தான் லக்ஷியம் என்றால் கழுத்தை அசையுங்கள். டீச்சர்ஸ் நிமித்தமான வர்கள். நிமித்த மானவர்களின் மீது பொறுப்பும் இருக்கிறதல்லவா? அப்படிச் செய்கிறீர்கள் ஆனால் இன்னும் அதிகமாகச் செய்ய வேண்டும். லக்ஷியம் மிக நன்றாக இருக்கிறது. மேலும் தந்தையும் கூட ஒவ்வொரு

டீச்சர் மீதும் சுபபாவனை வைத்திருக்கின்றார். அதாவது பாப்சமான் ஆகியே தீர வேண்டும். ஆதலால் என்ன செய்வீர்கள்? வேறு ஏதாவது வழியிருக்கிறதா? பாபா சமானம் ஆவதற்கு வேறு வழி ஏதுமில்லை. ஆதலால் பாருங்கள் இவர்கள் ஒரு சுலோகள் தயார் செய்திருக்கிறார்கள். பாபா தான் உலகம். நன்றாகத் தயார் செய்திருக்கிறார்கள் ஆனால் பேனர் துணியிலேயே இருந்து விடக்கூடாது. உள்ளத்தில் இருக்க வேண்டும். டீச்சர்கள் நல்லவர்கள். கூட்டம் (எண்ணிக்கை) மிகச் சிறப்பாக இருக்கிறது. இனி அற்புதம் செய்து காட்டுவார்கள். எப்படி இப்போது அற்புதம் செய்து காட்டினார்கள் அல்லவா? சொர்ண கர்நாடகா என்று நன்றாக பிரபலப்படுத்திக் காட்டினார்கள். நல்லது. இதுபோல இனியும் அற்புதம் நிகழ்த்திக் காட்டுவார்கள். தந்தைக்கு சுபபாவனை இருக்கிறது. சரிதானே! நன்று.

இப்போது எல்லோருடைய உள்ளத்திலும் என்ன ஆர்வம் உண்டாகிறது. ஒரே ஒரு ஆர்வம் தான். பாபா சமானமாக ஆகியே தீரவேண்டும் என்பது, இந்த ஆர்வம் இருக்கிறதா? பாண்டவர்கள் கை உயர்த்துங்கள். ஆகியே தீரவேண்டும். செய்வோம் செய்வோம்... வோம்.... வோம் என்று சொல்லிக் கொண்டே இருக்கக்கூடாது. பார்க்கலாம், செய்யலாம் என்று லாம், லாம் என்பதும் கூடாது; ஆகத்தான் வேண்டும். பக்காவாக? பக்கா? நல்லது. ஒவ்வொருவரும் ஓ.கே. என்ற கார்டு உங்கள் டீச்சரிடம் கொடுத்துக் கொண்டேயிருக்க வேண்டும். அதிகமாக ஒன்றும் எழுத வேண்டியதில்லை. போதும். ஒரு கார்டு எடுத்துக் கொள்ளுங்கள். அதில் ஓ.கே. எழுதுங்கள். அல்லது கோடிடுங்கள். போதும். இது செய்ய முடியுமல்லவா? நீண்ட கடிதம் அல்ல. நல்லது.

தாதிகளுடன்: ஜானகி தாதி பாப்தாதாவை அரவணைத்துக் கொண்டார். எல்லோரும் உங்களுக்குள் கை கோர்த்துக் கொள்ளுங்கள். ரெம்ப நல்லது. பரதாதி கல்கத்தா செல்கிறார். கல்கத்தா சென்டரை சுற்றிப் பார்க்கச் செல்கிறார். சுற்றி வரத்தான் வேண்டும். நீங்கள் எல்லோரும் மற்ற எல்லோருக்கும் தைரியம், ஆர்வம், உற்சாகம் உண்டாக்குவதற்கு நிமித்தமாகி இதே சேவையைச் செய்து வர வேண்டும. ஏனெனில் இன்றைய தைரியம் மற்றும் ஊக்கம், உற்சாகம் சதா நிலையாக இருக்க வேண்டும். இதற்கு அவசியமிருக்கிறது. ஆகவே, எல்லோரும் யார் நாடி வந்தாலும் அவருக்கு தைரியம், ஊக்கம், உற்சாகம் ஒரு

செகன்டாயிருந்தாலும் திருஷ்டி மூலமாக கிடைக்கச் செய்ய வேண்டும். ஏனென்றால் நீங்கள் எல்லோரும் மாஸ்டர் வள்ளல்கள். யார் வந்தாலும் சரி, ஏதாவது கொஞ்சமாவது எடுத்துச் செல்ல வேண்டும். சிநேகமாக இருக்கட்டும், சகயோகமாக இருக்கட்டும், தைரியமாக இருக்கட்டும், ஆர்வமாக இருக்கட்டும். இப்படி கொஞ்சம் உடன் எடுத்துச் செல்ல வேண்டும். ஏனெனில் வள்ளலின் குழந்தைகள். மற்றபடி எல்லொருக்கும் வேலை இருக்கிறது. எப்போதாவது யாரையாவது சந்தித்தால் யாராவது சந்திக்க வந்தால், வெறுங்கையோடு திரும்பிப் போகக்கூடாது. திருஷ்டி மூலமாக அன்பை எடுத்துச் செல்லட்டும். நேரமில்லை. பேச்சு பேசுவதற்கு அவசியமில்லை ஆனால் அவர் வந்தார் எப்படிச் சென்றார்? ஏதாவது எடுத்துச் சென்றாரா? ஒரு வினாடி திருஷ்டி மூலமாக உள்ளத்தின் அன்பு, ஒரு வினாடியில் எடுத்துச் செல்ல முடியும். இப்போது பிராமணர்களுக்கு தங்களுக்குன் சந்திக்க வேண்டும். இது நடக்க வேண்டும். அப்போது தான் உங்களுடைய வாயுமண்டலம் உலகில் அன்பு, சகயோகம், தைரியம், பரவச் செய்யும். எல்லா பிராமணர்களும் யாரெல்லாம் தங்களை பிரம்மா குமார், குமாரி என்கிறார்களோ அவர்கள் எல்லோரும் இதே போலவே சேவையில் தொடர்ந்து ஈடுபட வேண்டும். நேரமில்லை என்று யாரும் சொல்லக்கூடாது. ஒரு வினாடி கிடைத்ததல்லவா! ஒரு நிமிடம் கிடைத்ததல்லவா! பார்வை மூலம் நினைத்தது நிறைவேறியது என்று மகிமை இருக்கிறதல்லவா? ஆகவே இதே போலவே, எல்லோரும் கூட்டாகச் சேர்ந்து அலைகளைப் பரப்புங்கள். பிறகு நேரம் கொடுப்பதற்கான அவசியமே இருக்காது. நல்லது.

**டபுள் விதேஷி டீச்சர் சகோதரிகளுடன்:** நீங்கள் எல்லோரும் நல்ல விதமாக உங்கள் பார்ட்டை செய்திருக்கிறீர்கள். எல்லா புரோகிராமும் நல்லதிலும், மிக நல்லதாகவே இருந்தது. இதே போலவே ஒருவர் இன்னொருவருக்கு மரியாதை கொடுத்துக் கொண்டே சகயோகம் (பதவி) செய்து கொண்டே காரியங்கள் வெற்றிகரமாகச் செய்ய முடியும். வெற்றிக்கு வரதானம் ஏற்கனவே இருக்கவே இருக்கிறது. திமித்தமாகிறவர்களுக்கு விசேஷமாக பாப்தாதா தரப்பிலிருந்து எக்ஸ்ட்ரா (கூடுதலாக) உதவி கிடைக்கிறது. ஆகவே ஒவ்வொருவரும் தங்கள் தங்களுடைய நல்ல பார்ட்டை செய்தீர்கள். பாப்தாதாவுக்கு

குஷியாக இருக்கிறது. தங்களுடைய காரியத்தை முடித்து விட்டீர்கள். இனி இங்கே இருங்கள் அல்லது செல்லுங்கள். இதை நீங்கள் தான் முடிவு செய்ய வேண்டும். யாருக்கு டியுட்டி இருக்கிறதோ அவர்கள் தங்கலாம், மற்றவர்கள் நல்ல தைரியமாக இருந்தார்கள். மேலும் டிராமாபடி நீங்கள் நிமித்தமாக இருக்கிறீர்கள். ஏனென்றால் கன்ட்ரோலிங் பவர் உங்களிடம் இருக்கிறது. நடத்த முடியும். நல்லது. பாப்தாதாவுக்கு குஷியாக இருக்கிறது.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 30.11.2007 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# சத்யதா மற்றும் பவித்ரதா சக்தியை சொரூபத்தில் கொண்டு வந்து, பாலக் (குழந்தைப் பருவம்) மற்றும் மாலிக்பன் (எஜமான் என்ற அதிகாரி நிலை) இதை சமநிலையில் (பேலன்ஸ்) வைத்திருங்கள்!

இன்று சத்தியமான தந்தை, சத்தியமான ஆசிரியர், சத்குரு, நாலா பக்கங்களிலுமுள்ள தன்னுடைய சத்ய சொரூபம். சக்தி சொரூபமான குழந்தைகளைப் பார்க்கின்றார். ஏனெனில், சத்தியத்தின் சக்தி சர்வ சிரேஷ்டமானது. இந்த சத்தியத்தா சக்திக்கு ஆதாரமாயிருப்பது சம்பூரண பவித்திரத்தா. மனம், சொல், செயல், சம்மந்தம், தொடர்பு, சொப்பனத்திலும் கூட அபவித்திரதாவின் (தூய்மையில்லாத நிலை) பெயர், அடையாளம் கூட இருக்கக்கூடாது. இப்படிப்பட்ட பவித்திரத்தா பிரத்யக்ஷ சொரூபத்தில் எப்படி காணப்படும்? இப்படிப்பட்ட பவித்திர ஆத்மாவின் நடத்தையிலும், ஒவ்வொரு அடியிலும் பாபா சமானமாக கர்மயோகி. இப்படிப்பட்ட சத்தியவாதியாக. சத்தியமான தந்தையிடமிருந்து, இந்த சமயத்தில் நீங்கள் எல்லோரும் ஆகிக் கொண்டிருக்கிறீர்கள். உலகத்தில் அநேகர் தங்களை, சத்தியவாதி என்று கூறிக் கொள்கின்றனர். உண்மையையும் பேசு கிறார்கள் ஆனால் சம்பூரண பவித்திரத்தா (தூய்மை) தான் உண்மையான சத்தியத்தின் சக்தியாகும். இதனை இந்த சமயத்தில், இந்த சங்கமயுகத்தில் நீங்கள் எல்லோரும் அடைந்து கொண்டிருக் கிறீர்கள். இந்த சங்கமயுகத்தின் சிரேஷ்டமான பிராப்தி. சத்தியத்தாவின் சக்தி, பவித்திரத்தாவின் சக்தி. இந்த பிராப்தியை சத்யுகத்தில் நீங்கள் எல்லோரும் பிராமணனிலிருந்து, தேவதையாகி, ஆத்மா மற்றும் சரீரம் இரண்டும் பவித்திரமாகின்றன. முழு சிருஷ்டி சக்கரத்தில் வேறு எந்த ஒரு ஆத்மா மற்றும் சரீரம் என்ற இந்த இரண்டிலும் பவித்திரம் ஆவதில்லை. ஆத்மாவை பவித்திரமாக

ஆக்கிக் கொண்டாலும் கூட. பவித்திர சரீரம் கிடைப்பதில்லை. ஆகவே, இப்பேர்ப்பட்ட சம்பூரண பவித்திரத்தா. இந்த சமயத்தில், நீங்கள் எல்லோரும் தாரணை செய்து கொண்டிருக்கிறீர்கள். பெருமையுடன் கூறுகின்றீர்கள். நினைவிருக்கிறதா? அப்படிப் பெருமையுடன் சொல்வது என்ன? ஞாபகப்படுத்திப் பாருங்கள். எல்லோரும் மனதார கூறுகின்றார்கள். அனுபவரீதியாகக் கூறு கின்றார்கள். பவித்திரத்தா எங்கள் பிறப்புரிமை (ஜன்ம ஸித்த அதிகார்). ஜன்ம சித்த அதிகாரம் மிக எளிதாகவே கிடைக்கிறது. ஏனென்றால், பவித்திரத்தா மற்றும் சத்தியத்தாவை அடைவதற்காக நீங்கள் எல்லோரும் முதலில் உங்களுடைய சத்தியமான தந்தை, ஆசிரியர், சத்குருவையும் அடையாளம் கண்டு புரிந்து கொண்டீர்கள். அடைந்தும் விட்டீர்கள். எதுவரையிலும், யாராயினும் தன்னுடைய சத்திய சொரூபத்தை மற்றும் சத்தியமான தந்தையை அறிந்து கொள்ளாதவர்களாக இருந்தால், சம்பூரண பவித்திரத்தா, சத்தியத்தாவின் சக்தியை அடைய முடியாது.

ஆதலால் நீங்கள் எல்லோரும் சத்தியத்தா மற்றும் பவித்திரத்தா சக்தியைப் பற்றிய அனுபவசாலிகளா? அனுபவிகளாக இருக்கிறீர்களா? உலகினர் முயற்சி செய்கிறார்கள் ஆனால் யதார்த்த ரூபத்தில், தங்களுடைய சொரூபத்தையோ, சத்தியமான தந்தையின் யதார்த்த சொரூபத்தையோ அறிய முடியாது ஆனால் நீங்களோ, இந்த சமயத்தின் அனுபவம் மூலமாக. பவித்திரத்தாவை மிக எளிதாகவே சொந்தமாக்கிக் கொண்டு விட்டீர்கள். இவ்வாறாக, இந்த சமயத்தின் பிராப்தியின் பாக்கியம், தேவதைகளின் தூய்மையானது (பவித்திரத்தா) இயற்கையான குணமாகவே இருக்கிறது. மேலும் இவர்களுடைய இயல்பாகவும் இருக்கிறது. இப்படிப்பட்ட இயற்கையான குணத்தின் அனுபவம் நீங்களாகவே அடைகிறீர்கள். ஆதலால் சோதித்துப் பாருங்கள். பவித்திரத்தா மற்றும் சத்தியத்தாவின் சக்தியானது இயற்கையான குணம் என்ற ரூபத்தில் ஆகி விட்டதா? நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? யாரெல்லாம் பவித்திரத்தா எங்கள் பிறப்புரிமை என்று நினைக்கிறார்களோ, அவர்கள் கை உயர்த்துங்கள். பிறப்புரிமை யாகவே கிடைத்தது என்று நினைக்கிறீர்களா? அல்லது கஷ்டப்பட்டு முயற்சி செய்ய வேண்டியதாக இருக்கிறதா? முயற்சி செய்ய வேண்டிய அவசியம் இல்லையல்லவா? எளிதாகவே இருக்கிறதல்வா? ஏனெனை

பிறப்புரிமை என்பது எளிதாகவே கிடைப்பது. முயற்சி செய்ய வேண்டியதில்லை. உலகினர் சாத்தியமானதல்ல என்று நினைக்கிறார்கள் ஆனால் நீங்கள் அசாத்திய மானதை, சாத்தியமானதாகமட்டுமல்ல, எளிதானதாகவும் செய்து விட்டீர்கள்.

யாரெல்லாம் புதிதாக வந்திருக்கிறார்களோ, யாரெல்லாம் முதன் முறையாக வந்திருக்கிறார்களோ, அவர்கள் கை உயர்த்துங்கள். நல்லது. புதிதாக வந்திருக்கும் குழந்தைகளுக்கு, வாழ்த்துக்கள். புதிதாக முதன் முறையாக வந்திருப்பவர்களுக்கு ஏனெனில், பாப்தாதா கூறுகின்றார். தாமதமாக (லேட்) வந்திருக்கிறீர்கள். என்றாலும் ரெம்பவும் தாமதமாகி விடவில்லை. (டூலேட்) முதல் நம்பரில் இல்லை. முதல் டிவிஷனில் வர முடியும். அப்படியானால், புதிய குழந்தைகளுக்கு பாப்தாதாவின் வரதானம் இருக்கிறது. என்னவென்றால், கடைசியில் வந்தவர்களும் கூட தீவிரமாக முயற்சி செய்து, முதல் டிவிஷனில் வரமுடியும். முதல் நம்பர் அல்ல. முதல் டிவிஷனில் வரமுடியும். புதிதாக வந்திருக்கும் குழந்தைகளில், நாங்கள் முதலாவதாக வருவோம் என்ற தைரியமுள்ள குழந்தைகள் கை உயர்த்துங்கள். தைரியம் இருந்தால் தந்தையின் உதவி இருக்கிறது ஆனால் சர்வ பிராமண பரிவாரத்தினரின் சுப பாவனா, சுப காம்னாவும் கூட உங்களுக்குத் துணையாக இருக்கிறது. ஆதலால் யாரெல்லாம் புதிதாக முதன் முறையாக வந்திருக்கிறார்களோ, அவர்கள் எல்லோருக்காகவும் பாப்தாதா மற்றும் பரிவாரத்தினரிடமிருந்து மீண்டும் ஆயிரம் மடங்கு வாழ்த்துக்கள், வாழ்த்துக்கள், வாழ்த்துக்கள்! முதலில் வரவிருக்கின்ற உங்கள் எல்லோருக்கும் கூட குஷியாக இருக்கிறதல்லவா! காணாமற்போன ஆத்மாக்கள் மீண்டும் தங்கள் பரிவாரத்தில் வந்து சேர்ந்து விட்டார்கள். ஆகவே பாப்தாதாவும் குஷியடைகின்றார். மேலும் நீங்கள் எல்லோரும் கூட குஷி அடைகிறீர்கள்.

பாப்தாதா வதனத்தில் தாதியுடன் ஒரு ரிசல்ட் பார்த்தார். என்ன ரிசல்ட் பார்த்திருப்பார்? உங்கள் எல்லோருக்கும் தெரியும். அறிவீர்கள். ஏற்றுக் கொண்டுமிருக்கிறீர்கள். அதாவது நாங்கள் மாலிக் ஸோ பாலக் (எஜமான் மற்றும் குழந்தை) என்பது, சரி தானே மாலிக் ஆகவும் இருக்கிறீர்கள். பாலக் ஆகவும் இருக்கிறீர்கள். எல்லோருமே

அப்படித்தானே? கை உயர்த்துங்கள். யோசித்து கை உயர்த்த வேண்டும். சொன்னதற்காக அல்ல. கணக்கு எடுக்கப்படும் அல்லவா? நல்லது. கையை கீழே போடுங்கள். பாப்தாதா என்ன பார்த்தார் என்றால், பாலக்பன் (குழந்தையாக இருப்பதன்) நிச்சயம் மற்றும் நஷா. இது எளிதாக இருக்கிறது. ஏனெனில், பிரம்மாகுமார், பிரம்மா குமாரி என்று சொல்கிறீர்கள். பாலக் ஆக இருப்பதில் நிச்சயம் இருப்பதன் காரணமாக, பிரம்மா குமார், பிரம்மா குமாரி என்று கூறுகின்றீர்கள். மேலும் முழு நாளும் என்னுடைய பாபா, என்னுடைய பாபா என்பதை நினைவில் கொண்டு வருகிறீர்கள். பிறகு மறந்தும் விடுகிறீர்கள். எனினும் இடை யிடையே நினைவு வருகிறது. மேலும் சேவையிலும் கூட பாபா, பாபா என்ற சப்தம் வாயிலிருந்து இயற்கையாகவே வெளிவருகிறது. ஒருவேளை பாபா என்ற சப்தம் வெளிவரவில்லை என்றால் ஞானத்தின் பிரபாவம் ஏற்படாது. பிரபாவமானது, சேவை செய்வதன் மூலம். சொற்பொழிவு மூலம், கோர்ஸ் கொடுப்பதன் மூலம், இப்படி விதவிதமான தலைப்புகளில் செய்வது மூலம் உண்டாகிறது. உண்மையான சேவையின் பிரத்யக்ஷ சொரூபம், பிரத்யக்ஷ பிரமாணமாக எப்படி இருக்குமென்றால், கேட்பவர்களுக்கும் கூட நானும் கூட பாபாவினுடையவன் என்ற அனுபவம் செய்ய வேண்டும். அவர்களுடைய வாயிலிருந்தும் பாபா, பாபா என்ற சப்தம் வெளிவர வேண்டும். ஏதோ இவர்களின் பின்னால் சக்தி இருக்கிறது, இது அல்ல ஆனால் மேரா பாபா (என்னுடைய பாபா) என்ற அனுபவம் செய்ய வேண்டும். இதற்குத்தான் சேவையின் பிரத்யக்ஷ பலன் என்று சொல்வது. எனினும் பாலக்பன் என்ற நஷா மற்றூம் நிச்சயம் நன்றாக இருக்கிறது ஆனால் மாலிக்பன் (நான் எஜமான், அதிகாரி) என்ற நிச்சயம் மற்றும் நஷா நம்பர் வாராகத்தான் இருக்கிறது. பாலக்பன் என்பதைவிட மாலிக்பன் என்பது நடத்தை மூலமாக, முகம் மூலமாக நஷாவானது சிலசமயம் தெரிகிறது. சிலசமயம் மிக குறைவாகத் தெரிகிறது. உண்மையில் நீங்கள் டபுள் மாலிக். ஒன்று தந்தையின் பொக்கிஷத்திற்கு மாலிக். எல்லோரும் பொக்கிஷங்களுக்கு மாலிக் தானே? மேலும் தந்தை எந்த பொக்கிஷங்களைக் கொடுத்திருக்கின்றாரோ, அது சிலருக்கு லக்ஷம், சிலருக்கு ஆயிரம் என்று வித்தியாசமாகக் கொடுக்கவில்லை. பாப்தாதா எல்லோருக்கும் எல்லாப் பொக்கிஷங் களையும் கொடுத்திருக்கின்றார். ஒருவருக்கு எவ்வளவு கொடுத்திருக்கின்றாரோ, அதே போலவே எல்லோருக்கும்

கொடுத்திருக்கின்றார். இரண்டாவது மாலிக், என்பது சுய ராஜ்ய அதிகாரி. சுய இராஜ்யத்தின் மாலிக். ஆகவே தான் பாப்தாதா பெருமையாகக் கூறுகின்றார் எனது ஒவ்வொரு குழந்தையும் இராஜா குழந்தை என்று, நீங்கள் இராஜா குழந்தைகள் தானே? பிரஜை இல்லை யல்லவா? இராஜயோகியா? பிரஜாயோகியா? இராஜ யோகி தானே? ஆதலால் நீங்கள் சுய இராஜ்யத்தின் மாலிக் ஆனால் பாப்தாதா தாதியுடன் சேர்ந்து ரிசல்ட் பார்த்தார். எவ்வளவு பாலக்பன் என்பதில் நஷா இருக்கிறதோ, அவ்வளவு மாலிக்பன் என்பதில்லை. குறைவாக இருக்கிறது. ஏன்? ஒருவேளை சுய இராஜ்யத்தின் மாலிக்பன் (சுய இராஜ்ய அதிகாரி) என்பதில் நஷா சதா இருக்கும் ஆனாலும், அவ்வப்போது வரும் பிரச்சனைகள், விக்னங்கள் (தடைகள்) என்பது வராது. வர முடியாது. பார்த்தோமானால், பிரச்சனைகள் மற்றும் விக்னங்கள் வருவதற்கான ஆதாரம் விசேஷமாக, மனம் தான். மனம் தான் சஞ்சலத்தில் வந்து விடுகிறது. இதனால் தான் பாப்தாதாவின் மகா மந்திரம் கூட மன்-மனா-பவ என்பதாக இருக்கிறது. தன் மனாபவ, தனம் மனா பவ அல்ல (தன் என்றால் உடல், தனம் என்றால் செல்வம்). மன் மனா பவ என்பது தான். ஒருவேளை சுய இராஜ்ய அதிகாரியாக இருந்தால், மனம் மாலிக் ஆக இருக்காது. மனம் உங்களுடைய வேலையாள், இராஜா அல்ல. இராஜா என்றால் அதிகாரி. அடிமையை இராஜா என்று அழைப்பதில்லை. அப்படியானால் ரிசல்ட் எப்படி இருந்தது? மனதின் அதிகாரி, நான் இராஜ்ய அதிகாரியாக இருக்கும் எஜமான் (மாலிக்). இந்த நினைவு, இந்த ஆத்ம ஸ்திதி. சதா இந்த ஸ்திதியிலேயே இருப்பதில் குறை தெரிகிறது. இது முதலாவது பாடம் தான். நீங்கள் எல்லோரும் முதலாவது பாடம் என்ன கேட்டிருந்தீர்கள்? நான் ஆத்மா. பரமாத்மா பற்றிய பாடம் பிறகு தான். அது இரண்டாவது பாடம் ஆனால் முதலாவது பாடம் நான் மாலிக் இராஜா. இந்த கர்மேந்திரியங்களுக்கு, அதிகாரி. ஆத்மா. சக்திசாலி ஆத்மா. சர்வ சக்திகள் ஆத்மாவின் நிஜமான குணம். பாப்தாதா என்ன பார்த்தார் என்றால் நான் யார்? எப்படி இருக்கிறேன்? இந்த இயற்கையான சொரூபம் நினைவில் கொண்டு வருவது, இருப்பது, முகம் மூலமாக அனுபவம் ஆவது, பிரச்சனைகளிலிருந்து விலகியிருப்பது, இவற்றில் இப்போது இன்னும் கொஞ்சம் விசேஷ கவனம் வேண்டும். நான் ஆத்மா என்பது மாத்திரம் அல்ல ஆனால் நான் எப்பேர்ப்பட்ட ஆத்மா, இப்படி. இது நினைவில் இருந்தால் மாஸ்டர் சர்வ சக்திவான் ஆத்மாவின்

முன்னால், பிரச்சனையோ, விக்னமோ வரக்கூடிய சக்தி எதற்குமில்லை. இப்போதும் கூட ரிசல்ட்டில், ஏதாவது சிற்சில பிரச்சனைகள் மற்றும் விக்னங்கள் இருப்பது தெரிகிறது. இதுபற்றி அறிவார்கள் ஆனால் நடத்தையில், முகத்தில் நிச்சயத்தின் பிரத்யக்ஷ சொரூபம், ரூஹானி நஷா என்பது இன்னும் அதிகமாக பிரத்யகக்ஷக்ஷ்ம் ஆக வேண்டும். இதற்காக, இந்த மாலிக் பன் (நான் அதிகாரி, எஜமான்) என்ற நஷா இருக்கிறதல்லவா? இதை அடிக்கடி சோதித்துப் பார்க்க வேண்டும். சோதிப்பது என்பது ஒரு வினாடி விஷயம் தான். கர்மம் செய்யும் போது, ஏதாவது கர்மம் (செயல்) செய்ய ஆரம்பிக்கும்போது, ஆரம்பிக்கின்ற நேரத்தில் சோதித்துப் பாருங்கள். மாலிக்பன் (அதிகாரி) என்ற அத்தாரிட்டியோடு, கர்மேந்திரியங்கள் மூலமாகக் தர்மம் செய்கின்ற, கண்ட்ரோலிங் பவர், (வசப்படுத்தும் சக்தி), ரூலிங் பவர் (ஆளுமை சக்தி) உள்ள ஆத்மாவாக இருக்கின்றேனா? அல்லது சாதாரணமாகவே கர்மம் செய்ய ஆரம்பித்து விட்டீர்களா? ஸ்மிருதி சொரூபத்தில் (நினைவு சொரூபத்தில்) ஆரரீம்பம் செய்வது, மற்றும் சாதாரண ஸ்திதியில் ஆரம்பம் செய்வது. இதில் நிறைய வேறுபாடு இருக்கிறது. எப்படி லௌகீக பதவியிலுள்ளவர். தங்களுடைய காரியத்தை ஆரம்பிக்கும் முன்னர் நாற்காலியில் அமர்ந்து, பிறகு காரியம் செய் கிறார்கள். இப்படி தன்னுடைய மாலிக்பன் சுய இராஜ்ய அதிகாரி என்ற ஆசனத்தில் அமர்ந்து பிறகு காரியம் செய்யுங்கள். இந்த மாலிக் என்ற அத்தாரிட்டியை சோதித்துப்பார்த்து, இதை இன்னும் அதிகரிக்க வேண்டும். இதன் அடையாளம், அதாவது மாலிக்பன் என்ற அத்தாரிட்டியின் அடையாளம், சதா ஒவ்வொரு காரியத்திலும் டபுள் லைட் மற்றும் குஷி அனுபவம் ஆகும். மேலும் ரிசல்ட், வெற்றி எளிதாக அனுபவம் ஆகும். இப்போது, இங்கு மங்கும். இப்போதும் கூட, அதிகாரி என்பதற்குப்பதிலாக அடிமையாகி விடுகிறார்கள். அடிமை என்பதன் அடையாளம் எப்படி இருக்கும்? இவர்கள் அடிக்கடி, எனது சம்ஸ்காரம் இப்படி விரும்பவில்லை ஆனால் என்னுடைய சம்ஸ்காரம், என்னுடைய இயல்பு என்று கூறுவது.

பாப்தாதா இதற்கு முன்னரே கூட கூறியிருக்கின்றார். என்னுடைய சம்ஸ்காரம், என்னுடைய சுபாவம் என்று கூறுகின்ற இந்த பலவீன சம்ஸ்காரம் உங்களுடைய சம்ஸ்காரமா? என்னுடையதா? இது

ராவணனுடைய மத்யகால சம்ஸ்காரம். ராவணனால் கொடுக்கப்பட்ட பொருள். அதை என்னுடையது என்று சொல்வது தவறு. உங்களுடைய சம்ஸ்காரமோ, தந்தையின் சம்ஸ்காரம். அதே சம்ஸ்காரம். அந்த சமயத்தில் யோசித்துப் பாருங்கள். என்னுடையது, என்னுடைய என்று சொல்லிச் சொல்லியே அதை அதிகாரியாக்கி விட்டீர்கள். நீங்கள் அடிமையாகி விட்டீர்கள். சமானமாக தந்தையைப்போல ஆக வேண்டுமானால், இது என்னுடயதல்ல (இராவண சம்ஸ்காரம்), எது தந்தையினுடைய சம்ஸ்காரமோ, அது தான் என்னுடைய சம்ஸ்காரம். தந்தையின் சம்ஸ்காரம் எது? விஷ்ன கல்யாணகாரி, சுப பாவனா, சுப காம்னாதாரி. ஆகவே, அந்த சமயத்தில் தந்தையின் சம்ஸ்காரத்தை எதிரில் கொண்டு வாருங்கள். இலக்ஷியம் இருக்கிறது. பாப் சமான் ஆக வேண்டும் என்று ஆனால் லக்ஷணம் இராவணனுடையதாக தங்கியிருக்கிறது. ஆதலால் கலப்படம் ஆகி விடுகிறது. கொஞ்சம் தந்தையின் நல்ல சம்ஸ்காரம். கொஞ்சம் தன்னுடைய கடந்தகால சம்ஸ்காரம். இரண்டும் கலப்படமாக இருக்கின்ற காரணத்தால், தடுமாற்றம் ஏற்பட்டுக் கொண்டேயிருக்கிறது. சரி சம்ஸ்காரம் எப்படி உருவாகிறது? இது உங்கள் எல்லோருக்கும் தெரியும் அல்லவா? சம்ஸ்காரம், மனம் மற்றும் புத்தியின் சங்கல்பம் (எண்ணம்) மற்றும் காரியம் மூலமாக சம்ஸ்காரம் உண்டாகிறது. முதலில் மனம் எண்ணத்தை உருவாக்குகிறது. (மனம் சங்கல்பம் செய்கிறது). புத்தி' உதவி செய்கிறது. பிறகு நல்லது அல்லது கெட்ட சம்ஸ்காரம் ஆகி விடுகிறது.

ஆதலால், பாப்தாதா தாதியோடு சேர்ந்து ரிசல்ட் பார்த்தார். அதாவது மாலிக்பன் (எஜமான்' அதிகாரி) என்பது இயற்கையாகவும், மற்றும் சுபாவமாகவும் இருக்கும் நஷா இருக்கிறதல்லவா, அது பாலக்பன் (குழந்தை) என்பதோடு ஒப்பிடும்போது இப்போதும் கூட குறைவாகவே இருக்கிறது. ஆகவே தான், பாப்தாதா பார்க்கின்றார். சமாதானம் செய்வதற்காக யுத்தம் செய்ய வேண்டியதாகி விடுகிறது. பெயர், பிராமணன், ஆனால் இடையிடையே க்ஷத்திரியன் ஆகி விடுகிறார்கள். ஆதலால் க்ஷத்திரியன் ஆகக்கூடாது. பிராமணனிலிருந்து தேவதையாக வேண்டும். க்ஷத்திரியனாக ஆகக் கூடியவர்கள் இனிமேல் நிறைய வரப்போகிறார்கள். நீங்களோ அதிகாரி ஆத்மாக்கள். ரிசல்ட் கேட்டீர்களா? ஆதலால் அடிக்கடி நான் யார்? என்ற

ஸ்மிருதியை (நினைவை) கொண்டு வாருங்கள், இருக்கிறது என்பதல்ல. ஸ்மிருதி சொரூபத்தில் கொண்டு வாருங்கள். சரி தானா? நன்று. ரிசல்ட்டை யும் கூறிவிட்டேன். இப்போது பிரச்சினை என்ற பெயர், விக்னத்தின் பெயர், குழப்பத்தின் பெயர், வீண் சங்கல்பம் என்ற பெயர், வீணான கர்மம் என்ற பெயர், வீணான சம்மந்தத்தின் பெயர், வீணான ஸ்மிருதி என்ற பெயர் ஆகியவற்றை இல்லாமல் செய்யுங்கள். மற்றவர்களும் செய்யும்படி செய்து விடுங்கள். சரிதானா? செய்வீர்களா? யாரெல்லாம் திட சங்கல்பத்திற்கான கை உயர்த்தினார்களோ. இப்படி கை உயர்த்துவதென்பது சாதாரண விஷயமாகி விட்டது. ஆதலால் கை உயர்த்துங்கள். மனதில் சரீரத்தின் கை அல்ல. இப்படிச் செய்ததை நிறைய பார்த்தாகி விட்டது. எப்போது எல்லோரும் சேர்ந்து, மனதார திட சங்கல்பம் என்ற கை உயர்த்துவார்களோ, அப்போது தான் உலகின் மூலை முடுக்குகளிலெல்லாம் எல்லோருடைய மகிழ்ச்சியுடன் கூடிய கைகள் உயரும். நம்முடைய சுகக்கடலான, சாந்திக்கடலான தந்தை வந்து விட்டார்.

தந்தையைப் பிரத்யக்ஷயம் செய்வோம் என்று உறுதி எடுத்துக் கொண்டிருக்கிறீர்கள் அல்லவா! எடுத்திருக்கிறீர்களா? பக்கா? டீச்சர்கள் எடுத்திருக்கிறீர்களா? நன்று. பாண்டவர்கள் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். பக்கா நன்று. தேதியும் நிச்சயப்படுத்தி விட்டீர்கள். தேதி நிச்சயம் செய்யவில்லையா? எவ்வளவு அவகாசம் தேவை? ஒரு வருடமா? இரண்டு வருடங்கள் வேண்டுமா? எத்தனை ஆண்டுகள் தேவை? பாப்தாதா கூறியிருந்தார். ஒவ்வொரு வரும் தங்களுடைய முயற்சியின் படி (புருஷார்த்தம்) அவரவர் சக்தியின் அடிப்படையில் தங்கள் இயல்பில் நடப்பதற்கு அல்லது பறப்பதற்கான விதியின் அடிப்படையில், தாங்கள் குறிக்கின்ற தேதியில் சம்பன்னமாவதற்கான தேதியை தேர்வு செய்து உறுதி செய்யுங்கள். மேலும் இது பற்றி அடிக்கடி சோதித்துக் கொண்டேயிருங்கள். நேரப்படி, மனதின் நிலை பேச்சின் நிலை, சம்மந்தம், தொடர்பின் நிலை, மூன்னேறிக் கொண்டிருக்கிறதா? ஏனெனில் தேதியை நிச்சயப்படுத்தி விட்டால், தானாகவே கவனம் செல்லும்.

மற்றபடி எல்லோரிடமிருந்தும், நாலா பக்கங்களிலிருந்தும் செய்தியும் கூட வந்திருக்கிறது, இ.மெயிலும் வந்திருக்கிறது. பாப்தாதாவுக்கு

இமெயில் வருகிறது. என்றாலும் அந்த சமாச்சாரம் அதற்கு முன்பே வந்து சேர்ந்து விடுகிறது. மனதின் சங்கல்பம் என்ற இமெயில் அதிவேகமானதாக இருக்கிறது. ஆகையால் அது முதலிலேயே வந்து சேர்ந்து விடுகிறது. ஆதலால் யாரெல்லாம் அன்பு நினைவுகளை, தன்னுடைய ஸ்திதி பற்றிய சமாச்சாரம் தாங்கள் செய்த சேவையற்றிய செய்தி அனுப்பியிருந்தார்களோ, அவை அனைத்தையும் பார்தாதா ஏற்றுக் கொண்டார். எல்லோரும் அன்பு நினைவுகளை மிகவும் ஆர்வம் உற்சாகத்துடன் அனுப்பியிருக்கிறார்கள். பாப்தாதா அவர்கள் அனைவருக்கும் வெளிநாடாக இருந்தாலும் சரி, உள் நாடாக இருந்தாலும் சரி. இவற்றிற்குப் பதிலாக அன்பு நினைவுகளையும், மனம் நிறைந்த ஆசிகளுடன் அன்பு மற்றும் சக்தியின் அதிர்வுகளையும் கூட அளிக்கின்றார். நன்று,

சேவை வாய்ப்பு - இராஜஸ்தான் மற்றும் இந்தூர்: நன்றாக இருக்கிறது. - இருவரும் யக்ஞ சேவையின் சேவை செய்யும் வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டார்கள். இதுவும் கூடகோல்டன் சான்ஸ் எடுத்துக்கொள்கின்ற கோல்டன் சான்ஸலர் ஆவார்கள். பாப்தாதா பார்த்தார். எல்லோரும் எதிர் பார்த்துக் கொண்டேயிருக்கிறார்கள். சேவை செய்வதன் மூலமாக சக்தியும், சேவைக்கான பலனும் கிடைக்கும் வாய்ப்பு எப்போது கிடைக்கும் என்று காத்திருக்கின்றனர். மனதார சேவை செய்து கொண்டிருக்கும் போதே மனம் குஷியில் கூத்தாடுகிறது. எப்போதெல்லாம். எத்தனை நாட்கள் மதுபனில் சேவை செய்வதற்கான வாய்ப்பு கிடைக்கிறதோ, அப்போதெல்லாம் மனம் குளியில் கூத்தாடுவதை அனுபவம் செய்திருக் கிறார்கள். லௌகீக நடனம் என்பது சாதாரண விஷயம் ஆனால் உங்கள் மனதினுடைய நாட்டியம், (மைண்ட் டான்ஸ்) கால் மூலமாக ஆடுவதல்ல. அனுபவம் செய்திருக்கிறீர்கள் அல்லவா? மனம் மகிழ்ச்சியில் கூத்தாடுவதை அனுபவம் செய்திருக்கிறீர்களா? யாரெல்லாம் அனுபளாம் செய்திருக் கிறார்களோ, அவர்கள் கை உயர்த்துங்கள். களைப்படையவில்லை தானே? களைப்பில்லாத அனுபவம் செய்தீர்கள் அல்லவா? மேலும் புண்ணியம் எவ்வளவு சேமித்தீர்கள்? உலகினரோ, ஒரு பிராமணனுக்குத்தான் உணவளிக்கிறார்கள். இந்த சேவை செய்தார்களானால், மிகப்பெரிய புண்ணியம் கிடைத்து விட்டதாக நினைக்கிறார்கள் ஆனால் நீங்கள் எத்தனை பிராமணர்களுக்கு உணவளித்தீர்கள்? சமாளித்தீர்கள். வகுப்பும் நடத்தினீர்கள், புத்துணவும்

கொடுத்தீர்கள். ஆகவே உங்களுடைய புண்ணிய கணக்கு எவ்வளவு சேமிப்பாகி விட்டது மேலும் எல்லாவற்றையும் விட குஷியான விஷயம் என்னவென்றால், தங்களுடைய பிராமண பரிவாரம் ஒரே நேரத்தில் ஒருங்கிணைந்திருக்கின்ற எவ்வளவு பெரிய பரிவாரத்தைப் பார்த்தீர்கள்: மேலும் உலகின் நாலா பக்கங்களிலிருந்து வந்திருக்கும் சகோதர, சகோதரிகள் கூடியிருக்கின்ற தங்களுடைய ஈஸ்வரிய பரிவாரத்தினருடனான சந்திப்பு. ஒரு விசேஷமான மகிழ்ச்சிக்குரிய விஷயமாகும். உள்ளத்தில் ஆர்வம் உண்டாகிறதல்லவா? வாஹ் பாபா! வாஹ் என்னுடைய பிராமண பரிவாரமே! ஆகவே மிக நன்றாகவே செய்தீர்கள். தைரியம் உங்களுடையது. உதவி மதுயன் நிவாசிகளுடையது மற்றும் பாபாவினுடையது. ஏனெனில், மதுபன் நிவாசிகளும் துணையாக இருக்கிறார்கள். அப்போது தான் இந்த காரியம் செய்ய முடிகிறது. ஆகவே லாட்டரி கிடைத்து விட்டது. லாட்டரிக்கு வாழ்த்துக்கள். நல்லது. டீச்சர்களுக்கும் கூட வாய்ப்பு கிடைக்கிறது. பரிவாரத்தினருக்கும் கூட வாய்ப்பு கிடைக்கிறது. சிறிய, பெரிய டீச்சர்களுக்கும் கூட வாய்ப்பு கிடைக்கிறது. பாருங்கள். எத்தனை டீச்சர்கள் வந்திருக்கிறார்கள்! இரண்டு ஜோன்களிலிருந்தும் எத்தனை டீச்சர்கள் வந்திருக்கிறார்கள்? (350 பேர்) நல்லது. ஆகவே வாழ்த்துக்கள் இருக்கவே இருக்கிறது. பிறகும் கூட வாய்ப்பை எடுத்துக் கொண்டேயிருக்க வேண்டும். மற்றபடி இரண்டு ஜோன்களிலும், ஒரு ஆண்டில், எத்தனை வாரிசுகளை தயார் செய்திருக்கிறார்கள் என்று, ஒவ்வொரு ஜோனும் தெரிவிக் கட்டும். ஜோன் தலைவர் யார்? கை உயர்த்துங்கள். முழு ஜோனிலிருந்தும் எத்தனை வாரிசுகள் தயாராகியிருக்கின்றனர்? எத்தனை மைக் தயாராகியிருக்கிறார்கள்? லிஸ்ட் தயார் செய்திருககிறீர் களா? பேசாமலிருப்பது ஏன்? இப்போது வாரிசு குவாலிட்டி, ஒரு ஆண்டு காலத்தில், உருவாக்கி யிருக்க வேண்டுமல்லவா? ஏனென்றால், ஒரு ஆண்டுக்குப் பிள்னர் தான். ஜோனுக்கு வாய்ப்பு கிடைக்கிறது. சரி தானா? ஒரு ஆண்டு காலத்தில், கொஞ்சமாவது வாரிசு, அல்லது மைக் தயாராகியிருக்க வேண்டுமல்லவா? ஆம் என்று சொல்லுங்களேன். லிஸ்ட் வேண்டும். இப்போது தயார் கொண்டிருக்கிறீர்கள், பிறகு லிஸ்ட் கொண்டு வர வேண்டும். இனி யாருக்கெல்லாம் சேவைக்கான ஜோன் வாய்ப்பு வருகிறதோ அவர்களுக்கு முன்கூட்டியே பாப்தாதா கூறுகின்றார், ஒவ்வொரு ஜோனும் இந்த இரண்டு ரிசல்ட் கொடுக்க வேண்டும்.

முதலிலேயே தயார் செய்து கொண்டு வர வேண்டும். எத்தனை மைக் தயாராகியிருக்கிறார்கள்? எத்தனை வாரிசுகள் தயாராகி தயாராக யிருக்கிறார்கள்? முதன் முறையாக வந்திருப்பவர்கள் மிகவும் அதிர்ஷ்டசாலிகள். இனிமையானவர்கள். இவர்கள் இப்போது எத்தனைபேர் தயாராகியிருக்கிறார்கள்? சரிதானா? ரிசல்ட் வேண்டுமல்லவா? பாப்தாதா இது வரையிலும் ஒவ்வொரு வர்க்கத்தினரிடமிருந்தும் கூட வாரிசு அல்லது மைக் பற்றிய லிஸ்ட் பார்க்கவில்லை. ஒவ்வொரு ஆண்டும் வர்க்கத்தினர் (விங்) சந்திக்கிறார்கள். பாப்தாதா குஷியடைகிறார் ஆனால் ரிசல்ட் இன்றுவரை வரவில்லை. இந்த வர்க்க சேவை எத்தனை ஆண்டுகளாக நடந்து கொண்டிருக்கிறது? எத்தனை ஆண்டுகள் ஆகி விட்டது? (22 ஆண்டுகள்). ஆகவே 22 ஆண்டுகளில் ஒரு ஆண்டில் ஒருவராவது தயாராகியிருக்க வேண்டு மல்லவா? லிஸ்ட் வரவில்லை. ஒரு விங்கிலிருந்தும் கூட லிஸ்ட் வரவில்லை. நல்லது. நீங்கள் மனதார சேவை செய்தீர்கள். ஆகையால் திலாராம் தந்தையிடமிருந்து மிக மிக மிக மனதார நல்லாசிகள். நல்லது. அடுத்த ஆண்டு தயார் செய்து கொண்டு வர வேண்டும்.

டபுள் விதேஷி: (வெளி நாட்டினர்) டபுள் விதேஷிகள் மிகவும் கெட்டிக்காரர்கள். சீசனில் ஒவ்வொரு முறையும் தங்கள் உரிமையை நன்றாக வைத்திருக்கிறார்கள். பாப்தாதாவுக்கும், பிராமண பரிவாரத்தினருக்கும் இது குஷியாக இருக்கிறது. பாப்தாதாவினுடைய சபை இன்டர் நேஷனல் சபையாக ஆகி விட்டது. ரெம்பவம் தைரியத்துடன் வருகிறார்கள். எல்லாவற்றிலும். அதிகமான குரூப் எங்கே இருக்கிறது? (மலேஷியாவிலிருந்து 61 பேர் வந்திருக்கிறார்கள்). நன்றாக இருக்கிறது. இவ்வளவு பெரிய குருப்பாக இருக்கிறதல்லவா? அவ்வளவு பெரிய, பெரிய வாழ்த்துக்கள். நல்லது. வெளி நாட்டுக்கு மிகுந்த மகிமையிருக்கிறது. அங்கேயுள்ள வாழ்க்கை அதிவேகமானதாக இருக் கிறது. ஆகவே டபுள் விதேஷிகள் பிராமணன் ஆகியிருக்கிறார்கள் அல்லவா? இவர்களுடைய புருஷாரத்தமும் கூ வேகமான புருஷாரத்தம் தான். எப்போது தேசத்தினுடைய வாழ்க்கை வேகமானதாக இருக்கிறதோ அதைப்போலவே பிராமண பரிவாரத்தினுடையதார் வேகமான புருஷாரத்த வாழ்க்கையாக இருக்கிறது. ஃடாஸ்டா, (வேகம்) சுலோவா? ஃபாஸ்டாக இருக்கிறதா?

ஆம் அல்லது இல்லை என்று கூறுங்கள். யாருடையது ஃபாஸ்டாக இருக்கிறதோ, அவர்கள் கை உயர்த்துங்கள். சரி பாதி இருக்கிறது; அடுத்த பாதியில்லை. இனி அடுத்த வருடம் வருவீர்கள் அல்லவா? வரத்தான் வேண்டும் - அல்லவா? இந்த ஆண்டு லக்ஷியம் வைக்க வேண்டும். புருஷாரத்திகளாக இருக்கிறீர்கள். சரிதான் ஆனால் இத்தோடு தீவிரம் என்பதையும் உடன் சேர்க்க வேண்டும். புருஷாரத்தி ஆவது பொதுவானது. தீவிர புருஷாரத்தி ஆவது விசேஷமானது. ஆகவே நீங்கள் எல்லோரும் விசேஷ ஆத்மாக்கள். சாதாரணமானவர்களா என்ன? விசேஷமானவர்கள். ஆகவே விசேஷ ஆத்மாக்களின் முதலாவது அடையாளம் தீவிர புருஷாரத்தி. நினைத்தோம். செய்து விட்டோம் ஆனால் ஆகி விடும்! ஆகத்தான் வேண்டும் என்பதல்ல. செய்தேயாக் வேண்டும்; பறக்கத்தான் வேண்டும். பாப்சமான் ஆகத்தான் வேண்டும். இதற்குத்தான் தீவிர புருஷாரத்தம் என்று சொல்லப்படுகிறது. அப்படியானால் என்ன செய்யப் போகிறீர்கள்? தீவிர புருஷாரத்திகள் அல்லவா! இப்போது நேரம் வேகமாக நெருங்கி வந்து கொண்டிருக்கிறது. இந்த சமயத்தில் தீவிர கதி வந்து கொண்டிருக்கிறது. இந்த சமயத்தில் தீவிர கதி வந்து விட்டது ஆனால் துக்கம், அசாந்தியான சமயத்தில் சமயத்தை சமாப்தி செய்யக்கூடியவர்களாக இருக்கின்ற நீங்களோ, சமயத்தை விட, தீவிரகதியடைய வேண்டும். இருந்தாலும் பரவாயில்லை நன்றாகத்தானிருக்கிறது. லகன் இருக்கிறது. வந்து சேர்ந்து விட்டீர்கள். இதற்கு வாழ்த்துக்கள். நல்லது. தீவிர புருஷாரத்தி. சரி தானே! யார் சரி என்று நினைக்கிறார்களோ, அவர்கள் கை உயர்த்துங்கள். சாதாரண புருஷாரத்தம் அல்ல. தீவிர புருஷாரத்தம். அவ்வப்போது இடையிடையே சாதாரண புருஷாரத்தம் செய்வீர்களா? சாதாரணம் என்பது கூடாது. சதா தீவிர புருஷாரத்தம் செய்வீர்களா? சாதாரணம் என்பது கூடாது. சதா தீவிர புருஷாரத்தம். மாலிக்பன் (அதிகாரி) என்ற நஷா ஒவ்வொரு சமயத்திலும் முகத்தில் தெரியட்டும். வாயை விட, முகம் சொல்லி விடும். ஆகவே நல்லது. அடுத்த ஆண்டு ரிசல்ட் பார்க்கலாம். நல்லது. அமருங்கள். மிக மிக நல்வாழ்த்துக்கள். தார்மீக (ரிலிஜியஸ் விங்), சமூக சேவையில் (சோஷியல் விங்), டிரான்ஸ்போர்ட் விங் (போக்குவரத்து வர்க்கம்) மீட்டிங்கில் வந்திருக்கிறார்கள். சமூக சேவையில் ஏதாவது சேவைக்கான சாதனங்களை மக்களுக்குக் கொடுக்கின்றனர். ஏதாவது கொஞ்சம்

சேவை செய்கிறார்கள். ஏதாவது கொஞ்சம் ஏதாவது ஞான கருத்துக்கள் (பாயிண்ட்), ஏதாவது கொஞ்சம் பொக்கிஷம். எது பாபாவிடமிருந்து கிடைத்ததோ, அதைக் கொடுக்க வேண்டும். இந்த சமூக சேவை ஒவ்வொருவரும் செய்ய வேண்டும். வெறுங்கை யோடு யாரும் போகக்கூடாது. கொஞ்சமாவது உடன் எடுத்துச் செல்ல வேண்டும். ஏனென்றால் வள்ளலின் குழந்தைகள். எப்படியாவது, எந்த சாதனத்தின் மூலமாகமாவது அல்லது டைரக்ட் கனெக்ஷன் (நேரடி தொடர்பு) மூலமாக ஆனால் ஏதாவது கொஞ்சம் கொடுக்க வேண்டும். இந்த சமூக சேவை மற்றும் ஆன்மீக சேவை நாலா பக்கமும் பரவவேண்டும். எந்த விதி மூலமாகவாவது, ஒவ்வொருவர் வாயிலிருந்தும், நமக்கு மிக நல்ல சேவைக்கான சாதனம் கிடைத்திருக்கிறது என்று வெளி வர வேண்டும். மிக நல்ல பிராப்தி செய்வித்தார்கள். இவ்வாறு தற்சமயத்தில் மிகவும் தாகமுடையவர்களாகவும் இருக்கிறார்கள். ஆதலால் ஏதாவது கொஞ்சமாவது பிராப்தி கிடைக்கும்படி செய்து திருப்தியடையும்படி செய்ய வேண்டும். நல்லது.

ஒரு விஷயம் பாப்தாதா மீண்டும் கூறினார் -லிஸ்ட் கொண்டு வர வேண்டும். எந்த ஒரு விங்க்'லிருந்தும் (வர்க்கம்) லிஸ்ட் வரவில்லை. நீங்கள் அவர்களுடைய லிஸ்ட் எழுதுங்கள். அதில் அவர்கள் அடைந்த பிராப்தி பற்றிய அனுபவத்தையும் சுருக்கமாக கூடவே எழுதுங்கள். இங்கே வரும்போது இப்படி இருந்தது. இந்த பிராப்தி கிடைத்தது என்று சொல்கிறார்கள் அல்லவா! ஆனால் எந்த பிராப்தி கிடைத்ததோ. அது கூடவே இருந்ததா? அதை அதிகப்படுத்தினார்களா? பாப்தாதா பார்த்தார். எந்த ஒரு விங் ஆக இருந்தாலும், டிரான்ஸ்போர்ட் அல்லது தார்மீக விங் ஆக இருந்தாலும் சரி. எப்போது புரோகிராம் செய்கிறீர்களோ அப்போது தொடர்பில் வருகிறார்கள். அவர்களை தொடர்ந்து, தொடர்பில் வைத்துக் கொண்டேயிருக்க வேண்டும். இப்படி நடப்பதில்லை. எப்போது மீண்டும் புரோகிராம் நடக்கிறதோ அப்போது கடிதம் அனுப்புகிறார்கள். அழைப்பிதழ் அனுப்புவார்கள். மீண்டும் வாருங்கள் என்று அழைப்பார்கள். பாப்தாதா வெளிநாட்டு சமாச்சாரம் ஒன்று கேள்விப்பட்டார். கால் ஆ்ஃப் டைம் (காலத்தின் அழைப்பு) என்ற புரோகிராம் செய்கிறார்கள். அதில் யாரெல்லாம் வருகிறார்களோ அவர்களுக்கு பிடித்தமுள்ளதாக இருக்கிறது. ஆர்வம் உண்டாகிறது. தொடர்பு உண்டாகிறது. அவர்களை உறவில் வைத்துக் கொள்வதற்காக,

அவ்வப்போது தொடர்ந்து, வாரம் ஒருமுறை ஏதாவது அனுப்பிக் கொண்டேயிருக்கிறார்கள். இப்படி நீங்கள் அவர்களைப் பின் தொடருவதில்லை. 6-மாதங்களுக்குப் பிறகு ஒரு ஆண்டுக்குப் பிறகு, நினைவுக்கு வந்தால், வரும். தொடர்பு வைத்தால், ஆகி விடும் ஆனால் ஒவ்வொருவருடைய முகவரிக்கு, வாரத்தில் ஒரு முறை ஏதாவது அனுப்ப வேண்டும். இதன் மூலமாக அவர்களுக்கு பிடித்தமுள்ளதாக இருக்கிறது. ஆர்வம் உண்டாகிறது. தொடர்பு உண்டாகிறது. அவர்களை உறவில் வைத்துக் கொள்வதற்காக, அவ்வப்போது, தொடர்ந்து, வாரம் ஒரு முறை ஏதாவது அனுப்பிக் கொண்டேயிருக்கிறார்கள். இப்படி நீங்கள் அவர்களைப் பின் தொடருவதில்லை. 6-மாதங்களுக்குப் பிறகு ஒரு ஆண்டுக்குப் பிறகு நினைவுக்கு வந்தால், வரும், தொடர்பு வைத்தால், ஆகி விடும் ஆனால், ஒவ்வொருவருடைய முகவரிக்கு, வாரத்தில் ஒருமுறை ஏதாவது அனுப்ப வேண்டும். இதன் மூலமாக அவர்களுக்கு பாலனை நடக்கும். பாலனை செய்யாமல் விருக்ஷம் பெரிதாக வளருமா? ஆதலால் இதைச் செய்ய வேண்டும். ஒவ்வொரு விங்'ம், புரோகிராம் மட்டுமல்ல, அவர்களுடைய முன்னேற்றமும் செய்ய வேண்டும். அருகாமையில் வந்து கொண்டேயிருக்கட்டும். மேலும் இந்த ரிசல்ட் உங்களிடம் வைத்துக் கொண்டேயிருங்கள். இந்த ஆண்டில் எத்தனைபேர் நெருக்கமான உறவில் வந்திருக்கிறார்கள் என்று. புரிந்ததா? கேட்டீர்களா? நல்லது. வெளிநாட்டின் ரிசல்ட் நன்றாக இருக்கிறது. இதைச் செய்து கொண்டேயிருப்பார்கள் ஆனால் பாப்தாதாவிடம் ரிசல்ட் வரவில்லை. மற்றபடி நன்றாக இருக்கிறது. எப்போது வர்க்க சேவை நடந்ததோ, அப்போதிருந்து தொடர்பில் நிறைய பேர் வந்தனர். மேலும் பரிவர்த்தனையும் வந்திருக்கிறது. முதலில் அழைக்க வேண்டிய தாயிருந்தது. இப்போது அழைக்காமலேயே. தாங்களாகவே வரவிரும்புகிறார்கள். வித்தியாசம் இருக்கிறதல்லவா? ஆனால் இதன் ரிசல்ட் முழு பரிவாரத்தித்றகும் தெரிய வேண்டும். ஓரிருவருடைய ரிசல்ட் பார்த்து ஆர்வம் உண்டாகும். ஒருவர் சொல்வதைக் கேட்டு, நாமும் கூட செய்ய முடியும் என்று நினைப்பார்கள். தைரியமும் வரும். மற்றபடி பாப்தாதா குஷியாக இருக்கின்றார். ஒவ்வொரு வர்க்கத்தினருச் கம், வெவ்வேறு டிபார்ட்மெண்ட் இருப்பதன் காரணமாக, விதவிதமான சேவையும், சேலையில் புதுமையும் முன்னேற்றமும் உண்டாகிறது. ஆகையால் எல்லா வர்க்கதினருக்கும். சேவைக்காக வாழ்த்துக்களும் மேலும்

முன்னேறுவதற்காக இன்னும் கூட சாதனங்களை உருவாக்கினால் பிரத்யக்ஷபலன் கிடைக்கும். கடைசியில் எல்லா வர்க்கத்தினரும் ஒன்று சேர்ந்து சொல்ல வேண்டும். நாம் எல்லோரும் ஒரு தந்தையினுடையவர்களாகி விட்டோம். இந்த உலக மேடையில் ஒன்றாக இருக்கிறோம். ஒரு வழிப்படி நடக்கிறோம். ஒருவருடையராகி விட்டோம். இந்த சப்தம் பரவட்டும். ஒருவருடையவராகவும் இருக்கிறோம் என்று சொல்லட்டும். மற்றபடி சேவை செய்திருக்கிறீர்கள். அதற்கு வாழ்த்துக்கள்.. நல்லது.

**கைடு குரூப் (CAD GROUP) கூட வந்திருக்கிறது:** இதில் பிராமணரும் கூட இருக்கிறார்கள். பயன்படுத்திக் கொண்டார்கள். ஆகவே நல்ல மனம் படைத்தவர்கள். திலாராமைப் புரிந்து கொண்டார்கள். ஆகையால் திலாராமைப் புரிந்து கொண்டதால் மனம் குஷியடைந்து விட்டது. மேலும் நன்றாக இருக்கிறது. எவ்வளவுக்கெவ்வளவு உங்கள் கூட இருப்பவர்களுக்கு அனுபவம் கூறுவீர்களோ, அவ்வளவு சேவை பரவிக் கொண்டேயிருக்கும். ஏனெனில், பிரத்யக்ஷ பிரமாணம் இருக்கிறதல்லவா? நீங்கள் சுயமாகவே பிரத்யக்ஷ பிரமாணமாக இருக்கிறீர்கள். ஆதலால் யாராயிருந்தாலும் நீங்கள் பிரத்யக்ஷ பிரமாணமாக இருப்பதைப் பார்த்து குஷியடைந்து விடுகிறார்கள். தைரியம் உண்டாகிறது. ஆகவே யார் உங்கள் தொடர்பில் வந்தாலும் உங்கள் அனுபவத்தை அவர்கள் மூலமாகவும் பரப்பிக் கொண்டேயிருங்கள். ஏனெனில் அவசியம் இருக்கிறது. வறுமை அதிகரித்துக் கொண்டேயிருக்கிறது. மேலும் வறுமை யுள்ள நேரத்தில் எளிதான உதவி கிடைத்தால் குஷியடைந்து விடுவார்கள். ஆகவே நல்லது. இவ்வாறாக அவ்வப்போது செய்து கொண்டிருக்கிறீர்கள். இனிமேலும் கூட செய்து கொண்டேயிருங்கள். நல்லது. வாழ்த்துக்கள். நன்று.

**டிரெயினிங்கில் வந்திருக்கும் டீச்சர்களுடன்:** பயிற்சி பெற்றீர்கள். ரெம்பவும் நல்லது. நன்றாகச் செய்திருக்கிறீர்கள் ஆனால் பயிற்சிக்குப் பிறகு மனதில் எவ்வளவு பக்காவாக முத்திரை (ஸ்டாம்ப்) பதீத்தீர்கள்? சதா நிர்விக்னமாக இருந்து, மற்றவர்களையும் நிர்விக்னமாகச் செய்வீர்களா? இந்த உறுதிமொழி (வாய்தா) எடுத்துக் கொண்டிருக் கிறீர்களா? நிர்விக்னமாக இருப்பீர்களா? அல்லது இடையில் கொஞ்சம்,

கொஞ்சம் விக்னம் வருமா? நல்லது வந்தாலும் கூட விக்னத்தை பரிவர்த்தனை செய்யக்கூடிய சக்தியை அனுபவம் செய்கிறீர்களா? யார், பரிவர்த்தனை சக்தியை காரியத்தில் உபயோகித்து, பாப்தாதா அல்லது எந்த டீச்சர்கள் சேவை செய்வித்தார்களோ, அவர்களுக்கு பலனை காண்பிப்பீர்களா? இப்படி தைரியம், உள்ளவர்கள் கை உயர்த்துங்கள். மனதின் கையை உயர்த்தினீர்கள் அல்லவா? என்ன நடந்தாலும் சரி தந்தையைப் பார்க்க வேண்டும். மற்றவர்களிடமுள்ள விசேஷத்தைப் பாருங்கள் ஆனால் தந்தையைப் பின்பற்ற வேண்டும். நல்லது. இந்த குருப்பில் எத்தனை பேர் இருக்கிறார்கள்? (70-சகோதரிகள்), ஆகவே நீங்கள் எல்லோரும் உங்கள் டீச்சர் மூலமாக மதுபனுக்கு ரிசல்ட் எழுதி அனுப்பிக் கொண்டேயிருக்க வேண்டும். அடிக்கடி எழுதக்கூடாது. 15-நாட்களுக்கு ஒருமுறை டீச்சர் மூலமாக ஓ.கே. என்று எழுதுங்கள். போதும். சிறிய கார்டு அனுப்பினால் போதும், நீண்ட கடிதம் எழுதக்கூடாது. ஏற்கனவே கூறினேன் அல்லவா? ஒருவேளை ஏதாவது பலவீனம் வந்தாலும் கூட ஒ.கே. என்று எழுத்துக்கிடையே ஒரு லைன் போட்டால் போதும். ஆகவே இங்கிருந்து உங்களுக்கு நினைவூட்டுக்கடிதம் அனுப்பிக் கொண்டேயிருப்பார்கள். இப்போது 70-நிர்விக்ன ஆத்மாக்கள் ஆகி விட்டீர்கள் அல்லவா? நிர்விக்னமாக ஆக்கவும் செய்வீர்கள். எங்கே சென்றாலும், அங்கே நிர்விக்னமாக இருந்து, நிர்விக்னம் ஆக்குவீர்கள். தைரியம் இருக்கிறதல்லவா? நல்லது. ரிசல்ட் பார்க்க வேண்டும் ரிப்போர்ட் வந்து கொண்டேயிருந்தால் தெரிந்து விடும். நல்லது.

எல்லாவற்றையும் கேட்டீர்கள். இப்படிக் கேட்பது எளிதாக இருக்கிறதல்லவா? இதே போலவே, கேட்பதிலிருந்தும் விடுபட்டு, ஸ்வீட் சைலன்ஸ் ஹோம் (பரந்தாமம்) ஸ்திதியிலும் கூட அவ்வப்போது எவ்வளவு நேரம் வேண்டுமோ, அவ்வளவு நேரம். மாலிக் ஆகி, முதலாவது விசேஷம் மனதின் மாலிக் ஆகவே தான் மனதை வென்றவர், உலகை வென்றவர் ஆவார் என்று கூறப்படுகிறது. இப்போது கேட்டீர்கள். பார்த்தீர்கள். ஆத்மா ராஜாவாகி, மனம், புத்தி, சம்ஸ்காரத்தை கண்டல் வைக்க முடிகிறதா? மனம், புத்தி, சம்ஸ்காரம் என்ற இந்த மூன்றுக்கும் மாலிக் ஆகி ஆர்டர் செய்யுங்கள். ஸ்வீட் சைலன்ஸ், பிறகு அனுபவம் செய்யுங்கள். ஆர்டர் (கட்டளை) செய்வதன் மூலம் அதிகாரியாவதால் மூன்றும் தன் கட்டுப்பாட்டில்

இருக்கும். இப்போது அதிகாரி என்ற ஸ்டேஜில் (ஸ்திதியில்) நிலைத்து விடுங்கள். நல்லது.

நாலா பக்கமுள்ள சதா சுவமான் தாரி, சத்ய, சக்தி சொரூபமான, பவித்திரத்தாவின் ஸித்தி சொரூபமான, சதா நிலையாகவும், உறுதியாகவும், உள்ள ஸ்திதியினுடைய அனுபத்தில் சுய பரிவர்த்தக் மற்றும் விஷ்வ பரிவர்த்தக் (சுய மாற்றம் மற்றும் உலக மாற்றம்) சதா அதிகாரி ஸ்திதி மூலமாக சர்வ ஆத்மாக்களுக்கு பாபா மூலமாக அதிகாரத்தை வழங்கக்கூடிய நாலா பக்கங்களிலு முள்ள, பாப்தாதாவின் லக்கி மற்றும் லவ்லி ஆத்மாக்களுக்கு பரமாத்ம அன்பு மற்றும் உளமார ஆசிகளை ஸ்வீகாரம் செய்யுங்கள். மேலும் பாப்தாதாவின் இனிமையிலும் இனிமையான குழந்தைகளுக்கு நமஸ்தே.

தாதிகளுடன்: நல்லது. பாப்தாதா ரிசல்ட் பார்த்தார். நன்றாக இருந்தது. சுப சிந்தனை மற்றும் சுப சிந்தக் (சுபமான எண்ணமுடையவர் மற்றும் எல்லோருக்கும் நன்மையே உண்டாகட்டும் என்ற நல்லெண்ணமுள்ளவர்) ஆக இருக்க வேண்டும். வாயுமண்டலத்தை உருவாக்குவது மிகவும் நல்லது. நன்றாகச் செய்கிறீர்கள். நன்றாகவும் செய்கிறீர்கள். செய்து கொண்டேயிருப்பீர்கள். மெஜாரிட்டியாக இருக்கிறார்கள். நீங்கள் நிமித்தமாக இருக்கிறீர்கள். எல்லோரும் நிமித்தமாக இருக்கிறீர்கள். நீங்கள் யாரெல்லாம் நிமித்தமாக இருக்கிறீர்களோ, அவர்களுக்கு விசேஷமாக இந்த சமயத்தில் கவனம் வைக்க வேண்டும். திருப்தியுடன் இருக்க வேண்டும் தான் ஆனால் திருப்தியாக இருக்க வேண்டும். சூழ்நிலையிலும் திருப்தி இருக்க வேண்டும். இதற்காக உங்களிடம் ஏதாவது திட்டம் போட்டுக் கொண்டேயிருக்க வேண்டும். இந்த மூன்று பாண்டவர்களும் ரைட்டும்.

யாரெல்லாம் நிமித்தமாக இருக்கிறார்களோ, அவர்களுக்கு இந்த சமயத்தில் வாயுமண்டலம் (சூழ்நிலை) பிரமாணமாக சுயம் திருப்தியுடன் இருக்கத்தான் வேண்டும் ஆனால் திருப்திப்படுத்தவும் வேண்டும். திருப்தியில்லாத சூழ்நிலையின் பிராபவம் இருக்கக்கூடாது. ஏனென்றால், தற்சமயம் எல்லோருக்கும் திருப்தி வேண்டும் ஆனால் தைரியமில்லை. ஆதலால் அவ்வப்போது ஏதாவது கொஞ்சம்

வசமிழந்தவர்களாக காரியம் செய்து விடுகிறார்கள் ஆனால் அவர்களுக்கும் கூட கொஞ்சம் அறிவுரை, கொஞ்சம் மன்னிப்பு, கொஞ்சம் இரக்கம், கொஞ்சம் ஆத்மீக சிநேகம், அவர்களுக்கு அவசியமாயிருக்கிறது. மேலும் பார்க்கப்போனால், சூழ்நிலையில் மெஜாரிட்டி யினருக்கு பேலன்ஸ் வைத்து கொடுக்க வேண்டும். மேலும் நாலா பக்கமும் ஏதாவது திட்டம் நடந்து கொண்டேயிருக்கும்படியான அப்படிப்பட்ட ஒரு திட்டம் தயாரியுங்கள். எப்படி அவ்வப் போது பட்டிகள் செய்கிறீர்களல்லவா, அது நடந்து கொண்டேயிருக்கட்டும் ஆனால் சிறிதும், பெரிதுமான புரோகிராம்களும் சதா நடந்து கொண்டேயிருக்கட்டும். ஆகவே இப்படிப்பட்ட விதியைக் கண்டுபிடியுங்கள். இதன் மூலமாக நாலாபுறமும் வாயுமண்டலம் சக்திசாலியாகட்டும். விரும்புகிறீர்கள் ஆனால் தைரியம் குறைவாக இருக்கிறது. ஆகையால் உங்களுக்குள் சந்தித்து, ஏதாவது ஒரு மாதத்திற்காக எல்லோரும் பிளியாக இருக்கும்படியான ஒரு காரியம் செய்யுங்கள். ரிசல்ட் வந்து கொண்டேயிருக்கட்டும். மேலும் சோதித்துக் கொண்டேயிருக்கவும் வேண்டும். ஒருவேளை அப்படி செய்வதில்லை என்றால் என்ன காரணம்? அலஷியம் என்றால் அவர்கள் மீது அன்போடு உதவி செய்ய வேண்டியதாயிருக்கும். ஏனெனில், நேரம் தீவீர கதியில் நெருங்கி வந்து கொண்டிருக்கிறது. ஆதலால் அப்படிப்பட்ட ஒரு பிளான் தயார் செய்யுங்கள். ஏதாவது எல்லோரும் விரும்பக்கூடிய வகையில் ஒரு காரியம் உருவாக்கி, அதில் எல்லோரும் தொடர்ந்து ஈடுபாடு கொண்டிருக்கும்படி செய்யுங்கள். சரியா?

நல்லது. எல்லோரும் தைரியசாலிகள் தானே! தைரியம் குறைவதில்லையல்லவா? தைரியம் குறைகிறதென்றால், தந்தையின் உதவியும் கூட அனுபவம் ஆகாது. தந்தை உதவி செய்கின்றார் ஆனால் அதை தெரியாமல் விட்டுவிடுகிறார்கள். (கேச் செய்வதில்லை) ஆதலால் இதன் பயனை அடையாமல் இருக்கிறார்கள். ஆதலால் சதா தன்னைப் பாருங்கள். தைரியத்தை அதிகரியுங்கள். தைரியம் அதிகமாகிக் கொண்டேயிருக்கும் படியான ஏதாவது ஒரு விஷயத்தை புத்தியில் வைத்துக் கொண்டேயிருங்கள். தைரியம் அதிகமாகி விட்டால், அந்த தைரியத்திற்கெதிராக, மற்ற விஷயங்கள் வருவதும் குறைந்து விடும். நல்லது. இதைப் பற்றி யோசியுங்கள்.

சந்தேஷி தாதி சரீரத்தை விட்டுவிட்டார். அவருக்காக 'போக்' படைப்பதற்காக புவனேஷ்வரத்திலிருந்து குரூப் வந்திருக்கிறது: பாப்தாதாவினுடைய ரமணிகரமான குழந்தை எனலாம். அல்லது சந்தேஷியாகையால் தோழி எனலாம். இந்த சரீரத்தை விட்டுவிட்டு அட்வான்ஸ் பார்ட்டியில் சென்றிருக்கின்றார். தனது வாழ்க்கையை பாப்தாதாவுடன் சாகாரத்தில் (ஸ்தூலத்தில) நல்ல லாபம் எடுத்துக் கொண்டார். தோழியாக இருக்கும் பார்ட்டையும் செய்தார். விளையாடுபவராகவும் இருந்தார். மேலும் தனது நினைவு மூலமாக தன்னுடைய வருங்கால பாக்கியத்தையும் சேர்த்தார். இப்போது இக்காரியத்தில் துணையாக யாரெல்லாம் வந்திருக்கிறார்களோ அவர்கள் எழுந்திருங்கள். வந்திருப்பவர்கள் எல்லோரும். நல்லது. அன்பிற்கு கைமாறு செய்து விட்டாரல்லவா? இன்னும் கூட அன்பின் அடையாளம் தெரியும். எல்லோரும திருப்தியாயிருந்து, திருப்திப்படுத்த வேண்டும். அதைரியசாலிகளுக்கு (தைரியமில்லாதவர்களுக்கு) தைரியம் கொடுத்துக் கொண்டேயிருக்க வேண்டும் மேலும் செய்து கொண்டேயிருப்பீர்கள். எல்லோரும் நலம் தானே! கை அசையுங்கள்! நன்று.

தாதி ஜானகிஜி பாப்தாதாவுக்கு போக் ஸ்வீகாரம் செய்வித்துக் கொண்டிருக்கின்றார், பாப்தாதா கூறினார்: பாருங்கள். நல்ல தாதிகள் கிடைத்திருக்கிறார்கள் அல்லவா: இவர்கள் எல்லோரும் துணைவர் களும் ஆவார்கள். தாதிகளுக்கு தோழிகளாகவும், இருக்கிறார்கள். தாதிகளாகவும் இருக்கிறார்கள். ஆகவே சதா ஒவ்வொரு தாதிக்கும். ஒவ்வொரு தோழியினுடைய விசேஷத்தைப் பார்த்து விசேஷத்தைக் காரியத்தில் கொண்டு வர வேண்டும். ஏனெனில் பாப்தாதா ஒவ்வொரு குழந்தைக்கும் ஏதாவதொரு விசேஷத்தை சிறப்பாக (ஸ்பெஷலாக) கொடுத்திருக்கின்றார். உங்கள் எல்லோருக்கும். கூட உண்டு. தாதிகளுக்கு மட்டுமே கொடுக்கப்படவில்லை. உங்களுக்கும் உண்டு ஆனால், என்னவென்றால், சிலர் விசேஷத்தைக் காரியத்தில் கொண்டுவராமலிருந்தால் அது குப்தமாகவே (வெளியில் தெரியாமலேயே) இருந்து விடுகிறது. மற்றபடி விசேஷம் என்பது எல்லோரிடமும் இருக்கிறது. சிறியவரிலும், சிறயவராயிருந்தாலும், காலாட்படை வீரர்களையும் விட குறைவானவர்களாகயிருந்தாலும், அவர்களிடமும் விசேஷம் இருக்கிறது. அவரும் கூட நீங்கள் மகாரதி

என்று நினைவூட்டுகிறார். நீங்கள் மகான். நான் சாதாரண மாணவன் என்று. ஆதலால் குழுவை எல்லா இடங்களிலும் பலப்படுத்தி வையுங்கள். இரண்டு பேர் இருந்தாலும் சரி. 4 பேர் இருந்தாலும் சரி. 12 பேர் இருந்தாலும் சரி. இரண்டு பேர் இருக்குமிடத்திலும் பலமாக இருக்க வேண்டும். இதற்காக இருவரும் ஒரு வழிப்படி நடப்பவர்களாக இருக்க வேண்டும். சுபாவத்தை ஒருவருக்கொருவர் சிரேஷ்டமாக்கிக் கொள்ள வேண்டும். இணக்கமுள்ளதாக இருக்க முயற்சி செய்ய வேண்டும். எப்படி தாதியை நினைவு செய்கிறீர்கள் அல்லவா? ஏன் நினைவு செய்கிறீர்கள்? அவருடைய விசேஷம் எல்லோரையும் தன்னுடையவர் ஆக்கிக் கொண்டார். இப்படி இருந்தாரல்லவா? எல்லோரும் நம்மவர் என்று பாராட்டினார் அல்லவா? ஆகவே நீங்களும் கூட அப்படி இருக்க முடியாதா? எப்படி எல்லோருமே அனுபவம் செய்தார்கள் - எங்கள் தாதி என்று. மதுபன் தாதி என்றல்ல. எங்கள் தாதி. இதேபோல எல்லா பிராமணர்களும், ஒருவருக்கொருவர் நம்மவர் என்ற அனுபவம் செய்யட்டும். இப்படித்தான் தாதியை நினைவு செய்ய வேண்டும். இதற்குத்தான் நினைவு என்று சொல்லப்படுகிறது. சமான் ஆக வேண்டும். விசேஷத்தை தாரணை செய்ய வேண்டும். இது தான் நினைவு செய்வது என்பது, சரி தானே! ஒவ்வொருவரும் இப்படித்தான் நினைக்க வேண்டும். எல்லோரும் நம்பர் என்று. மற்றவர்களுக்கும் இந்த' நம்மவர் என்ற அனுபவம் ஏற்பட வேண்டும். இவர் யாரோ, தெரியவில்லையே என்பதாக இருக்கக் கூடாது. ஒரு பரிவாரம் (குடும்பம்) அல்லவா! தாதியும் கூட எல்லா சென்டர்களிலும் இருக்கவில்லை தானே! ஒரே இடத்தில் மதுபனில் தான் இருந்தார் ஆனால் எல்லோருக்கும் நம்மவர் என்ற அனுபவத்தைக் கொடுத்தார். ஆகவே நீங்கள் எல்லோரும் கூட தங்கள் தங்கள் இடத்தில் இருந்தவாறே. நம்மவர் என்ற அனுபவம் கொடுக்க முடியும். இது மனதின் ஸ்திதி. கூடவே இருந்தால் தான் என்ற விஷயம் அல்ல. இது உள்ளத்தின் வைப்ரேஷன், நம்மவர் என்ற உறவைக் கொண்டு வருகிறது. நல்லது.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋
❋❋❋❋❋

## 15.12.2007 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# காலத்தின் மகத்துவம் அறிந்து, கர்மத்தின் ஆழமான விளைவுகளை கவனத்தில் வைத்திருங்கள், நஷ்டமோஹா, எவர் ரெடி ஆகுங்கள்!

இன்றைக்கு அனைத்து பொக்கிஷங்களின் வள்ளல், ஞானம் எனும் பொக்கிஷம், சக்திகள் எனும் பொக்கிஷம், சர்வ குணங்கள் எனும் பொக்கிஷம், சிரேஷ்ட எண்ணங்கள் எனும் பொக்கிஷங்களை வழங்கக்கூடிய பாப்தாதா. நாலா பக்கமுமுள்ள தன்னுடைய பொக்கிஷங்களுக்கு பாலக்காகவும் (குழந்தை தன்மை) மாலிக்காகவும் (எஜமான்) இருக்கின்ற அதிகாரி குழந்தைகளைப் பார்க்கின்றார். அளவற்ற பொக்கிஷங்களின் எஜமானாகிய தந்தை எல்லா குழந்தைகளையும், எல்லா பொக்கிஷங்களாலும் நிரம்ப செய்கின்றார். ஒவ்வொரு குழந்தைக்கும் எல்லா பொக்கிஷங்களையும் அளிக்கின்றார். சிலருக்கு குறைவாகவும், சிலருக்கு அதிகமாகவும் அளிப்பதில்லை. ஏனெனில் பொக்கிஷங்கள் அளவற்றதாக இருக்கின்றன. நாலா பக்கங்களிலுமுள்ள குழந்தைகள் கண்களில் அடங்கியிருக்கின்றனர். எல்லா பொக்கிஷங்களாலும் நிரம்பி மகிழ்ச்சியாகவும் இருக்கின்றனர்.

தற்காலத்தின் கணக்குப்படி எல்லா பொக்கிஷங்களைவிட, விலைமதிக்க முடியாத சிரேஷ்ட பொக்கிஷமாக இருப்பது புருஷோத்தம சங்கமயுக காலமாகும். ஏனெனில், இந்த சங்கமயுகத்தில் தான் முழு கல்பத்திற்கான பாக்கியத்தை சம்பாதிக்க முடியும். இந்த சிறு யுகத்தின் ஒரு நொடியில் அடையக்கூடிய பேறுகள் மற்றும் பாக்கியத்தின் அடிப்படையில், ஒரு நொடியின் மதிப்பு ஒரு ஆண்டுக்கு சமமாக உள்ளது. இவ்வளவு விலை மதிக்க முடியாத நேரமாக இருக்கிறது. இந்த நேரத்தினுடைய மகிமை தான் இப்போதில்லையேல்.

வேறு எப்போதுமில்லை என்ற மகிமைக்குரியதாக இருக்கிறது. ஏனெனில் இந்த சமயத்தில் தான் நாடகத்தில் பரமாத்மாவின் பங்கும் நிச்சயமாகியிருக்கிறது. ஆகவே தான் இந்த நேரம் வைரத்திற்குச் சமமானது என்று சொல்லப்படுகிறது. சத்யுகம் பொன்னான யுகம் என்று தான் அழைக்கப்படுகிறது ஆனால் இந்த நேரமோ, நேரமும் வைரத்திற்குச் சமமாக இருக் கின்றது. குழந்தைகளாகிய நீங்கள் எல்லோரும் கூட வைரத்திற்குச் சமமான வாழ்க்கையின் அனுபவமுள்ள ஆத்மாக்களாகவும் இருக்கின்றீர்கள். இந்த சமயத்தில் தான் வெகுகாலமாக காணாமற்போயிருந்த ஆத்மாக்கள் பரமாத்மாவுடன் சந்திப்பு பரமாத்மாவின் அன்பு, பரமாத்ம ஞானம் பரமாத்மாவின் பொக்கிஷங்களை அடைவதற்கு அதிகாரியாகின்றார்கள். முழு கல்பத்தில். தேவாத்மாக்கள். மகான் ஆத்மாக்கள் தான் இருக்கின்றார்கள் ஆனால் இந்த சமயத்திலோ, பரமாத்மாவின் ஈஸ்வரிய பரிவாரம் (குடும்பம்) ஆதலால் தற்சமயத்தில் இந்த சமயத்திற்கு எவ்வளவு மகத்துவம் இருக்கிறதோ. அந்த மகத்துவத்தை அறிந்து தங்களை எவ்வளவு சிரேஷ்டமானவர்களாக ஆக்கிக் கொள்ள விரும்புகிறீர்களோ, அவ்வளவு ஆக்கிக் கொள்ள முடியும். நீங்கள் எல்லோரும் கூட. இந்த மகான் யுகத்தின், பரமாத்ம பாக்கியத்தை அடையக்கூடிய பதமாபதம் பாக்கியவான்கள் தானே! இவ்வாறாக, தங்களுடைய சிரேஷ்ட பாக்கியத்தின் ஆன்மீக போதை மற்றும் பாக்கியத்தை அறிந்தவர்களாக அனுபவம் செய்து கொண்டிருக்கிறீர்கள் அல்லவா? குஷியாக இருக்கிறதல்லவா? உள் திலிருந்து என்ன பாட்டு பாடுகிறீர்கள்? ஆஹா என்னே என் பாக்கியம் என்று தானே ஏனென்றால் இந்த சமயத்தில் அடைகின்ற சிரேஷ்ட பாக்கியத்தைப்போல வேறு எந்த யுகத்திலும் இப்படிப்பட்ட சிரேஷ்ட பாக்கியம் அடைய முடியாது அப்படியானால் கூறுங்கள், சதா தன்னுடைய பாக்கியத்தை நினைவில் வைத்து. மகிழ்ச்சியடைகிறீர்கள் அல்லவா? அடைகிறீர்களா யார் நாங்கள் எப்போதும் மகிழ்ச்சியாகவே இருக்கிறோம் என்று கருதுகின்றார்களோ. அவ்வப்போது மட்டும் அல்ல, சதா மகிழ்ச்சியோடிருப்பவர்கள் கை உயர்த்துங்கள். சதா, சதா... (சதா - எப்போதும் என்பதை கோடிட்டுக் கொள்ளுங்கள்). இப்போது டி.வியில் உங்கள் போட்டோ வருகிறது. வாழ்த்துக்கள்! தாய்மார்களும் கை உயர்த்தலாம். சக்திகளும் உயர்த்தலாம் டபுள் ஃபாரினர்ஸ் , ! எந்த ஒரு

வார்த்தையை நினைவில் வைப்பீர்கள்? சதா, அவ்வப்போது மட்டுமே என்று சொல்பவர்கள் இனி மேல் தான் வரப்போகிறார்கள்.

பாப்தாதா இதற்கு முன்னரும் கூறியிருக்கின்றார். நேரத்தின் வேகம் மிகவும் தீவிர கதியில் முன்னேறிச் சென்று கொண்டிருக்கிறது. சமயத்தின் வேகத்தை அறிந்து கொண்டிருக்கின்ற, மாஸ்டர் சர்வ சக்திவானாகிய நீங்கள் உங்களுடைய வேகம் தீவிரமாக இருக்கிறதா என்று சோதித்துப் பாருங்கள். முயற்சி (புருஷார்த்தம்' எல்லோருமே செய்து கொண்டிருக்கிறார்கள் ஆனால் பாப்தாதா என்ன பார்க்க விரும்புகின்றார்? ஒவ்வொரு குழந்தையும் தீவிர புருஷ்ாரத்தி ஒவ்வொரு பாடத்திலும் பாஸ் வித் ஹானர் மதிப்புடன் தேர்ச்சி ஆக இருக்கின்றார்களா அல்லது பாஸ் (வெற்றி) மட்டும் தானா? தீவிர புருஷாரத்திகளின் விசேஷம் இரண்டு. ஒன்று நஷ்டமோஹா, இரண்டாவது எவர்ரெடி. எல்லாவற்றிலும் முதன்மையானது நஷ்டமோஹா. இது தேக அகம்பாவம் மற்றும் தேக அபிமானத்தில் இருந்தால் மற்ற விஷயங்களில் நஷ்ட மோஹா எந்த ஒரு பற்றுதலும் இல்லாதிருப்பது) ஆவது எந்த ஒரு கஷ்டமுமில்லை. தேக அகம்பாவத்தின் அடையாளம்; வேஸ்ட் (தேவையில்லாத) வீண் சங்கல்பம், சமயத்தை வீணாகக் கழிப்பது. இதனை சுயமாகவே மிக நன்றாக சோதித்துப் பார்க்க முடியும். சமயம் சாதாரணமாகக் கழிந்தாலும், இதுவும் கூட நஷ்டமோஹா ஆகவிடாது. ஆதலால் ஒவ்வொரு வினாடியும், ஒவ்வொரு சங்கல்பமும். ஒவ்வொரு செயலும் பயனுள்ளதாக இருந்ததா? என்று சோதித்துப் பாருங்கள். ஏனெனில் சங்கம யுகத்தில் வெற்றி உங்களுடைய பிறப்புரிமை என்று தந்தையின் வரதானம் இருக்கிறது. ஆகவே உரிமை எளிதாகவே அனுபவம் செய்விக்கிறது. அடுத்து எவர் ரெடி எவர் ரெடி என்பதன் பொருள். மனம், சொல், செயல், சம்மந்தம். தொடர்பு ஆகியவற்றில் காலத்தின் கட்டளையின் பேரில் திடீரென ஏதாவது நடக்குமானால் அப்போது எவர் ரெடியாக இருப்பது. மேலும் திடீரென்று நடக்கக்கூடியதாகவும் இருக்கிறது. எப்படி உங்களுடைய தாதியைப் பார்த்தீர்கள் அல்லவா? திடீரென்று எவர்ரெடி ஆகி விட்டார். ஒவ்வொரு சுபாவத்திலும், ஒவ்வொரு காரியத்திலும் இலகுவாக இருந்தார். தொடர்பில் ஈஸி (சுலபமாக), சுபாவத்தில் ஈஸி. சேவையில் ஈஸி திருப்திப் படுத்துவதில் ஈஸி, திருப்தியாயிருப்பதில் ஈஸி ஆகவே தான்

பாப்தாதா சமயம் நெருங்கிக் கொண்டிருக்கிறது என்று அடிக்கடி ஜாடையாக நினைவுப்படுத்திக் கொண்டேயிருக்கின்றார். சுய புருஷார்த்தத் திற்கான நேரம் மிகக்குறைவானதாக இருக்கிறது. ஆதலால் உங்களுடைய சேமிப்புக் கணக்கை சோதித்துப் பாருங்கள். பொக்கிஷங்களைச் சேமிப்பதற்கான மூன்று விதிகளை ஏற்கனவே கூறியிருக்கின்றேன். மீண்டும் கூறுகின்றேன். இந்த மூன்று விதிகளை சுயம் சோதியுங்கள். ஒன்று சுய முயற்சியின் மூலம் பாக்கியம் எனும் பொக்கிஷத்தை (பிராலப்த்) சேமிப்பது, அதாவது பாபாவிடமிருந்து அடைந்த பிராப்திகள் எனும் பொக்கிஷத்தை சேமிப்பது. இரண்டாவது: திருப்தியுடன் இருப்பது.. இதிலும் கூட சதா (எப்போதும்) என்ற வார்த்தையை சேர்க்கவும். எல்லோரையும் திருபதிப்படுத்துவது. இதன் மூலம் புண்ணியக் கணக்கு சேமிப்பாகிறது. மேலும் இந்தப் புண்ணியக் கணக்கு அநேக ஜன்மங்களுக்கான பாக்கியத்திற்கு ஆதாரமாக இருக்கிறது. மூன்றாவது சதா சேவையில் களைப்பில்லாமல் இருப்பது. சுய நலமில்லாமல் செய்வது மற்றும் பெரிய மனதுடன் சேவை செய்வது, இதன் மூலமாக யாருக்கு சேவை செய்கிறீர்களோ அவர்களிடமிருந்து தானாகவே ஆசிகள் கிடைக்கின்றது. இந்த மூன்று விதிகள். சுயத்திற்கான புருஷாரத்தம் - புண்ணியம் மற்றும் ஆசிகள். இந்த மூன்று கணக்கும் சேமிப்பாகியிருக்கிறதா? இதை சோதித்துப் பாருங்கள். ஏனெனில், திடீரென எந்த ஒரு சோதனை வந்தாலும் ஏனெனில் தற்கால சூழ்நிலைப்படி சமயத்தை அனுசரித்து இயற்கை சீற்றத்தின் காரணமாக சிறுசிறு இடையூறுகள் எப்போது வேண்டுமானாலும் வரலாம். ஆகையால் கர்மத்தின் விளைவுகளைப் பற்றிய ஞானம் விசேஷ கவனத்தில் இருக்க வேண்டும். கர்மத்தின் விளைவுகள் மிக ஆழமானது. எப்படி நாடகம் என்பதில் கவனம் இருக்கிறதோ. இதுபோல கர்மத்தின் விளைவுகளைப் பற்றியும் கவனம் அவசியமாகிறது. சாதாரண கர்மம். சாதாரண சமயம், சாதாரண சங்கல்பம் ஆகியவற்றின் காரணமாக பாக்கியத்தில் (பிராலப்த்) வித்தியாசம் ஏற்பட்டுவிடுகிறது. இந்த சமயத்தில் நீங்கள் எல்லோரும் யார் புருஷாரத்திகளாக இருக்கின்றீர்களோ, அவர்கள் சிரேஷ்டமான விசேஷமான ஆத்மாக்கள். சாதாரண ஆத்மாக்கள் அல்ல. விஷ்வ கல்யாணத்தில் நிரந்தரமாக விஷ்வ பரிவர்த்தனையில் நிமித்தமாக ஆகியிருக்கும் ஆத்மாக்களாக இருக்கின்றீர்கள். நீங்கள் உங்களை மட்டுமே பரிவர்த்தனை செய்து கொள்பவர்கள் அல்ல. விஷ்வ

பரிவர்த்தனையிலும் பொறுப்புள்ளவர்கள். ஆதலால் உங்களுடைய சிரேஷ்ட சுவமானில் நினைவு சொரூபமாக ஆகியே தீர வேண்டும்.

பாப்தாதா பார்த்தார். எல்லோருக்கும் பாப்தாதாவின் மீதும். சேவையின் மீதும் நல்ல அன்பு இருக்கிறது. சேவையின் சூழ்நிலை நாலா பக்கமும், ஏதாவதொரு திட்டத்தின்படி நடந்து கொண்டிருக்கிறது. இத்தோடு கூடவே கால நிலைகாரணமாக எந்த ஆத்மாக்கள் துக்கத்திலும், அசாந்தியிலும் இருக்கின்றார்களோ, அந்த ஆத்மாக்களை துக்கத்திலிருந்தும், அசாந்தியிலிருந்தும் விடுவிப்பதற்காக தனது சக்திகள் மூலமாக உதவி செய்யுங்கள். எப்படி சூரியன் தனது கிரணங்கள் மூலமாக இருளைப் போக்கி வெளிச்சத்தைக் கொடுக்கின்றது, மேலும் தனது கிரணங்களின் சக்தி மூலமாக அநேக பொருட்களை மாற்றம் செய்து விடுகிறது. அதுபோல மாஸ்டர் ஞான சூரியனாகிய நீங்கள் அடைந்த பிராட்திகள் மூலமாக சுகமும், சாந்தியும் நிறைந்த கிரணங்கள் மூலம் சக்தியைக் கொடுத்து, துக்கம், அசாந்தியிலிருந்து விடுதலை கொடுங்கள். மனம் மூலமாகவும். சக்தி நிறைந்த உள்ளுணர்வு (விருத்தி) மூலமாகவும், வாயுமண்டலத்தை (சூழ்நிலையை) பரிவர்த்தனை செய்யுங்கள். ஆதலால் இப்போது மனசா சேவை செய்யுங்கள். எப்படி வாய் மூலமான சேவை விஸ்தாரமாகச் செய்தீர்களோ. அதுபோல மனோ சக்தி மூலம் ஆத்மாக்களில் நீங்கள் சொற்பொழிவுக்காக தலைப்பு கொடுத்திருக்கிறீர்கள் அல்லவா? மகழ்ச்சி மற்றும் நம்பிக்கை (ஹேப்பி மற்றும் ஹோப்). இதனைப் பரப்புங்கள். தைரியம் கொடுங்கள். ஊக்கம், உற்சாகத்தைக் கொடுங்கள். தந்தையின் ஆஸ்தி என்ற இந்த விஷயங்கள் மூலமாக முக்தியாவது கொடுங்கள். இப்போது சக்தி கொடுப்பதற்கான அவசியம் அதிகமாக இருக்கிறது. இந்த சேவையில் மனதை சுறுசுறுப்பாக வைத்திருங்கள். அப்போது மாயாஜீத், விஜயி ஆத்மாவாக தானாகவே ஆகி விடுவீர்கள். மற்றபடி சிறுசிறு விஷயங்கள் சைடுசீன். (அக்கம் பக்கத்துக் காட்சிகள்) சில நல்லதாகவும் இருக்கும். சில கேடானதாகவும் இருக்கும். ஆதலால் சைடுசீனை கடந்து சென்று, லஷியத்தை அடைய வேண்டியதாயிருக்கும். சைடுசீன் பார்ப்பதற்கு சாட்சியாயிருந்து பார்க்கும் ஆசனத்தில் நிலையாக அமர்ந்திருங்கள். அவ்வளவு தான், இப்படி அமர்ந்திருந்து பார்த்தீர்களானால் சைடுசீன் மன மகிழ்ச்சி அளிக்கக்கூடியதாக ஆகி விடும் அப்படியானால் எவர்ரெடியாக

இருக்கிறீர்கள் அல்லவா? நாளைக்கே, ஏதாவது நடந்தாலும் எவர்ரெடி தானே முதல் வரிசையில் அமர்ந்திருப்பவர்கள் தயாராக இருக்கிறீர்களா? நாளை நடப்பதாக இருந்தாலும் சரி? டீச்சர்கள் தயாராக இருந்தால் சரி தான். வர்க்க சேவையிலிருப்பவர்கள் தயாரா? எத்தனை வர்க்கத்தைச் சேர்ந்தவர்களானாலும் எவர் ரெடி தானே! சிந்திக்க வேண்டும். பாருங்கள். தாதிகள், பார்க்கிறீர்களா? எல்லோரும் கை அசைக்கிறார்கள். நல்லது. வாழ்த்துக்கள். ஒருவேளை கொஞ்சம் தயாராக இல்லையென்றாலும் கூட, இரவுக்குள் ஆகி விடவேண்டும். ஏனெனில், சமயம் உங்களை எதிர்ப்பார்த்துக் கொண்டிருக். கிறது. பாப்தாதா முக்தி வாசலைத் திறப்பதற்காக எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றார் அட்வான்ஸ் பார்ட்டி உங்களை அழைக்கிறது. என்ன செய்ய முடியாது? மாஸ்டர் சர்வ சக்திவானாக இருக்கிறீர்கள் அல்லவா? இதைச் செய்ய வேண்டும். இதைச் செய்யக் கூடாது என்று திட சங்கல்பம் கூடாது என்று விலக்கி விடுங்கள். மாஸ்டராக இருக்கிறீர்கள் அல்லவா? நல்லது.

சரி. இப்போது முதல் முறையாக யாரெல்லாம் வந்திருக்கிறீர்கள்? யார் முதல் முறையாக வந்திருக்கிறார்களோ. அவர்கள் கை உயர்த்துங்கள். கையை உயரமாகத் தூக்குங்கள். அசையுங்கள், இவ்வளவு பேர் வந்திருக்கிறார்கள். நல்லது. யாரெல்லாம் முதன் முறையாக வந்திருக்கிறார்களோ. அவர்களுக்கு நூறு மடங்கு வாழ்த்துக்கள்! வாழ்த்துக்கள்! பாப்தாதா வுக்கு குஷியாக இருக்கிறது. கல்பத்திற்கு முன் இருந்தவர்கள் தங்கள் பரிவாரத்தோடு வந்து சேர்ந்து விட்டார்கள். ஆதலால் பின்னால் வந்திருப்பவர்கள் அற்புதம் (கமால்) செய்து காட்ட வேண்டும். பின் தங்கி விடக்கூடாது. பின்னால் வந்திருக்கிறீர்கள் ஆனால் பின்னாலேயே இருந்து விடக்கூடாது. முன்னே. முன்னிலையில் இருக்க வேண்டும். இதற்காக தீவிரமாக புருஷார்த்ததம் செய்ய வேண்டியதாக இருக்கும் தைரியம் இருக்கிறதா? இருக்கிறதா தைரியம்? நல்லது. தைரியம் குழந்தைகளினுடையது. உதவி பாப்தாதா மற்றும் பரிவாரத்தினருடையது. நல்லது. ஏனெனில், குழந்தைகள் வீட்டின் அலங்காரம். ஆதலால் யாரெல்லாம் வந்திருக்கிறீர்களோ அவர்கள் எல்லாம் மதுவனத்தின் அலங்காரம் நல்லது.

சேவைக்கான வாய்ப்பு, போபால் ஜோன்: நல்லது நிறையப் பேர் வந்திருக்கிறார்கள். (கொடிகளை அசைக்கிறார்கள்). நல்லது பொன்னான வாய்ப்பு (கோல்டன் சான்ஸ்) கிடைக்கிறது. யாரெல்லாம் இந்த சேவையில் நிமித்தமாக வந்திருக்கிறார்களோ, இதன் மூலமாக சேவை செய்ததன் பலம் பலன் அதீந்திரிய சுகம் அனுபவம் கிடைத்திருக்குமல்லவா? அனுபவம் செய்தீர்களா? செய்தீர்களா? சரி, இப்போது ஆம் என்று சொல்பவர்கள் கொடியசைத்துக் காண்பியுங்கள். யார் அனுபவம் செய்தார்களோ அவர்கள். நல்லது. இப்போது அதீந்திரிய சுகம் அனுபவம் செய்தீர்கள். இது எப்போதும் இருக்குமா? அல்லது கொஞ்ச நாட்கள் மட்டும் இருக்குமா? யார் மனப்பூர்வமாக உறுதிமொழி கொடுத்தார்களோ. இப்படி அப்படி கை உயர்த்தக்கூடாது. யார் மனப்பூர்வமாக நான் இந்த பிராப்தியை (அனுபவம்) நிரந்தரமாக வைத்திருப்பேன். விக்ன விநாஷக்காக இருப்பேன் என்று நினைப்பவர்கள் கொடி அசைக்கலாம். நல்லது பாருங்கள். நீங்கள் இந்த டி.வி.யில் வருகிறீர்கள். பிறகு இந்த டி.வி.யின் போட்டோ அனுப்பப்படும். நல்லது. எந்த ஒரு வாய்ப்பு (சான்ஸ்) கொடுக்கப்பட்டிருக்கிறதோ, இது மிகவும் நல்லது. வாய்ப்பை குஷியுடன் எடுத்துக் கொள்கின்றனர். மேலும் மாற்றி, மாற்றி எல்லோருக்கும் திறந்த மனதுடன் வருவதற்கான அனுமதி கொடுக்கப்படுகிறது. நல்லது. இனி என்ன அற்புதம் செய்வீர்கள். 2008-ல் உங்களை பிரத்யக்ஷம் செய்து காட்டுவீர்கள்) நல்லது. ஒருவருக்கொருவர் உதவி செய்து இந்த உறுதிமொழியை நிறைவேற்ற வேண்டும். அவசியம் செய்வீர்கள். மாஸ்டர் சர்வ சக்திவான்களுக்கு எந்த ஒரு உறுதிமொழியையம் நிறைவேற்றுவது பெரிய விஷயம் ஒன்றுமில்லை. மனோதிடத்தை கூடவே வைத்திருக்க வேண்டும். மனோ தைரியத்தை இழந்து விடக்கூடாது. ஏனெனில் மனோதிடம் தான் வெற்றிக்கான சாவி. எங்கே மனோதிடம் உள்ளதோ அங்கே வெற்றி நிச்சயம் அப்படித்தானே! செய்து காட்டுவீர்கள் பாப்தாதாவுக்கும் குஷியாக இருக்கிறது. நன்றாக இருக்கிறது. பாருங்கள். எத்தனை பேருக்கு வாய்ப்பு கிடைக்கிறது. பாதி வகுப்பு சேவை செய்பவர்களுக்காகவே இருப்பது போல இருக்கிறது. நல்லது. பாருங்கள். சாகார் பாபாவுடன் இருந்து கொண்டு நல்ல பார்ட் செய்தார். முதல் முதலான மியூஸியம் (மகேந்திரா சகோதரர்) தயார் செய்தார். பாருங்கள். சாகார் பாபாவின் ஆசிகள் முழு மண்டலத்திற்கும்

இருக்கிறது. இனி ஏதாவது பதுமை செய்து காட்டுவார்கள். இப்போது அதிக நாட்கள் ஆகி விட்டது. எந்த ஒரு புதுமையையும் கண்டுபிடிக்கவில்லை. வர்க்க சேவையும் இப்போது பழையதாகி விட்டது. கண்காட்சிகள், மெகா விழாக்கள், மாநாடு, சிநேக சந்திப்பு எல்லாம் நடந்து விட்டது. இனி ஏதாவது புதிதாக கண்டுபிடியுங்கள். சுருக்கமானதாகவும், இனிமையானதாகவும் இருக்க வேண்டும். குறைந்த செலவில், அதிக சேவை நடக்க வேண்டும். ராய் பகதூர் அல்லவா? ஆகவே ராய் பகதூர். புது வழியைக் கண்டுபிடியுங்கள். எப்படி முதலில் கண்காட்சி. பிறகு விழா வர்க்கத்தினருக்கான சேவை. இப்படி வேறு ஏதாவது புதிய கண்டுபிடிப்பு வேண்டும். பார்க்கலாம், இதை யார் செய்கிறார்கள் என்று. நல்லது, தைரியசாலிகள். ஆதலால் பாப்தாதா தைரியமுள்ளவர்களுக்கு முன் கூட்டியே உதவிக்கான வாழ்த்துக்களை அளிக்கின்றார். நல்லது. இந்த குரூப்பில் ஐந்து வர்க்கத்தினர் (விங் சேவை) வந்திருக்கிறார்கள்.

கல்வி, நிர்வாகம், வாணிபம், இளைஞர்கள், விளையாட்டுத் துறை ஆகியன: நல்லது. ஒவ்வொரு துறையினரும் அவரவர் வர்க்கத்தினருக்கான சேவை செய் கிறார்கள். ஆர்வத்துடன் செய்கிறார்கள். ஒருவருக்கொருவர் முந்திச் செல்லவும் முயல்கிறார்கள். ஒரு விங், மற்றொரு விங்'ஐ முந்துவதற்கு நல்ல சேவை செய்கிறார்கள். பாப்தாதா எல்லா குழந்தைகளின் ஆர்வம், உற்சாகத்தைப் பார்த்து அடிக்கடி குழந்தைகள் மீது அன்பாகிய மலர்களைத் தூவுகின்றார். கொஞ்சம் உழைக்கவும் செய்கிறார்கள் ஆனால் அன்புடன் செய்கிறார்கள். இதன் காரணமாக ஒவ்வொரு விங்கும், அடுத்த விங்கை விட முன்னேறிச் சென்று கொண்டிருக்கிறார்கள். இப்படி கல்வியாளர்கள் ஏதாவது பள்ளியை தங்களுடையதாக்குங்கள் முழு பாடசாலை, கல்லூரி இந்த ஆன்மீக ஞானத்தை ஏற்றுக் கொள்ளட்டும். படிப்பைவிட மாட்டார்கள் அல்லவா? ஆனால் ஞானத்தை எல்லா வகுப்பு களிலும் சேர்த்துக் கொள்ள வேண்டும். ஏதாவதொரு பள்ளி அல்லது கல்லூரியை தத்தெடுத்துக் கொள்ளுங்கள் செய்ய முடியும். (யுனிவர்சிட்டி, கல்லூரி, பள்ளிகளில் இந்த ஆண்டு விசேஷ சேவைக்கான திட்டம் தயாரித்திருக்கிறார்கள்) ரிசல்ட் தெரிவிக்க வேண்டும். நல்லது ரிசல்ட் நல்லபடியாக இருந்தால் மேலும் செய்வீர்கள் அல்லவா? இப்படி எல்லா வர்க்கத்தினரும் விசேஷ

ரிசல்ட் வரும்படி செய்ய வேண்டும். யூத் குரூப், விசேஷ ரிசல்ட் வரும்படி செய்ய வேண்டும் எந்தெந்த வர்க்கம் உள்ளதோ, அவர்கள் ஒவ்வொருவரும், ஒரு குரூப்பினுடைய ரிசல்ட் காட்ட வேண்டும். முதலில் எழுத்து பூர்வமாக கொண்டு வர வேண்டும். இவர்கள் வி.ஐ.பி லிஸ்ட் கொண்டு வந்திருக்கிறார்கள், (போபால்). இப்படி தயார் செய்யுங்கள். குரூப் தயார் செய்ய வேண்டும் எல்லா நகரத்திலும் உள்ளவர்களை ஒன்றாக இணைத்து ஒரு முறை ஒரு குரூப்பாக சேர்க்க வேண்டும். வெவ்வேறு இடங்களில் இருப்பவர்களை எல்லாம் ஒன்றாக இணைத்து அவர்களுக்கு ஊக்கம் உற்சாகம் கொடுத்து முன்னேற்ற வேண்டும். ஒவ்வொரு வர்க்கத்தினரும் குரூப் அமைக்கத்தான் வேண்டும். இப்போது கொஞ்சபேர் தான் இருக்கிறார்கள். இனி மேல் இன்னும் அதிகமாவார்கள். யாராவது, தங்களுக்குள் அமர்ந்து முடிவு செய்யுங்கள். ஒவ்வொரு குரூப்பில் உள்ளவர்களும், எப்படி ஒன்றாக இணைப்பது என்பது பற்றிப் பேசி, ஒருவருக்கொருவர் புரிந்து கொள்வதோடு இது தங்கள் பொறுப்பு என்று உணர வேண்டும். எங்கேயாவது புரோகிராம் நடந்தால், அவர்களுக்கு மற்றவர்கள் விசேஷமாக உதவி செய்ய வேண்டும். குரூப் தயார் செய்யுங்கள், ஐந்தைந்து பேர் அல்லது ஆறாறுபேர். இவர்கள் ஒவ்வொரு இடத்திற்கு செல்ல வேண்டும். இவர்களின் மூலமாக சேவை செய்வித்தால். குஷி அடைவார்கள். முன்னேறவும் செய்வார்கள். நல்லது, யூத் குரூப், கொஞ்சபேர் வந்திருக்கிறார்கள். பள்ளிகளில் நல்ல சேவை செய்திருக்கிறார்கள். பாப்தாதா பார்த்தார். சமாச்சாரமும் கிடைத்தது. நல்லது குரூப் விசேஷமானதாகச் செய்யுங்கள். இவர்களுடைய பெயர் சேவாதாரி குரூப் என்பதாக இருக்க வேண்டும். தேர்ச்சியுள்ள நல்லவர்களாக எத்தனை பேரை தயார் செய்ய முடியுமோ, அத்தனை குரூப் தயார் செய்யுங்கள். நல்லது. எல்லா வர்க்க சேவை செய்பவர்களுக்கும் பாப்தாதா வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றார். எல்லோருமே நன்றாக சேவை செய்கிறீர்கள். இனி அடுத்த ஆண்டு வரும்போது அவரருடைய குரூப்பிலுள்ளவர்களின் பெயர்களைக் கொண்டு வர வேண்டும். ஒவ்வொரு குரூப்பையும் கொண்டு வர வேண்டும். பிறகு அந்தந்த குரூப்பைத் தனிதனியாக அமைத்து, அந்த குரூப்பிற்கு பெயர் கொடுக்க வேண்டும். பக்காவாக இருக்க வேண்டும். சிலர் வாரிசாக இருக்கலாம். சிலர் மைக்காக இருக்கலாம். இப்படி இரண்டு விதமானவர்கள் குரூப்பில் இருக்கலாம் ஸ்போர்ட்ஸ் விங்

கூட இருக்கிறது. ஸ்போர்ட்சில் இருப்பவர்களுக்கு சேவை செய்வதற்கு குரூப் தயார் செய்திருக்கிறார்கள்). நடைமுறையில் கொண்டு வர வேண்டும். பிஸினஸ் விங் கண்காட்சி தயாரிக்கப்பட்டிருக்கிறது. நன்றாக இருக்கிறது வாழ்த்துக்கள். இப்படி சேவையை விருத்தி செய்வதற்கான திட்டம் நடந்து கொண்டேயிருந்தால் இதனால் கூட வைப்ரேஷன் பரவும். இதுவும் ஆத்மாக்களை சென்றடைகிறது. ஒருவர் மூலமாக 10-பேரை சென்றடைகிறது. பாப்தாதா கூறியிருக்கின்றார். சேவையில் நல்ல விருப்பம் உள்ளவர்களாக இருக்கிறார்கள், முன்னேறிக் கொண்டும் இருக்கிறார்கள் ஆனால்... ஆனால் என்பது சுய முன்னேற்றம். சுய பரிவர்த்தனை, சுயம் மீது கவனம் வைக்கும் சேவை, இரண்டிலும் பேலன்ஸ் தேவை, இந்த பேலன்ஸ் ஆகிக் கொண்டேயிருக்கிறது. இந்த பேலன்ஸ் கண்டிப்பாக கவனத்தில் வையுங்கள். உங்களிடம் பேலன்ஸ் இருக்கும்போது, உலகில் கோஷம் போடுவார்கள். இப்போது கொஞ்சம். கொஞ்சம் புரட்சி நடக்கத்தான் போகிறது. நல்லது. (யூத் விங். தங்கள் சார்பாக சுய உன்னதிக்காக திட்டம் தயார் செய்திருக்கிறார்கள்) நன்றாக இருக்கிறது, கொண்டேயிருங்கள். ஏதாவது புதுமை செய்து

டபுள் விதேஷி -30 நாடுகளிலிருந்து வந்திருக்கிறார்கள். நல்லது, உங்களுக்கு டபுள் பாரினஸ் என்ற பெயர் பிரசித்தமாகி விட்டது. இப்போது டபுள் புருஷாரத்தி என்று பெயர் சூட்டலாமா? பக்காவா? டபுள் புருஷாரத்தம் செய்வீர்களா? செய்பவர்கள் தான். நல்லது. வெளி நாட்டில் எந்த ஒரு விக்னமும் வராமல் இருப்பதற்கு ஒரு உதாரணம் காட்டுங்கள். மன சங்கல்பத்திலும், வாணியிலும், பேச்சிலும், சம்மந்தம். தொடர்பிலும் விக்னம் வரக்கூடாது பாப்தாதா பாரதத்திலுள்ள எல்லா ஜோன்களுக்குமே கூறுகின்றார். டபுள் விதேஷிகள் மூலமாகக் கூறுகின்றார் ஆனால் பாரதத்தின் எல்லா ஜோன்களுக்கும் கூறுகின்றார். ஏதாவதொரு திட்டம் தயாரியுங்கள். எல்லா ஜோன் மற்றும் டபுள் விதேஷி நிர்விக்னமாக. நிர்விகல்பமாக. நிர் வியர்த்த சங்கல்ப்பம் உடையவராக இருக்க வேண்டும். இதில் போட்டி போடுங்கள். ஒவ்வொரு ஜோனும் போட்டியில் முன்னேறட்டும். வெளிநாடுகள் அனைத்தும் ஒரு ஜோன் ஆகி விட்டதல்லவா? இதற்கு பாப்தாதா நிறைய வெகுமதி அளிப்பார். இரு ஜோனிலும் விக்னம் என்ற பெயர், அடையாளம் இருக்கக்கூடாது ஒருவருக்கொருவர்

உதவியாளராகியும் கூட அவர்களை நிர்விக்னமாக ஆக்குங்கள். தைரியம் கொடுங்கள். ஊக்கம் உற்சாகம் கொடுங்கள். இப்படிப்பட்ட காட்சியைப் பாப்தாதா பார்க்க விரும்புகின்றார். எப்படி சேவையில் செய்து காட்டினீர்கள் அல்லவா? எந்த ஒரு பகுதி டாக்கியிருந்தாலும் சேவை செய்து முடித்துக் காட்டுகிறீர்கள். இதைப்பார்த்து பாப்தாதா குஷி அடைகின்றார். ஒவ்வொரு ஜோனும் ஏதாவதொரு புரோகிராம் செய்தார்கள் பாரினர்ஸ் கூட செய்தார்கள். செய்து காட்டினார்கள். இது போல சுய முயற்சிற்கும் செய்யுங்கள். ஒருவருக்கொருவர் சகயோகி ஆகுங்கள்.. எப்படி உங்களை நிர்விக்னமாக இருப்பதில் கவனம் வைக்கிறீர்கள் அல்லவா? இதுபோல முழு ஜோனிலும் எல்லா சென்டர்களிலும் கவனம் இருக்க வேண்டும். இதில் யார் நம்பர்-1 வருகிறார்கள் என்று பார்க்கலாம். செய்ய முடியுமா? கஷ்டமா? ஜோன் காரர்கள் எழுந்திருங்கள். எழுந்திருங்கள் ஜோன் இன்சார்ஜ் பெரியவர்கள் வந்திருக்கிறார்கள். ரமேஷ், பிரிஜ்மோகன் ஆகியோரும் எழுந்திருங்கள். இந்த மதுபன் கூட அதில் இருக்கிறது. மதுபன் முதல் நம்பர் தானே? ஆகவே இதைச் செய்ய முடியுமா? செய்ய முடியுமா? நிர்வயர் சகோதரர் கூறுங்கள். செய்ய முடியுமா ? கொஞ்சம் கஷ்டம் என்று நினைக்கிறீர்களா? (உங்களுக்கு சங்கல்ப்பம் இருந்தால் ஒரு கஷ்டமும் இல்லை) சரி . புருஷாரத்தம் செய்ய ஆரம்பியுங்கள். எல்லா ஜோன்களும் தங்களுடைய குரூப் தயார் செய்யுங்கள். யாரெல்லாம் சகயோகிகளாக இருக்கிறார்களோ, அவர்களுடைய குரூப் தயார் செய்யுங்கள். திட்டம் தயார் செய்யுங்கள். பிறகு ஆரம்பியுங்கள். இதற்கு பிறகு ரிசல்ட் எப்படி இருக்கிறது என்று பார்க்கலாம். குரூப் அவசியம் தயார் செய்ய வேண்டியதாயிருக்கும். இதில் என்னவென்றால் முதலில் உங்களுடைய தீதி இருந்தார். முதியவராக இருந்தார். ஒவ்வொரு இடத்திற்கும் சென்று வந்து கொண்டிருந்தார். பஸ்ஸில் சென்றார். திரிவீலர் (ஆட்டோ) கூட இருக்கவில்லை. பஸ்ஸில் அரை மணி நேரம் அமர்ந்து, சிறு சிறு இடங்களுக்கெல்லாம் சென்று வந்தார். அது தற்சமயம் குறைவாக இருக்கிறது. இதுபோல சுற்றி வந்து கொண்டே இருப்பவர்கள் அடங்கிய ஒரு குரூப் தயார் செய்யுங்கள். ஊக்கம், உற்சாகம் கொண்டு வரட்டும். ஏதாவது ஒரு திட்டம் தயார் செய்யுங்கள். ஏனெனில் காலத்தின் கூக்குரல், சீக்கிரமாகச் செய்யுங்கள். சீக்கிரம். சீக்கிரம் என்பதாக இருக்கிறது. மேலும் திடீரென நடப்பதாகவும் இருக்கிறது. ஆதலால் மீட்டிங்கில் ஏதாவதொரு பிளான் தயார்

செய்யுங்கள். எப்படி செய்வது? என்ன செய்வது? இந்த விபரம் தயார் செய்யுங்கள். டபுள் பாரினர்ஸ் கூட செய்ய வேண்டும். பார்க்கலாம். யார் நம்பர்-1 வருகிறார்கள் என்று.

டபுள் பாரினர்ஸ் எப்பொழுது மதுபன் வந்தாலும், மதுபன் சந்திப்பில் ஒரு அழகு வந்து விடுகிறது. ஏனென்றால், இன்டர்நேஷனல் சபை ஆகி விடுகிறது. இல்லையேல் பாரதவாசிகள் மட்டுமே தான் இருப்பார்கள். ஆதலால் இதைப்பார்த்து பாப்தாதாவுக்கு குஷி உண்டாகிறது. ஒவ்வொரு சீசன் குரூப்பிலும் டபுள் விதேஷி இருக்கிறார்கள். இவர்கள் நல்ல முன்னேற்றம் கொண்டு வந்திருக்கின்றார்கள். மேலும் பாப்தாதாவுக்கு விசேஷ அன்பும் இருக்கிறது, ஏன்? பாரதவாசிகள் தியாகிகள் என்றால், டபுள் விதேஷி டபுள் தியாகிகள். உங்களுடைய கலாச்சாரம் வேறாக இருக்கிறது ஆனால் பாரதத்தில் அதே கலாச்சாரம் தான் ஆகவேதான் பாப்தாதாவுக்கு குஷியாக இருக்கிறது. முன்பு நாங்கள் பாரதவாசிகளாக இருந்தோம். இப்போது பாரத வாசிகளாக இருக்கிறோம் என்பதை அனுபவம் செய்கிறார்கள் இனிமேல், பாரதம் தான் இருக்கப்போகிறதல்லவா? இந்த அமெரிக்கா, லண்டன் இருக்காது. இவையெல்லாம் பிக்னிக் இடங்களாக ஆகி விடும். மற்றபடி மிஞ்சி இருப்பது ஒரு பாரதம் மட்டும் தான். இப்போது சேவைக்காக வெளிநாடு செல்கிறோம் என்பதை இப்போது அனுபவம் செய்கிறார்கள். நீங்கள் யோசித்துக் பாருங்கள். இப்போதும் கூட 30 இடங்களிலிருந்து வந்திருக்கிறார்கள். சீசன் சமயத்தில் பாரினர்ஸ் எத்தனை திசைகளிலிருந்து வந்திருக்கிறார்கள்? 90-நாடுகளிலிருந்து வந்திருக்கிறார்கள். அப்படியானால், யோசித்துப் பாருங்கள். 90-நாடுகளின் மொழிகளை இந்தியாவின் சகோதரிகள் கற்றுப் பிறகு சேவை செய்தால் யோகம் செய்வார்களா? அல்லது மொழியினை கற்றுக் கொள்வார்களா? ஆகவே தான் நீங்கள் வெவ்வேறு நாடுகளுக்கு சேவை செய்வதற்கு அனுப்பப்பட்டீர்கள். உங்களுடைய நிரந்தர முகவரி எது? தெரியுமா? நிரந்தர முகவரி எது? மதுபனா? அமெரிக்காவா? லண்டனா? மதுபனா? சேவைக்காக வெளிநாட்டிற்குச் சென்றீர்கள். வீடு மதுபன். சேவை செய்யும் இடங்கள் வெவ்வேறானது. இந்தியாவிலும் கூட இங்குமங்கும் வெவ்வேறாக இருக்கிறதல்லவா? சிலர் மகாராஷ்டிரா சிலர் இராஜஸ்தான் இது சேவைக்காக ஆகவே டபுள்

விதேஷி, இப்பொழுது டைட்டில் டபுள் புருஷார்த்தி என்று வைத்துக் கொள்ளுங்கள். டபுள் விதேஷி அல்ல. டபுள் புருஷார்த்தி. நல்லது.

டிரெயினிங்'ல் வந்திருந்த குமாரிகளுடன்: இவர்களும் கூட கொடிகளை எடுத்துக் கொண்டு வந்திருக்கின்றனர். அடையாளம் நன்றாகத் தெரிந்து விடுகிறது. நல்லது. டிரெயினிங் முடிந்து விட்டதா? பக்காவாக முடிந்ததா? அல்லது கொஞ்சம், கொஞ்சம் கச்சாவா? பக்காவாகவா? இப்போது டிரெயினிங் முடிந்து அங்கே செல்லப் போகிறீர்கள். இதன் பலனை அங்கு நடைமுறையில் நடந்து காட்டுவீர்கள் இல்லையா? நடந்து காட்டுவீர்களா? அல்லது என்ன செய்வது, ஆகி விட்டது மாயா வந்து விட்டது என்று சொல்வீர்களா? இப்படிச் சொல்ல மாட்டீர்கள். விஜயி (வெற்றி), சதா காலத்திற்கு வெற்றித் திலகம் அணிந்து சென்று கொண்டிருக்கிறீர்கள். எப்போதாவது, யாராவது உங்களிடம் உங்களது நிலைமை எப்படி இருக்கிறது என்று கேட்டால், என்ன சொல்வீர்கள்? ரொம்பவும் நன்றாக இருக்கிறோம் என்றுதானே கூறுவீர்கள். இப்போது கொடிகளை அசையுங்கள். நல்லது. ஒவ்வொரு மாதமும். யார் இன்சார்ஜ் ஆக இருக்கிறார்களோ, தாதிக்கு அவர்கள் ஓ.கே. ஒ.கே என்று எழுத வேண்டும். பெரிய கடிதம். எழுத வேண்டாம். இப்படியாகி விட்டது, சொல்லும்படியாக இல்லை என்று எழுதக்கூடாது. ஓ.கே அவ்வளவு தான். ஏதாவது வேறுவிதமாக இருந்தால், ஓகே அல்லது இடையில் ஒரு கோடு போட வேண்டும். ஏனென்றால் படிப்பதற்கு நேரமில்லை. சுருக்கமாக ஓகே போதும் ஏதாவது குழப்பம் இருந்தால் ஓகே என்ற எழுத்திற்கு இடையே கோடு போட்டால் போதும் சரிதானா? இனி ரிசல்ட் பார்க்கலாம். எந்த குரூப் டிரெயினிங் முடித்து சென்றதோ அதன் ரிசல்ட் வந்ததா? இரத்தன் மோகினி எங்கே? ரிசல்ட் வந்து கொண்டே இருக்கிறது. ரிசல்ட் கட்டாயம் வர வேண்டும். இல்லையேல் என்ன ஆகுமென்றால் உற்சாகத்தை இழந்து விடுவார்கள். ஒவ்வொரு மாதமும் ரிசல்ட் வர வேண்டும். சிறு கார்டு அனுப்பினால் போதும். பெரிய காகிதம் வேண்டாம். செலவு செய்யக் கூடாது ஆனால் அவசியமாக ரிசல்ட் வர வேண்டும். அப்போதுதான் டிரெயினிங் கொடுப்பதால் என்ன லாபம் என்பது தெரியும். உங்களுக்காக பெரிய மஹால் கட்டப்பட்டுள்ளது. சாந்திவன் முழுவதிலும் பார்க்கும்போது, எல்லாவற்றிலும் சிறந்த கட்டிடம் டிரெயினிங் சென்டர் தான் ஆகவே பாப்தாதா மற்றும் மதுபன் வாசிகள் உங்கள் மீது அன்பு

வைத்திருக்கிறார்கள். இதற்கான அடையாளம் தான் இது. இனி நீங்கள் இதற்கு கைமாறு செய்ய வேண்டும். சரியா? ரிப்போர்ட் அனுப்பிக் கொண்டேயிருக்க வேண்டும். மாதம் ஒரு முறை, நிறைய எழுத வேண்டாம். நல்லது. பாப்தாதாவுக்கு குஷியாக இருக்கிறது. ஏனென்றால், உலகின் முன்பாக டீச்சர்கள்' தான் இருக்கிறார்கள் அல்லவா? டீச்சர்கள் விஜயி என்றால் சென்டர் விஜயி சென்டர் விஜயி (வெற்றி) என்றால். ஜோன் விஜயி பிறகு ஜோன் விஜயி என்றால் உலகம் விஜயி, ஆதலால் இந்த புருஷாரத்தத்தை பக்காவாகச் செய்ய வேண்டும். சரியா? நல்லது.

இப்போது ஒரு வினாடியில் எல்லோரும் மிக மிக இனிமையிலும் இனிமையான சைலன்ஸ் ஸ்திதி அனுபவத்தில் மூழ்கிட வேண்டும். (பாப்தாதா டிரில் செய்வித்தார்) நல்லது.

நாலா பக்கமுள்ள எல்லா தீவிர புருஷாரத்தி, சதா திட சங்கல்ப்பம் மூலமாக வெற்றி அடையக்கூடியவர்கள், சதா வெற்றி திலகம் அணிந்திருப்பவர்கள், பாப்தாதாவின் மன சிம்மாசனதாரி, டபுள் கீரிடதாரி, விஷ்வ கல்யாணகாரி, சதா லக்ஷியம் மற்றும் லஷணத்தை சமமாக வைத்திருப்பவர்கள், பரமாத்ம பாலனையில் வளர்பவர்கள், இப்படி சர்வ சிரேஷ்ட குழந்தைகளுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள், மனப்பூர்வமான ஆசிகள் மற்றும் நமஸ்தே.

தாதிகளுடன்: குழந்தைகள் ஆஜர் என்றால் தந்தையும் ஆஜராக இருக்கின்றார். தந்தை குழந்தைகளிடமிருந்து தூரமாகி விட முடியாது. குழந்தைகளும், தந்தையிடமிருந்து துரமாகி விட முடியாது. உறுதிமொழி இருக்கிறது. கூடவே இருப்போம். கூடவே செல்வோம். அரைக்கல்ப்பம் பிரம்மாபாபாவோடு கூடவே இருக்கலாம். (தாதி ஜானகி கூறினார் அதுவும் கூட கூடவே இணைக்கப்பட்டிருக்கிறது) உங்களுடைய இந்த அனுபவம் சரிதான். இப்போதோ உத்தரவாதம் உள்ளது ஆனால் எப்போது இராஜ்யம் செய்வீர்களோ அப்போது வர மாட்டேன். பார்ப்பவர்களும் யாராவது வேண்டுமல்லவா? (மேலே மனம் எப்படிப் போகும்) டிராமாவில் பார்ட் உள்ளது. பிரம்மாபாபா உடன் இருக்கிறாரல்லவா? பாருங்கள். டிராமா என்ன செய்கிறது? நன்றாக இருக்கிறது. ஒருவருக்கொருவர் மரியாதை கொடுத்துக் கொண்டே.

சுவமானில் இருந்து கொண்டே, நடந்து கொண்டேயிருக்கிறீர்கள். நடந்து கொண்டே இருங்கள். ஆம் இந்த தோழிகளும் இருக்கவே, இருக்கிறார்கள். (மனோகர் தாதி, சாந்தாமணி தாதி) கொஞ்சம் உடல் நலம் சரியில்லை. பரவாயில்லை. ஆரம்பத்திலிருந்து நிமித்தமாகியிருக்கிறார்கள். ஸ்தாபனத்தில் இன்னும் ஸ்தாபனை முடிந்து விடவில்லையே? ஆகவே துணையாக இருக்கிறீர்கள்!

அங்கிள், ஆன்ட்டி, அன்பு நினைவுகளை அனுப்பியிருக்கிறார்கள். கூறுங்கள். பாப்தாதா உங்களை விட அதிகமாக நூறு மடங்கு நினைவு செய்கிறார். நல்லவர்களாக இருக் கிறார்கள். நல்லது. தாங்கள் அடைந்த பலனுக்கு கைமாறு செய்து கொண்டிருக்கிறார்கள். நல்லது. (தாதி நிர்மல் சாந்தாவும் கூட நினைவுகளை அனுப்பியிருக்கின்றார். அரவணைக்கும்போது ஜானகி தாதி கூறினார். தாதியை அரவணைத்தது நினைவுக்கு வருகிறது). தாதி உங்களோடுதான் இருக்கின்றார்.

டாக்டர் அசோக் மேத்தாவுடன்: பாருங்கள். இதுவோ சரீரத்தின் பர்த்டே (பிறந்த நாள்) கொண்டாடினீர்கள். மிக நன்றாகச் செய்தீர்கள் ஆனால் உங்களுடைய அலௌகீக பிறந்த நாளும் கூட தனிப் பட்டது. அன்பானது. மிகவும் நல்லது இந்த பிறந்த நாளையும் கொண்டாடினீர்கள் என்றால். உண்மையான உள்ளத்தோடு சேவை செய்ததற்காக, இதற்கு கைமாறு கிடைக்கிறது. முக்கியமாக மற்றவர்கள் சேர்ந்து கொண்டாடினார்கள் அல்லவா? இது சேவை செய்ததற்கான கைமாறு கிடைத்திருக்கிறது. மேலும் அலௌகீக ஜன்மத்திலும் சேவை, சமூக சேவையை உலகில் பிரசித்தமாக்கும் சேவையிலும் நிமித்தமானீர்கள். எப்போது குளோபல் ஹாஸ்பிட்டல் ஆரம்பமானதோ அப்போது முதல் அபுவின் வாயுமண்டலம் மாறி விட்டது. மேலும் எல்லோரும் விருப்பமுள்ளவர்களாக ஆகி விட்டார்கள். ஆன்மீக சேவை மட்டுமல்ல, சமூக சேவையும் செய்கிறார்கள், ஆரோக்கியத்திற்காகவும் செய்கிறார்கள். இந்த பிரபாவம் மாறி, மாறி சேவை அதிகமாகிக் கொண்டேயிருந்தது. ஆகவே இதில் நிமித்தமானீர்கள் அல்லவா? ஆகவே எவ்வளவு ஆசிகள். நிறைய ஆசிகள் கிடைத்திருக்கிறது ஆசிகளின் பொக்கிஷம் நிறைந்திருக்கிறது. இனி சுய முயற்சிக்கான கணக்கு எது உள்ளதோ, அதில் இன்னும் கொஞ்சம் அதிகமாகச் சேர்த்துக் கொள்ளுங்கள். ஆசிகள். புண்ணியம்

ஆகிய கணக்கு சரியாக இருக்கிறது. இனி சுய முயற்சியின் கணக்கில் கொஞ்சம் தீவிரமாகச் சேமியுங்கள். நம்பர் எடுக்க வேண்டுமல்லவா? எடுக்க முடியும். நன்றாக இருக்கிறது. ஆல் ரவுண்டராக இருக்கிறீர்கள். ஹெல்த், வெல்த் சகயோகத்தில் நல்ல பார்ட் செய்கிறீர்கள். இவரும் துணையாக இருக்கின்றார் (சிரின் சகோதரியுடன்) இவர் நிமித்தமானார். உங்களுடைய ஆர்வத்தால், இவரும் வந்து விட்டார். முழு குடும்பமும் நல்லவர்கள். சாட்சியாகவும் இருக்கிறார்கள், துணையாகவும் இருக்கிறார்கள். செய்திருக்கிறார்கள். பாப்தாதாவுக்கு குஷியாக இருக்கிறது. இவரும் கூட மிக நல்ல பார்ட் நல்ல பார்ட் செய்து கெண்டிருக்கிறார். பாப்தாதா பார்த்துக் கொண்டேயிருக்கிறார் அல்லவா? மிகவும் யுக்தியுடன் பார்ட் செய்து கொண்டிருக்கின்றார்.

டாக்டர் ஜெயின், தாதிஜியின் டாக்டர், பாப்தாதாவை சந்திக்க வந்துள்ளார்? நல்லது. தினமும் படிப்பு படிக்கிறீர்களா? தினந்தோறும் முரளி வாங்கிச் சென்று படிக்க வேண்டும். முடியுமல்லவா? எந்த டியூட்டி கனெக்ஷனில் செய்கிறீர்களோ அது சரிதான். இதில் முன்னேற்றம் செய்து கொண்டே இருங்கள். தாதி நம்முடையவர் நன்றாக இருக்கின்றார்? அவர் மிகவும் நன்றாக இருக்கின்றார். நிமித்தமாகியிருக்கிறாரல்லவா? பார்ட் செய்யும் விசேஷம் இருக்கிறது. அவரோ அவதாரம் என்ற முறையில் பிறப்பார். வெற்றிக்காக வரம் கொடுங்கள் -எந்த ஒரு காரியம் செய்தாலும் ஆரம்பிப்பதற்கு முன்பாக விசேஷமாக நினைவு செய்யுங்கள். பிறகு காரியத்தை ஆரம்பம் செய்யுங்கள். வெற்றி நிச்சயமாகியிருக்கிறது.

மத்திய பிரதேசம் (போபால்): அமைச்சர், நீதிபதி மற்றும் சில பிரமுகர்கள் பாப்தாதாவை சந்திக்கின்றனர். என்ன சேவை செய்தாலும் நன்றாகவே செய்கிறீர்கள் ஆனால் இப்போது விஷ்வ பரிவர்த்தனை காரியத்தில் சகயோகிகளாக இருக்கிறீர்கள். இருக்கிறீர்களா? உலக பரிவர்த்தனையில் சகயோகிகளாக இருப்போம் என்று சங்கல்பம் செய்திருக்கிறீர்கள். இப்படி சங்கல்பம் செய்தீர்களா? ஏனெனில் நீங்கள் ஆத்மாக்களுக்கு எளிதாக சேவை செய்ய முடியும். எப்படி செய்ய முடியும்? உங்களைச் சந்திக்க ஒரு நாளில் எத்தனை பேர் வருகிறார்கள் ? வேண்டாம்1 தொடர்பில் வருகிறார்கள் அல்லவா? வேறெதுவும் செய்ய வேண்டாம் ஆனால் நீங்கள் உங்களுடைய கார்டு

அச்சிடுகிறீர்கள் அல்லவா? கார்டு அச்சடிக்கிறீர்கள். அறிமுக கார்டு. இதன் பின்புறம் ஏதாவது ஞானக் கருத்துக்கள் -சுலோகன் எழுதுங்கள். அதில் இப்படி எழுதுங்கள். நீங்கள் மன இறுக்கத்திலிருந்து விடுபட வேண்டுமானால் இந்த சென்டருக்குச் செல்லுங்கள் என்று. ஒரு சென்டர் முகவரியை அச்சிடுங்கள். இதன் மூலம் உங்கள் சேவை நடந்து விடும். யார் விருப்பமுள்ளவராக இருப்பார்களோ. அவர்கள் தானாகவே செல்வார்கள். இப்படி வீட்டில் இருந்து கொண்டே சேவை செய்ய முடியும். செய்ய முடியுமல்லவா? இதில் கஷ்டம் ஒன்றுமில்லையல்லவா? ஏனென்றால், ஈஸ்வரிய காரியத்தில் ஒரு விரல் கொடுப்பதனால் மிகப்பெரிய புண்ணியம் உண்டாகும். இதற்கு உதாரணம் வேண்டுமானால் குருத்துவார் பாருங்கள். பெரிய பெரிய வி.ஐ.பி. ஐ.பி. சேவை செய்வதற்காகச் செல்கிறார்கள். ஏன்? செருப்புக்களை உரிய இடத்தில் வைக்கும்படியாகப் பார்த்துக் கொள்கிறார்கள். ஏனெனில் புண்ணியம் கிடைக்கிறது ஆனால் இதுவோ, நேர்முக மாக ஈஸ்வரிய காரியத்தில் சகயோகி ஆவதாகும். எவ்வளவு புண்ணியம்? மேலும் புண்ணியக் கணக்கு கூடவே வரும். வேறு எதுவும் கூட வராது. ஆதலால் உங்களுடைய புண்ணியக் கணக்கை சேமித்துக் கொண்டேயிருங்கள். அன்புடையவராகவும் சகயோகியாகவும் சதா இருங்கள். இப்போது சிவசக்தி ஆகியிருங்கள். சிவபரமாத்மா உடன் இருக்கின்றார் -சதா மிகழ்ச்சியாக இருக்க வேண்டும். ஒருபோதும் மகிழ்ச்சியை இழந்து விடக்கூடாது. மகேந்திரஜியுடன்) நல்ல குரூப். இவர்களை தொடர்பில் வைத்துக் கொண்டு, முன்னேற்றம் செய்து கொண்டேயிருங்கள்.

ஆந்திர பிரதேசத்தின் வி.ஐ.பிக்களுடன்: இதை அனுபவம் செய்கிறீர்கள். நாம் ஈஸ்வரிய பரிவாரத்தின் சகயோகியாக இருக்கும் தோழர்கள் என்று சகயோகிகளாக இருக்கிறீர்களா? பாருங்கள். எவ்வளவு சகயோகிகளாக இருப்பீர்களோ அவ்வளவு தங்களுக்கு புண்ணியத்தை சேமிப்பீர்கள். புரிகிறதல்லவா? மேலும் புண்ணியக்கணக்கு கூட வரும், மற்றதெல்லாம் இங்கேயே இருந்து விடும் ஆதலால் முடிந்த அளவு புண்ணியக் கணக்கை சேமியுங்கள். இது ஜன்ம, ஜன்மத்திற்கு உதவும் ஏனெனில் இது ஈஸ்வரிய காரியமல்லவா? ஆதலால், எப்படி ஈஸ்வர் அவிநாஷியாக இருக்கின்றாரோ. அதுபோல அவருடைய காரியத்தில் சகயோகி ஆவதும்கூட அவிநாஷி (அழிவற்றதாகும்). ஆதலால் உதவி

செய்து கொண்டேயிருக்க வேண்டும். சுய பரிவர்த்தனை மற்றும் விஷ்வ பரிவத்தனை என்ன நடந்தாலும் சரி, குஷியை இழந்து விடக்கூடாது. சதா குஷியாக இருக்க வேண்டும். நல்லது. சதா உங்களை பரமாத்மா நினைவு மூலம் சக்திசாலி ஆக்க வேண்டும். சிவசக்திகள், நான்கு சுவர்களுக்கு மத்தியில் அடைந்து கிடைக்கும் மாதர்கள் அல்ல. சிவசக்திகள். இந்த நிச்சயம் வைத்திருங்கள்.

**ஜஸ்டீஸ் ஈஸ்வரைய்யா (துணைவியுடன்):** குஷியாக (மகிழ்ச்சியாக) இருக்கிறீர்கள். குஷியை இழந்து விடவில்லையல்லவா? ஒருபோதும் விடக்கூடாது. சதா குஷியாக இருக்க வேண்டும். குஷியாகவே இருக்கக்கூடிய அதிருஷ்டமுள்ளதால் கூடவே சந்தித்திருக்கிறீர்கள். ஆகவே குஷியாக இருக்க வேண்டும். பரமாத்மா காரியத்தில் ஈடுபட்டுவிட்டால் அந்த காரியம் எம்மாத்திரம்? இது பக்கவாக இருக்கிறது. வெற்றியைத் தரக்கூடியதாக இருக்கிறது.

யாரெல்லாம் ஈஸ்வரிய காரியத்தில் உதவியாளர்களாக இருக்கிறார்களோ அவர்களுடைய மனதில் குஷியின் அனுபவம் உண்டாகிறது. ஆகவே குஷி ஏற்படுகிறதல்லவா? ஏனெனில் அவிநாஷி (அழிவற்ற தந்தை மூலமாக தானாகவே கிடைக்கிறது என்பதால் சதா குஷியில் இருக்கும் அதிருஷ்டசாலிகளாக இருக்கிறீர்கள். குஷியில் இருக்கின்றீர்கள். குஷியை கொடுப்பவர்களாகவும் இருக்கிறீர்கள் சரி தான் நல்லது.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋
❋❋❋❋❋

# 31.12.2007 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# புத்தாண்டில், அகண்ட மகாதானி, அகண்ட நிர்விக்னம், அகண்ட யோகி மற்றும் சதா வெற்றி மூர்த்தி ஆக வேண்டும்!

இன்று பாப்தாதா தனக்கு முன்னால், டபுள் சபையைப் பார்க்கின்றார். ஒன்று ஸ்தூலமாக எதிரில் அமர்ந்திருக்கிறார்கள். இரண்டாவது வெகு தொலைவில் அமர்ந்திருந்தாலும் கூட உள்ளத் திற்கு அருகாமையில் காணப்படுகிறார்கள். இந்த இரு சபைகளிலுமுள்ள சிரேஷ்ட ஆத்மாக்களின் நெற்றியில் ஆத்ம தீபம் ஒளி வீசிக் கொண்டிருக்கிறது. எவ்வளவு அழகான ஒளியாகத் தெரிகிறது! இவ்வளவு பேரும் ஒரு சங்கல்பத்தில், ஒரே ரசனையுள்ள, ஸ்திதியில் நிலைத்து, பரமாத்ம அன்பில் மூழ்கி ஒருமித்த புத்தியின் மூலம் சிநேகத்தில் ஒன்றியிருப்பது எவ்வளவு அன்புடையதாக இருக்கிறது. நீங்கள் எல்லோரும் கூட புத்தாண்டை விசேஷமாகக் கொண்டாடுவதற்காக வந்து சோந்திருக் கிறீர்கள். பாப்தாதாவும் கூட எல்லா குழந்தைகளினுடைய ஊக்கம் உற்சாகத்தைப் பார்த்து, ஒளிவீசிக் கொண்டிருக்கும் ஆத்ம தீபங்களைப் பார்த்து, மகிழ்ச்சியடைகின்றார். இன்றைய தினம், சங்கமத்தின் தினமாகும். ஒரு வருடத்தின் பழமைக்கு விடை கொடுக்கப்படுகிறது. மேலும் புதுவருடம் வரவேற்கப்படவிருக்கிறது. புது வருடம் என்றால், புது ஆர்வம் மற்றும் உற்சாகம். சுய பரிவர்த்தனைக்கான ஆர்வம். சர்வ பிராப்திகளையும், தான் அடைந்திருப்பதை நினைத்து உள்ளத்தில் மகிழ்ச்சி உண்டாகிறது. உலகத்தினரும் கூட புத்தாண்டைக் கொண்டாடுகிறார்கள். இவர்களுடைய கொண்டாட்டம் ஒரு நாளைக்குத்தான் ஆனால் அதிருஷ்டசாலி களாகவும், அழகானவர்களாகவும் இருக்கின்ற குழந்தைகளாகிய உங்களுக்கு சங்கமயுகத்தின் ஒவ்வொரு நாளும் கொண்டாட்டம் தான். ஏனென்றால் மகிழ்ச்சியில் உற்சாகமாக இருக்கிறீர்கள். உலகினர் அணைந்த விளக்கை ஏற்றி வைத்து

புத்தாண்டை கொண்டாடுகிறார்கள் ஆனால் பாப்தாதா. நாலா பக்கமும் உள்ள இத்தனை ஒளிவீசிக் கொண்டிருக்கும் தீபங்களுடன் புத்தாண்டை கொண்டாடுவதற்காக வந்திருக்கின்றார். என்றாலும் பழக்கத்தையொட்டி. நிமித்த மாத்திரம் கொண்டாடுகிறீர்கள் ஆனால் நீங்கள் எரிந்து கொண்டிருக்கும் தீபங்கள். இவ்வாறு ஒளி வீசிக் கொண்டிருக்கும் உங்களுடைய தீபங்கள் உங்களுக்குத் தெரிகின்றதல்லவா! இது அழிவற்ற தீபம்.

இந்த புத்தாண்டில், ஒவ்வொருவரும் உள்ளத்தில் தனக்காகவும், உலகிலுள்ள ஆத்மாக்களுக் காகவும், ஏதாவது புதிய திட்டம் தயாரித்திருக்கிறீர்களா? 12-மணிக்குப் பிறகு, புது வருடம் ஆரம்ப மாகி விடும். ஆதலால் இந்த ஆண்டை விசேஷமாக எந்த ரூபத்தில் கொண்டாடப்போகிறீர்கள்? எப்படி பழைய வருடம் விடை பெறுகிறதென்றால், நீங்கள் எல்லோரும் கூட பழைய சங்கல்பம், பழைய சம்ஸ்காரம் ஆகியவற்றிற்கும் விடை கொடுக்க வேண்டும் என்று சங்கல்பம் செய்தீர்களா? ஆண்டோடு கூடவே, உங்களுடைய பழையவற்றிக்கும் விடை கொடுத்து, ஆர்வம். உற்சாகத்தோடு கூடிய சங்கல்பத்தை நடைமுறைக்கு கொண்டு வருவீர்கள் அல்லவா? ஆகவே எந்த ஒரு புதுமையைக் கொண்டு வர வேண்டும் என்பதைப் பற்றிச் சிந்தியுங்கள். எந்த ஒரு புதிய ஆர்வம், உற்சாகம் என்ற அலைகளைப் பரப்புவீர்கள்? எந்த ஒரு விசேஷ சங்கல்பத்தின் அலைகளைக் பரப்புவீர்கள்? யோசித்தீர்களா? ஏனெனில், பிராமணர்களாகிய நீங்கள் எல்லோரும் உலகிலுள்ள ஆத்மாக்களின் பரிவர்த்தனைக்காக, நிமித்தமாயிருக்கும் ஆத்மாக்கள். உலகத்தின் அஸ்திவாரம். முதாதையர்கள், பூஜைக்குரியவர்கள். ஆதலால் இந்த ஆண்டு உங்களுடைய சிரேஷ்ட விருத்தி (உள்ளுணர்வு) மூலமாக எத்தகைய அலைகளைப் பரப்புவீர்கள்? எப்படி இயற்கையானது நாலா பக்கமும் சில சமயம் வெப்பத்தையும். சிலசமயம் குளிர்ச்சியையும், சில சமயம் வசந்தத்தின் அலைகளையும் பரப்புகிறதல்லவா! ஆகவே இயற்கைக்கு (பிரகிருதி) எஜமானர்களாக இருக்கின்ற பிரகிருதிஜீத், எப்படிப்பட்ட அலைகளைப் பரப்பப்போகிறீர்கள்? இதன் காரணமாக ஆத்மாக்களுக்கு கொஞ்ச நேரத்திற்காவது, சுகமும், அமைதியும் அனுபவமாகட்டும். இதற்காக, பாப்தாதா இந்த சசையைத் தான் கொடுக்கின்றார். எந்த ஒரு பொக்கிஷத்தை அடைந்திருக்கிறீர்களோ அவற்றைப்

பயன்படுத்துங்கள். மேலும் வெற்றி சொரூபம் ஆகுங்கள். விசேஷமான பொக்கிஷம் சமயம் ஆகும். இந்த சமயம் என்ற பொக்கிஷம் ஒருபோதும் வீணாகி விடக் கூடாது. ஒரு நொடி கூட வீணாக்காமல் சமயத்தைக் காரியத்தில் பயன்படுத்துங்கள். நேரத்தை பயனுள்ள தாக்குங்கள். ஒவ்வொரு சுவாசத்தையும் பயனுள்ளதாக்குங்கள். ஒவ்வொரு சங்கல்பத்தையும் பயனுள்ளதாக்குங்கள். ஒவ்வொரு சக்தியையும் பயனுள்ளதாக்குங்கள். ஒவ்வொரு குணத்தையும் பயனுள்ளதாக்குங்கள். இவ்வாறு வெற்றி மூர்த்தியாவதற்கான ஆண்டாக கொண்டாடுங்கள். ஏனென்றால், வெற்றி உங்களுடைய பிறப்புரிமையாகும். (ஜன்ம சித்த அதிகாரம்). அந்த உரிமையாகிய அதிகாரத்தை காரியத்தில் பயன்படுத்தி வெற்றி மூர்த்தி ஆகுங்கள். ஏனெனில் இப்போதைய வெற்றி உங்களுடைய அநேக ஜன்மத்தில் கூடவே இருக்கும். உங்களுடைய சமயத்தின் வெற்றி மூலமான பாக்கியம், அரை கல்பம் முழுவதும் வெற்றியின் பலனைக் கொடுக்கும். இப்போது காலத்தை வென்றதால் அடையும் பாக்கியம். காலம் முழுவதும் பலனை அளிக்கும். சவாசத்தை பயனுள்ளதாக்குவதன் மூலம் வருங்காலத்திலும் கூட பாருங்கள், உங்களுடைய சுவாசத்தின் வெற்றியின் பரிணாமம் (பலன்) வருங்காலத்தில் எல்லா ஆத்மாக்களும் முழுவதும் ஆரோக்கியமாக இருப்பார்கள். நோய் என்ற பேச்சே இருக்காது. டாக்டர்கள் என்ற இலாகாவே (மெடிக்கல் டிப்பார்ட் மெண்ட்) இருக்காது. ஏனெனில், டாக்டர்கள் என்னவாக இருப்பார்கள்? இராஜா ஆகி விடுவார்கள் அல்லவா? விஷ்வ மாலிக் ஆகி விடுவார்கள் ஆனால், இந்த சமயத்தில், நீங்கள் சுவாசத்தை பயனுள்ளதாக ஆக்குகின்றீர்கள். இதன் காரணமாக எல்லா ஆத்மாக்களும் ஆரோக்கியமாக இருப்பதற்கான பாக்கியம் கிடைத்து விடுகிறது. இதே போலவே ஞான கஜானா இதற்கான பலன் சொர்க்கத்தில், நீங்கள் உங்கள் இராஜ்யத்தில் அவ்வளவு அறிவாளியாக, திறமையுள்ளவராக ஆகி விடுவீர்கள். இதன் காரணமாக, எந்த ஒரு மந்திரியின் ஆலோசனைக்கும் அவசியமாக இருக்காது. நீங்களே அறிவும், திறமையும் உடையவர்களாக இருப்பீர்கள். இப்போது சக்திகளையும் பயனுள்ளதாக்குகிறீர்கள். இதன் பலனாகிய பாக்கியம் (பிராலப்த்) எல்லா சக்திகளும் விசேஷமாக தர்ம பரிபாலனம் மற்றும் ராஜ்ய பரிபாலனம் என்ற இரண்டுக்கும் அவசியமான சக்திகள், அதிகாரமாக அங்கு அடையப் பெறுவீர்கள். குணங்கள் எனும் கஜானாவை

(பொக்கிஷம்) பயனுள்ளதாக்குகிறீர்கள். இதனுடைய பாக்கியம் தேவதா பதவி. இதன் பொருள் திவ்ய குணதாரி (தெய்வீக குணமுடையவர்) ஆகின்றீர்கள். மேலும் இத்தோடு கூட, இப்போது இந்த கடைசி ஜன்மத்திலும் உங்களுடைய ஜட மூர்த்தியை பூஜிக்கிறார்கள். இதன் மகிமை எப்படி செய்கிறார்கள்? சர்வ குணசம்பன்னம் என்று. ஆகவே இந்த சமயத்தின் வெற்றிக்கான பாக்கியம் தானாகவே கிடைத்து விடுகிறது. ஆதலால் சோதித்துப் பாருங்கள். பொக்கிஷம் கிடைத்தது. பொக்கிஷங்களால் நிரம்பப்பெற்றீர்கள் ஆனால் இதனை தனக்காகவும், உலகத்திற்காகவும் எவ்வளவு பயன் படுத்தினீர்கள்? பழைய ஆண்டுக்கு விடை கொடுத்தீர்கள் என்றால், கடந்த ஆண்டில் என்ன பொக்கிஷத்தை சேமித்தீர்கள்? எவ்வளவு பயன்படுத்தினீர்கள்? இதை சோதிக்க வேண்டும். மேலும் வரும் ஆண்டில் கூட இந்த பொக்கிஷங்களை வீணாக்குவதற்குப் பதிலாக பயனுள்ளதாக ஆக்கத்தான் வேண்டும். ஒரு வினாடி கூட, எந்த பொக்கிஷத்தையும் வீணாக்கக் கூடாது. முன்பே கூறியிருக்கின்றேன். சங்கம சமயத்தில் ஒரு வினாடி வினாடி நேரம் அல்ல. ஒரு ஆண்டு காலத்திற்குச் சமம். ஒரு வினாடி தானே: ஒரு நிமிடம் தானே கழிந்தது (வீணாகியது) என்று நினைக்கக் கூடாது. விணாக்குவதைத் தான் அலக்ஷியம் (அல்பேலாபன்) என்று சொல்வது. உங்கள் எல்லோருடைய லக்ஷியம் பிரம்மாதந்தை எல்லா பொக்கிஷங்களையும் ஆதி முதல் கடைசி நாள் வரையிலும் பயனுள்ளதாக்கினார். இதன் பிரத்யக்ஷப் பலனாக சம்பூரண பரிஷ்தா ஆகி விட்டதைக் கண்கூடாகப் பார்த்தீர்கள். உங்களுடைய அன்பாள தாதியும் கூட பயனுள்ளதாக்கியதைப் பார்த்தீர்கள். மேலும் மற்றவர்களும் பயனுள்ளதாக்குவதற்கான ஊக்கம், உற்சாகத்தையும் சதா கொடுத்துக் கொண்டேயிருந்தார். ஆதலால் டிராமாபடி விசேஷமாக விஷ்வ சேவையில் அலௌகீக பாகத்தை (பார்ட்) செய்வதற்கு நிமித்தமானார்.

ஆதலால் இந்த ஆண்டு. நாளை முதல் ஒவ்வொரு நாளும் உங்களுடைய சார்ட் வைக்க வேண்டும். பயன்படுத்தியது, வீணாக்கியது. என்ன ஆனது? எவ்வளவு ஆனது? அமிர்தவேளை முதலே திட சங்கல்பம் செய்ய வேண்டும். ஸ்மிருதி சொரூபம் (நினைவு சொரூபம்) ஆக வேண்டும். வெற்றி எனது பிறப்புரிமை, வெற்றி எனது கழுத்து மாலை. வெற்றி சொரூபம் என்றால் சமான்

ஆவதாகும். பிரம்மாபாபாவிடம் அன்பு இருக்கிறதல்லவா? பிரம்மாபாபாவுக்கு எல்லாவற்றையும் விட எதில் அன்பிருந்தது? தெரியுமா? எதன் மீது பிரியமிருந்தது? முரளி மீது. இதை சோதிக்க வேண்டும். பிரம்மாபாபாவுக்கு எதன் மீது அன்பிருந்தது? பிரம்மாபாபாவிடம் அன்பு இருப்பதன் அடையாளம் தந்தைக்கு எதன் மீது அன்பு இருந்ததோ, அது தன்னிடமும் இயல்பாகவே இருக்க வேண்டும். பிரம்மாபாபாவிடம் இன்னும் என்ன விசேஷம் இருந்தது? சதா முழு கவனத்துடன் தன்னுடைய சேவையின் பங்கை செய்து முடித்தார். சரீரம் பலவீனமாக இருந்த நிலையிலும் கூட எப்படி முழு கவனத்துடன், எதன் மீதும் ஆதாரப்பட்டு உட்காராமல் இருந்ததோடு கவனப்படுத்தி விட்டும் சென்றார். மூன்று விசயங்களைப் பற்றிய மந்திரம் கொடுத்து விட்டுச் சென்றார். எல்லோருக்கும் நினைவிருக்கிறதா? ஆகவே எவ்வளவு கவனத்துடன் இருப்பீர்களோ, எவ்வளவு அலக்ஷியம் இல்லாமல் போய்விடும். அலக்ஷியமாகப் பேசுவதை பாப்தாதா கேட்டுக் கொண்டேயிருக்கின்றார். தெரியுமல்லவா! ஆதலால் இந்த மூன்று வார்த்தைகளை (நிராகாரி. நிர்விகாரி, நிரஹங்காரி) சதா மனதில் ரிவைஸ் (திரும்பவும் கவனத்திற்குக் கொண்டு வருதல்) மற்றும் உணருதல் (ரியலைஸ்) செய்து கொண்டேயிருந்தால், தானாகவே, சுலபமாக சமான் ஆகி விடுவீர்கள். ஒரு வார்த்தை, பயன்படுத்துங்கள். வெற்றி மூர்த்தி ஆகுங்கள்.

இரண்டாவது விஷயம்: பாப்தாதா குழந்தைகளின் ஓராண்டு கால ரிசல்ட் பார்த்தார். என்ன பார்த்தார்? மகாதானி ஆகியிருக்கிறீர்கள் ஆனால் அகண்ட (நிரந்தர) மகாதானி (அகண்ட அண்டர் லைன்) அகண்ட மகாதானி. அகண்ட யோகி, அகண்ட நிர்விக்னம் (ஒருபோதும் தடங்கலில்லாத) ஆகியன இப்போது அவசியமாயிருக்கிறது. இப்படி இந்த அகண்ட (நிரந்தர) என்பது செய்ய முடியுமா? ஆக முடியுமா? மதுபன் நிவாசிகளும் கை உயர்த்துங்கள். பாப்தாதா மதுபன் நிவாசிகளை முதலில் பார்க்கின்றார். மதுபனிடம் அன்பு இருக்கிறது. சாந்திவன், பாண்டவ பவன் என்று எவை யெல்லாம் தாதியின் புஜங்களாக இருக்கின்றனவோ, இவை அனைத்தையும் கவனத்துடன் பார்க்கின்றேன். ஒருவேளை நிரந்தரமானதாக ஆகி விட்டால், மனம் மூலமாக சக்திகளைப் பரப்பு கின்ற சேவையில் சுறுசுறுப்புடனிருங்கள்.

பேச்சு மூலம் ஞான சேவை, கர்மத்தின் மூலம் குண சேவை அல்லது குணத்தின் மூலம் உதவி செய்வதற்கான சேவை செய்ய வேண்டும்.

தற்காலத்தில், அஞ்ஞானி ஆத்மாக்கள் ஆனாலும், பிராமண ஆத்மாக்களானாலும் எல்லோ ருக்கும் குணங்களின் தானம், குணங்கள் மூலமான உதவி அளிப்பது அவசியமானதாக இருக்கிறது. ஒருவேளை சுயம், எளிமையான முறையில், முன்மாதிரியாக உதாரணமாக இருந்தால் மற்றவர் களுக்கு உங்களுடைய குண மூர்த்தியின் உதவி தானாகவே கிடைக்கும். தற்சமயம் பிராமண ஆத்மாக்கள் கூட உதாரணம் பார்க்க விரும்புகின்றனர். கேட்க விரும்புவதில்லை. உங்களுக்குள்ளேயே கூட என்ன சொல்கிறீர்கள்? யார் ஆகியிருக்கிறார்கள்?! ஆகவே பிரத்யக்ஷ ரூபத்தில் குண மூர்த்தியாக இருப்பதைப் பார்க்க விரும்புகிறார்கள். ஆதலால் செயல் மூலம் நடை முறையில் விசேஷ குணங்களின் உதவியை குணங்களை தானம் (நடந்து காட்டுதல்) செய்வது அவசியமாயிருக்கிறது. கேட்பதை யாரும் விரும்பவில்லை. பார்க்க விரும்புகிறார்கள். ஆகவே இதில் இப்போது அதிக கவனம் செலுத்த வேண்டும். ஞானத்தின் மூலம். சொற்பொழிவுகள் மூலம் சேவை செய்து கொண்டே தானிருக்கிறீர்கள். இன்னும் செய்து கொண்டே இருக்க வேண்டும். நிறுத்தக்கூடாது, ஆனால் இப்போது மனம் மற்றும் செயல் (கர்மம்) மனதின் மூலமாக அலைகளைப் பரப்புங்கள். சக்தியைப் பரப்புங்கள். அலைகளையும், சக்திகளையும் தொலைவில் இருந்தாலும் சென்றடையச் செய்ய முடியும். சுடடாவனை, சுட காம்னா (சுட விருப்பம்) மூலமாக எந்த ஒரு ஆத்மாவுக்கும் மன சேவை மூலம் அலைகளையும், சக்திகளையும் அளிக்க முடியும். ஆகவே இப்போது இந்த ஆண்டு ஒன்று, மன சக்தியின் மூலமாக அலைகள். சக்திகள் மூலமாக ஆறுதல் மற்றும் கர்மத்தின் மூலம் குணங்களின் தானம், அஞ்ஞானி ஆத்மாக்களுக்கு குண னம், புத்தாண்டில் அன்பளிப்பு அளிக்கும் சம்பிரதாயம் இருக்கிறதல்லவா! ஆகவே இந்த ஆண்டு சுயம் குண மூர்த்தியாகி, குணங்களை அன்பளிப்பாக அளிக்க வேண்டும். குணங்களின் டோலி (இனிப்பு பிரசாதம்) கொடுக்கிறீர்கள் அல்லவா? சந்திக்கும்போது டோலி கொடுக்கிறீர்கள் அல்லவா? டோலி கொடுப்பதால் மகிழ்ச்சியடைந்து விடுகிறார்கள். எந்த ஒரு ஆத்மாவானாலும், விட்டுப் போனவர்கள் கூட டோலியை நினைவு செய்கிறார்கள். நினைக்க வேண்டியதை மறந்து

விடுகிறார்கள் ஆனால் டோலி நினைவுக்கு வருகிறது. ஆதலால் இந்த ஆண்டு என்ன டோலி வழங்கப்போகிறீர்கள்? குணங்களின் டோலி வழங்க வேண்டும். குணங்களைப் பற்றிய பிக்னிக் செய்ய வேண்டும். ஏனெனில், சமயம் அருகாமையில் வந்து கொண்டிருக்கும் கணக்குப்படி பாபா சமானமாகவும், தாதியின் சைகை பிரமாணமாக சமயம் முடிந்து விடும் நிலை. திடீரென எப்போது வேண்டுமானாலும் முடிந்து விடுவது சாத்தியமானதாக இருக்கிறது. ஆதலால் பாபா சமானமாக ஆக வேண்டும். தாதியின் அன்புக்கு பிரதியாக கைமாறு செய்வது அவசியமானதாக இருப்பதால், மனம் மற்றும் கர்மம் மூலமாக உதவியாளராக ஆவதற்கு, யார் எப்படிப்பட்டவராக இருந்தாலும் அதைப் பற்றி யோசிக்காமல் உதவுவது. மேலும் இவர் ஆகி விட்டால், நான் ஆகி விடுவேன்! நம்பர்-1 ஆக வேண்டுமென்றால், அவர் ஆசிவிட்டால், நானும் ஆவேன் என்று நினைத்தால், முதல் நம்பரில் வரக்கூடியயவர் ஆகி விடுவார். பிறகு உங்கள் நம்பர் இரண்டாவதாக ஆகி விடும். அப்படியானால் நீங்கள் இரண்டாம் நம்பர் ஆக விரும்புகிறீர்களா? அல்லது முதல் நம்பர் ஆக விரும்புகிறீர்களா? ஒருவேளை நீங்கள் இரண்டாம் நம்பர் எடுத்துக் கொள்ளுங்கள் என்று யாரிடமாவது சொன்னால் அவர் ஒப்புக் கொள்வாரா? எல்லோரும் நாங்கள் முதல் நம்பரில் தான் வர வேண்டும் என்பார்கள். ஆதலால் முதல் நம்பர் நிமித்தமாக வேண்டும். மற்றவரை ஏன் நிமித்தமாக்குகிறீர்கள்? உங்களை நிமித்தமாக்குங்களேன். பிரம்மாதந்தை என்ன சொன்னார். ஒவ்வொரு விஷயத்திலும் சுயம் நிமித்தமாகி, நிமித்தமாக்கினார். ஹே அர்ஜுன் ஆகி பார்ட் செய்தார். நான் நிமித்தமாக வேண்டும். நான் செய்ய வேண்டும். மற்றவர்கள் செய்வார்கள். என்னைப் பார்த்து மற்றவர்கள் செய்வார்கள். மற்றவரைப் பார்த்து நான் செய்வேன் என்பதல்ல. என்னைப் பார்த்து மற்றவர்கள் செய்வார்கள். இது பிரம்மாபாபாவின் முதலாவது பாடம். ஆகவே கேட்டீர்களா? என்ன செய்ய வேண்டும்? வெற்றி மூர்த்தி. பயன் படுத்தி வெற்றி மூர்த்தி அகண்ட மகாதானி. அப்போது மாயை வருவதற்குத் துணிச்சல் வருமா? எப்போது அகண்ட மகாதானி ஆகி விடுகிறீர்களோ, நிரந்தர சேவாதாரியாக இருக்கின்றீர்களோ, சுறுசுறுப்பாக இருக்கிறீர்களோ! மனமும், புத்தியும் சேவாதாரியாக இருக்கிறதோ அப்போது மாயை வர முடியுமா? ஆகவே இந்த ஆண்டு என்னவாக ஆக வேண்டும்? எல்லோருடைய உள்ளத்திலிருந்தும் ஒரே மாதிரியான வார்த்தை வெளி வர வேண்டும்.

பாப்தாதா இதை விரும்புகின்றார். அது என்ன? பிரச்சனை ஒன்றுமேயில்லை (No Problem) முழுமை நிலையடைந்து விட்டோம் (complete) பிரச்சனை இல்லை ஆனால் சம்பூரணம் அடைந்தே தீரவேண்டும். திடமான நிச்சயபுத்தி, வைஜயந்தி மாலையில் அருகாமையில் இருக்கும் மணியாக ஆகத்தான் வேண்டும். சரிதானா? ஆக வேண்டுமல்லவா? மதுபன் நிவாசிகள் ஆக வேண்டும். ஏதாவது குறை இருக்கிறதா? குறையில்லை. தைரியமுள்ளவர்கள் கை உயர்த்துங்கள். பிரச்சனையே இல்லை. ஆஹா! வாழ்த்துக்கள், வாழ்த்துக்கள், வாழ்த்துக்கள்! பாருங்கள் நிச்சயத்தின் பிரத்யக்ஷ அடையாளம் ரூஹானி நஷய ஒருவேளை ஆன்மீக போதை (ருஹானி நஷா) இல்லையென்றால் நிச்சயமும் இல்லை. முழு நிச்சமில்லை. கொஞ்சம் அதிகமிருக்கலாம். ஆகவே நஷாவில் இருப்பது, என்ன பெரிய விஷயம்: எத்தனை கல்பங்கள் நீங்கள் பாப்சமான் ஆகியிருக்கிறீர்கள். நினைவுக்கு வருகிறதா? எண்ணற்ற முறை ஆகியிருக்கிறீர்கள். ஆதலால் இந்த நஷாவில் இருங்கள். நாம் தான் ஆகியிருக்கிறோம். நாமே தான். மேலும் நாம் அடிக்கடி ஆகிக் கொண்டேயிருப்போம். இந்த நஷா சதா கர்மத்தில் தெரிய வேண்டும். சங்கல்பத்தில் அல்ல, பேச்சில் அல்ல, கர்மத்தில். கர்மம் என்பதன் பொருள் நடத்தையில் முகத்தில் தெரியட்டும். ஆகவே ஹோம் ஒர்க் கிடைத்து விட்டதல்லவா? கிடைத்ததா? இனி பார்க்கலாம். நம்பர்வாராக வருகிறார்களா. நம்பர்-1னில் வருகிறார்களா என்று. நல்லது.

பாப்தாதாவிடம் கார்டு, கடிதம், இ.மெயில் அன்பு நினைவுகள், கம்ப்யூட்டர் மூலமாகவும் நிறைய வந்திருக்கிறது. மேலும் பாப்தாதா வெகு தொலைவில் அமர்ந்து கொண்டிருக்கும் மன சிம்மாசனத்தின் அதிகாரி குழந்தைகளுக்கு, ஒவ்வொருவருக்கும் பெயர் சகிதமாக, விசேஷம் சகிதமாக அன்பு நினைவுகளையும், மனப்பூர்வமான ஆசிகளையும் எதிரில் எமர்ஜ் செய்து அளிக்கின்றார். பாப்தாதாவுக்குத் தெரியும், அன்பு நினைவுகள், அன்பு எல்லோருக்கும் இருக்கிறது. பாப்தாதா சதா அமிர்தவேளையில் விசேஷமாக பிராமண ஆத்மாக்களுக்கு அன்பு நினைவுகளுக்கான பதில் அளிக்கின்றார். ஆதலால் கார்டுகளும் கூட மிக மிக நன்றாகத் தயார் செய்கிறார்கள்.

இங்கே வைக்கிறார்கள் ஆனால் பாப்தாதாவிடம் வதனத்தில் முன்னதாகவே வந்து சேர்ந்து விடுகிறது. நல்லது.

சேவைக்கான வாய்ப்பு உத்தர்பிரதேசம் (உ.பி.) மண்டலம் மற்றும் மேற்கு நேபாளம்: பாப்தாதா பார்க்கின்றார்: எந்த ஜோனுக்கு வாய்ப்பு கிடைத்திருக்கிறதோ, அவர்களின் எண்ணிக்கை சபையில் பாதி இருக்கிறது. நீங்கள் அமருங்கள். இவர்களைத் தவிர மற்ற ஜோன் களிலிருந்து வந்திருப்பவர்கள் எழுந்திருங்கள். அந்த ஜோனைத் தவிர, நல்லது. பாதி-பாதி இருக் கிறது. அமருங்கள். சேவைக்கு நல்ல வாய்ப்பு கிடைக்கிறது. இந்த சேவைக்காக எத்தனை பேர் வருவதாக இருந்தாலும் எல்லோருக்கும் திறந்த மனதுடன் அனுமதி கிடைத்து விடுகிறது. ஒன்று சந்திப்புக்கான வாய்ப்பு. இன்னொன்று சேவைக்கான வாய்ப்பு. ஆகவே டபுள் சான்ஸ் எடுப்பவர்கள். உ.பி. யின் விசேஷம் என்ன? தெரியுமா? உ.பி. செல்லமாக இருக்கிறது. (காணாமல் போய் கண்டெடுக்கப்பட்டவர்கள்). ஏன் சிகிலதி? ஏன் சிகிலதி? மம்மா பாபா அதிகமாக வலம் வந்திருக்கிறார்கள். எப்படி பாம்பே, டெல்லியோ அப்படி உ.பி. யிலும் சுற்றி வந்திருக்கிறார்கள். உ.பி.யில் பிரம்மா குண்ட் இருக்கிறது. மேலும் நடைமுறையில் பிரம்மாபாபா உ.பி.யில் சேவை செய்திருக்கின்றார். குழந்தைகளுக்கு நிறைய அன்பு கொடுத்திருக்கின்றார். யார் அப்போது இருந்தார்களோ, அவர்கள் செல்லமான அன்புக்குப் பாத்திரமாயிருந்தார்கள். நல்லது. இப்போது உ.பி. புதுமையாக என்ன செய்து கொண்டிருக்கிறது? பாப்தாதா சென்ற முரளியில் ஏதாவது புதுமையாக திட்டம் செய்ய வேண்டும் என்று கூறியிருந்தார். ஏற்கனவே கண்காட்சிகள், மாநாடுகள், விழாக்கள், பொதுவானதாக ஆகி விட்டது. அநேகர், அநேகமுறை பார்த்து விட்டனர். விழா நடக்கிறது. கண்காட்சி ஏற்பாடு செய்திருக்கிறோம் உங்களுக்காக, வாருங்கள் என்று அழைத்தால் நாங்கள் ஏற்கனவே பார்த்து விட்டோம் என்று பதில் கூறுகிறார்கள். புரிந்து கொண்டார்களோ, இல்லையோ பார்த்து விட்டார்கள் அல்லவா? ஆகையால் இப்போது புதிதாக ஏதாவது கண்டு பிடியுங்கள். செலவு குறைவாகவும், பலன் அதிகமாகவும் இருக்கும்படி புதுமையாகச் செய்ய வேண்டும். இப்படிப்பட்ட சேவை சிறிய சென்டரானாலும்,பெரிய சென்டரானாலும் செய்யும் படியாக இருக்க வேண்டும். பார்க்கலாம். எந்தக் குழைந்தை புதிய கண்டுபிடிப்புக்கு நிமித்தமாகிறது. என்று, உ.பி.காரர்கள் செய்வார்களா?

உ.பி. யில் புத்திவான்கள் நிறைய பேர் இருக்கிறார்கள். கண்டு பிடிக்க முடியும். உ.பி.யின் விசேஷம் இன்னொன்று இருக்கிறது. உ.பி. சேவையின் ஆரம்பத்தில் வாரிஸ் தயாரானார்கள். நல்ல, நல்ல வாரிசுகள். இப்படி டெல்லியிலும் வாரிசுகள் உருவானார்கள். பாம்பேயிலும் வாரிசுகள் உருவானார்கள். என்றாலும் உ.பி.யிலும் உருவானார்கள். இப்போது கர்நாடகாவிலும் சுவர்ணிம் கர்நாடகா என்ற பெயரில் சேவை செய்கிறார்கள். பாப்தாதர ரிசல்ட் பார்ப்பார். எத்தனை வாரிசுகள் உருவாக்கியிருக்கிறார்கள் என்று. மைக் எத்தனை பேர் தயாராகியிருக்கிறார்கள் என்று. செய்தி எல்லோருக்கும் கிடைத்தது சரி தான். இதற்கு நல்வாழ்த்துக்கள். மேலும் உ.பி.யில் பக்திக்கான ஞாபகார்த்தங்கள் நிறைய இருக்கின்றன. குவாலிட்டி பக்தர்களும் நிறைய பேர் இருக்கிறார்கள். மூட நம்பிக்கையுள்ளவர்களும் இருக்கிறார்கள். பாவனையுள்ளவர்களும் இருக்கிறார்கள். இருசாராரும் இருக்கிறார்கள். இப்போது உ.பி.காரர்கள் புதுமை செய்து காட்ட வேண்டும். எல்லோரைக் காட்டிலும் முதல் நம்பர் வாரிசு குவாலிட்டி தயார் செய்து, கடைசி சீசனில் லிஸ்ட் அனுப்ப வேண்டும். பிறகு இங்கிருந்து நாள் குறித்து அனுப்பியவுடன் அவர்களை அழைத்து வர வேண்டும். வாரிசு உருவாக்குவதற்கான விதி எது? தெரியுமல்லவா? யாராவது சுயம் அனுபவ மூர்த்தியாகி, இவர்கள் சார்பாக, தங்களுடைய மனப்பூர்வமான அனுபவத்தைக் கூறுவதல்ல ஆனால் தன்னுடைய அனுபவத்தின் சொரூபமாகி, அனுபவம் செய்விப்பவர். இவர் வாரிசு உருவாக்க முடியும். யார். ஞானம் மாத்திரம் தருகின்றார்களோ. இவர்கள் நல்ல விதமாக தயார் செய்கிறார்கள், ஆனால் நல்லதிலும் நல்லதாக தயார் செய்வதில்லை. நல்லவரில் மிக நல்லவராக ஆகுபவர் தான் வாரிசு குவாலிட்டி. ஆகவே பார்க்கலாம். கடைசி சீசனில் ஏதாவது லிஸ்ட் வருகிறதா என்று? யார் வேண்டுமானாலும் செய்யலாம். உ.பி. நிமித்தமாகியிருக்கிறது, ஆனால் வேறு எந்த ஒரு ஜோனும் வாரிசு லிஸ்ட் அனுப்பலாம். இதில் நம்பர்-1 யார் ஆகிறார்கள் என்று பார்க்கலாம். நல்லது. உ.பி.காரர்களுக்கு வாழ்த்துக்கள். பாப்தாதாவுக்கு சொன்னார்கள் -யக்ஞ சேவை பார்ட் நன்றாகவே செய்திருக்கிறீர்கள். ஆதலால் சேவைக்கும் நல்வாழ்த்துக்கள். மேலும் இத்தோடு கூடவே ஜி ஹாஜிர் (ஆம் இதோ வந்து விட்டேன்) என்ற பாடத்தையும் நன்றாகவே செய்தீர்கள். இதற்கும் கூட நல்வாழ்த்துக்கள். நல்லது.

**டபுள் விதேஷி (வெளி நாட்டினர்) 60-தேசங்களிலிருந்து 800-சகோதர சகோதரிகள் வந்திருக்கின்றனர்:** நல்லது. குழந்தைகள் அடையாளத்துடன் இருக்கிறார்கள். நன்றாக இருக்கிறார்கள். குழந்தைகளுக்கு சாக்லேட் டோலி கொடுத்துள்ளார்கள். கொடுத்தீர்களா? யார் நிமித்தமாயிருந்தார்கள்? குழந்தைகளுக்கு சாக்லேட் பிடித்தமானதல்லவா? மேலும் உங்களிடம் பறப்பதற்கான விதியையும் கூறினார்களா? யார் நிமித்தமாக இருந்தார்கள்? குழந்தைகளுக்கு யார் நிமித்தமாயிருக்கிறார்கள், கை உயர்த்துங்கள். அடுத்த ஆண்டு இந்த குழந்தைகள் வந்தால், மாற்றம் அடைந்து வருவார்களா? ஆம். குழந்தைகளே! முன்னால் வாருங்கள். குழந்தைகள் பாட்டு பாடினார்கள். பாபா! நீங்கள் எவ்வளவு நல்லவராக இருக்கின்றீர்கள், எவ்வளவு அன்பான வராயிருக்கின்றீர்கள்... நல்ல முயற்சி செய்திருக்கிறார்கள். இனி அடுத்த ஆண்டு வருவார்களானால், இதை விட இன்னும் பறந்து, பறக்கும் பரிஷ்தாக்கள் ஆகி வருவார்கள். சரிதானா? அடுத்த ஆண்டு புரோகிராம் செய்து கொண்டு வாருங்கள். நல்லது. கேளுங்கள். நாளைக்கு பாப்தாதாவின் சார்பாக குழந்தைகளுக்கு விசேஷமாக சாக்லேட் தயாரித்து உண்ணும்படி செய்ய வேண்டும். நல்லது. டபுள் விதேஷி பாப்தாதா கூறினார், டபுள் விதேஷி அல்ல. இப்போது டபுள் புருஷார்த்தி. டபுள் அல்லவா? பாப்தாதாவுக்கு நினைவிருக்கிறது. முன்பு சொன்ன விஷயம். பாப்தாதா கூறினார் -சில சமயம் விதேஷிகள் இருக்கிறார்கள் அல்லவா. இவர்கள் ஆஹா, ஆஹா என்பதற்குப் பதிலாக ஓய் (ஏன்) ஒய்? என்று அதிகமாக உச்சரிக்கிறார்கள். ஓய் மற்றும் ஐ (நான்) என்று கூறுவதில்லையே? நீங்கள் ஓய், ஓய் என்று கூறுபவர்களா? அல்லது ஆஹா! ஆஹா! என்று கூறுபவர்களா? ஆஹா! ஆஹா! சதா? சதா ஆஹா! ஆஹா! ஒருபோதும் எந்த விஷயத்திலும்? ஒய் என்பது இல்லை. ஒய் என்றால் ஐயோ! ஆகவே ஐயோ. ஐயோ என்பது இல்லை. ஒய் என்பதுமில்லை. ஆஹா! ஆஹா! என்ன நடந்து கொண்டிருக்கிறதோ, அது நன்றாகவே நடக்கிறது. எது நடந்து முடிந்து விட்டதோ, அது இதை விடவும் நல்லது. எது நடக்கப்போகிறதோ அது நன்றாகவே இருக்கும். இது தான் டபுள் புருஷாரத்தியின் அடையாளம். பிரச்சனையே இல்லை. (நோ பிராபளம்) என்று கூறுபவர்கள்தானே? பிரச்சனையே இல்லை என்பதா? அல்லது கொஞ்சம் கொஞ்சம் பிரச்சனை இருக்கிறதா? நல்லது. பிரச்சனைகளை இங்கேயே விட்டுச் செல்ல வேண்டும். விமானத்தில் கொண்டு செல்லக்

கூடாது. ஏனென்றால் தந்தையிடம் வந்தீர்கள் என்றால், தந்தைக்கு ஏதாவது அற்புதம் செய்து காட்டுவீர்கள்தானே? அப்படியானால் அற்புதம் செய்து காட்டுங்கள். சில சமயம் மட்டுமல்ல. கொஞ்சம், கொஞ்சம் என்பதும் அல்ல. சதா ஆன்மீக ரோஜா (ரூஹானி குலாப்) ஏனென்றால், எல்லா பாரத வாசிகளுக்கும் வெளி நாட்டினருக்கும். தாதிகளுக்கும் கூட ஃபாரினர்ஸ் மிகவும் செல்லமானவர்கள். அன்பானவர்கள். ஃபாரினர்ஸ்'ஐப் பார்த்து மிகவும் மிகழ்ச்சியடைகிறார்கள். ஆதலால் நீங்களும் கூட சதா குஷியோடு இருப்பீர்கள் அல்லவா? சதா என்ற வார்த்தை நினைவிருக்கட்டும். இந்த ஆண்டின் அன்பளிப்பாக இதை எடுத்துச் செல்லுங்கள். சதா என்ற வார்த்தையை ஒருபோதும் மறக்கக் கூடாது. விக்னத்தில் சதா என்பது இருக்கக்கூடாது. நிர்விக்னமாக இருப்பதில் சதா நல்லது, மதுவனத்தின் அலங்காரம் டபுள் விதேஷிகள். மதுவனத்தின் அலங்காரம். அலங்காரத்திற்கு மிகுந்த மதிப்பு இருக்கிறது. ஆதலால் மதிப்பு மிக்கவர்கள். நல்லது. மிக நன்றாகவே நடந்து கொள்கிறீர்கள். பாப்தாதா பார்த்தார். ஒவ்வொரு குருப்பும் இன்டர்நேஷனல் குருப்பாக (பன்னாடுகள் சேர்ந்த) இருக்கிறது. இப்போது எத்தனை நாடுகளிலிருந்து வந்திருக்கிறார்கள். (60-நாடுகள்) பாருங்கள் காட்சி ரம்மியமானதாக இருக்கிறதல்லவா? 60-நாடுகளிலிருந்து ஓடி, ஓடி வந்து சேர்ந்து விட்டார்கள். ஆதலால் பாப்தாதாவின் சார்பாகவும், மதுபன் சார்பாகவும் உங்களுக்கு நூறு மடங்கு வாழ்த்துக்கள், வாழ்த்துக்கள், வாழ்த்துக்கள்! நல்லது.

**இன்டர்நேஷனல் யூத் (இளைஞர் வர்க்கம்) குருப்பு:** நல்லது. இவ்வளவு பெரியதா? யூத் குருப்பும் பெரியதாகவே இருக்கிறது. பாப்தாதா யூத் குரூப்பினுடைய சமாச்சாரம் கூறினார். இவர்கள் எந்த ஒரு பிளான் செய்திருக்கிறார்களோ, அது நன்றாக இருக்கிறது ஆனால் சுய உன்னதிக்கான பிளான் பிராக்டிக்கலில் (நடைமுறையில்) முதலாவதாக இடம் பெற வேண்டும். ஏனென்றால், யூத் குரூப்பை உலகினர் அற்புதம் நிகழ்த்த வேண்டும் என்று நம்பிக்கையோடு பார்க்கிறார்கள். அரசும் கூட இதே கண்ணோட்டத்திலேயே பார்க்கின்றது. இளைஞர்கள் கொஞ்சம் செயலில் நடந்து காட்ட வேண்டும். ஆகிக் காட்ட வேண்டும். புரோகிராம் நன்றாகவே செய்திருக்கிறார்கள். சிஸ்டமும் கூட தயாரித்திருக்கிறார்கள்.

செய்பவர்களுக்கு வாழ்த்துக்களை அளிக்கிறேன். இப்போதும் ஒவ்வொரு (முறை) நன்றாகவே நேரத்திலும் தங்களுடைய ரிசல்ட்டை நிமித்தமாயிருப்பவர்கள் அனுப்பிக் கொண்டேயிருக்க வேண்டும். ஏனென்றால், சோதித்துக் கொண்டேயிருந்தால், மாற்றம் வந்து விடும். சோதனை செய்வதில் அலக்ஷியம் இருந்தால் மாற்றமும் ஏற்படாது. ஆதலால் எப்படி டைரக்ஷன் கிடைத்திருக்கிறதோ, அப்படி தங்களுடைய ரிப்போர்ட் கெட்டதாக இருக்கக்கூடாது. நல்லதாக இருக்க வேண்டும். தங்களுடைய சார்ட்டை கொடுத்துக் கொண்டேயிருக்க வேண்டும். இதில் களைப்படையக் கூடாது. அலக்ஷியமாக இருந்து விடவும் கூடாது. பிறகு அயல் நாட்டு இளைஞர்களை இந்தியாவில் காண்பிக்கலாம். அரசாங்கத்திடம் சந்திக்க வைக்கலாம். பிறகு இந்திய இளைஞர்களை ஃபாரின் அரசாங்கத்திற்கு சந்திக்க ஏற்பாடு செய்யலாம். ஆதலால் தயாராக இருங்கள். அவர்களுடைய சார்ட்டை காண்பிக்கலாம். எப்படி தங்களுடைய முயற்சியைச் செய்திருக்கிறார்கள். பரிவர்த்தனை செய்கிறார்கள் மற்றும் வெற்றி அடைந்திருக்கிறார்கள் என்பது, சரி தான். மிக நன்றாகச் செய்திருக்கிறார்கள். செய்து கொண்டேயிருக்க வேண்டும். நல்லது.

**ஜூரிஸ்ட் மற்றும் கல்ச்சுரல் விங் (நீதித்துறை மற்றும் கலாச்சாரம்):** நல்லது. பாப்தாதாவிடம் எல்லா சமாச்சாரமும் வந்து சேர்ந்து கொண்டேயிருக்கிறது. இரண்டு துறையினரும் ஏதாவதொரு பிளான் (திட்டம்) தயார் செய்து கொண்டேயிருக்கிறார்கள். மேலும் நல்ல முன்னேற்றமும் அடைந்து கொண்டிருக்கிறார்கள். ஸ்பார்க் விங் இருக்கிறதல்லவா. அதில் என்ன ஆய்வு செய்திருக்கிறார்கள்? ஆராய்ச்சி செய்த பிறகு ஏதாவது உதாரணம். நடைமுறையில் நிரூபணம் உள்ளதா? எப்படி இதய நோய் உள்ளவர், நிரோகியாகி விட்டார். இப்படி நிரூபணம் உள்ளது. இளைஞர் குரூப்பும் சமாச்சாரம் கூறினார்கள். இதன் மூலம் அரசு வரை பலன் சென்றடைகிறது. இதேபோலவே கிராம சேவை மூலமாகவும், நடைமுறையில் கீதாபாடசாலை திறக்கப்படுகின்றன. இந்த ரிகார்டு நன்றாக இருக்கிறது. இதுபோல ஸ்பார்க் துறையினரிடம் ஏதாவது உதாரணம் உள்ளதா? ஆராய்ச்சி செய்ததன் மூலம் பரிவர்த்தனை வந்திருக்கிறது என்ற உதாரணம் உள்ளதா? பாப்தாதா இந்த உதாரணத்தைப் பார்க்க விரும்புகின்றார். அதாவது இந்த ஆராய்ச்சி மூலமாக எத்தனை பேர்

நடைமுறையில் லாபம் அடைந்தார்கள்? கலாச்சார துறையினர், தங்கள் டிபார்ட்மெண்டில் யாரையாவது தயார் செய்திருக்கிறீர்களா? ஆன்மீக கலாச்சாரம் மூலமாக இப்படி யெல்லாம் அனுபவம் செய்திருக்கிறோம் என்று வர்ணனை செய்யக்கூடிய குரூப் தயார் செய்திருக் கிறீர்களா? எங்களுடைய முழு டிபார்ட்மெண்டும் பரிவர்த்தனையாகியிருக்கிறது என்று சொல்லக் கூடிய உதாரணம் இருக்கிறதா? இப்படி எல்லா வர்க்கத்தினருக்கும் பாப்தாதா இதைத்தான் கூறுகின்றார். எட்டு, பத்து, பன்னிரண்டு உதாரணம் தயார் செய்யுங்கள். இதனால் அரசுக்கும் உதவி கிடைக்கும். பாப்தாதா கேள்விப்பட்டார். ஒரு டிபார்ட்மெண்ட் சொல்லியிருக்கிறது பைசா எங்களிடம் உள்ளது. வேலை உங்களிடம் உள்ளது என்று. ஆகையால் செய்ய வேண்டிய சேவையை பிரத்யக்ஷமாக பலனைக் காண்பித்து, அவர்களும் பயனடையச் செய்யலாமல்லவா? பிரபாவம் ஏற்பட வேண்டும். பலன் ஏற்படாவிட்டால், வீணாக கஜானா காலியாகி விடும். அவர்களுக்கு கஜானாவை உபயோகிக்கத் தெரியவில்லை. உங்களால் பயனுள்ளதாக்கிக் காண்பிக்க முடியும். ஆதலால் எல்லா வர்க்கத்தினரும், சேர்ந்து ஒரு பிளான் தயார் செய்யுங்கள். அதாவது நடைமுறையில் ஒவ்வொரு வர்க்கமும் பலனைக் காண்பிக்கட்டும். உஷா சகோதரி, சந்திரபூர், போபால் கல்ச்சுரல் புரோகிராம் பற்றிய சமாச்சாரம் கூறினார். புரோகிராம் நன்றாகச் செய்தீர்கள். இதற்கு வாழ்த்துக்கள். இனி இன்னும் நன்றாகச் செய்து காண்பியுங்கள்.

எல்லோருக்கும் மைண்ட் டான்ஸ் (மனதின் நாட்டியம்) ஆட வருமா? மனதின் நாட்டியம் ஆட வருமா? முழு நாளில் எவ்வளவு நேரம் மனதில் குஷியின் டான்ஸ் ஆடுகிறீர்கள்? இதில் களைப்பு என்ற விஷயமே இல்லை. கால் வலியும் இருக்காது. சுறுசுறுப்பாக இருக்க வேண்டும் என்ற விஷயமும் இல்லை. நேரம் கொடுக்க வேண்டியதாயிருக்கும் என்பதும் இல்லை. செலவும் இல்லை. அப்படியானால் என்ன செய்ய வேண்டும்? எப்போதெல்லாம் பாப்தாதா டி.வி. திறக்கின்றாரோ அதில் என்ன தெரிய வேண்டும். ஒவ்வொரு குழந்தையும் மன நாட்டியத்தில் (மனம் குதூகலமாக இருப்பது) சுறுசுறுப்பாக இருக்கிறார்கள் என்று, இப்படி இதில் சுறுசுறுப்பாக இருந்தீர்கள் என்றால் பாப்தாதா திடீரென டி.வி.யை திறப்பார் மேலும் அப்போது அதில் யாரெல்லாம் டான்ஸ் செய்து கொண்டிருக்கிறார்கள்

என்று பார்ப்பார். குஷியால் ஆடும் டான்ஸ் மிக நன்றாகவே இருக்குமல்லவா? ஆதலால் என்ன செய்ய வேண்டும்? பாப்தாதா சந்திப்பிலேயே சுறுசுறுப்பாக இருந்து விட்டார். நன்று.

நாலா பக்கமும் ஒளி வீசிக் கொண்டிருக்கின்ற ஆத்ம தீபங்களுக்கு, சதா பயனுள்ளதாக்குகின்ற வெற்றி சொரூப குழந்தைகளுக்கு சதா அகண்ட மகாதானி, அகண்ட நிர்விக்ன, அகண்ட ஞானம் மற்றும் யோகயுக்த், சதா ஒரே சமயத்தில் மூன்று சேவைகள் செய்யக் கூடிய மன அலைகள் மூலமாக, வாயுமண்டலம் மூலமாக, பேச்சு மூலமாக, மற்றும் நடத்தை முகபாவம், கர்மம் மூலமாக மூன்று சேவைகளையும் ஒரே சமயத்தில் ஒன்றாக நடக்க வேண்டும். அப்போது தான் உங்களுடைய பிரபாவம். நன்றாக இருக்கிறது என்று சொல்லக்கூடியவர்கள் அல்ல. நன்றாக ஆகக் கூடியவர்கள் மீது உண்டாகும். இப்படி அனுபவ மூர்த்தி மூலமாக அனுபவம் செய்விக்கக் கூடிய குழந்தைகளுக்கு பாப்தாதாவின் புத்தாண்டுக்காக நூறு, நூறு மடங்கு அன்பு நினைவுகள். ஆசிகள் மற்றும் மன சிம்மாசனத்திற்கு அதிகாரி ஆகக்கூடியவர்கள். ஆதலால் நாலா பக்கமும் உள்ள குழந்தைகளுக்கு யார் எதிரே இருக்கிறார்களோ. அல்லது தூரத்திலிருந்தாலும் மனதில் அமர்ந்திருக்கிறார்களோ, அவர்கள் அனைவருக்கும் பெயர் சகிதமாக, விசேஷம் சகிதமாக அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்தே.

நல்லது. யார் முதன் முதலாக வந்திருக்கிறார்களோ அவர்கள் எழுந்து நில்லுங்கள். கை அசையுங்கள். பாருங்கள். பாதி வகுப்பில் முதன் முறையாக வந்திருப்பவர்கள் இருக்கிறார்கள். பின்னால் இருப்பவர்கள் கை அசையுங்கள். டி.வி.யில் தெரிகிறது. நிறைய பேர் இருக்கிறார்கள். நல்லது. முதன் முறையாக வந்திருப்பவர்களுக்கு பாப்தாதாவின் மனப்பூர்வமான வாழ்த்துக்கள். மனப்பூர்வமான அன்பு நினைவுகள். எப்படி நீங்கள் வந்திருக்கிறீர்கள். இப்படி இப்போது வந்திருப்பவர்களுக்கு பாப்தாதாவின் வரதானம், அமர்பவ!

தாதி ஜானகியுடன்: நன்றாக பாலனை செய்கிறீர்கள். நீங்கள் திருப்தியாக இருக்கிறீர்கள். விதை திருப்தியாக இருக்கிறதென்றால், எல்லாம் திருப்தி தான். தாதிக்கும் கூட குடை நிழல் இருக்கிறது.

அவருக்கும் கூட திருஷ்டி இருக்கிறது. இது சேவைக்கு மட்டுமே அழைக்கப்பட்டிருக்கிறீர்கள். மற்றபடி எல்லாம் சேவையின் மீதுள்ளது.

**மனோகர் தாதியுடன்:** நன்றாக பார்ட் செய்கிறீர்கள். வகுப்பிற்கு வருகை தருகின்றீர்கள். இது மிகவும் நல்லது. இதனால் தானும் புத்துணர்ச்சி பெறுவதோடு மற்றவர்களுக்கும் புத்துணர்வு உண்டாக்குகிறீர்கள். இதை விடக்கூடாது. இவர் சங்கல்பம் செய்திருக்கின்றார். டாக்டர் இல்லாமலே நன்றாக இருப்பேன். அப்படியே ஆகி விடும்.

**மூன்று சகோதரர்களுடன்:** நல்லது. திரிமூர்த்தி நன்றாக இருக்கிறீர்கள். திரி மூர்த்தி தானே! இப்போது எப்படி தந்தை திரிமூர்த்தி ரூபத்தில் பிரசித்தமாகியிருக்கின்றாரோ, அதுபோல நீங்கள் மூவரும் அப்படி ஏதாவது விசாலமான காரியம் செய்து காண்பியுங்கள். இதைப் பார்த்து மற்றவர்கள் ஆஹா! ஆஹா! என்று உங்கள் மகிமையைப் பாடட்டும். தனக்கும், சேவைக்கும். இரண்டும். தனக்காக மூன்று அல்ல. ஒன்று. ஒருவர் சொன்னார், மற்றவர் ஏற்றுக் கொண்டார். ஆலோசனை கூறினார். திருப்திப்படுத் தினார். இப்படி எல்லோரும் பார்க்க விரும்புகின்றனர். செய்யத்தான் வேண்டுமல்லவா? யாராவது ஒருவர் நிமித்தமாகுங்கள். ஒவ்வொருவரும் தான் நிமித்தம் என்று புரிந்து கொள்ள வேண்டும். பரிசு கிடைக்குமல்லவா? உள்ளத்தின் அன்பு என்ற பரிசு மிகப்பெரியது. இந்த விஷயத்தில் அன்பு. இப்படி அன்பு இருக்கிறது ஆனால் இந்த விஷயத்தில் அன்பை யார் பெறப் போகிறார்கள்? அந் அன்பு பரிசு என்ற ரூபத்தில் இருக்கும். சரி தானே! நல்லது.

**2008ம் ஆண்டு வரவேற்பின் போது, அன்பான பாப்தாதா மூலம் புத்தாண்டுக்கான வாழ்த்துக்கள்! (இரவு 12-மணிக்குப் பிறகு):** நாலா பக்கமும் உள்ள அனைத்து லக்கி மற்றும் லவ்லி குழந்தைகளுக்கு புத்தாண்டுக்கான மிக அதிக நல்வாழ்த்துக்கள். மேலும் ஆசிகளும். புத்தாண்டில் சதா புதிய ஊக்கம். உற்சாகத்துடன் இருக்க வேண்டும். மேலும் சேவைக்கான விருத்தி பற்றிய புதிய சங்கல்பம் மற்றும் சுயத்திற்காக தீவிர முயற்சியில் ஸித்தி அடைந்து கொண்டும் பறந்து கொண்டும் பறக்கச் செய்து கொண்டும் இருக்க வேண்டும். இப்போதைக்கு குட் நைட். இத்துடன் மறுநாள் இப்போதே ஆரம்பமாகிக்

கொண்டிருப்பதால் குட்மார்னிங்கூட, குட்நைட்டும் கூட. (காலை வணக்கம் மற்றும் இரவு வணக்கம்). நல்லது.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋
❋❋❋❋❋

## ஓம் சாந்தி சாந்தி சாந்தி!

## பொருளடக்கம்

☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂
☂☂☂☂☂☂☂